




894.8113
S47

CPL 555151

சுஜாதா

# கரையெல்லாம் செண்பகப்பூ

# கரையெல்லாம் செண்பகப்பூ

சுஜாதா

CONNEMARA PUBLIC LIBRARY
5 - FEB 2009
CHENNAI-600 008

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை–600 017.
☎: 24342899
Fax: 91 - 44 - 24341559

701/09
39

முதற் பதிப்பு: அக்டோபர், 1993
இரண்டாம் பதிப்பு: ஜூலை, 1997
மூன்றாம் பதிப்பு: மே, 2002
நான்காம் பதிப்பு: செப்டம்பர். 2005
ஐந்தாம் பதிப்பு : நவம்பர் 2008
உரிமை : ஆசிரியருக்கு ©
விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

KARAIELLAM SENBAGAPPOO
By: Sujatha

Fifth Edition - நவம்பர் 2008
No. of Pages: 224
Paper used: 11.6 N.S. Book Print
665151

விலை ரூ. 77/-
894.8113
SUJ

VISA PUBLICATIONS
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696

Available at:
THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 9282152070

Printed at: Udayam Offsets ✆ : 2845 4808.

CONNEMARA PUBLIC ... CHENNAI
5 - FEB 2010

# நன்றி

1. நா. வானமாமலை அவர்களுக்கு, அவர் அழகாகத் தொகுத்து என்.ஸி.பி.எச். வெளியிட்டிருக்கும் ‘தமிழர் நாட்டுப் பாடல்கள்’ புத்தகத்திலிருந்து எடுத்து இந்தக் கதையின் பெரும்பான்மையான நாட்டுப் பாடல்களை உபயோகித்திருக்கிறேன்.
2. செங்கோட்டை நண்பர் ராமசுப்ரமணியத்திற்கு, அவர் அனுப்பி வைத்த ‘பழகை நல்லூர் நீலியம்மன் கதை’ என்கிற வில்லுப்பாட்டு (அகந்தீஸ்வரம் ஊர் குமாரசாமி நாடார் குமாரர் ஆறுமுகப் பெருமாள் நாடார் தொகுத்து வெளியிட்ட) புத்தகத்திலிருந்து பல வரிகளைப் பன்னிரண்டாம் அத்தியாயத்தில் உபயோகித்தேன்.
3. சோமலே அவர்களுக்கு, அவருடைய ‘ஃபோக் லோர் இன் டமில் நாடு’ என்கிற நேஷனல் புக் டிரஸ்ட் பதிப்பித்த புத்தகத்திற்கு.
4. சென்னை அரசாங்கத்திற்கு, அவர்கள் வெளியிட்ட ‘கிராம உத்தியோகஸ்தர்களையும் ரயத்துகளையும் குறித்த சட்ட புஸ்தக’த்திற்கு.

—சுஜாதா

# பதிப்புரை

வளர்ந்து வரும் தமிழ் நாவல் உலகிலே சுஜாதா ஒரு மின்வெட்டு; சுடர் விடும் தாரகை.

சற்று அலங்கார வர்ணனைகளுடன் நாவல் படிப்பது அருகிவிட்ட காலம் இது. ரசனை மிக்க வாசகர்கள் காலப் போக்கில் வளர்ந்து "வளவள" வென்ற வர்ணனைகளை வெறுக்க ஆரம்பித்தனர். எதுவும் மிகச் சுருக்கமாக, மின்னற் தெறித்தாற்போல் இருக்க வேண்டுமென மக்கள் விரும்பினார்கள். அப்படி எழுதும் எழுத்தாளர்களின் படைப்புக் களையே விரும்பிப் படிக்க ஆரம்பித்தனர்.

காலப் போக்கினை மிகத் தெளிவாக அறிந்து கொண்டு, புதிய சமுதாயம் எதை விரும்புகிறது என்பதைத் தெரிந்து கொண்டு புதினம் படைப்பவன் எவனோ அவனே படைப் பிலக்கியம் செய்பவன். அப்படியின்றி, தான் நினைத்தவாறே எழுதிக்கொண்டு, வளர்ந்து வரும் புதிய சமுதாயத்தின் போக்கினை அறியாமல் எழுதிக் குவிப்பவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு, கானல் நீர் பருகுபவர்கள் ஆவார்கள். அத்தகையோரைக் கால வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடும்.

குறுகிய மனங்கள் விசாலப்படுவதற்கும், கூனிப் போன சிந்தனைகளை நிமிர்ந்து நிற்பதற்கும் இலக்கியம் உதவி செய்ய வேண்டும்; உதவி செய்கிறது. இதுவரை நாம் ஆந்தைப் பார்வையுடன் பார்க்கக் கூசிய எத்தனையோ விஷயங்களை புதிய படைப்பாளர்கள் சற்றும் பயமின்றி நம் முன்னே கடைப் பரப்பி விடுகிறார்கள்.

மக்கள் மனதைத் தன் துள்ளு நடையால் மிகக் கவர்ந்தவர் சுஜாதா.

திரு. சுஜாதா அவர்கள் எழுதிய இந்நாவலை நாங்கள் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். இனி அவரது படைப்புகள் தொடர்ந்து எங்கள் பதிப்பகத்தில் நூல்களாக வெளிவரும் என்பதையும் தெரிவிக்கிறோம்.

—விசா பப்ளிகேஷன்ஸ்

5 - FEB -
CHENNAI

# கரையெல்லாம் செண்பகப்பூ

## 1

'காடெல்லாம் பிச்சி
கரையெல்லாம் செண்பகப்பூ
நாடெல்லாம் மணக்குதில்ல
நல்ல மகன் போற பாதை'

—தமிழர் நாட்டுப் பாடல்கள்
(நா.வானமாமலை தொகுப்பிலிருந்து)

**பா**ஸஞ்சர் போனால் போகிறது என்று திருநிலத்தில் நின்றது. ஒரு பெண் ஓடி ஓடி வெள்ளரிப் பிஞ்சு விற்றாள். முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து ஒரே ஓர் இளைஞன் நீல நிற சூட்கேஸ், ஒரு கித்தாருடன் இறங்கினான். அவன் கழுத்தில் காமிரா மாலை. அந்தப் பிரதேசத்தில் மிகவும் விநோதனாக, அன்னியனாக நின்றான். வெயில் கண்ணாடி அணிந்து சுற்றிலும் பார்த்தான்.

சின்ன ஸ்டேஷன், கச்சிதமான ஓர் அறை. அதனுள் சுவரில் பதிந்த வாய்திறந்த, புராதன டெலிபோனில் ஸ்டேஷன் மாஸ்டர் பேசிக் கொண்டிருந்தார். பிளாட் பாரத்திலேயே கைகாட்டி இறக்கும் லீவர்கள் இருந்தன. தண்டவாளத் துண்டு, மணியாக சரக்கொன்றை மரத்தில் தொங்கியது. அதை இரு நடவை மஞ்சள் மலர்கள் உதிரத் தட்டிவிட்டு அந்த நீலச்

சட்டைக்காரன், அன்னியனை ஒரு வஸ்துவைப் போல் பார்த்துக் கொண்டே சாவியுடன் என்ஜின் திசையில் நடந்தான். கருங்கல் கட்டடம்; சற்றே தூரத்தில் மூன்றே மூன்று வீடுகள். ஸ்டேஷனிலிருந்து ஒரு மண் பாதை புறப்பட்டு எங்கேயோ மாயமாய்ச் சென்றது. ஓர் ஆலமரம்- ஏறக்குறைய 'ஸ்டேஷனே என்னுடையது' என்று அணைத்துக் கொண்டிருந்தது.

ரயில் 'ழே' என்று கூறிவிட்டு உபரி நீராவியைக் கக்கி விட்டுக் கிளம்பியது. அந்தப் பெண் ரயிலுடன் ஓடினாள். காசு கொடுக்காத அந்தப் பிரயாணி அவள் மார்பு குலுங்க ஓடி வருவதை ரசித்துக் கொண்டே சில்லறையை விட்டெறிந்தான். அவள் காசைப் பொறுக்கிக் கொண்டு, வீசி எறிந்தவனை நோக்கி, 'தத்' என்று துப்பினாள்.

கடமை முடிந்த அந்த நீலச்சட்டை அவனை நெருங்கி ஆராய்ந்தான். தூரத்தில் மறுபடி 'ழே'.

"இறங்கிட்டீங்களா?"

"மேம்பட்டிக்குப் போகணும்" என்றான் அவன். அவன் பெயர் எஸ்.வி.கல்யாணராமன். "எத்தனை தூரம்?' என்றான்.

"இருக்குங்க... அஞ்சு மைல் தொலைவு. என்ன விசயம்?"

"அங்கே ஒரு ஜோலி."

"மேம்பட்டியிலா?"

"ஆமாம். ஏதாவது பஸ் போகுமா?"

"பஸ்ஸா?"- சிரித்தான்.

"என்னம்மா வெள்ளரிப் பிஞ்சு, உங்க ஊருக்குத்தான் போறாராம் இவரு."

"அஞ்சி காசு கொறச்சுப் போட்டுட்டுப் போறான். மாரியாயி வாரிக்கிட்டு போக! குட்மார்னிங்ஸார்! என்னைப் போட்டா புடிக்கிறிகளா?"



அந்தப் பெண் 'ஸல்யூட்' அடித்தது விநோதமாக இருந்தது. பதினெட்டு வயசிருக்கும். கொஞ்சம் அலம்பினால் அழகாக இருப்பாள் என்று தோன்றியது. கரிய முகத்தில் ஒரு மூக்கில் சிவப்புக்கல். காதில் ஓலை. கட்டம் கட்டமாக சுங்கிடிப் புடவை. பஞ்சு மிட்டாய் வர்ணத்தில் ரவிக்கை. கழுத்தில் பிளாஸ்டிக் மணி மாலை. வெள்ளை வெளேர் என்று பற்கள். உழைப்பின் உத்வேகம் தேகத்தின் அமைப்பில் தெரிந்தது. இளமையுடன் சேர்த்து ஓர் உற்சாக ராகம் போல இருந்தாள். கல்யாணராமனுக்கு பீத்தோவனின் ஸிம்ஃபனி ஞாபகம் வந்தது. டி.மேஜர் ஓப்பஸ் 61.

"உள்ளே வாங்கோ" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர். சென்றான். அவர் இடுப்பில் வேஷ்டியும், ஒப்புக்கு வெள்ளைக் கோட்டும் அணிந்திருந்தார். மேஜை மேல் சாப்பாடும் இலையும் தயாராக இருந்தன. முள்ளம் பச்சையில் கொடி சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

"த்ரீ நாட் ஒன்ல வந்தீங்களா?"

"வேற வண்டி இருக்கா, என்ன?"

"மேம்பட்டிக்கும் போறாராம் அய்யா!"

"அங்கே என்ன?"

"அங்கே கொஞ்ச நாள் தங்கப் போறேன். பஞ்சாயத்துக்காரர் ஒருத்தர் ஸ்டேஷனுக்கு வர்றதா ஏற்பாடு. யாராவது வந்தாங்களா?"

"இல்லையே, நீங்கள் மெட்றாஸா?"

"ஆமாம்."

"இஞ்சினியரா?"

"ம்ஹூம். நான் ஒரு ரிஸர்ச் பண்ண வந்திருக்கேன். ஒரு 'க்ராண்ட்'டிலே."

"அப்படியா, என்ன ரிஸர்ச்?"

"நாட்டுப் பாடல்கள்."

"அப்படின்னா?"

"ஃபோக்லோர் தெரியாது?"

"எனக்கு 'த்ரீ நாட் ஒன், அப்பு, டவனு' இவ்வளவு தான் தெரியும். ஆம்படையாள், குழந்தைகள் எல்லாம் எஜுகேஷனுக்காக தாம்பரத்தில் இருக்கா. ஒண்டிக்கட்டை. டிரான்ஸ்ஃபருக்கு மனுப் போட்டிருக்கேன். டிவிஷனல் ஆபிசில தயவு பண்ணணுமே? உங்களுக்கு ரெயில்வேல யாரையாவது தெரியுமா?"

'தெரியாது. இங்கேயிருந்து எப்படி மேம்பட்டிக்குப் போறது?'

"நடந்துதான்! ஏ குட்டி! நீ அங்கேதானே போறே?"

"ஆமாங்க?"

"டிராக்டர் போவுங்களே. மருதமுத்து இப்ப போவானா புள்ளே?"

"பொளுது சாயத்தான் வருவாரு."

"இவரை அளைச்சுக்கிட்டுப் போறியா?"

"சரிங்க. பொட்டியைத் தூக்கியாரணுமா, காசு தருவாரா?"

"தரேன்!"

"எத்தினி?"

"மூணு ரூபா" என்றான், அந்தப் பிரதேசத்துப் பொருளாதாரம் தெரியாமல்.

நீலச் சட்டை, "நான் தூக்கியாரேனுங்க" என்றான்.

"அடப் போடா! உனக்கு ட்யூட்டி இருக்கு. எக்ஸ்பிரஸ் கடக்கற நேரம்" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

அதற்குள் அவள் மூன்று ரூபாய் உற்சாகத்தில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு, அதன் மேல் வெள்ளரிக் காய் மூட்டை வைத்துக் கொண்டு, 'வாங்க போகலாம்' என்றாள். கிளம்பினான்.



"மூணு ரூவா சாஸ்திங்க. முக்கா ரூவா கொடுங்க, போறும்" என்றான் நீலச்சட்டை, அழுக்காறுடன்.

"அ! எம்புட்டு தொலைவு இருக்குது; நீங்க வாங்க, குட்மார்னிங் ஸார்!"

அவள் முன்னே நடக்க, அவன் பின்தயங்கி நடந்தான். வயலில் பாய்ந்தாள். காலில் கொலுசு தெரிந்தது. வரப்பில் நடந்தாள். நீர் நிறைந்த வயலில் அவள் பிம்பம் அவளுடன் தலைகீழாக நடந்தது. எதிரே மாமரச் சோலையில் ஒரு பச்சை ரகசியம். அருகே பம்ப்செட் பாரிபோல் நீரிறைத்துக் கொண்டிருந்தது. பனைமரங்கள் வரப்புக் காவல் நின்றன. வான நீல நிறத்தில் அங்கங்கே பஞ்சு ஒத்தடங்கள். 'டிர்ரிக் டிர்ர்ரிக்' என்றும் 'ச்யூ ச்யூ' என்றும் பறவைக் குரல்கள். கறுப்பு வெல்வெட் குருவி ஒன்று வாலைத் தூக்கித் தூக்கி எழுப்பிய தொனித் துளிகள் எஃப் ஷார்ப்பில் இருந்ததாகப் பட்டது கல்யாண ராமனுக்கு. அவன் மனத்தில் வயலின்கள் ஒலித்தன.

அவள் திரும்பிப் பார்த்தாள். "மெள்ள நடக்கறிகளே" என்றாள்.

"இரு, இரு, ஓடாதே" என்றான். சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். அவளை அடைந்தான்.

"நீங்க, என்ன சாதி! செட்டிமாருங்களா?"

"பாப்பான்" என்றான்.

"பாப்பாரவருங்க சிகரெட் பிடிக்கிறிகளே, முடி வெட்ட மாட்டிகளா?"

சிரித்தான்; "உன் பேரென்ன?"

"வெள்ளையம்மான்னு பேரு. வெள்ளின்னு கூப்பிடுவாக. அது என்னங்க?"

"வாத்தியம்."

"பாட்டுப் பாடுமா?"

"வாசிச்சாப் பாடும். உனக்கு பாட்டுத் தெரியுமா?"

"சினிமாப் பாட்டா?"

"இல்லே, உங்க ஊர்ல பாடற பாட்டு?"

"தெரியுங்க, எப்பனாச்சியும் பாடுவேன். பாடினா சிரிப்பாரு."

"யாரு?"

"அதாங்க அவரு. டேசன்ல சொன்னாங்களே. டாக்டரு ஒட்டி வருவாருன்னு."

"மருதமுத்து?"

"அவருதாங்க டாக்டரு ஓட்டுவாரு. கரண்டு கம்பி இளுப்பாரு. பாப்பாரப்பட்டி சந்தையிலே உங்க மாதிரி சிகரெட் பிடிப்பாரு- களுத்தில குட்டை கட்டிக்கிட்டு."

"உம் புருசனா?"

"இல்லிங்க. குறிச்ச பொண்ணுங்க நான்."

அவள் சேற்றில் இறங்கி 'சளக் சளக்' என்று நடந்தாள். இவன் சுற்று வழி தேடிக் கொண்டிருந்தான்.

"வாங்க, இதான் வழி."

பூட்ஸைக் கழற்றிக் கொண்டு காலை வைத்தான். வழுக்கென்று விழுந்து பழுப்பாக எழுந்தான். சர்க்கஸ்காரன் போல் நடந்தான். காமிரா தப்பித்தது. சிரித்தாள்.

"கால்சராய் எல்லாம் சேறாயிடுச்சில்ல?"

தேங்கியிருந்த நீரில் கழுவிக் கொண்டான். இப்போது பாதை சுமாராக இருந்தது. செருப்பில்லாமல் எப்படி நடக்க முடிகிறது இவளுக்கு? அவள் நடக்கையில் அவள் இடுப்பு அசைவதில் மருதமுத்துவின் மேல் பொறாமையாக இருந்தது.

காமிராவை எடுத்துச் சுத்தமாக ஃபோகஸ் செய்தான்.

"வெள்ளி!" என்றான்.



திரும்பினாள்.

"க்ளிக்!"

கலர்ஃபிலிம். பச்சைப் பசேல் என்ற பின்னணியில் ஒரு கறுப்புத் தேவதை திரும்பிப் பார்க்க- சிறைப்பிடித்த அப்பெர்ச்சர் சரியாக இருக்க வேண்டுமே என்று கவலைப் பட்டான்.

"போட்டோ புடிச்சயளா?"

"ஆமாம்."

"என்னையா?"

"ஆமாம்."

"காட்டுங்க!"

"இப்பவே போட்டோ வராது. கொஞ்ச நாளாகும்."

"என்னையும், அவரையும் வெச்சு எடுக்கறியளா?"

"யாரை?"

"அவருதாங்க!"

மறுபடி மருதமுத்து.

மேம்பட்டி எங்கே ஆரம்பித்தது? அரசமரத்தடியில் கருங்கல் திண்ணை போலிருந்தது. அதில் நான்கு பேர் உட்கார்ந்து- அவன் வரவை, பேச்சை நிறுத்திவிட்டுப் பார்த்தார்கள்.

"வெள்ளி! எங்க கூட்டிப் போறே?"

"நம்ம கிராமத்துக்குத்தான்."

கல்யாணராமன் அவர்களிடம் சென்று," பஞ்சாயத்துக்காரர் ஒருத்தரைப் பார்க்கணுங்க" என்றான்.

"நாற்பத்தைந்து வயது ஆசாமி ஒருத்தன் பேசினான். அவன் மீசையில் நரை தெரிந்தது. மிளகாய்ப் பழம் போன்ற மூக்குடன் காமராஜ் சட்டை அணிந்து. பையில் பற்பல அழுக்குக்

காகிதங்களை கிளிப் குத்தி வைத்திருந்தான். "நான் தாங்க வி.எம். என் பேரு பிச்சைப் பிள்ளை. பட்டாரிக்கார்டு ஏதாவது பார்க்க வந்திகளா?"

"இல்லிங்க, இங்க தங்கப் போறேன். பஞ்சாயத்துக் காரர் ஒருத்தருக்கு லெட்டர் எழுதியிருக்குங்க! பி.டி.ஓ. எழுதியிருக்கார்."

"அண்ணே தங்கராசு சொல்லிட்டிருந்தார்... பட்டணத்தில் இருந்து யாரோ வர்றதா."

"தங்கராசு! அதான் அவர் பேரு. இப்ப ஞாபகம் வருது. எங்கே அவர்?"

"த வரான் பாருங்க. ஏண்டா டேய்!"

"வாங்க வாங்க! வெள்ளிக்கிளமையில்ல வரதா எழுதியிருந்தாரு!"

"இன்னிக்கு என்ன கிழமை?" என்றான்.

அவன் யோசித்து, "ஆமா! வெள்... ளி. அட! செத்த சவம் நானு விசாளன்னு நினைச்சுக்கிட்டிருக்கேன்!"

"கட்ன பொஞ்சாதியைக்கூட மறந்து போய்ருவான்" என்று வி.எம். சிரித்தார். தங்கராசு அவரைக் கோபித்துப் பார்த்து உடனே சிரித்தான்.

"எப்படி வந்தீங்க?"

"நடந்து. அந்தப் பொண்ணு எங்கே?"

"ஏய் வள்ளி! அங்கேயே நில்லு. மோர் சாப்பிடறியளா?" வெள்ளி நின்று கொண்டிருந்தாள். தங்கராசு படிய வாரி யிருந்தான். இளந்தொந்தியின் மேல் பெல்ட் அணிந்திருந்தான். சட்டை, டவுனில் வாங்கியிருக்க வேண்டும். மெலிதான பையினூடே பார்க்லி சிகிரெட் பாக்கெட்டும், ரூபாய் நோட்டுக் களும் தெரிந்தன.



"நாட்டுப்பாடல் ஏதோ கேக்கணும்னு வந்திருக்கிகளாக்கும். பெரியாத்தாகிட்ட சொல்லி வெச்சிருக்கேன். ஒப்பாரி நால்லா எடுக்கும்!"

வெள்ளி அங்கேயிருந்தே சிரித்தாள். ஒரு சிறுவன் அவன் எதிரே வந்து நின்று வெறித்துப் பார்த்தான். காமிராவைத் தொட்டுப் பார்த்தான்.

"தங்கராசு! இவரு எங்க தங்கப் போறாரு?"

"சமீன் வீட்டில ஒளிச்சு வெச்சிருக்கேன், போயேன்."

"தாவாரம் முழுக்க நெல்லு கொட்டியிருக்குது."

"சினிமா காட்டுமா இது?" என்றான் சிறுவன்.

"சமீன் வீட்டுக்குப் போய் அளைச்சிக்கிட்டுப் போறியே? ம்..."

"ஏன்? அங்கே என்னங்க?" என்றான் கல்யாண ராமன்.

"ஒண்ணுமில்லிங்க. நீங்க நடங்க பிச்சைப்புள்ளை! சும்மா பொரளி பண்ணிக்கிட்டே இருங்க. பட்டணத்துக்காரரு. உயரமா இருக்காரு. தங்கறதுக்கு நம்ம வீடெல்லாம் வசதிப்படுமா? காத்தோட்டமா இருக்குது சமீன் வீடு. பக்கத்தில கம்மாயி. மருதமுத்து பல்ப்பு விளக்கு இளுத்திருக்கான். சவுகரியமா இருக்கட்டும்னு அங்கதான் போட்டிருக்கேன். வாங்கய்யா!"

கிளம்பியதும் அவர்கள் முணுமுணுப்பது கல்யாண ராமனுக்குக் கேட்டது. "என்ன சொல்கிறார்கள்?"

"ஏதாவது சொல்லிக்கிட்டே இருப்பானுக.. நட புள்ளே!"

"எங்கேங்க?"

"சமீன் வீட்டுக்கு!"

"அங்கேயா?"

"ஆமாம், மருதமுத்து எங்கே?"

"உரம் வாங்கப் போயிருக்காரு."

கிராமத்தின் ஒரே தெருவினூடே நடந்தார்கள்.

தென்னை ஓலை வேய்ந்த தழைத்த வீடுகள். ஒவ்வொன்றில் உள்ளேயும் சின்னச் சின்ன இருட்டு. வாசல்களில் பெண்கள் நீரிறைத்துப் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். தேய்த்துத் தேய்த்து உன்னதப் பளபளப்பில் பித்தளைப் பாத்திரங்கள்! ஒவ்வொரு வீட்டின் முன்புறமும் பச்சையில் ஒரு சுத்த சதுரம் இருந்தது. அதற்கப்புறம் குழந்தைகள் மண்ணில் வெளிக்கிருந்து கொண்டிருந்தார்கள்.

"வெட்டவா குத்தவா, வெண்ணித் தண்ணி ஊத்தவா" என்று சிறுவர்கள் மரத்தினருகில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மீசை வைத்த சிப்பாயும், காரைக் குதிரைகளும் அருகில் நிற்க, கையில் கத்தி வைத்துக் கொண்டு வெற்றிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த அய்யனார் காளி கோயில். சூலத்தில் சிவப்பு. நாகர், பிள்ளையார் மற்றும் ஏதோ ஒரு சில்லறைக் காத்தவீரியன். இரண்டு கிணறுகள், குளம். பச்சை நிழலில் இலைகள் மிதக்க, அந்தக் கட்டடத்தின் மறுபதிப்பு அந்தக் குளத்தின் கனவுடன் அசைந்தது.

கட்டடம் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. கிராமத்தின் எளிமையுடனும் ஏழ்மையுடனும் ஒத்துவராத மிகப் பெரிய வீடு. ஏறக்குறைய மாளிகை.

"இவ்வளவு பெரிய வீடா! இங்கே யார் கட்டினாங்க?"

"ஜமீந்தாருங்க. இதெல்லாம் பாப்பாரப்பட்டி வரைக்கும் ஜமீன் நிலமா இருந்திச்சு. சர்க்கார் எடுத்துக் கிட்டாக. அந்தக் குடும்பம் வடக்கே போயிருச்சு. பெரியவரு இறந்துட்டாரு. மவனுக எளுத்துப் படிச்சுட்டு உத்யோகம் பார்க்கறானுக. சம்சாரம், வப்பாட்டி எல்லாம் காணாமப் போய்ட்டாங்க. வித்துறலாம்னு பாக்கிறாக. இந்தக் கிராமத்தில வந்து யாரு வாங்குவாக? நான்தான் வாங்கிப் போடலாம்னு நாப்பது



கேட்டேன். லெச்சம் சொல்றாக. சாவி என்கிட்டதான் இருக்குது. நீங்க வாங்கிறியளா?"

"நானா?" – சிரித்தான்.

"மூன்னூறு ரூம்பு இருக்குதாமில்ல... நான் பாத்ததில்ல" என்றாள் வெள்ளி.

"அதெல்லாம் பொரளிங்க.."

"அப்புறம் புளிய மரத்தில..."

"த! சும்மா இரு புள்ளே!"

உயரமான சுவர்களில் காட்டுச் செடிகள் பீறிட்டு வளர்ந்திருந்தன. பெரிய மரக் கதவு. நுழைந்ததும் முள்ளும் புல்லும் கல்லும் அடர்ந்து ஓர் ஒற்றையடிப் பாதை மட்டும் தப்பித்துச் சென்றது. 1926 என்று கல்லில் எழுதியிருந்தது. கலசம் வைத்த போர்ட்டிகோ; எட்டு படிகள் மேல் செல்ல அகலமான முன் தாழ்வாரம்; மூன்று மிகப் பெரிய கதவுகள்! பச்சை, சிவப்புக் கண்ணாடிகள் அரை வட்டமாகப் பதிக்கப்பட்ட அலங்கார வாசல்கள்! மாடி; மாடிமேல் மாடி உச்சாணியில் ஒரு மண்டபம்.

சிதிலமான தோட்டத்தில் ஓர் இத்தாலியப் பெண் சிலை. அவள் மார்பகத்தில் காக்கை எச்சம். ஒரு ஃபவுண்டன் 1947-ல் நின்று போயிருந்தது. மூன்று சக்கரங்களுடன் ஒரு சாரட்டு வண்டி சாய்ந்திருந்தது. அதனுள் ஒரு நாய் படுத்திருந்தது.

"ச்ச்ச்ச்... மணி மணி மணி" என்றாள் வெள்ளி. கிராம நாய்களின் பொதுப் பெயர் கொண்ட மணி, வாலாட்டிக் கொண்டு வந்தது.

இடப்பக்கத்து அறையைத் திறந்தான் தங்கராசு; "கொஞ்சம் கூட்டிப் பெருக்கிடலாம். நாளை வர்றதா நினைச்சுக்கிட்டிருக்கேன். பெஞ்சி போட்டிருக்குது. லைட்டு இருக்குது."

உள்ளே நுழைந்த கல்யாணராமன் 'சில்'லென்று உணர்ந்தான். ஏதோ ஓர் உணர்வு அவனைத் தாக்கியது.

## 2

"அப்ப. நான் வரட்டுங்களா?" என்றான் தங்கராசு.

"சரி..."

"ராத்திரி சாப்பிட என்ன செய்விங்க?"

"ரொட்டி பிஸ்கெட் எல்லாம் வெச்சிருக்கேன். கொஞ்சம் பால் மட்டும் அனுப்பிடுங்க."

"தினப்படிக்கு?"

"பார்க்கலாம். கொஞ்சம் செட்டில் ஆகட்டும்."

வெள்ளி, "நான் கொண்டு வருவேனுங்க. ஆனா பாப்பாரவரு கறிக் கொளம்பெல்லாம் திங்க மாட்டாரு" என்றாள்.

"பரவாயில்லை. நான் பார்த்துக்கறேன். இந்தா!" என்று மூன்று ரூபாயை அவளிடம் கொடுத்தான்.

"மூணு ரூவாயா! காசைக் கொடுத்துக் கெடுக்காதிங்க"

"சே...! எவ்வளவு தூரம் தூக்கி வந்திருக்கா, தங்கராசு...! நாளைக்குக் காலையில வாங்க கிராமத்தில் சிலவங்களைச் சந்திக்கணும்; குறிப்பா பாட்டுத் தெரிஞ்சவங்களை!"

"கூட்டியாரேங்க. வரேங்க!"

"வரேங்க."

இருவரும் நடந்து செல்வதைப் பார்த்தான். வெள்ளி ஏறக்குறைய உற்சாகமாகத் துள்ளி ஓடினாள். அவள் கால் கொலுசு சற்று நேரம் கேட்டது.



கல்யாணராமன் பிரமித்து உட்கார்ந்தான். "மை காட்! நாகரிகத்திலிருந்து இத்தனை தூரம் வந்து இந்த ஜமீன் வீட்டில் ஏறக்குறைய சிறைப்பட்டு விட்டேன். புதிய முகங்கள், புதிய சூழ்நிலை. நாட்டுப் பாடல்களின் கவர்ச்சியில், அவற்றின் பொருளமைப்பையும் சங்கீத வடிவங்களையும் தேடி, வரப்புகளைத் தாண்டி வந்து விட்டேன். எத்தனை நாள்?"

கல்யாணராமன் எல்லா இளைஞர்களையும் போலில்லை, மிகவும் மனத்தில் வாழ்பவன். இண்ட்ரோவர்ட். எல்லோரும் இன்ஜினியரிங், மருத்துவம், சட்டம் என்று படித்தபோது அவன் ஆங்கில இலக்கியம் படித்தான். எல்லோரும் ஐ.ஏ.எஸ்., பாங்க் பரிட்சை என்று எழுதும்போது அவன் சங்கீதம் படித்தான். எல்லோரும் கல்யாணம் செய்து கொண்டு போட்டோ எடுத்துக் கொண்டபோது, அவன் தமிழ் இலக்கியம் படித்தான். மேற்கத்திய சங்கீதத்தை ஒரு ஆங்கிலோ இந்தியரிடம் பயின்று, அதன் டெலிஸெமிக்வேவர்களிலும் மேஜர் மைனர் ஸ்கேல்களிலும் ஈடுபட்டான்.

நாட்டுப் பாடல் ஒன்றைத் தற்செயலாகச் சென்னை பிளாட்பாரத்தில் சந்தித்தான். பிழைக்க வந்த சிவகிரிப் பெண்ணொருத்தி பின்னிரவில் தன் மகவைக் குப்புறக் கவிழ்த்து முதுகில் தட்டித் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள், பெரிதாகப் பாடிக் கொண்டு;

'என் அரசே என் கனியே என் ஐயா
இது நாளும் எங்கிருந்தாய்?
மாசி மறைவிருந்தேன்
மழைமேகம் சூழ்ந்திருந்தேன்
மாதம் சென்றவுடன்
மாதாவைப் பார்க்க வந்தேன்!'

அந்தப் பாட்டில் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். அதன் உத்வேகம், கவிதை, இயல்பு, வாய் மொழிப் பரவல், அது காட்டிய வெகுஜன உணர்ச்சி, எளிமை, சந்தம்...

அவனுடைய ஆடிஸ்ஸி துவங்கிவிட்டது. அடையாற்றில் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்திற்குச் சென்று விசாரித்தான். அங்கே ஒரு பேராசிரியர் யுனெஸ்கோ பொருள் உதவியில் நாட்டுப் பாடல்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார். அவரைச் சந்தித்துப் பேசினான். அவருக்கு உதவியாளன் தேவைப்பட்ட நேரம்; சரியாக இருந்தது. ஏற்றுக் கொண்டார். இதோ பாடல்களைத் தேடி முதற்பயணம் வந்து விட்டான்.

பெட்டியைத் திறந்தான். காஸெட், டேப்ரிக்கார்டர், சவர சாதனங்கள்; எல்லா உபாதைகளுக்கும் பட்டைப் பட்டையாக மாத்திரைகள்; படித்துத் தள்ளப் புத்தகங்கள்; பற்பசை; அவன் தங்கையின் புகைப்படம் (இறந்துவிட்டாள்); ஒரு சில பாத்திரங்கள் (ஒரு ஸ்டவ் அடுப்பு- வாங்கிச் சொந்தமாகச் சமைப்பதாக உத்தேசம்); ஒரு சிறு காஃபி ஃபில்டர்! காஃபி பொடி; பவுடர் பால்; சாக்லேட்டுப் பட்டைகள்... "அட! வெள்ளிக்கு சாக்லேட் கொடுத்திருக்கலாமே! அவன் வயிற்றில் மறுபடி வெள்ளியை உணர்ந்தான்.

'க்ளிக்!' அவள் திரும்பிப் பார்த்த பார்வையில் தன் அழகைப் பற்றிக் கவலையில்லாத ஆர்வம். அவள் மார்பின் வளைவு. உள்ளுடையில்லாததால் நடக்க நடக்க அசைந்த மார்பகங்கள்... யார் அந்த மருதமுத்து?

வெகு நாட்களுக்கு அப்புறம் அவன் நினைவுகளில் செக்ஸ் வருகிறது. மூன்று ரூபாய் கொடுத்தபோது கையைத் தொட்டுப் பார்த்திருக்கலாம்.

"சட்! நான் வந்த வேலை வேறு!"

கித்தாரை எடுத்து வைத்தான். அதன் ஜி கம்பியைச் ற்று முறுக்கேற்றித் தட்டினான்.

"டங்!" வெள்ளி ஒலித்தாள்.

அந்த பெஞ்சியைத் தூசி தட்டிவிட்டு உட்கார்ந்து ஒன்றிரண்டு கார்டுகளை நிரடினான்.



ஜி, ஏ7, ஜி, ஏ7 என்று அந்த ஒலிப்பின்னல்கள் அந்த அறையை நிரப்பின. நிமிர்ந்தான். திடுக்கிட்டான்.ஜன்னலில் ஒரு முகம். அவனைப் பார்த்ததும் அந்தச் சிறுவன், "லேடியோப் பொட்டி டோய்!" என்று ஒரே ஓட்டமாக ஓட, கல்யாணராமன் பயம் கலைந்து சிரித்துக் கொண்டான்.

அறையை விட்டு வெளியே வந்தான். ஹால் தெரிந்தது. பழங்காலத்துப் பச்சை நாற்காலிகள் தெரிந்தன. சலவைக் கல்லில் ஸ்வஸ்திக் கோலம் தெரிந்தது.

"மகா... ஸ்ரீ பாப்பாரப்பட்டி மேம்பட்டி வெம்பட்டி ஜமீன்தார் அவர்கள் சமூகத்திற்கு வாசித்தளித்த வரவேற்புப் பத்திரம். அறுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்... ஃப்ரேம் போட்டு மாட்டியிருந்த அந்தப் பத்திரத்தில் காலஞ்சென்ற ஜமீன்தாரைக் காலஞ்சென்ற கவிஞன் ஒருவன் இந்திர சந்திரனாக வருணித்திருந்தான். மாடிப் படிகள் தெரிந்தன. அருகில் சென்றான். வௌவால் நாற்றமடித்தது. குப்பை. மெதுவாகப் படியேறினான். ஒரு பால்கனி வந்தது! மறுபடி படிகள் தெரிந்தன. மற்றொரு மாடி. அதன் தலைமேலிருந்த மண்டபத்து மரப்படிகள் அவனை வரவேற்றன. ஏறிப் பார்க்கலாமே!

"க்றீச் க்றீச்" என்று சப்தமிட்டுச் சற்று ஆடின படிகள். மேலே வந்துவிட்டான். சிறிய மண்டபம். காற்று பிய்த்து வாங்கியது. தூரத்தில் குட்ஸ் வண்டி போவது தெரிந்தது. மேம்பட்டி முழுவதும் தெரிந்தது. குளம். அந்தக் காத்தவீரியன் கோயில். அந்த ஆலமரம் தூரத்தில் புழுதி வாலணிந்து ஒரு டிராக்டர் வருவது தெரிந்தது. மண்டபத்தின் உள்ளே ஆராய்ந்தான். பஞ்சகோண வடிவத்தில் மண்டபம். உட்கார இடம். தரையில் கல் பதித்த கோலங்கள். இது என்ன? சில சிகரெட்டுத் துண்டுகள் கிடந்தன. அவற்றில் ஃபில்டர் நீளம் பரிச்சயமற்றதாக இருந்தது. என்ன சிகரெட் இது? ஒரு துண்டை எடுத்துப் பார்த்தான். ஸ்டேட் எக்ஸ்பிரஸ்!

இது யார் குடிக்கிறார்கள்? கிராமத்தில் சிதிலமான ஜமீன் வீட்டில் மேல்மாடியில் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட் துண்டு! விநோதமாக இருந்தது. அந்த டிராக்டர் அவனை நோக்கி வருவதாகப் பட்டது! கீழே இறங்கி வந்து விட்டான். வீட்டுக்கு வெளியே வந்தான். சூரியன் மறைவதற்கான ஆயத்தங்கள் அடிவானத்தில் தெரிய, படபடவென்று மெஷின் பறவை சிறகடிப்பது போல குதித்துக் குதித்து டிராக்டர் வந்தது. அருகில் வர, அதில் இருவர் வருவது தெரிந்தது. டிராக்டரின் பக்கெட் ஸீட்டில் அந்த இளைஞனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பின் பக்கத்துப் பெரிய டயர் மேல் அமைந்திருந்த மட்கார்டில் உட்கார்ந்து கொண்டு வெள்ளி! கல்யாணராமன் உற்சாகப்பட்டான்.

டிராக்டரை நிறுத்திவிட்டு அந்த இளைஞன் குதித்து இறங்கி, வெள்ளியை இடுப்பைப் பிடித்துத் தூக்கிப் பூப்போலக் கீழே வைத்தான். அவள் முழங்காலுக்கு மேலே உடை ஒரு தடவை உயர்ந்ததைக் கல்யாணராமன் கவனித்தான்.

"மறுபடி வந்துட்டியா?" என்றான் வெள்ளியைப் பார்த்து.

"கும்பிடறேனுங்க.. என் பேரு மருதமுத்து."

"நீதானா?"

"வெள்ளி சொல்லிச்சு, நீங்க வந்திருக்கிகன்னு."

மருதமுத்து வெள்ளியின் உயரம்தான் இருந்தான். நல்ல கறுப்பு மயிரிழைகள் நேர்த்தியாகவும் சுருட்டையாகவும் இருந்தன. எடுப்பான குழிந்த மூக்கு. பிடரியிலிருந்து உயர்ந்த முகட்டையுடைய தலை. புஜங்களில் தசைக் கட்டு உழைப்பால் இறுகியிருந்தது. கதவு போல் மார்பு. மார்பில் பனியன் அணிந்து சிவப்பில் மேல் துண்டு போட்டிருந்தான். வேட்டிக் கரையில் மயில் கண்கள் தெரிந்தன. நேராகக் கல்யாண ராமனைப் பார்த்தான்.

"அய்யா இங்கேதான் தங்கப் போறியளா?"



"ஆமாம்."

தாழ்வாரத்துப் புளிய மரத்தைப் பார்த்தான். "எத்தினி நாளு...?"

"அய்யா பாட்டுக் கேக்க வந்திருக்காரு. தங்கராசண்ணன் பெரியாத்தா கிட்ட சொல்லிக்கிட்டிருந்தது. பாட்டுப் பாடினா அய்யா காசு குடுக்கறாகளாம்." என்றாள் வெள்ளி.

"அடிசக்கை! நான் பாடட்டுங்களா?"

"அய்யே? பாடுவ!"

"எனக்கு நாட்டுப் பாட்டு வேணும். உங்க சமூகத்தில் பாடற பாட்டு. வயலில, கோயில்ல, திருவிழாவில் தாலாட்டு, ஒப்பாரி... இதெல்லாம்..."

"அட! இதெல்லாம் யார் பாடுறாக இப்ப! லைட்டு எரியுதுங்களா?"

"பார்க்கலை."

"பார்த்துறலாம் வாங்க! நான்தான் கரண்டு இளுத்தேன்" அவன் முன்னே ஆர்வமாகச் சென்று விளக்குப் போட்டு, "பாத்தியா புள்ள!" என்று இரண்டு மூன்று தடவை ஸ்விட்சை அணைத்து ஏற்றினான். "மோட்டார் மராமத்துச் செய்வங்க. வயின்டிங்கூட டவுன்ல சுத்தியிருக்கன். ஃபீஸ் போனாப் போட்டுறுவங்க. டிராக்டரை பூராக் களட்டிப் போட்டுறுவங்க" என்று தன் இன்ஜினியரிங் சாதனைகளைச் சொன்னான்.

"எனக்கு இதெல்லாம் ஒண்ணும் தெரியாதுப்பா. மிஷின்களைக் கண்டா எனக்கு பயம். நீ இங்க வெவசாயம் பார்க்கிறியா?"

"ஆமாங்க, குத்தவைங்க. இப்பதான் சொந்தம் நெலம் வாங்க இருக்கேன். அதுக்குள்ள சைக்கிள் மோட்டார் ஒண்ணு வாங்கிப்பிடலாம்னு தோணுது! மேவாரத்துக் காரங்க பங்களூர்ல இருக்காங்க. உங்க மாதிரி பாப்பாரவருங்க.

கவனிக்கிறதே இல்லை. தை மாசம் மட்டும் வந்துட்டு நெல் அளன்னா எப்படிங்க?"

"இந்தப் பொண்ணை நீ கல்யாணம் செஞ்சுக்கப் போறியாமே...?"

"அப்படியா சொல்லிச்சு! அடிங்கொக்கா! அதான் என்னைக் கட்டிக்கிடக்கணும்னு ஒத்தைக் கால்ல நிக்குது" என்று அவளை அசிங்கமாகத் திட்டினான்.

"அ! ஆ!" என்றாள் வெள்ளி பொய்க் கோபத்துடன். "கல்லெடுத்துப் போட்டன்னா தெரியும்; நாசமத்துப் போயிருவ!" என்றாள்.

"இவளுக்கு மாவன் மவன் இருக்கான். இடுப்புயரம் இருக்கான். இவதான் என்மேல் வந்து விளுதா. எனக்கு முத்தையாபுரத்தில, பாண்டியாபுரத்தில எல்லாம் கேட்டிருக்காங்க."

"பொரளிங்க. நான் இந்தப் பேயனுக்கு வாக்கப்பட மாட்டங்க!"

அவன் அட்டகாசமாகச் சிரித்து, "அதுக்குள்ள எவ்வளவு கோவம் பாருங்க. துரை சத்தியம் பேசறன். அறுப்பு முடிஞ்சதும் இவளைத்தான் கட்டிக்கப் போறேனுங்க. இவ எனக்குத்தாங்க! மாரளவுத் தண்ணியில நிக்க வெச்சு சத்தியம் வாங்கிக் கிட்டிருக்கா... ஹை! இது என்னங்க?"

"வாத்தியம்"

"சைஸா சல்லிஸா இருக்குதே! பலா மரங்களா?" கித்தாரை மருதமுத்து தூக்கிப் பார்த்து, அதன் கம்பியைத் தட்டி, "பாடுதுங்களே! என்றான். "நீங்க வாசிங்க?"

"இது என்னங்க?"

"டேப் ரிக்கார்டர்."



"டவுன்ல பாத்திருக்கிறேன். பேசினா திரும்பிப் பேசும் இல்லை? வள்ளி, இதப் பாரு!"

"அய்யா என்னைப் போட்டா புடிச்சாக!"

"அப்படியா! என்னையும் எடுப்பீகளா?"

"ரண்டு பேரையும் சேத்து வெச்சி எடுக்கறதா சொல்லி இருக்காக!"

"ஆத்தாடி! அப்படியே சொல்லுதே சொன்னதை! பொட்டிக் குள்ளே யாருங்க?" -ஆச்சரியத்தில் வெள்ளியின் விழிகள் பிரகாசமாயின.

"யாருமில்ல களுத! த பார்... நாடா இருக்குது பாரு, அதுல பேச்சு ஒட்டிக்குது. அப்படித்தானுங்க?"

"அப்படித்தான்... வெள்ளி! ஒரு பாட்டுப் பாடு பார்க்கலாம்."

"இது நம்ப ஊர்ல செய்றாகளா?"

"செய்யறாங்க. அவளைப் பாடச் சொல்லு!"

"பாடு புள்ளே!"

"ம்ம்... தெரியாதுங்க."

"அட பாடுன்னா? அய்யா கேக்குறாக. சந்தைக்குப் போறப்ப பாடுனியே, அதைப் பாடு!"

"சிரிப்பிங்க நீங்க!"

"நான் அந்தால நிக்கறேன்; பாடு. நிறையத் தெரியுங்க இதுக்கு. பெரியாத்தா சொல்லிக் குடுத்திருக்குது."

வெள்ளி மிகவும் தயங்கி, மிகவும் வெட்கப்பட்டு, மிகவும் கீழ்ப் பார்வை பார்த்துக் கொண்டு, மிகவும் சன்னமான குழந்தைக் குரலில் பாடினாள்:

"ஏடு படிச்சவரை
எழுத்தாணி தொட்டவரை
பாரதம் படிச்சவரை
பார்த்து வெகு நாளாச்சி!"

"சபாஷ்!" என்றான் கல்யாணராமன். வெள்ளி முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டாள். அவள் பாடலின் ராகத்தில் நாதநாமக்கிரியாவின் சாயல் இருந்தது. சுருதி விலகாமல் பாடினாள். "குரல் நல்லா இருக்கு!" கித்தாரின் கம்பியைத் தட்டி, "இத பார், இந்த சுருதியில் பாடு, பார்க்கலாம்" என்றான். இயல்பாக அந்த மைனர் கார்டில் ஒட்டிக் கொண்டாள்.

"பல்லில இடை காவி
பணத்தில செலவாளி
மேவரத்து நெல்லளக்க
மெத்தச் செலவாளி!"

"ப்யூட்டிஃபுல்! திஸ் இஸ் இட்!" என்றான்.

"மருதமுத்து! உன்னைப் பத்தித்தான் பாடுறா!" என்றான். அவன் உள்ளே வந்து, "கேட்டாங்க! நான் சொல்றன் கேளுங்க" என்று வசனத்தில்.

"மஞ்சக் கிழங்கு தாரேன்
மார்புக் கேத்த ரவிக்கை தாரேன்
கொஞ்சி விளையாடு உனக்கு
குழந்தை கையிப் புள்ள தாரேன்."

என்று அட்டகாசமாகச் சிரித்தான். வெள்ளி வெட்கப் பட்டு ஒரே ஓட்டத்தில் ஓடி விட்டாள்.

காஸெட்டை நிறுத்திவிட்டுக் கல்யாணராமன், "ஏன்யா விரட்டிட்ட நல்ல சமயத்துல?" என்றான்.

"நான் பாடறங்க? எடுத்துக்கங்க! என்னடி மீனாச்சீ!

"ஷட் அப்! போய்ட்டு அப்புறம் வா!"

"ராத்திரி தனியாப் படுப்பிகளா? துணைக்கு வாரட்டுமா?"

"வேண்டாம்."

"வரேங்க! அடியோய்!" என்று கத்திக்கொண்டே நடந்தான்- "வட்ட வளவிக்காரி, வளத்தட்டு சீலக்காரி நில்லுடி!"



வெள்ளி டிராக்டரின் அருகில் காத்திருந்தாள். மருத முத்து அவளருகில் சென்று அவளை அணைத்து ஏற்றி விடுவதைப் பார்த்தான். வயிற்றில் ஒரு சின்ன கத்திக் குத்துபோல் உணர்ந்தான்.

இரவு மருதமுத்துவின் ஒற்றை பல்பு எரிந்து கொண்டிருக்க, ரொட்டியில் மிக்ஸெட் ஜாம் தடவிச் சாப்பிட்டான். வெளியே அடர்ந்த இருள். தவளைகள் சப்தம். பூச்சிகள் திருகித் திருகி எழுப்பும் ஒலிகள்.

'ஓ' என்ற அது இரைச்சலா, மௌனமா? கல்யாண ராமன் அந்த காஸெட்டைப் போட்டுப் பார்த்தான்.

"அய்யா என்னைப் போட்டா புடிச்சாக...

"ஏடு படிச்சவரை
எழுத்தாணி தொட்டவரை"

வெள்ளியின் குரலை மூன்று தடவை போட்டுக் கேட்டான். வரிகளை நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டு, மருதமுத்து பேசிய பகுதியை மட்டும் ஓவர் ரிக்கார்ட் செய்து அழித்தான்.

மற்றொரு காஸெட்டை எடுத்துப் பொருத்தினான். தட்டினான். சங்கீதம் கேட்டது.

*"Money Money Money*
*It's kind of funny*
*In a Rich man's World!"*

ரிச் மான்! மகராஜ ஸ்ரீ ஜமீன்தார். அவர் வீட்டு மேல் மாடியில் ஒரு ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட் துண்டு. "த்ரீ நாட் ஒன்ல வந்திங்களா?" "குறிச்ச பொண்ணுங்க." 'வெள்ளி க்ளிக்! மெதுவாக அவள் கட்டம் கட்டமான புடவை விலக க்ளிக்! க்ளிக்! க்ளிக்' 'கொஞ்சம் படுத்துக்க வெள்ளி, க்ளிக்!'

"கொஞ்சி விளையாடு உனக்கு
குழந்தை கையிப் புள்ள தாரேன்."

'இங்க வா வெள்ளி! அந்தக் கருப்பன் கிட்ட போகாதே!' -சட்!

எண்ணங்களைக் கலைத்துப் புத்தகத்தில் ஆழ்ந்தான்.

'தற்போது செவிவழிப் பரவலுக்குக்கூட முன் நிபந்தனையாக எழுத்து வடிவம் இருக்கிறது. கொலைச் சிந்து என்றொரு பாடல் வடிவம் தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் உள்ளது. இது ஒரு வாழும் மரபாகும். கொலைகள் சமூகப் பின்னணியில் நடைபெறுகின்றன..."

எப்போது தூங்கப் போனான்? எப்போது விழித்துக் கொண்டான் திடுக் என்று?

மின் விசிறி இல்லாது தூங்கிப் பழக்கமில்லை. உடம்பு பூரா வியர்த்திருந்தது.

அந்தத் தவளைகள் இன்னும் ஓயவில்லை.

அந்தத் திருகுப் பூச்சிகள் இன்னும் ஓயவில்லை. ஆனால் இது என்ன சப்தம்?

மாடியில் நாற்காலிகளை நகர்த்துவது போல சப்தம்.

## 3

சப்தம் மாடியிலிருந்துதான் வந்தது. நாற்காலி நகர்த்துவது போன்ற சப்தம். விளக்கைப் போட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஒன்று பதினைந்து.

எழுந்துபோய்ப் பார்க்கத் தைரியம் வரவில்லை. சற்று நேரம் உத்தரத்தைப் பார்த்துக் கொண்டு காத்திருந்தான். தேக்கு மர ரீப்பர்கள் காவி வர்ண பெயிண்ட் அடித்து வரிவரி நிழல்கள் அமைக்க, சிலந்தி வலைப் போர்வை



போர்த்தித் தொங்கிய சரவிளக்கில் பல்ப் இல்லை. மருத முத்துவின் ஒற்றை விள்க்கு மட்டும் மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது. ஜன்னலுக்கு வெளியே கிருஷ்ண பட்சத்துச் சோகை நிலா சோலைகளை அனாவசிய ரகசியங்களுக்கு உள்ளாக்கியிருந்தது. இருள் திட்டுகளில் சர்ரியலிஸம் தெரிந்தது.

கல்யாணராமன் இனி தூங்க முடியாமல் காஸெட்டுடன் இணைந்திருந்த ரேடியோவைத் தட்டி முள்ளைத் திருப்பினான். முப்பத்தொரு மீட்டரில் ஸ்டேஷன்கள் கொப்பளித்தன. மேற்கு ஜெர்மனியின் குரல் ஓண்ட வந்த யுகோஸ்லாவியர்களையும் துருக்கியர்களையும் பற்றிச் சலித்துக் கொண்டது. பி.பி.ஸி. இன்றைய உலகம் என்றது. சீனா ஓல சங்கீதம் பாடியது. மாஸ்கோ எங்கள் நாட்டில் எல்லோரும் சுபிட்சம் என்றது. இரவில்தான் எத்தனை குரல்கள்! நிசாசரர்கள்! அவர்களில் ஒரு குரல் மாடியிலா? வெறும் குரலா! வெறும் சப்தமா? ரேடியோவைத் தணித்தான். அந்த சப்தம் இப்போது திசைமாறியிருந்தது. மாடிப்படியருகில் கேட்டது. திடுக்கிட்டான். மரப் படிகளில் இறங்கி வரும் சப்தம் கேட்டது. நிதானமான, பதட்டமில்லாத இறக்கம். படிகளின் பழைய ஆணிகளும் ஜாயிண்ட்களும் முனகுவது கூடக் கேட்டது. அப்படியே உறைந்து போனான். அறைக்கதவு தாளிட்டுத் தான் இருக்கிறது. இருந்தும் ஓர் உதை உதைத்தால் திறந்து விடும்.

காலடி ஓசை இப்போது அருகில் கேட்டது. மெதுவாக மெதுவாக என்ன நோக்கி வருகிறான். நிச்சயம் இங்கேதான் வருகிறான். அதோ, அறைவாசற் கதவுவரை வந்து விட்டான். நிற்கிறான்.

மௌனம், விஸ்தாரமான மௌனம். கல்யாணராமனின் உடல் முழுவதும் எச்சரிக்கை சுரப்பிகள் பாய்ந்து மயிர்க்கால்கள் நின்று கொண்ட மௌனம்.

சட்டென்று ரேடியோவைப் பெரிது படுத்தினான். கதவு தட்டும் ஓசையை அவன் கேட்க விரும்பவில்லை. திடும்

திடும் என்று 'பாப்' சங்கீதம் அதிர்ந்தது. கல்யாண ராமனின் உதடுகள் சமஸ்கிருதத்தில் துடித்தன.

"அமூர்த்திரனகோ அசிந்த்யோ
பயக்ருத் பயநாசனஹ"

அச்சம் உண்டாக்குபவனும் அச்சத்தை அகற்றுபவனும் அவனே அவனே அவனே!

கொஞ்சம் தெம்பு வந்து ரேடியோவை நிறுத்தினான். மௌனம் ஒரு நிமிஷம். பத்து நிமிஷம். அரை மணி. ம்ஹூம்... அவ்வளவுதான். எதுவும் கேட்கவில்லை.

முதலில் ஒரு டார்ச் வாங்க வேண்டும். தற்காப்புக்கு ஏதாவது ஓர் ஆயுதம் வாங்க வேண்டும். நாளை தங்கராசுவைக் கேட்க வேண்டும். ஒரு வேளை மாடியில் வேறு யாராவது தங்குகிறார்களோ, என்னவோ? தங்கராசு சொல்ல மறந்திருக்கிறான். அப்படித்தான் இருக்கும். நாளை கேட்டு விடலாம். நாளைக்கு... நாளைக்கு இப்போது தூங்கிவிடலாம்.

காஸெட்டில் மெலிதான வயலின் சங்கீதம் அமைத்துக் கொண்டான். விளக்கணைத்துக் கண்ணை மூடிக்கொண்டான். அவன் தங்கையின் முகம் தெரிந்தது.

"ஓப்பன் ஹார்ட் ஸர்ஜரிக்கு வெல்லூர்தான் நல்லது. ஆனா பதினஞ்சாயிரம் ஆகும். அங்கேயும் செய்றாங்க. எது எப்படியோ க்விக்கா டிஸைட் பண்ணிடுங்க!"

அவன் டிஸைட் பண்ணுவதற்குள் கடவுள் டிஸைட் பண்ணிவிட்டார். "அண்ணா! எனக்கு அந்த நீல ஸாரி வாங்கி வரியா?" அதற்குள் அதற்குள்...

மான்சீனியின் வயலின்கள் அவனை ஆக்கிரமித்துக் கொண்டன.

நகரத்தில் கேட்டே அறியாத பட்சிகள் எல்லாம் "கல்யாண ராமன்!" "கல்யாணராமன்!" என்று அவனை எழுப்பின.



எழுந்தான். வேறுவிதமாக இருந்தது காலை. ரகசியங்கள் எல்லாம், பயங்கள் எல்லாம் இளஞ் சூரியனிடம் அடிபட்டுப் போய்விட்டன. ஜன்னல் வழியாக அந்தக் தங்கத் திகிரி உஷ்ணமில்லாமல் அவன் மேல் மஞ்சளடித்தது.

வெளியே வந்தான். தூரத்தில் அந்தப் பம்ப் செட் தெரிந்தது. ஒரு ஜெர்ரிகானையும் சோப்பு, பற்பசையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். சோலைக்குள் நடந்தான். உலர்ந்த இலைகளை அவன் காலடிகள் 'சரக் சரக்' என்று ஆதரவாக மிதித்தன. உற்சாகம் திரும்பி விட்டது.

செங்கல் கட்டடத்தின் மேல் தகரக்கூரை அமைத்து, அது காற்றில் பறக்காமல் இருக்கக் கருங்கல் வைத்து, அதனுள் பம்ப் உறுமிக் கொண்டிருக்க, வெளியே வயலில் நீர் தடிமனாகப் பாய்ந்து கொண்டிருக்க- அங்கே உட்கார்ந்து அதன் ஆவேசப் பிரவாகத்தில் குளித்தான்.

"டிட்டிட் டீரராரலாப ஓூபா" என்று சாகித்திய மில்லாமல் பாடினான். சிரிப்புச் சப்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினான். சோப்பு நழுவியது.

வெள்ளியும், இன்னொரு பெண்ணும் நின்று கொண்டிருந்தார்கள். தோளில் துணிகள்.

"என்ன!"

"இங்கே வந்திங்களா குளிக்கிறதுக்கு?" உடன் வந்திருந்த பெண் எங்கோ பார்த்துச் சிரித்தாள்.

"ஏன்?"

"இது பொம்பிளையாளுங்க குளிக்கிறது!"

"ஸாரி!" என்று எழுந்து உடனே உட்கார்ந்தான். வெறும் அண்டர்வேர்.

மறுபடி சிரித்து அவர்கள் திரும்பிக் கொண்டார்கள்.

"கொஞ்சம் ஒதுங்கிக்குங்க. நான் போயிடறேன்."

"அந்தால தெரியுது பாருங்க பாம்புக் குளா. அங்கே போவலாம் நீங்க."

அவசரமாக கட்டை பாண்ட் அணிந்து கொண்டு தலையில் இன்னும் நீர் சொட்டச் சொட்டக் கிளம்பினான்.

அவர்களைக் கடக்கும்போது அந்தப் பெண் 'கிச்' என்று நெருப்புக்குச்சி கிழிப்பதுபோல் சிரித்தது எரிச்சலாக வந்தது. "த! சும்மாரு!" என்றாள் வெள்ளி. அவளும் சிரித்துக் கொண்டிருந்தாள்.

சற்று தூரம் நடந்ததும்தான் சோப்பை மறந்து விட்டது ஞாபகம் வந்தது. திரும்பினான். ஒரு கணம் வெள்ளி மார்பில் துணியில்லாமல் நின்றது தெரிந்தது. மறுபடி பார்க்கத் தைரியமில்லாமல் திரும்பி விருட்டென்று கிளம்பினான்.

ஜமீன் வீட்டுக்குத் திரும்பியபோது தங்கராசுவும் வயசான ஓர் அம்மாவும் காத்திருந்தார்கள்.

"குளிச்சிங்களா? காப்பி பலகாரத்துக்கு என்ன செய்யப் போறீக? பால் கொண்டு வந்திருக்கன்."

"இது யாரு தங்கராசு?"

"இதான் பெரியாத்தா..."

"சுருக்குப் பையிலிருந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த பெரியாத்தா அவனைப் பார்த்துச் சற்று சிரித்தாள். அள்ளிச் செருகிய முடி. அலையும் கண்கள். நெற்றியில் கோடுகள். அறுபது வயதிருக்கலாம். ஒன்று இரண்டு பற்கள் தான் காவி நிறத்தில் ஒட்டிக் கொண்டிருந்தன. ஏறக்குறைய பொக்கைச் சிரிப்பிலும் தீர்க்கமான மூக்கிலும் வசீகரம் நிச்சயம் இருந்தது.

"உக்காருங்க, வரேன்."

"நான் கிளம்பறேங்க பெரியாத்தா! அய்யா பட்டணத்தில் இருந்து வந்திருக்காரு. அவரு என்ன கேக்குறாருன்னு காதில்



வாங்கிக்க. கொஞ்சம் சத்தம் போட்டுப் பேசணுங்க. ஒரு காது டப்பாசு!"

அவள் மென்று கொண்டே தலையாட்டினாள்.

"தங்கராசு! ஒரு விஷயம். இந்த வீட்டில வேறு யாராவது தூங்கறாங்களா?"

"இல்லியே, ஏங்க?"

"ராத்திரி யாரோ நடமாடற மாதிரி சப்தம் கேட்டுது."

"எங்கே?"

"மாடில."

"சலங்கை சப்தமா?"

"இல்லை. ஆள் நடக்கிற மாதிரி கேட்டது. மணி ஒண்ணு இருக்கும்."

"பயந்துக்கினிங்களா?"

"இல்லை, ஒரு மாதிரி... தனியா இருக்கிறதில..."

தங்கராசு யோசித்தான்.

"யாரு...? ஒருவேளை அறுப்பறுக்கப் போய் வார பயலுவ தண்ணியடிச்சிட்டு உள்ளார வந்துட்டானுகளோ என்னவோ. பேச்சுக் குரல் கேட்டுதுங்களா?"

"இல்லை."

"எதுக்கும் ஒண்ணும் செய்யுங்க. தோட்டத்துக்கு வெளில கதவு இருக்குது பாருங்க; அதைச் சாத்தி வெச்சுட்டுத் தூங்குங்க. காலைல வர்றபோது திறந்து கிடந்தது. பார்த்தேன். எதுக்கும் ராவைக்கு மருதமுத்துவ வந்து படுக்கச் சொல்லுறேன்."

"சரி!"

தங்கராசு வீட்டைச் சுற்றி ஒரு தடவை நோட்டம் விட்டு, "யாராயிருக்கும்?" என்று முனகிக் கொண்டே கிளம்பினான்; "ஏய் கிளம், அதுக்குள்ள தொடங்கிட்டியா?"

பெரியாத்தா மடி நிறைய கொய்யாக் காய்கள், முருங்கைக் கீரை, மாங்காய் என்று சேகரித்து வைத்திருந்தாள்.

"வீணாத்தானே போவுது!"

"பறிக்காதே. எல்லாம் என் பொறுப்பு. கீளே போடு! கிளத்தைக் கொஞ்சம் நோட்டம் பார்த்துக்கங்க. தோட்டத்தையே சூறையாடிப்புடும். சில்லறை கில்லறை கண்ல காண்ற மாதிரி வெக்காதீங்க, திருடு!"

"அய்யா!" என்றாள் பெரியாத்தா. தங்கராசு போனதும் கல்யாணராமனைப் பார்த்துச் சிரித்தாள்.

"இரும்படிச்ச மாதிரி இருக்கிங்களே, ராசா மவனே?" என்றாள்.

"இங்கேயே இரு, வரேன்" என்றான்.

"காப்பித் தண்ணி இருக்குங்களா?"

"நானே சாப்பிடலை இன்னும்." -உள்ளே சென்றான். தங்கராசு கொண்டு வந்திருந்த பால் சூடாக இருந்தது. அதில் சர்க்கரையையும் ப்ரூவையும் போட்டுக் கலக்கி மடக் கென்று விழுங்கினான். திடமான பால் கொஞ்சம் வயிற்றைப் புரட்டியது. சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். வெளியே வந்தான். பெரியாத்தா தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தாள். தரையில் அவள் சேகரித்த காய் வகைகள் இறைந்திருந்தன.

"வீணாப் போவுது, அணில் தின்னுது. எடுத்துக் கிட்டா என்னவாம்!... நீங்க வம்முசங்களா?"

"என்னது?!"

"சமீன் வம்முசங்களா?"

"இல்லை. பாட்டுக் கேக்க வந்தேன்."

"அ?"

"பாட்டு! நாட்டுப் பாட்டு."

"நாட்டுப் பாட்டு! பாட்டு!" என்று இரைந்தான்.



"எனக்கு எல்லாம் தெரியும்! கிளம்ங்கிறான்! எனக்கு என்னா வயசு? பங்குனில பொறந்தனுங்க!"

"என்ன வயது உனக்கு?"

"நாப்பதுங்க."

"சரிதான்! சினிமால இருக்க வேண்டியவ நீ; உனக்கு என்ன பாட்டு தெரியும்?"

"எல்லாங்க! ஒப்பாரி, கோடங்கி, கலகம்... காசு தருவீகன்னு வெள்ளி சொல்லிச்சு!"

"தரேன்."

"ஒத்த ரூவா கொடுத்திங்கன்னா மல்லிக் காப்பியும் ஆளாக்கு அரிசியும் கொஞ்சம் பொயலையும் வாங்கலாம். மவன் இருக்கான். காசே குடுக்கமாட்டான். அந்தச் சிறுக்கி தண்ணிகூட ஊத்த மாட்டாங்கறா. நல்ல சீலை உடுத்தி நாளாச்சுங்க. பாருங்க, எல்லாங் கிளிசல்."

"ஏய்! ஏய்! அழாதே."

"போய்ட்டாருங்க. மூணு வருஷம் ஆச்சு. வயல்ல இருந்து வந்தாரு. வெளிக்கிருக்கறன்னாரு. திடீர்னு விளுந்தாருங்க. கண்ணு தொறக்கலை. பெரியாசுபத்திரியில முதுவுல ஊசி குத்தினாங்க. இந்தா பெரிய ஊசி. அந்தச் சிறுக்கி முழுவாம இருந்தாளுங்க. பேரப்புள்ளயப் பாத்துட்டுப் போயிருக்கக் கூடாதா? கண்ணு தொறக்கலை. உண்ணாட்டம் வாட்ட சாட்டமா இருப்பாரு. எனக்காருமில்ல. தாய் வீடா? புகுந்த வீடா?

"தங்க ரயிலேறி நான்
தாய்வீடு போவையில எனக்கு
தங்க நிழலில்லை
தாய்வீடு சொந்தமில்லே!"

கல்யாணராமன் அந்தப்பாட்டில் திகைத்தான். "ஏய், இரு! இரு!" என்றான். உள்ளே போய் டேப் ரிக்கார்டரை எடுத்து வந்தான். "மறுபடி சொல்லு."

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, "காசு குடு
பீகளா?" என்றாள். கல்யாணராமன் அவளுக்கு ஐந்து ரூபா
தந்தான். "சில்லறை இல்லிங்களே?"

"எல்லாத்தையும் வெச்சுக்க."

அவள் துக்கமெல்லாம் சட்டென்று கோடை மழை போ
விலக, மூக்கை உறிஞ்சி, "இதென்ன மணக்குது இங்கே
என்றாள். கல்யாணராமன் சட்டையில் இருந்த பெர்ஃப்யூ
மணத்தைச் சொல்கிறாள். "மாசிப் பச்சை மணக்குது உங்
மேல!" என்றாள்.

"சென்ட்டு! அதிருக்கட்டும். நீ அந்தப் பாட்டைப் பா
மறுபடியும்!"

"இதென்னங்க...?"

"டேப் ரிக்கார்டர்"

"அ!" என்றாள் மந்தமாக.

"காட்றேன் நீ சொல்லு!"

"அன்னா தெரியுதில்ல
அண்ணாச்சி மண்டபங்கள்
மண்டபத்துக் கீழே நான்
மயிலாள் சிறையிருந்தேன்
மயிலினும் பாராமே என்னை
அம்பு கொண்டு எய்தாக!"

"ப்யூட்டிஃபுல் ஓல்ட் கர்ல்! ஐ லவ் யூ!" என்றான்.

"சீதை பிறந்தவிடம்
சிறுமதுரை அடிவாரம்
சீதைவிடும் கண்ணீரு
சின்னமடி நிறைந்து
திருப்பாற் கடல் நிறைந்து–"

கிராமத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் அந்தக் கவி
வரிகள் எங்கே பிறந்தன; எங்கே மலர்ந்து, எப்படியெல்லா



பரவின? கல்யாணராமன் ஒரு நிமிஷம் கடவுளுக்கு அருகில் சென்றான்.

பெரியாத்தாளின் வரிகளை டேப் ரிக்கார்டர் ஆர்வத்துடன் சுழன்று சுழன்று பதித்துக் கொண்டது.

"என்ன ஸாமி! டவுனுக்கு வரீகளா?" ஜன்னலுக்கு வெளியே பார்த்தான் மருதமுத்து.

சுதந்திரமாக உள்ளே நுழைந்து அவன் ஷேவிங் சோப்பை எடுத்துப் பார்த்தான். ஆஃப்டர் ஷேவ் லோஷனைத் திறந்து உதறிப் பார்த்தான்.

"டவுனுக்கு எப்படிப் போவே?"

"டிராக்டரிலதான். நல்லாருக்கும் சவாரி. கொஞ்சம் புளுதி படும். கண்ணாடி மாட்டிக்கங்க. கறுப்பு கால்சராய் இருந்தா மாட்டிக்கங்க. பொம்பளையாளுங்க குளிக்கிற பம்புக்குப் போயிட்டிங்களாமே! வெள்ளி சொல்லிச்சு!"

"சொல்லிட்டாளா?"

"ராத்திரி படுக்க வரனுங்க. பயந்துக்கினிங்களாமே! தங்கராசு சொன்னாரு."

"பயம்னு இல்லே!"

"டவுன் ஆளுங்க பயந்தவங்க. அந்தப் புளியா மரத்திலே காட்டேறி இருக்குங்க. வெள்ளி பாத்திருக்குது. ஒரு நா ரவைக்கு வந்து பந்தம் புடிச்சுத் தேடினங்க. 'பிஹிபிஹி'ன்னு சிரிச்சுக்கிட்டு ஓடறண்டா ஓடறண்டான்னுச்சு. தகிரியம் வேணுங்க. கைல பாருங்க தாயத்து. முத்தம்மா கோயில் பூசாரி கொடுத்தாரு. உள்ளுக்குள்ள பொம்பளை முடியைப் பொசுக்கி பஸ்பம் வெச்சிருக்கு. பயந்து போயிட்டிகளா? டவுசர்லாம் ஈரமா இருக்குது!"

"இல்லே! அந்தக் கான் ஒழுகறது" என்றான் எரிச்சலுடன்.

"அதான் பார்த்தன். வாங்க!"

டிராக்டரின் பக்கவாட்டில் எலும்பு குலுங்க, கன்னத்தின் சதைகள் எல்லாம் வைப்ரேஷனில் துடிக்க, குதித்துக் குதித்து ஒரு பிரயாணம். மரத்தடியில் குழந்தைகள் தூளிகளில் தூங்கின. பெண்களின் பின் பக்கக் குன்றுகள் வயல் பச்சையில் தெரிந்தன.

வெள்ளி டிராக்டரை நிறுத்தினாள்.

"எனக்கு எதுனாச்சும் வாங்கி வரியா?" என்றாள்.

"ம்ம்... பஞ்சு முட்டாய் வாங்கி யாரேன்!"

"அய்ய!"

அவளைக் கன்னத்தில் கிள்ளினான் மருதமுத்து. "சாமந்தி கிட்ட காத்திரு. அய்யாவெ விட்டுட்டு வடக்கே போவம்" என்றான். வெட்கப்பட்டாள். "நா வர மாட்டேன்" என்றாள். "இந்தா! வர்ற நீ!" என்றான். "தை மாசம் களிச்சு!" என்றாள். "டெண்டுக்குப் போயிரலாம் புள்ள" என்றான். "துவரங்கா தின்னு!" என்றாள்.

"என்ன மருதமுத்து, நாழி ஆகுமா?"

"இதா கிளம்பிட்டனுங்க! வரம்புள்ள!"

'ஏன்! ஏன்? எதற்காக இவ்வளவு பொறாமை எனக்கு? என் காதல் அந்த நாட்டுப் பாடல்களிடம் அல்லவா?'

வெள்ளி மிக ஆர்வத்துடன் மருதமுத்துவைப் பார்த்துக் கொண்டு நிற்க, டிராக்டரின் புழுதிப்படலம் அவளை மறைத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான் கல்யாண ராமன்.

புழுதி நிறைந்த டவுன். புவனேஸ்வரி சினிமாக்கொட்டகை. 'அண்ணா ஒலி ஒளி' என்று லவுட்ஸ்பீக்கர் கடை, சைக்கிள் கடை, வெல்ல மண்டி, மிளகாய்க் குப்பல்கள், சீட்டித்துணிகள், வசந்தா லாட்ஜ், டவுன் பஸ் ஸ்டாண்டு சுவரெல்லாம் படை மருந்து விளம்பரம்.

சிறியதாக ஒரு கெரொஸின் ஸ்டவ் வாங்கிக் கொண்டான். ஒரு டார்ச் விளக்கு... சோப்பு வாங்கும்போது வெள்ளியின் ஞாபகம் வந்தது. அவற்றை யானைத் தந்தத்திற்கு ஒப்பிட்ட அருணகிரிநாதரின் அனுபவம் சட்டென்று புரிந்தது. ஒரு பிளாஸ்டிக் முத்துமாலை வாங்கி, "இதை வெள்ளிக்குக் கொடு" என்றான் மருதமுத்துவிடம்.



"அட!" என்றான். "பொட்டுச் சீலை எடுக்கலாம்னு தான் பார்த்தனுங்க. இதுகூட நல்லாத்தான் இருக்கும்! இதைப் பார்த்தா நிச்சயம் என்னோட டெண்டுக்கு வந்துரும்!" என்று கண் சிமிட்டினான். மறுபடி பொறாமையின் கத்திக்குத்து.

டவுனிலிருந்து திரும்பிச் செல்லும் போது திருநிலம் ஸ்டேஷன். அருகில் அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

## 4

அந்தப் பெண் தூரத்திலிருந்து டிராக்டரை நோக்கி ஓடி வந்து நாகரிகப் பாணியில் கட்டை விரலை உயர்த்தி லிஃப்ட் கேட்டாள். "மருதமுத்து! கொஞ்சம் நில்லு!" என்றாள். டிராக்டரின் இயந்திர சப்தத்தில் அவள் சொன்னது அடிபட்டுப் போய்விட்டது. டிராக்டர் மூலை திரும்பி விட்டது. அவள் இடுப்பில் கைவைத்துக் கொண்டு, "பாதகா!" என்று நிற்பது தெரிந்தது. அப்புறம் அவள் தெரியவில்லை. அந்தப் பெண்ணை மறுபடி பார்க்கப் போகிறோம் என்பது கல்யாணராமனுக்கு அப்போது தெரியவில்லை. "யார் அவள்?" என்கிற கேள்வி சற்று நேரம் மனசில் இருந்து விலகியது.

சூரியன் மேற்கே மஞ்சளாக அட்டகாசம் செய்து கொண்டிருக்க, அவர்கள் மேம்பட்டிக்குத் திரும்பினார்கள். வயலில் வேலை செய்த அழுக்குடனும் அலுப்புடனும் வெள்ளி ஓடிவந்து வழி மறித்தாள்.

"எனக்கு என்னா வாங்கியாந்த?"

"த பாரு முத்துமாலை, அய்யாதான் பாத்தெடுத்தாரு."

"நீயா வாங்கியாரலியா?"

"எனக்கெங்கே பொளுது? வாங்கிக்க."

வெள்ளியின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. "இந்தா நீயே கழுத்துல மாட்டிக்க" என்று அந்த மாலையை அவன் மேல் எறிந்தாள்.

"அட! இவ்வளவு கோபமா?"

"பின்ன என்னவாம்? ஆசையா வாங்கியான்னு சொல்லி அனுப்பிச்சா, அய்யாவை வாங்கச் சொல்லியிருக்கியே, நல்லாயிருப்பியா உன்னை பாம்பு புடுங்க."

"வேத்து மனுசன்!"

டிராக்டருடன் நடந்துகொண்டே பேசினாள். நான் மட்டும் சந்தைக்குப் போனபோது வேஞ்சுக் கரை வேட்டி வாங்கியாரலை உனக்கு? சிகரெட்டுக்கு 'டிக்கு டிக்குங்குமே' அது வாங்கியாரலை? பொளுது இல்லியா உனக்கு? ஏன்யா, டவுனுப் பொம்பளை எவளாச்சியும் பாத்து இளிச்சியா?

மருதமுத்து ரசித்துச் சிரித்தான்.

"கட்டிக்கிறது முந்தியே இந்தா விடு விடுது பாத்திங்களா? அன்னிக்கு அந்த சமூக சேவகி பொம்பளைகிட்ட பேசிக்கிட்டிருந்தேன். பொறாமைல செத்தே போயிருச்சி! லே வெள்ளி! அட! கோவமா? உனக்கு எதுக்கு புள்ள மாலை? ஒரு தபா சிரிச்சாப் போதுமில்ல?"

"அடப் போய்யா" என்றாள்.

கல்யாணராமனுக்கு இன்னும் 'அந்த "வேத்துமனுசன்" ஞாபகம் இருந்தது. அடிக்கடி அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவர்கள் கண்கள் சந்திப்பிலும் சாடைகளிலும்



'எப்போது சங்கமம், எப்போது சங்கமம்' என்கிற வேட்கையைத் தான் பார்த்தான். மருதமுத்துவை வெறுக்க முற்பட்டான்.

'வாய்யா சும்மா வம்பு பேசிண்டு! எனக்கு வேலை இருக்கு.'

ஜமீன்வீட்டுக்கு வந்ததும் முன் தோட்டத்தில் பல சிறுவர்கள் அட்டகாசம் செய்து கொண்டிருந்தார்கள்.

வெள்ளி கிளம்பினாள். மருதமுத்து, "எலே, வெட்டிப் பயல்களே" என்று சிறுவர்களை விரட்டினான்.

"டிராக்டர்க்காரன் டோய்!"

"டிராக்டர்க்காரன் டோய்!"

"போங்கடா அமாசில பொறந்த பயலுவலா, விட்டேன்னா உங்க பல்லெல்லாம் எகிறிக்கும். போங்கடா!"

"இருங்க!" என்றான் கல்யாணராமன். அவர்களை நிறுத்தி உள்ளே சென்று ஆளுக்கொரு சாக்லேட் கொண்டு வந்து கொடுத்தான். பற்ற வைத்த பெட்ரோல் போல அவர்களிடம் உற்சாகம் பரவியது.

"நாளைக்கு வாங்க எல்லாரும்! பாட்டு சொல்லித் தரேன்."

"அவர்கள் இரைச்சலுடன் ஓடினார்கள். மருதமுத்து "மாடு மேய்க்கிற பயலுவ, பாடத் தெரியாதுங்க" என்றான்.

"பாட வைக்கிறேன் பாரேன். இவுங்க எல்லார்கிட்டயும் அடித்தளத்திலே பாட்டு இருக்குது. ஏன்? வெள்ளி கூட நல்லாப் பாடுது."

"பாத்தியா புள்ள! அய்யா சொல்லிட்டாரு!"

"அத நீதான் சொல்லேன்!"

"ராத்திரி படுக்க வரானுங்க. வெள்ளி! அய்யா ராத்திரி பயந்துக்கினாரு, துணைக்குக் கூட்டிருக்காரு. நீயும் வரியா?"

"அ! ஆளைப் பாரு!"

மருதமுத்துவைப் படுக்க வர வேண்டாம் என்று சொல்ல
தான் நினைத்தான். சொல்லவில்லை. வெள்ளியுடன் தனியாக
பேச நினைத்தான். எப்படி என்று தெரியவில்லை. மரு
முத்துவும் வெள்ளியும் திரும்பிச் செல்ல, அவன் அவளை
சீண்டுவதும் அவள் ஒதுங்கிச் செல்வதும் மறுபடி கிட்ட
வருவதும் தெரிந்தது. அவர்கள் மறைந்ததும் சிரிப்புச் சப்தம்
கேட்டது. 'எங்கேயோ தொட்டிருக்கிறான். சே! என்ன
அப்ஸெஷன் எனக்கு, மற மறத்துப்போ!'

தன் அறைக்கு வந்தான். வாங்கி வந்த சாமான்களையும்
சாதனங்களையும் நிதானமான அடுக்கினான். காஸெட்டை
தட்டினான். "சீதை பிறந்த இடம்" என்றாள் பெரியாத்தா.
அவளை நிறுத்தி வெள்ளியின் குரலைத் தேடினான். 'மஞ்சள்
கிழங்கு தாரேன்' என்று மருதமுத்துதான் அகப்பட்டான்.
நிறுத்தினான்.

மாலை வெளிச்சம் மிச்சமிருந்தது. மாடிக்குப் போய்
பார்த்தால் என்ன? மெதுவாக மாடி ஏறிச் சென்றான். பெரிய
ஹால் போலிருந்தது. ஜன்னல் வழியாகத் தெரிந்தது. ஹாலின்
வாசல் பூட்டியிருந்தது. கதவைத் தொட்டான். இடைவெளி
தெரிந்தது. பூட்டை உற்றுப் பார்த்தான். நாதாங்கிக்கு அருகில்
இருந்த ஸ்க்ரு ஆணிகள் தொத்திக் கொண்டிருந்தன.
அதட்டினால் கூடத் திறந்து கொண்டு விடும். யாரோ திறந்து
பார்த்திருக்கிறார்கள். திறந்தும் இருக்கிறார்கள். பையில் இருந்த
பால் பாயிண்ட் பேனாவினால் நெம்பிப்பார்த்தான். தயாராக
திறந்து கொண்டது; வினோதம்.

ஹாலுக்குள்ள நுழைந்தான். முகத்தை ஒட்டடை தொட்டது.
தேக்கு மர உத்தரங்கள். வருஷக்கணக்கில் சேர்ந்திருந்த தூசி,
துணி போட்டு மூடப்பட்ட நாற்காலிகள், மேசைகள்,
சோபாக்கள், ஒரு ஆர்மலு கடிகாரம், ஏறக்குறைய ஆறடி
உயர போட்டோ. அதில் தலைப்பாகை வைத்துக் கொண்டு
நெற்றியில் பொட்டிட்டு மீசை வத்து லாங்கோட் அணிந்து,



அதன் பட்டனிலிருந்து ஒரு வெள்ளிச் சங்கிலி பைக்குள் சென்று மறைய, பக்கத்தில் உயரமான ஏதோ ஒன்றின் மேல் நான்கைந்து சிவப்புப் புத்தக அடுக்கின் மேல் கை வைத்துக் கொண்டு நின்ற ஆஜானுபாகு. அவருக்குப் பின் இயற்கைக் காட்சி.

இதுதான் ஜமீன்தாரரா?

அருகே மற்றொரு போட்டோ. அந்தப் பெண் கழுத்தில்- காதில்- மூக்கில் எத்தனை நகைகள்! புஜங்களில்- இடுப்பில்! வைரம் பதிந்த நகைகள். புஸு புஸு என்று ரவிக்கை. பயப் பார்வை பார்த்துக் கொண்டு நின்றாள் அந்தப் பெண். மனைவியாக இருக்க வேண்டும்.

ரவிவர்மாவின் சித்திரங்கள். கிராமபோன், வேலைப்பாடுகள் நிறைந்த தேக்கு அலமாரிகள். ரசம் போன நிலைக் கண்ணாடிகள்.

இது என்ன! ஒரு அலமாரி திறந்திருக்கிறதே! அந்த அலமாரிக்குள் இருந்த பழைய புத்தகங்களிலிருந்து எலிப் புழுக்கை நாற்றமடித்தது. தொட்டால் பொடிப் பொடியாகி விடக்கூடிய நிலையில் பற்பல காகிதங்கள். ஆனால் இவையெல்லாம் சமீபத்தில் கலைந்திருக்கின்றனவா? தூசிப் படலத்தின் மேல் விரல் அடையாளங்கள் தெரிந்தன. ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் புரட்ட, ஏறக்குறைய மஞ்சளாகி விட்ட தாள்களில் கட்டைப் பேனாவினால் கரியமசியில் எழுதப்பட்ட சாய்ந்த சாய்ந்த எழுத்துக்கள்; "17- 2-6" "பட்டா" "தர்க்காஸ்" "மைனர் ஸூட்" என்று பிடிபடாத வாசகங்களே. மற்றொரு பக்கத்தில் "ரத்னாவதிக்கு நாதாங்கி, கொலுசு, நாற்பது பவுன் வெள்ளி சில்லறை..."

"ஹாய்!" என்று சப்தம் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டது. திரும்பினான்.

அந்தப் பெண் நிலைப்படியில் நின்று கொண்டிருந்தாள். வெலவெலப்பில் கைப்புத்தகம் கீழே விழுந்து, அதனுள் அடக்கம் செய்திருந்த 1936-ஆம் வருஷப் பூவொன்று பட்டையாகச் சிதறியது.

அந்தப் பெண் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு ஸ்வாதீனமாக நடந்து வந்தாள். டவுனிலிருந்து திரும்பும் போது திருப்பட்ஃதில் பார்த்த அதே பெண்தான். இவள் இங்கே எப்படி? அதிநகரச் சரக்கு. ஆண்கள் சட்டையும் வெளிர் நீல ஜீன்சும் அணிந்திருந்தாள். புருவங்கள் மெலிதான கோடுகள். சிறிய மார்பு, தலைமயிர் நிறைய ஷாம்பு பார்த்திருந்தது. மூக்கும் சிறிய உதடுகளும் வருகிற வழியில் எங்கேயோ பார்த்த புஷ்பங்களில் சிலவற்றை ஞாபகப்படுத்தின.

"நீங்க... நீங்க."

"என் பேர் சினேகலதா... நீங்க?"

"கல்யாணராமன், ப்ளீஸ்ட் டு மீட் யூ..."

"ஸ்நேக்னு என்னை என் பிரதர்ஸ் எல்லாம் கூப்பிடுவாங்க, காலேஜ்ல லதா... என்ன குடைஞ்சுக்கிட்டு இருக்கீங்க?"

"இல்லை. வந்து... வந்து..."

தங்கராசு தெரிந்தான்.

"இப்ப கொஞ்சம் சங்கடமாப் போச்சுது. அம்மா வந்திருக்காங்க."

"அம்மா யாருன்னு முதல்ல அவருக்கு சொல்லிடுங்க, தங்கராசு" என்றாள், கருஞ் சிவப்பில் வர்ணம் அடித்த நகங்களை ஆராய்ந்து கொண்டு.

"அம்மா, வம்முசங்க. சின்ன ஜமீன்தாருடைய கடைசி மகளுங்க... அப்படித்தானுங்களே?"



"ஆமாம். ஹாய் கிராண்ட் ஃபாதர்!" என்று அந்த போட்டோவை நிமிர்ந்து கூப்பிட்டாள். மகாராஜஸ்ரீ துரைராஜா அவர்கள் கவனிக்கவில்லை.

"அப்படியா? ஐம் ஸோ கிளாட்" என்றான் கல்யாணராமன்."

"ஆமா! டிராக்டர்ல நீங்கதானே படபடன்னு போய்க்கிட்டிருந்தீங்க? ஒரு லிஃப்டு கேட்டா, நிறுத்தக் கூடாதா? நடந்து நடந்து தொடையெல்லாம் அரைஞ்சு போச்சு. வாஸலின் தடவணும்!"

"ஸாரி, நீங்க இங்க வரப்போறீங்கன்னு தெரியலை."

"வந்தாச்சு. தங்கப் போறேன். இது என் வீடு!"

"ஓ!"

"நீங்க எதுக்கு வந்திருக்கீங்க? ஏதோ நாட்டுப் பாட்டுன்னு தங்கராசு சொன்னாரு."

"ஆமாங்க. அதில ரிஸர்ச் பண்றேன்."

"கம் ஆன்! இந்த 'ஆமாங்க' பிஸினஸ் எல்லாம் வேண்டாம். ஆமா! பூட்டியிருக்கிற அலமாரியைத் திறந்து குடையறதுதான்..." குடைவது போல் பாவனை செய்து, "ரிஸர்ச்சா?" என்றாள்.

"ச்சேச்சே! வித்தியாசமான நினைச்சுக்காதீங்க! பொழுது போகலை..."

"ஹால் பூட்டிக் கிடந்துதே?" என்றான் தங்கராசு.

"தொட்டேன். திறந்துண்டுடுத்து."

"திறந்துண்டுடுத்து! நீங்க பிராமினா?"

"ஆமாம்."

"நான் ராஜ வம்சம். ராஜா வம்சம், ஓ வாட் எ ஹோல்! இங்கே எப்படி நான் இறங்கப் போறேன். ஜீ... ஸஸ்!"

"அதான் நானும் யோசிச்சுக்கிட்டிருக்கன். அய்யா ரூம்பில மட்டும்தான் லைட்டு இருக்குது."

"தங்கராசு! நாங்க ஒருத்தரும் இந்தப் பக்கம் வர் தில்லைன்னு நீங்க வழிப்போக்கர்களுக்கெல்லாம் வீட்டை திறந்து விடறீங்க, இல்லே! இது என்ன சத்திரமா?"

"அம்மா, அப்டிச் சொல்லாதிங்க, நீங்க வரப் போறது எனக்குத் தெரியவே தெரியாது. ஒரு காயிதம் உண்டா?"

"ஐம் ஸாரி!"

"கொஞ்சம் அவகாசம் கொடுத்திங்கன்னா, இந்த வழி போக்கனை உடனே காலி பண்ணிடறேன்."

"கோவிச்சுக்காதீங்க, அய்யரே!" என்று கொஞ்சலாக பேசினாள் அந்த லதா.

"மன்னிச்சுக்கங்க. இவங்க திடீர்னு வந்துட்டாக... சின் புள்ளைல பார்த்தது. அப்படியே அம்மா மூக்கு இருக்கு பாருங்க!" என்று தங்கராசு அந்த ஜிலுஜிலு நகைப் பெண்ணி படத்தைப் பார்த்தான். அந்தப் பெண் தன் முன்னோரை பார்த்தாள். "இவுங்கதானா! ஏதோ பசுபலேட்டி கண்ணாம் மாதிரின்னா இருக்காங்க! இது யாரு தங்கராசு? என் பாட்டியா

"உங்க அப்பாவைப் பெத்தவருங்க!"

"வாட் ஸ்பார்க்ளர்ஸ் ஐஸே. ஒரு டன் நகை இருக்கு போல இருக்குதில்ல, கல்யாணராமன்?"

"இவ்வளவு நகை போட்டுக்கிட்டு எப்படி நடந்தாங்கன் ஆச்சரியமா இருக்குது."

"தங்கராசு, இவர் தங்கி இருக்கிற அறைக்கு எதிர்த்தாப்பில எனக்கு அரேஞ்ச் பண்ணிடு; என்ன? எனக்கும் துணையா இருக்கட்டும்."

"துணையா! அவரே பயந்துக்கிட்டிருக்காரு! ராத்திரில சத்தம் கேக்குதாம்!"

"அப்ப நான் அவருக்குத் துணையா இருக்கேன். என்ன ஸார் கல்யாணராமன். கல்யாணம் ஆய்டுத்தா?"

"இல்லே."

"டோண்ட் ட்ரை எனி ட்ரிக்ஸ் ஆன் மி. ஓ.கே.?"

"ஓகே!" என்று சிரித்தான்.

"இங்கிலிசில பேசிக்கிறாப்பல" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் தங்கராசு. அவன் லதாவைப் பார்த்த பார்வை சரியாக இல்லை. ஒரு கணம் அவன் கண்கள் மார்பில் இறந்திருந்த பட்டனின் மையப் பிரதேசத்தை தடவின.

இறங்கி வந்தார்கள். "ஒரு வாரம் இருக்கலாம்னு நினைக் கறேன். வெகேஷனுக்கு எங்கே போறதுன்னு யோசிச்சுக் கிட்டிருந்தேன். அம்மா சொன்னாங்க, போய் நம்ம ஜமீன் வீட்டை ஒரு நடை பார்த்துட்டு வந்துறேன்னு. ஓடியாந்துட் டேன். உங்க பாஷைல ஓடி வந்துட்டேன்!"

"தனியா வந்துட்டிக!"

"நான் தனியா லண்டன் போகப் போறேன் தங்கம். அம்பட்டி என்ன?"

அறைவாசலில் சூட்கேஸ் வைத்திருந்தது.

"மிஸ்டர் கல்யாணராமன்! பயப்படாதீங்க! உங்களை விட்டுடமாட்டேன்; போய் ரிஸர்ச் பண்ணுங்க!"

"கேலி பண்றீங்க!" என்றான்.

"சேச்சே! நாட்டுப் பாடல் ரொம்ப முக்கியம்! தங்கராசு, வாங்க, ஊரைச் சுத்திப் பாத்துடலாம். அந்த ரூமுக்கும் கூட்டுப் போடச் சொல்லிடுங்க. மருதமுத்துவோ யாரோ சொன்னிங்களே. அப்புறம் நாடாக் கட்டில் அல்லது கயத்துக் கட்டிலா... பாத்ரூம் இருக்குதா?"

"ஹிஹி, இல்லிங்க!"

"அய்யோ...! நான் பாத்ரூம் வந்துதுன்னா என்ன செய்யறது வயல்ல ஒதுங்கணுமா? மை காட்!"

"அந்தால ஒரு தனி அறை இருக்குதுங்க. அதுல ஒ பய்ட்டு தண்ணி கொண்டாந்து வெச்சுக்குறாப்பல. அப்பற குளிங்க. கக்கூஸு ஒண்ணு சமீன்காலத்தில் இருந்துதுங்க ஆளுங்கள கூட்டு மராமத்து பண்ணிக்கிடலாம்."

தங்கராசுவுடன் நடந்து சென்ற அந்த விநோத சினேகல ஏறக்குறைய பையன்போலத்தான் இருந்தாள். இடுப்புத்தா காட்டிக் கொடுத்தது. திடீர் என்று ஒரு எம்பி எம்பி கொய்யா காய்கள் இரண்டைப் பறித்து ஒன்றைக் கடித்து ஒன்றை 'கல்யாணராமன்! காட்ச்!' என்று அவன்பால் விட்டெறிந்தா பிரமித்து நின்ற கல்யாணராமனின் மார்பில் வேகமாக வந் மோதியது காய்.

அவள் சிரிப்பு மெலிய இருட்டில் எதிரொலித்தது.

**மெ**லிய இருட்டு கரிய இருட்டாக மாறும் வரை நின்றா உள்ளே சென்று விளக்கைப் போட்டு ஸ்டவ் பற்ற வைத் நீரைச் சூடாக்கினான்; அரிசி வைத்தான். பெரியாத்தாவி பாடல்களைத் திருப்பிப் போட்டு எழுதிக் கொண்டான் ஓரத்தில் ஒரு காலி கெரோஸின் டின் இருந்தது. அதி ஒரு குச்சி பொருத்திச் சணற் கயிற்றை வைத்து ஒரு ட்பி பேஸ் வாத்தியம் செய்யலாம். அந்தச் சிறுவர்களில் ஒருவனு குக் கற்றுக் கொடுக்கலாம். வெள்ளியிடம் காட்டலாம்.

வெள்ளி அலட்சியமாக எறிந்த பிளாஸ்டிக் மாலையு அந்த 'வேத்து மனுச'னும் உறுத்தியது. கித்தாரை எடுத் வைத்துக் கொண்டு, விரல்களால் நெருடினான். இடக் கை விரல்கள் பழகின சதுரங்களில் அழுத்த ஹோரேஸ்ஃபெலி யானோவின் மாலகீனா வாசித்தான். அந்த மெக்ஸிக மெட்டில் கொஞ்சம் வெள்ளியைத் தொட்டுப் பார்த்தான்



"தட் தட் தட்" என்று கைதட்டும் ஒலி கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான். சினேகலதா.

"ப்யூட்டிஃபுல்! நல்லா வாசிக்கிறீங்க, அய்யரே!" உள்ளே வந்து சுதந்திரமாக அவன் எதிரே தரையில் உட்கார்ந்தாள். அவனை நேராகப் பார்த்தாள்.

"உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்."

"என்ன?"

"நாட்டுப் பாடலாம்! யார்கிட்ட கதை விடறீங்க? நீங்க உண்மையா எதுக்கு இங்க வந்திருக்கீங்க, சொல்லிடுங்க!"

## 5

"நீங்க சொல்றது எனக்குப் புரியவே இல்லை" என்றான் கல்யாணராமன்.

"புரியாத மாதிரி பாவனை பண்ணிக்கிட்டாப் புரியாது."

"சேச்சே! என்ன சொல்றீங்க? நான் வந்திருக்கிறது, நாட்டுப் பாடல்களுக்குத்தான். இத பாருங்க என் தீஸிஸ் எழுத ஆரம்பிச்சிருக்கேன்; டேப் ரிக்கார்டர்ல பாடல்களைப் பதிவு செஞ்சிருக்கேன்; வேற எதுக்கு வந்திருக்கேன்னு நீங்க நினைக்கிறீங்க?"

சினேகலதா சற்று யோசித்தாள்: 'ஃபர்கெட் இட். நான் விளையாட்டுக்குக் கேட்டேன். உங்களுக்கு 'பெட்டிட் ஃப்ளவர்ஸ்' வாசிக்க வருமா?"

"தெரியும்" என்று அந்த மெட்டை ஒற்றைக்கம்பியில் வாசித்துக் காட்டினான். அவள், "லா... லயலா தாரரா ரா ர ரம்..." என்று உடன் பாடினாள். அந்த மெட்டின் தாளத்தைக் கார்டுகளில் விரித்தான். அதற்கேற்ப அவள் மெலிதாக

நடனமாடினாள். அவள் அசைவுகளில் நளினம் இருந்தது. விரசமில்லாத அவள் நட்னம் அவனுக்கு உற்சாகமளித்தது.

"ரொம்ப நல்லா வாசிக்கிறீங்க. கையைக் காட்டுங்க பார்க்கலாம்" அவனுடைய இடக்கையைத் தொட்டுப் பார்த்தாள். கம்பிகளை அழுத்தும் இடங்களில் காய்த்துப் போயிருந்த விரல் நுனிகளைத் தன் விரல்களால் தடவிப் பார்த்தாள்.

"கும்பிடறேனுங்க!" - மருதமுத்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். "நான்தாங்க மருதமுத்து" என்றான்.

"ஹாய் மருதமுத்து! உன்னைப் பத்தி தங்கராசு சொன்னாரு."

"லைட்டுப் போட வந்திருக்கன். கயத்துக் கட்லு, பாயி எல்லாம் கொணாந்திருக்கன். ராத்திரி துணைக்குப் படுக்க வந்திருக்கன். நீங்க வந்திருக்கிறதா சொன்னாங்க. ரொம்ப சந்தோஷம். ஊர்ல அப்பாரு அம்மா அவங்க எல்லாரும் சுகங்களா?"

"ஓ எஸ்!"

"நீங்க ரேகை பாப்பிங்களா?"

"இல்லையே! ஏன்?"

"அய்யா கையைப் பார்த்துக்கிட்டிருந்திங்களே?"

"அவர் எப்படி இவ்வளவு அழகா வாத்தியம் வாசிக்கிறாருன்னு பார்த்துக் கிட்டிருந்தேன்."

"அவர் கையி மெத்துனு இருக்கும். என் கையி களை புடுங்கி, செடி புடுங்கிக் காய்ச்ச கையி!"

மருதமுத்து அவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். "சமீந்தாரு பேத்திங்களா நீங்க?"

"ஆமாம்."

"முகத்திலேயே தெரியுது."



"என்ன?"

"வம்சம்முனு. இந்த ஊர்ல உங்க தாத்தக் குடும்பம்னா மரியாதைங்க. எல்லாரும் சமீன் நிலத்தில ஒளைச்சவங்கதான். எங்கப்பாரு சொல்வாரு; சாரட்டு வண்டியிருக்குமாம். பெரிய பெரிய வெள்ளைக்கார துரைங்கள் எல்லாம் வாத்து சுட வருவாங்களாம்... நல்லா இருக்கிகளா?"

"இருக்கேன் மருதமுத்து."

"அய்யா வேணுமுன்னா டவுன்ல தங்கிக்கிடலாம். இங்க அசவுரியமா இருக்கும்." என்றான் கல்யாணராமனிடம்.

"தேவையில்லை. அய்யா அந்த ரூம், நான் எதுத்த ரூம்னு தீர்மானமாயிடுச்சு. நீ போய் லைட்டு போடறியா?"

ஸ்டவ்வில் சோறு கொதித்தது.

"கல்யாண ராமன்! உங்களுக்கு குக் பண்ண வருமா?"

"சாதம் வெப்பேன். அப்புறம் இருக்கவே இருக்கு ப்ரெட். ஊறுகாய், அப்பளம், தயிர்!"

"என்கிட்ட கொஞ்சம் பிஸ்கட்ஸ் இருக்கு... தரட்டுமா?"

"நீங்க என் தயிர் சாதத்தைச் சாப்பிடறதா இருந்தா, வாங்கிக்கறேன்."

மருதமுத்து கவனித்துக்கேட்டான்: "ஏங்க அவதிப்படறீங்க? நாளைக்கு வெள்ளியை அனுப்பிச்சு, கறிக் கொளம்பு வெச்சுத் தரச்சொல்றேன். நீங்க திம்பிங்கல்ல? அய்யாதான் மேல்சாதி. தின்னமாட்டாரு..."

"வெள்ளி யாரு?"

"அவன் கர்ள் ஃப்ரெண்ட். ஸ்வீட் கர்ள்."

"என்ன சொல்லுதாரு?"

"உன் சினேகிதி, இனிமையான பொண்ணுங்கறாரு."

"வெள்ளியை மருதமுத்து கல்யாணம் செஞ்சுக்கப் போறான்."

"அது கிடக்குங்க. இன்னும் நாளாவும். பத்தெடத்தில பொண்ணெடுக்கலாம் எனக்கு..."

"நாளைக்கு அவளைக் கூட்டியாரியா? அய்யா ஸ்வீட் கர்ள்ங்கறாரே, அவளைப் பார்க்கணும்."

"சரிங்க."

"மருதமுத்து சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சினேக லதாவை ஏதாவது கேட்டுக் கொண்டே இருந்தான். தன்னைப் பற்றியும் சொன்னான். "காலை தோப்புக்கு வாங்க... இளநீர் தாரன்... மாம்பளம் தாரன்.. இந்த வருசம் நான் தாங்க கொடையெடுக்கப் போறேன். ஒண்டியாளு டிராக்டரை வெச்சிக் கிட்டு எல்லா நிலத்தையும் உளுது தள்ளிப்புடுவேன்; பாணா, வீச்சு எல்லாம் போடுவங்க. குச்சி சுளட்டிணா சும்மா எட்டாளை சமாளிச்சுருவங்க. இங்கிலீசு கத்துக்கணும்னு ஆசை. சொல்லித் தருவிகளா?"

அங்கிருந்து நீளமாக ஒயர் இழுத்து எதிர் அறையில் பல்பு மாட்டினான். கொண்டு வந்திருந்த கட்டிலை ஒற்றைக் கையால் தூக்கி அதைத் தட்டி அமைத்தான். சினேகலதா தன் பெட்டியைத் தூக்கும்போது ஓடிப்போய் அதைப் பிடுங்கிக் கொண்டான்.

"பரம்பரை பரம்பரையாக உங்க குடும்பத்துக்கு உளைச்ச குடும்பங்க எங்க குடும்பம். பொட்டி தூக்கியார மாட்டனா?" என்று அதை எடுத்துச் சென்றான்.

'உழைக்கும் ஆர்வத்துக்கு மேலும் ஏதாவது இருக்கிறதோ' என்று சந்தேகம் ஏற்பட்டது கல்யாணராமனுக்கு. 'மருதமுத்து சற்று மாறிவிட்டான். நான் மாறினது போல்!

"இன்ட்ரஸ்டிங் மான்" என்றாள்.

"ஓ எஸ்!"

"உடம்பு பார்த்திங்களா? என்ன வலுவா இருக்குது. சார்ல்ஸ் ப்ரான்ஸன் மாதிரி."



665151
CPL 665151

வெளியிலிருந்து மருதமுத்துவின் குரல் கேட்டது.

"வாங்கம்மா! பேசிக்கிட்டே இருந்திங்கன்னா பொளுது விடிஞ்சுடும்."

"குட் நைட்" என்றாள்.

"குட் நைட்."

"நான் கேட்டதை மறந்துடுங்க... விளையாட்டுக்குக் கேட்டேன்."

891.8113
SUJ

"என்ன கேட்டீங்க?"

"அப்ப மறந்துட்டீங்கன்னு அர்த்தம்" என்று சென்றான் வெளியே. "மருதமுத்து! நாளைக்கு மாடி ரூம் எல்லாம் கொஞ்சம் ஒழிக்கணும். ஹெல்புக்கு- உதவிக்கு- வரியா?" என்று சினேகலதா கேட்க, "நிச்சயம் வர்றேனுங்க" என்று ஒலித்த மருதமுத்துவின் குரலில் இழையோடிய சந்தோஷத்தைக் கல்யாணராமன் கவனித்தான்.

"அய்யா! நான் வராந்தாவில் படுத்திருக்கேன். பயப்படாத தூங்கிப் போடுங்க!"

கல்யாணராமன் இரவில் மெலிதாகத்தான் தூங்குவான். ஒரு சின்ன சப்தம்கூட அவனை எழுப்பிவிடும். எழுப்பி விட்டது. உற்றுக் கவனித்தான். மிக மெதுவாக ஜாக்கிரதையாக நகர்த்தும் சப்தம்.

சப்தமின்றி எழுந்தான். விளக்கைப் போடாமல் அறைக்கு வெளியே வந்தான். மருதமுத்து போர்த்திக் கொண்டு படுத்திருக்க அந்தப் போர்வையையும் மீறி அவன் குறட்டை கேட்டது. அருகே ஒரு பெரிய கழி வைத்திருந்தான். மெல்ல அவனருகில் குனிந்து அவன் தோளில் தட்டி "மருதமுத்து" என்றான்.

...NEMARA PUBLIC LIBRA...

திடுக்கிட்டு விருட்டென்று எழுந்தான். "யாரு?" 'ஷ்' என்று பாவனை காட்டினான் கல்யாணராமன். ரகசியமாக, "மேலே! மேலே!" என்றான்.

மருதமுத்து தலையணைக்கு அடியில் இருந்த டார்ச்சை எடுத்துக் கொண்டு கழியையும் எடுத்துக் கொண்டான்.

"முதல்ல கவனி! சத்தம் கேக்குதா இல்லியா?"

மருதமுத்து கவனித்தான். "ஆமாங்க!" என்றான் "வாங்க பார்க்கலாம்."

இருவரும் மெதுவாக, பையப்பைய பூனைப் பாதம் வைத்து மாடி ஏறினார்கள்.

இருட்டாகத்தான் இருந்தது. மருதமுத்துவின் கழி ஓர் இடத்தில் இடித்து சப்தம் செய்து விட, அதற்கப்புறம் சில சம்பவங்கள் மின்னல் வேகத்தில் நிகழ்ந்தன. திறந்திருந்த ஹால் கதவிலிருந்து விருட்டென்று ஒரு கரிய நிழல் உருவம் வெளிப்பட்டுப் பாய்ந்தது. கைப்பிடிச் சுவரில் ஏறி 'தபால்' என்று போர்ட்டிகோவின் நீட்டலில் குதித்து அங்கிருந்து சரசரவென்று இறங்கி, மறுபடி குதித்து, அரை நிமிஷத்தில் தோட்டத்தில் ஓடிப்போய் இருட்டுப் பொந்துகளுக்குள் மறைந்ததைக் கவனித்தான்.

மருதமுத்து சற்றுத் தாமதித்த வீரத்துடன் அவன் போன பாதையில் பாய்ந்து புறப்பட்டுத் தேடினான். "புடிடா! புடிடா!" என்று அவன் குரல் எதிரொலித்தது.

"என்ன ஆச்சு? என்ன ஆச்சு!" என்று குரல் கேட்டுத் திடுக்கிட்டான். சிநேகலதா நின்றாள்.

"யாரோ ஒரு ஆள் மாடியில் நடமாடற மாதிரி சத்தம் கேட்டது. ரெண்டுபேரும் வந்து பார்த்துக்கறதுக்குள்ள ஓடிப் போயிட்டான்."

சிநேகலதா தைரியமாக ஹாலுக்குள் நுழைய, கல்யாண ராமன் அவள் பின் சென்றான். ஹால் பூராவும் டார்ச் அடித்துப்



பார்த்தார்கள். அலமாரிகள் இரண்டு திறந்திருந்தன. சுவரில் இருந்த மனைவியின் படம் சற்று நிலைக்குலைந்து சாய்ந்திருந்தது.

"நேத்திக்குக்கூட சத்தம் கேட்டது எனக்கு."

சிநேகலதா பேசவில்லை. மருதமுத்து திரும்பி வந்தான். "மாயமா ஓடிப் போய்ட்டான். திருட வந்திருக்காப்பல. அம்மா, நீங்களும் எளுந்திட்டிங்களா? அடட! பயப்படாதீங்க! செத்த கண்ணசந்துட்டேன். இனிமே ஆளு வரமாட்டான். நான் முளிச்சிக்கிட்டிருக்கேன். ஒரு எமை முன்னால கிளம்பியிருந்தா ஆளைப் புடிச்சிருப்பேன். அய்யாதான் பயந்து கூப்பாடு போட்டதில சட்டுனு கவனம் கலைஞ்சுருச்சு! தப்ச்சுட்டான்."

'பாவி! பொய் சொல்கிறான்.'

சிநேகலதா மௌனமாகக் கீழே இறங்கிச் சென்றாள்.

"மருதமுத்து! நாளைக்கு முதல் காரியமா ஹால்ல நாதாங்கியை ரிப்பேர் செய்து பெரிய பூட்டாப் போடணும். தங்கராசுகிட்ட சொல்லு."

"ஆவட்டுங்க! நீங்க பயப்படாதிங்க. நான் வாசல்ல காவல் இருக்கன். இனித் தூங்க மாட்டேன்."

"தாங்க்ஸ்"

நித்திரை கலைந்து போய் ஒருவித சுஷுப்தி அவஸ்தையின் மிச்ச ராத்திரியைக் கடந்தான். எப்போதோ தூங்க ஆரம்பித்தான். விநோதமான நிழல்கள் மாடர்ன் ஆர்ட் வடிவத்தில் கண்ணுக்குள் நெளிந்தன. தோப்புத் தூரமெல்லாம் அந்த ஆளை ஓட ஓட விரட்டுகிறான். கடைசியில் அவன் சட்டென்று நின்று, "வா! இனிமேல் ஓடமாட்டேன், என்னைப் பிடி" என்கிறான். கல்யாண ராமன் பயந்து பின் வாங்குகிறான். "அய்யா! அய்யா!" என்று குரல் கேட்டு விழித்தெழுந்தான்.

ஜன்னலில் நான்கைந்து சிறுவர்களின் முகங்கள் சூரிய ஒளியில் தெரிந்தன.

"யார்ரா நீ?"

"வரச் சொன்னீங்களே நேத்தைக்கு."

ஒரு குட்டிப்பையன், "முட்டாய் கொடுங்க தொரை" என்று மழலைக் குரலில் கேட்க, அவனை விட சற்றே வயதான பெண், "த! சும்மாரு, தருவாரு!" என்றாள். "எல்லாரும் வரிசையா நில்லுங்க வரேன்..." என்றான்.

வராந்தாவில் மருதமுத்து இல்லை. காலையிலேயே எழுந்து சென்றிருக்க வேண்டும். சினேகலதாவின் அறை சாத்தியிருந்தது. தட்டினான். உட்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. ஜன்னல் வழியாகப் பார்த்தான். மார்பில் புத்தகத்துடன் அப்படியே தூங்கிக் கொண்டிருந்தாள். விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. தூங்கட்டும்!

சிறுவர்கள் அவனுடன் கண்மாய்க்கு வந்தார்கள். அவன் பல் தேய்ப்பதையும், முகம் கழுவுவதையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"முட்டாய் வெச்சிருக்காராடா?"

"பைக்குள் இருக்குது."

"இல்லடா... வூட்ல இருக்குது!"

அவர்கள் ஜென்மத்தில் இதுவரை சாப்பிட்டிராத காட்பரீஸின் முதல் ருசி அவர்களை அவன் பின்னே, ஹெம்லின் நகரத்தில் பைப்பரின் பின் எலிகள் போல் செலுத்தியது. கல்யாணராமனுக்கு இந்தச் சிறுவர்களுக்கு சாக்லேட் லஞ்சம் கொடுத்து அவர்களை ஹார்மோனைஸ் செய்து ஒரு நாட்டுப் பாடல் பாட வைக்க வேண்டும் என்று ஆசை.

"உன் பெயர் என்ன?"

"கருப்பாயி."



கருப்பாயிக்கு ஏழு வயசிருக்கும். வெறும் பாவாடை மட்டும் அணிந்திருந்தாள். எண்ணெய் கண்டிராத தலை, எலி வால் போல் பின்னல். மாந்தத்திற்குச் சூடு போட்ட நெற்றி. இடுப்பில் சாஸ்வதமாக கருப்பாயியின் தம்பி.

திரும்ப ஜமீன் வீட்டுக்கு வந்ததும் ஒரு பையனைப் பால் வாங்கிவர அனுப்பி வைத்தான். அவர்களை வரிசையாக நிறுத்தி வைத்தான்.

"கருப்பாயி! நீ என்ன விளையாட்டு விளையாடுவே?"

"கண்ணாமூச்சி."

"எப்படி விளையாடுவீங்க? இப்ப விளையாடிக் காட்டுங்க பார்க்கலாம்... விளையாடினா முட்டாய் தருவேன்."

சற்று நேரம் சலசலப்பும் கலந்துரையாடலும் நிகழ்ந்தது. முதலில் யார் பொத்திக் கொள்ள வேண்டும் என்பது பற்றிச் சர்ச்சை நிகழ்ந்தது. கருப்பாயி குழந்தையை ஓரத்தில் வைத்து விட்டுத் 'தாச்சி' ஆனாள். எல்லோரையும் வரிசையாக நிறுத்தி ஒரு பாட்டைத் தொடர் தொடராகப் பிரித்து, ஆளுக்கு ஒரு சொல்லாகத் தொட்டுக் கொண்டே வந்தாள்.

"பச்சத் தவக்கா— பளபளக்க
பழனி பச்சான்— மினுமினுங்க
செங்கரட்டி— சிவத்தப் பிள்ளை
கிண்ணா வந்தான்— கிணுக்கட்டி
உடும்பு— துடும்பு
மகா— சுகா
பால்— பறங்கி
எட்டுமன்— குட்டுமன்— ஜல்"

அந்த 'ஜல்' கண் பொத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

"இருங்க! இந்தப் பாட்டு எல்லோருக்கும் தெரியுமில்லே?"

"தெரியும்."

"இதை எல்லோரும் சேர்த்து பாடுங்க, பார்க்கலாம்."

"அதெப்படி?"

"சாக்லெட் முட்டாயி!"

அவர்கள் சேர்ந்து பாட அவர்கள் குரலில் ஓர் ஒற்றுமையும் சுருதியும் கொண்டு வரப் பிரயத்தனப்பட்டான். அவர்களில் சுமாரான குரல் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தான்.

மறுபடியும் சொல்லுங்க! எட்டுமன்- குட்டுமன்- ஜல் எட்டும்- குட்டுமன்- ஜல்!" சட்டென்று திரும்ப வராந்தாப் படிகளில் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு சினேகலதா சிரித்துக் கொண்டிருந்தாள்.

"குட்மார்னிங்!" என்றான்.

"குட்மார்னிங்."

அவள் எழுந்து அருகில் வந்து, "இவர்களை வெச்சுக்கிட்டு ஸிம்ஃபனி ஆர்க்கெஸ்ட்ரா அமைக்கப் போறீங்களா?"

"இன்னும் ஒரு நாலு நாளில பாடுங்களேன்! பிள்ளைங்களா, இன்னிக்குப் போதும்!" என்று உள்ளே சென்று அவர்களுக்கு இனிப்பு எடுத்து வந்து விநியோகம் செய்ய, அவர்கள் வாங்கிக் கொண்ட உடனே தூள் பறக்க இரைச்சலாக ஓடிப் போனார்கள்.

"எனக்குப் பல் தேய்க்கணும். முகம் கழுவிக்கணும். காப்பி கிடைக்குமா?"

"வாங்க பம்புக்குக் கூட்டிப் போறேன். அப்புறம் காப்பி தரேன்."

நடந்தார்கள்.

"இந்த மரத்துக்குப் பேரு தெரியுமா, உங்களுக்கு?"

"ஃபைகஸ் ரிலிஜியோ ஸா லின்!"

"கம் எகய்ன்!"

"தமிழில் சொன்னா அரச மரம்! சில அரச மரங்கள் ரெண்டாயிரம் வருஷம் கூட இருக்கும்."



"எப்படி இவ்வளவு தெரிஞ்சு வெச்சுக்கிட்டிருக்கீங்க! கித்தார் வாசிக்கிறீங்க. நாட்டுப்பாடல் ரிஸர்ச்... இந்த மாதிரியே நீங்க என்னை இம்ப்ரெஸ் பண்ணிக்கிட்டே இருந்தா, ஒருநாள் உங்களைக் காதலிக்க ஆரம்பிச்சுருவேன்!"

"அதுக்கு ஒரு நாள் முன்னாடி சொல்லிடுங்க!"

"எதுக்கு? ஊரை விட்டே ஓடறதுக்கா!"

இருவரும் அந்தச் சோலைக்குள் நடந்து அந்தப் பொம்பளை யானைகள் குளிக்கும் இடத்தை நெருங்குகையில் வெள்ளி வந்தாலும் வருவாள் என்று கல்யாணராமனுக்கு ஓர் எதிர் பார்ப்பு இருந்தது.

ஒருவிதமான சலங்கை சப்தம் கேட்டு வெள்ளிதான் என்று ஆவலுடன் திரும்பிப் பார்த்தான். இல்லை. "இது யார்?"

## 6

ஒருத்தன் நின்று கொண்டிருந்தான். அவன் ஒரு காலில் சலங்கை கட்டிக் கொண்டிருந்தான். ஃபெல்ட் ஹாட் அணிந்து, காதுகளில் பூ வைத்துக் கொண்டு, கண்களில் மை தடவி, போதும் போதாதுமாக ஓர் கோட் அணிந்து, ஒருவிதமான சார்லி சாப்ளின் தனத்துடன் சிரித்தான். ஒரு நீண்ட தகரப் பெட்டி வைத்திருந்தான். அதில் இரண்டு லென்ஸுகள் பொருத்தப்பட்டு அந்தப் பெட்டியைத் தோளில் தூக்கிக் கொண்டு அதை நிற்க வைக்கப் போகிற கால்களைக் கக்கத்தில் வைத்திருந்தான்.

"என்னய்யா?"

"அய்யா...! எம்பேரு பழனியாண்டி... பயாஸ் கோப்பு பழனியாண்டின்னு பாண்டியாபுரம் வரைக்கும் தெரியுங்க. சாலாச்சி கோயில் திருவிளாவுக்கு வளக்க்மா மேம்பட்டி வருவனுங்க. அய்யா பாட்டுப் போட்டா காசு தர்றா பேச்சுக்க கேள்விப்பட்டேன். பார்த்துட்டுப் போகலாம்னு..."

அருகில் இருந்த சினேகலதா, "அது என்னய்யா பொட்டி?" என்றாள்.

"பயஸ்கோப்புங்க. அஞ்சு கச்சேரி, அரிதாஸ், சிவாஜி, எம்.ஜி.யாரு எல்லாம் வெச்சிருக்கன்."

லதா குதூகலத்தில் கிறீச்சிட்டாள். "நான் பார்க்கணும்" என்றாள்.

"காட்டறங்க."

"முதல்ல நீங்க பல் தேய்க்கணும்னு நினைக்கிறேன். என்ன பாட்டுப்பா தெரியும் உனக்கு?"

கேள்வி கேட்டு முடிப்பதற்கு அந்தக் கோமாளி பாட்டு துவங்கிவிட்டான்.

"பாரு பாரு படம் பாரு
பாவதரு எம்ஜியாரு
பராசக்தி பேரெடுத்த சிவாஜிய்"

அவன் பாட்டுக்கேற்ப அந்தத் தகரப்பெட்டியில் 'குமுக்குத் தக்கா, குமுக்குத் தக்கா' என்று தாளம்போட்டு ஒற்றைக் காலால் 'ஜல் ஜல்' என்று பேசினான்.

சினேகலதா சின்னக் குழந்தையானாள். கையைக் கொட்டி, பாதி குனிந்து அவன் பாட்டைச் சிரிப்புடன் கவனித்தாள்.

"ஏய் ஏய்! போதும் அது நாட்டுப் பாட்டில்ல... நீயே எட்டுக் கட்டினதுதானே?"

"இல்லிங்க. மேவலாபுரத்தில ஒருத்தர் எழுதிக் கொடுத்தது."



"எப்படியும் அது நாட்டுப் பாட்டில்லே. நான் கேக்கறது வேறு. சிவகாசிக் கலகம்பத்தி பாட்டு இருக்குதாம்; தெரியுமா உனக்கு?"

"அதுக்குத் தெக்கே போவணுங்க."

சினேகலதா அந்த லென்ஸினூடே பார்த்தாள். "இருட்டா இருக்கே." என்றாள்.

"அம்மா உங்க சம்சாரங்களா?"

"சேச்சே! ஜமீன் வம்சம். அம்மா ஜமீன்தார் பேத்தி."

"அப்படிங்களா! கும்பிடறேனுங்க."

"அதைப் போட்டுக் காமி."

"நீ அப்புறம் சாயங்காலமா வாப்பா. சாவகாசமா சினிமா பார்க்கலாம்."

"அமிதாப்பச்சன் இருக்காய்யா?" என்றாள் சினேகா. தகரப்பெட்டியில் பற்பல வண்ணப்படங்கள் ஒட்டி யிருந்தன.

"அதாருங்க?"

"அவன்கிட்ட 1955-க்கு அப்புறம் எதுவும் இருக்காது. ரோடில கிடக்கற பிலிம் துண்டெல்லாம் பொறுக்கிட்டு வந்து..."

"அவன் பாடறது நாட்டுப் பாடல் இல்லியா கல்யாணராமன்?"

"இல்லை."

"பின்னே நாட்டுப் பாடல்னா என்ன வேணும்? எழுதக் கூடாதா?"

"அப்படியில்லை. இவன் பாடற பாட்டை இந்த ஜில்லாவில, இவனோட சம்பந்தமே இல்லாத வேறொருத்தனும் பாடினா அதை நாட்டுப் பாடல்னு சொல்லலாம். அதனோட பொதுத்தன்மை அதன் சிருஷ்டியிலே இல்லே; பரவறதிலதான் இருக்கு."

"அப்படீன்னா 'மச்சானை பார்த்தீங்களா' கூட நாட்டுப் பாட்டுத்தான்" என்றாள்.

"அந்தப் பாட்டுல மெட்டு, நாட்டு ஜனங்களோட வால்யூஸ் இருந்து- அது பரவி நிலைச்சதுன்னா அது நிச்சயம் நாட்டுப் பாட்டாகிவிடும். 'மச்சானைப் பாத்தீங்களா' நாட்டுப் பாட்டா இல்லையாங்கறதை சொல்றதுக்கு இன்னும் பதினைஞ்சு வருஷம் ஆகணும். அப்ப அது நிலைச்சிருந்தா அது நாட்டுப் பாட்டு, ஃபோக் ஆய்டறது."

"நல்லாப் பேசறீங்க."

"படிச்சதைச் சொல்றேன்" சினேகலதாவின் நேர்ப் பார்வையைத் தவிர்த்தான்.

மருதமுத்துவும் வெள்ளியும் இன்னொரு பெண்ணும் வந்தார்கள். வெள்ளியைக் கண்டதும்தான் சற்று பிரகாச மானதை சினேகலதா கவனிப்பதை உணர்ந்தான் கல்யாண ராமன்.

"இங்கே வந்துட்டிகளா... சமீன் வீட்டில தேடிப் போட்டு வர்றன்" என்றான் மருதமுத்து.

"இதுதான் வெள்ளி" என்றான் கல்யாணராமன். இரண்டு பெண்களும் ஒருவரை ஒருவர் சற்று நேரம் நிதானமாகப் பார்த்தார்கள்.

"ஹலோ ஸ்வீட் கர்ள்!" என்றாள் சினேகலதா. மருதமுத்து அந்த பயாஸ்கோப்பை, "ஏய், இங்கேயும் வந்து போட்டியா? தட்! ஓடுறா பொட்டியைத் தூக்கிக் கிட்டு" என்று பிடரியில் அடித்தான்.

"எதுக்குய்யா அவனை அடிக்கிறே?" என்றான் கல்யாண ராமன்.

"இந்தப் பயலுவளெல்லாம் கிட்டத்திலே சேர்க்கக் கூடாதுங்க. தூக்குறான்னா!"



அவன் பயந்து பெட்டியைச் சேகரித்துக் கொண்டு சலங்கை குலுங்கக் குலுங்க ஓடினான். அந்தக் கோமாளியை அடித்தது அனாவசியமாகப் பட்டது. மருதமுத்து தன் வீரத்தை சினேக லதாவுக்குக் காட்ட விரும்புகிறான் என்று பட்டது.

வெள்ளி வைத்த கண் வாங்காமல் லதாவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். சுங்கிடிப் புடவை- ஆண் பிள்ளைச் சட்டை; கறுப்பான உடல்- சிவப்பு உடம்பு Asetudy in contrast போட்டோ பிடிக்க வேண்டும்.

மருதமுத்து, "நல்லா தூங்கினீங்களா?" என்றான் சினேக லதாவை சினேகமாகப் பார்த்து.

"தூங்கினேன் மருதமுத்து."

"காப்பி பலகாரம்?"

"இன்னும் இல்லே. முதல்லே கை கால் கழுவிட்டுக் குளிச்சுரலாம்னு பார்க்கறேன்."

வெள்ளி அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"வென்னித் தண்ணிகூட வெச்சிருக்கியா? வெள்ளி! வெள்...ளி! காதுல சுண்ணாம்படிச்சிருக்கியா?"

"என்னது?"

"வென்னித் தண்ணி வெச்சிருக்கியா?"

"எங்கே?"

"உன்னிய நேத்தே சொன்னனில்ல?"

"எங்கிட்ட எங்கே சொன்னே?"

"போட்டன்னாச் சரி! புரளி பண்ணாதே."

"வேண்டாம். நான் பச்சத் தண்ணில குளிச்சுப் பார்க்கறேன். வெள்ளி! என்னைக் கூட்டிப் போறியா?"

வெள்ளி மருதமுத்துவைப் பார்த்தாள். அவன் லதாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். "நாங் கூட்டிப் போறனுங்க!" என்றான்.

"அய்ய! பொம்பளையாளுங்க குளிக்கிற இடத்தில் நீ வருவியா? இன்னாடி இது... இந்தாளுக்கு இந்தக் கரிசனம்!"

"அம்மா சமீனு வம்முசம்! நான் அந்தால நிக்கறன். அம்மா குளிச்சதும்..."

"அவுங்க குளிச்சிட்டு வரட்டும் மருதமுத்து. நாம இங்கியே நிக்கலாம்."

வெள்ளி பேசாமல் நடக்க, அவள் பின் சினேகலதா சென்றாள்.

"பெரியதனக்காரரு உங்களைப் பாக்கணுமின்னாரு."

"அப்படியா?"

"தங்கராசுகிட்டச் சொன்னன், நேத்து ஒரு வேத்து ஆளு வந்துட்டுப் போனதை. அம்மா தனியாப் படுக்கிறது நல்லதில்லை. நிதம் நா வந்துர்றனுங்க."

"சரி."

"அய்யாகூட, டவுனுக்கு மாத்திடறதா கேள்விப்பட்டன்."

"இல்லை... யார் சொன்னா?"

"சாப்பிடறதுக்கு சினேகம்மா என்ன செய்வாக?"

சினேகம்மா!"

"தெரியலை."

"வீல்" என்று சினேகலதாவின் குரல் கேட்க. மருதமுத்து ஓடினான். சற்று நேரத்தில் அசடு வழிந்து கொண்டு திரும்பி வந்தான். "ஒண்ணுமில்லிங்க... பச்சைத் தண்ணி உடம்பில பட்டதும் அவுங்களுக்கு சிலுத்துக்கிட்டுக் கூச்சப் போடுதாங்க. சந்தோசந்தாங்க!" என்றான்.



சினேகலதா வரப்போகும் வழியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் மருதமுத்து.

ஒரு கால் நொண்டிக் கொண்டே வந்தாள் சினேகலதா, சற்றுத் தயங்கி பின்னால் வெள்ளியும் அந்தப் பெண்ணும் வந்தார்கள்.

"என்னங்க கால்ல?" என்றான் மருதமுத்து கவலையுடன்.

"சாணியை மிதிச்சாக" என்றாள் வெள்ளி சிரிப்புடன்.

"என்னது வெள்ளி, பார்த்துக்கிட்டு நிக்கிறியே? தண்ணி கொட்டு. அலம்பிக்கட்டும்!"

"ஆ! அலம்பறேன்" என்று அவள் பாதத்தில் நீர் இறைத்தாள்.

"அப்ப வரட்டுமா மருதமுத்து?"

"வீட்டுவரைக்கும் வரங்க! வெள்ளி, நீ போய்க்க."

மருதமுத்து சினேகலதாவுடன் பேசிக்கொண்டே நடந்துவர, கல்யாணராமன் சற்று முன் நடந்தான். மருதமுத்துவுக்கு சினேகலதாவின் பேரில் எஜமான விசுவாசத்துடன் மற்ற சிந்தனைகளும் இருப்பதை வெள்ளி கவனித்திருப்பாள் என்றே தோன்றியது.

திரும்ப ஜமீன் வீட்டுக்கு வந்ததும், "தாங்க்ஸ் மருதமுத்து!" என்றாள் சினேகலதா.

"திரும்ப எப்ப வரட்டும்?"

"எதுக்கு?"

"இங்கிலீஷ் கத்துக் தாரன்னிங்களே?"

"அப்படிச் சொன்னேனா என்ன?"

"ஆமாங்க."

"அய்யா நல்லா கத்துத் தருவாரு. நல்லா படிச்சவரு அவரைப் புடிச்சுக்க."

"அவரு வேண்டாங்க... நீங்கதான் இனிமையா, கரீக்ட்டா பேசறீங்க..."

"சரி, நாளைக்கு வெச்சுக்கலாம்."

"சட்டை ஈரமாய்டுச்சு. போய் மாத்திக்கிடுங்க. டவுன்ல ஏதாச்சும் வேணுமின்னா சொல்லியனுப்புங்க. வாங்கியாரன். ராத்திரி படுக்க வாரனுங்க."

"வா."

மனமில்லாமல்தான் பிரிந்தான் மருதமுத்து.

"நைஸ் ஃபெலோ" என்றாள். கிராமத்து ஜனங்க எவ்வளவு இன்னொஸென்ட்டா இருக்காங்க. பார்த்தீங்களா?"

"அவன் அவ்வளவு இன்னொஸொன்ட் இல்லை" என்று சொல்ல நினைத்தான்.

"உங்க வெள்ளி பேசவே மாட்டேங்கறாளே" என்று தன் அறைக்குள் சென்றாள் சினேகலதா. கல்யாணராமன் பாலை காய்ச்சினான். இன்ஸ்டண்ட் காப்பித்தூள் கலந்து சர்க்கரை கலந்து இரண்டு கப் காப்பி தயாரித்து அவள் அறைக்கு எடுத்துச் சென்று "மேடம்! காப்பி ரெடி" என்றான். சினேகலதா வெளியே வந்தாள். "இன்ஸ்டண்ட் காப்பிதான். சுமாரா..." நிமிர்ந்தவன் பேச்சை நிறுத்தி விட்டான். வெள்ளை ஜிப்பா அணிந்து கொண்டிருந்தாள். உள்ளே ஒன்றும் அணியாததால் அவள் மார்பின் வட்டங்கள் மெலிதாகத் துணியினூடே ஊதாவாகத் தெரிந்தன.

"என்ன பாக்கறீங்க?"

கல்யாணராமன் சுதாரித்துக் கொண்டு எச்சில் விழுங்கினான். "கிராமத்தில இந்த மாதிரி டிரஸ் போட்டுக்கறது நல்லதில்ல. பெட்டர் வேர் ஸம்திங் இன்ஸைட்" என்றான்.

"இங்கே யார் வரப்போறாங்க? வி ஆர் ஃப்ரீ."

"உங்க இஷ்டம்!"



"காப்பி நல்லா இருக்கு. நீங்க செய்யறது எல்லாமே நல்லா இருக்கு. இன்னும் உங்களுக்கு என்னென்ன தெரியும்?"

"உள்ளே போங்க, உள்ளே போங்க!"

"ஏன்?"

"யாரோ பெரியவர் வரார், நல்லாருக்காது. மேலே ஏதாவது..."

"ஓக்கே ஓக்கே!" என்று உள்ளே சென்றாள்.

தங்கராசுவும், அந்தப் பெரியவரும் வந்தனர்.

"வாங்க தங்கராசு..."

"இவருதாங்க அய்யாத்துரை, மணியாரருங்க."

"அப்படியா? நமஸ்காரம்!"

அய்யாத்துரையின் முகத்தில் விஸ்தீரணமாக மச்சம் இருந்தது. சட்டை அணியாமல் மார்பில் மொச மொச என்று வெளுப்பு மயிராக ரஷ்யக்கரடிக் குட்டிபோல் இருந்தார். நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டு. காப்ஸிகம் போல மூக்கு. பற்கள் பலவற்றை இழந்திருந்தார்.

"தங்கராசு; நேத்துக்கூட ராத்திரி ஆள் நடமாட்டம் கேட்டுது."

"முத்து சொன்னான்- ஓடிப் போய்ட்டானாமில்ல. திருட்டுப் பசங்க வர்றாங்க அய்யாத்துரை."

"அ! காலை வெட்டிப் போட்டுறலாம். யாரது?" என்றார்.

"முந்தாநாள் மேல்மாடில சிகரெட் துண்டு கிடந்தது பார்த்தேன். ஒஸ்தி சிகரெட்...!

"அதுவா...! அது ஒண்ணுமில்லிங்க... கலெக்டர் போன மாசம் வந்திருந்தாரு. மாடி எல்லாம் ஏறிப் பார்த்தாரு. அவரு புடிச்சுக்கிட்டிருந்தாரு... இது ஏதோ திருட்டுப் பயலுவ வேலையா இருக்கும். எதுக்கும் திட்டிக் கதவை இன்னைக்கு ஜாமத்துப் பண்ணிடறனுங்க."

"சமீன் பேத்தி வந்திருக்கிறதா சொன்னாங்களே" என்றார் பெரியவர்.

"உள்ள இருக்காங்க. சினேகலதா!"

"அய்யாதான்- பி.டி.ஓ. எழுதியிருந்தாருன்னு சொன்னனே- பாட்டு சேகரிக்க வந்திருக்காரு."

"அப்படியா...! ரொம்ப சந்தோஷங்க. தங்கராசு அந்த நீர்க்கட்டிப் பயலைப் பாத்தியா! பதினஞ்சு நாளாக் காங்கலை.. குங்கிலியத்தைச் சாப்ட்டுப போட்டு எங்க கிடக்கானோ;"

"பொன்னுச்சாமி டவுனில ஒரு பொம்பளையில்ல புடிச்சிருக்கான்!"

சினேகலதா வெளியே வந்தாள். கல்யாணராமனின் வேண்டுகோளுக்கு இணங்க, ஜிப்பாவின் மேல் நேரு ஜாக்கெட் அணிந்திருந்தாள்.

"இவுங்கதாங்க!"

"கிட்ட வாம்மா குளந்தே!" அய்யாதுரை அவளையே சற்று நேரம் ஆராய்ந்தார். கண்களில் காட்டராக்ட் திரை மெலிதாகப் படர்ந்திருக்க, இன்னும் கிட்டப் போய் அவளைத் தரிசித்தார்; தொட்டுப் பார்த்தார். மஞ்சள் பழுப்புக் கண்களில் நீர் திரையிட்டது. "அப்படியே ரத்னாவதி அம்மா!" என்றார்.

சினேகலதா சிரித்து, "உங்களுக்கு அவுங்களை எல்லாம் தெரியுமா?" என்றாள்.

"தெரியுமான்னு கேக்குது! குளந்தே.. உங்க தாத்தா கருத்த தொரை, மதுரையில குதிரை வாங்கி தங்கத்தில் சேடங்கட்டி அடிச்சாக. கை கொள்ளாத சொகுசு. பத்துப் பவுன் அழிச்சு இங்கிலீசு புத்தகம் படிச்சாரு அந்தக் காலத்தில. மானத்தில பூப்பறிப்பாரம்மா. அவரு தாசிக்கே விட்ட பணத்தில ரெண்டு தங்க மடம் காட்டலாம்."

"க்கும்" என்று கனைத்தான் தங்கராசு.



"ஸ்வீட்!" என்று கண்ணிமைத்தாள் கல்யாணராமனைப் பார்த்து. பெரியவர் இருமினார்.

"மணியாரரு உங்க வீட்டிலேயே வளர்ந்தவரும்மா."

"அப்படியா? க்ரேட்! தாத்தா, நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கங்க.. இருமறிங்க!"

"தாத்தான்னு வாய் நிறையக் கூப்பிடுதில்ல குளந்தே! உனக்கு என்ன வேணுமின்னாலுங் கேளு. உங்க குடும்பத்துக்கு நாங்கள்ளாம் எட்டு தலைமுறைக்குக் கடம் பட்டிருக்கம்!"

"சுத்துப்பட்டவங்களே அழிச்சாங்க" என்று சற்றுக் குரலைத் தணித்துச் சொன்னான் தங்கராசு.

"அய்யாத்துரை! வாங்க, அப்புறம் பேசலாம். வரப்புக்குப் போவணும். பிச்சைப் புள்ளை தண்ணித் தகராறு பண்ணிகிட்டிருக்காரு..."

"நான் வரட்டுமா கண்ணுக்குட்டி? செல்லம்!"

"வாங்க தாத்தா."

"வாரம்பா... பாட்டு வேணுமின்னா என்னைக் கேளு... மருதை வீரன், அல்லி அரசாணி..."

"சரிங்க."

அவர்கள் சென்றதும் கல்யாணராமனைப் பார்த்துச் சிரித்தாள். "வினோதமான ஜனங்கள்" என்றாள்.

"வேர்க்குதில்லே!" என்று அந்த நேரு ஜாக்கெட்டைக் கழற்றினாள். கல்யாணராமன் திரும்பித் தன் அறைக்குச் சென்றான்.

"சற்று நேரத்தில் அவள் அறையிலிருந்து 'வீல்' என்று அலறும் சப்தம் கேட்டது.

## 7

சினேகலதா வீறிட்ட சப்தம் கேட்டதும் அவள் அறைக்கு விரைந்தான். உள்ளே பயந்து சினேகலதா, "அங்கே! அங்கே!" என்று காட்டினாள்.

ஒரு மர பீரோ.

"யாரோ ஒரு ஆள்! கறுப்பா! ஹாரிபிள் ஃபேஸ்!" என்றாள். கல்யாணராமன் கலவரமாக அந்த பீரோவின் அருகில் சென்று தரையில் காலால் தட்டி ஓசைப்படுத்தி, "ஏய்! யாரு? யாரு? வெளியில் வா" என்றான்.

சினேகலதா மறுபடி அலறி ஓடிவந்து அவனைக் கட்டிக் கொண்டாள். அவள் உஷ்ணம் அவனைத் தழுவியது.

"இங்கே! இங்கே!" என்று மற்றொரு மூலையைக் காட்டினாள். அவன் திடுக்கிட்டுத் திரும்ப, சினேகலதா வசீகரமாகச் சிரித்தாள். "சும்மா விளையாட்டுக்கு" என்றாள்.

கல்யாணராமன் அவளிடமிருந்து தன்னை விடுவித்து கொண்டான். வெட்கப்பட்டான். சொல்லப்போனா ஒரு பெண் அவன் மேல் அவ்வாறு பட்ட முதல் தடவை அது.

"இனிமே இந்த மாதிரி விளையாடாதீங்க. அப்புறம் நிஜமாவே ஏதாவது ஆபத்துன்னா வரமாட்டேன்."

"டேக் இட் ஈஸி யா!" என்று மறுபடி சிரித்தாள், "கல்யாண ராமன்! நீங்க என்னை ஏமாத்திட்டீங்க? பிரயோசனம் இல்லை. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு 'சடால்'னு அப்படியே என்னைப் பிடிச்சு ஒரு கட்டாக்கட்டி உதட்டில் ஒரு..."

குறுக்கிட்டு, "நான் அப்படிப்பட்ட ஆளில்லை!" என்றான்.



"இதுவே வெள்ளியா இருந்தா?" என்று அவனைக் கேட்டுக் கண்ணிமைத்தாள்.

"டோன்ட் பி ஸில்லி!" இவளை எந்த வகையில் சேர்ப்பது? குழந்தைத்தனமா? பொறாமையா? இல்லை, கேலி செய்கிறாளா?

"கம் ஆன் ராமன்! உங்க கண்ணிலேயே தெரியறதே! வெள்ளியைக் கண்டா அப்படியே ஸாஸர் மாதிரி விரியறதே. உடான்ஸ் விடாம சொல்லுங்க. உங்களுக்கு வெள்ளி மேல ஒரு 'க்ரஷ்' தானே?"

"என்னைப் பத்தித் தெரியாம பேசறிங்க. என் ஆசை நாட்டுப் பாடல்கள் மேலதான்."

"இப்படித்தான் நாட்டுப் பாடல்னு ஆரம்பிச்சு நாட்டுப் பாடல் பாடற ஸ்வீட் கர்ள்ஸ் வரை போய்டும்! ஜாக்கிரதையா இருங்க. மருதமுத்துவோட பாடியைப் பார்த்தீங்க இல்லே?"

"குழந்தைத்தனமா ஏதாவது சொல்லாதீங்க!" என்று கோபத்துடன் விருட்டென்று கிளம்பிவிட்டான். அவன் தன் அந்தரங்கத்தில் போற்றிப் பாதுகாத்து வந்த குற்ற இச்சையைத் தொட்டு விட்டாள். ஜாக்கிரதையா இருக்க வேண்டும். மருதமுத்துவிடம் இவள் எதாவது தத்துப் பித்தென்று உளறி விட்டால்... ஒரு கணம் மருதமுத்துவுடன் வயற்காட்டில் சண்டை போட்டான் கல்யாண ராமன்.

மெதுவாக நடந்தான் கிராமத்தை நோக்கி. சிறுவர்கள் அவனைக் கண்டதும், "சாக்லேட்டு துரை" என்று ஆரவாரித்தார்கள். சின்னக் கருப்பாயி தன் இடுப்பில் இருந்த குழந்தையின் கையைப் பிடித்து நீட்டினாள். அது ரிஃப்ளெக்ஸ் சக்தியில் 'தா' என்றது. பைசா கொடுக்கலாமா என்று யோசித்தான். மொய்த்துவிடுவார்கள். எல்லோரையும் விரட்டினான். ஆரவாரமாக ஓடி எட்டிப் பார்த்தார்கள்.

**கோ**யில் வாசற்படியில் மரத்தடி நிழலில் பயாஸ் கோப்பு படுத்திருந்தான். அண்ணாந்து, மல்லாந்து குறட்டை விட்டுக் கொண்டிருந்த அவன் சம்பாத்திய சாதனம் துணி மூடப்பட்டு அருகில் காத்திருந்தது. கோயிலுக்குள் ஒழுங்கில்லாத நான்கு பாறைக் கம்பங்களின் மேல் அஸ்பெஸ்டாஸ் தளம் வேயப்பட்டிருந்தது. ஒரே ஒரு குழல் விளக்கில் 'பொன்னம்மாள் உபயம்' என்று எழுதப்பட்டிருந்தது. சின்ன அறையில் சுவரோடு சுவராக அம்மன் ரோஜா நிறத்தில் சீலையும், ஜரிகையும், அகலமான கண்களும் செயற்கை நகைகளுமாக நின்று கொண்டிருந்தாள். பொம்மைத் தொட்டில்கள் மேலே தொங்கின. சின்னச் சின்ன நூல்கள் சின்னச் சின்ன விருப்பங்களை அம்மன்மேல் சார்த்தியிருந்தன. பூசாரியின் வீடு ஒதுங்கி இருந்தது. மனைவி தன் சமீபத்தியக் குழந்தைக்கு முலை கொடுத்துக் கொண்டிருந்தாள். மற்ற குழந்தைகளும் கோழிகளும் வெயிலில் அலைந்தன.

சுற்றி வந்தான். முள் பாதை. ஒரு கிணறு பாழ் பட்டுக் கிடந்தது. அதனுள் பச்சைப்பரப்பில் அனேக ஜீவராசிகள் எண்ணெய் ஏட்டில் மிதந்தன.

ஒரு கல்மேடை.

"தை மாசம் நிச்சயம் ஆயிரும்மா! அம்மனுக்கு ஒரு சீலை வாங்கியாந்துரு! மாசப் பொறப்புக்கு ஆத்தில முளுவிட்டு விடியற்காலை ஈரமா வா! கோளி கொண்டாந்துரு!"

"ஆவட்டும் பூசாரி!"

வெள்ளி குந்தி உட்கார்ந்திருக்க, பூசாரி அவளுக்குக் கொடுத்த குங்குமத்தைப் பக்தியுடன் நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

"தாயத்து தரன், கட்டிக்க! ஒரு ரூபா எடு!"

வெள்ளி தன் சீலைத் தலைப்பில் எட்டு முடிச்சவிழ்த்து நோட்டை எடுத்துக் கொடுத்தாள். கல்யாணராமன் வருவதைப் பார்த்து எழுந்து நின்றாள்.



"இவருதானா?" என்றான் பூசாரி. தன்னைப் பற்றி வெள்ளி பேசியிருக்கிறாள். மௌனமாக இருந்தான். "கும்பிடறேனுங்க" என்றான் பூசாரி.

"என்ன, வெள்ளி குறி கேக்கறாப்பலயா?"

அவன் வெட்கப்பட்டான்.

"பூசாரி! உங்களுக்குப் பாட்டு ஏதாவது தெரியுமா?"

"பாட்டெல்லாம் சாமி வர்றபோது" ஏறக்குறைய குடுமி வைத்திருந்தான். "பாடுவங்க... அதும் நான் பாடறதில்லே..." கோடாலி மீசை. கையில் காப்பு விரல்களில் உலோக மோதிரங்கள். "சாமிதாங்க எம் மூலமா பாடுது" என்று சிரித்தான். இரண்டு பற்கள் வரிசை தவறியிருந்தன.

"அடுத்த தடவை சாமி வரபோது எனக்குத் தகவல் சொல்லி அனுப்பறீங்களா?"

"அது எப்படிங்க முடியும்?" என்றான் சட்டையணியாத மார்பைத் தேய்த்துக் கொண்டே. ப்ரா போடலாம்.

"காசு தரேன் பூசாரி..."

"சொல்லி அனுப்பறங்க!" என்றான்.

வெள்ளி பேசாமல் நடந்து, பூசாரியின் மனைவியுடன் பேசினாள்.

"ஊரே கொல்லுனு பேசிக்குதே! ஆம்பளைச் சட்டையைப் போட்டுக்கிட்டு அந்த ஆட்டம் ஆடுதாமே?"

"ஆமாங்க தங்கம்மா! சக்களத்தி மாதிரிவந்து சேர்ந்திருக்கா!"

"எதுக்கும் நீங்க பொளுது சாய ஒருக்கா வந்து போயிருங்க... திருடு சேக்க ஒரு ஆள் வருது."

"இவரு யாரு?" என்று சன்னக் குரல்.

"இவருகூட அங்கதான் தங்கியிருக்காரு... பட்டணத்துக் காரு... பாட்டுக் கேக்க வந்திருக்காரு."

"மருதமுத்துப் பய என்ன செய்யுறான்?"

"சாணி மிதிச்சுட்டாளாம்... அலம்புங்கறாரு! இங்கி லீசு கத்துக்கப் போறாராம். நல்லால்லை தங்கம்மா. நான் போய்ட்டு அப்பால வர்றேன்... வரேன் பூசாரி."

வெள்ளி மௌனமாக நடந்துசெல்ல, கல்யாணராமன் சற்று தூரத்தில் நடந்தான். வாசலில் மணி அவளுக்காகக் காத்திருந்து வாலாட்டி அவளுடன் நடந்தது. தூரத்தில் அடர்த்தியான தோப்பு தெரிந்தது.

"வா, வெள்ளி, தனியாப் போய்டலாம்! தோப்பில யாருமில்லே..."

"வரேங்க! நிச்சயம் வரேங்க! போயிறலாங்க!"

சைக்கிள் மணி அவன் எண்ணங்களைக் கலைத்தது. ஒதுங்கினான். மருதமுத்து சைக்கிள் மிதிக்க பின்னால் உற்சாகமா ஊஞ்சலில் போல் உட்கார்ந்து கொண்டு சிநேகலதா.

"அய்யா, குட்மார்னிங்! குட்நைட்டு! வெள்ளி, டவுனுக்குப் போறன். லைன் கரையோட அம்மாவைக் கூட்டிப்போறேன், பொஸ்தவம் வாங்கப் போறேன்."

"ஹாய் கல்யாணராம்! ஹாய் வெள்ளி! டாட்டா! சைக்கிள் நெளிந்து நெளிந்து அந்தத் தோப்பை நோக்கிச் செல்ல, சிநேகலதா சிரிப்போடு அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டே தூரத்தில் மறைந்தாள்.

வெள்ளி ஸ்தம்பித்து நின்றாள்.

"அந்த ஆளுக்கு என்னாயிருச்சு?" என்றாள் தனக்குள்.

"எஜமானியம்மாவைப் பார்த்து கொஞ்சம் சந்தோஷத்தில இருக்கான். அவ்வளவுதான் வெள்ளி!"

"இல்லிங்க, நேத்தைல இருந்தே ஒரு மாதிரி ஆய்ட்டாரு. வார்த்தைக்கு வார்த்தை 'சிநேகம்மா சிநேகம்மா'ங்கார்.



நடவுக்கு ஆளுங்களை வயக்காட்டில வரச் சொல்லிப்புட்டு சைக்கிளைப் போட்டுகிட்டு விரைசாப் போறாரே!"

"வந்துடுவான்!"

"எங்கப்பாரு பாத்தா என்ன நெனப்பாரு? அந்தப் பொம்பளையும் இங்கிதம் தெரிஞ்சதாத் தெரியலை. தத்!"

"வெள்ளி! பெரியாத்தாவைக் கொஞ்சம் கூட்டி வரியா?"

"எப்ப ஊருக்குப் போவுதாம்? ஏதாவது சொல்லிச்சுங்களா?"

"யாரு?"

"அதான்- ஆம்பளைப் பாப்பாத்தி."

"ஒரு வாரமோ என்னமோ தங்கறாப்பல. . ."

"அடக் கடவுளே!" என்று தன் கழுத்திலிருந்த மாலையைக் கடித்தாள். கண்களில் மனச்சலனம் தெரிந்தது. நெற்றியில் அந்தத் தை மாச நம்பிக்கையின் குங்குமக் கீற்று. கல்யாணராமன் பார்க்கிறான் என்கிற உள்ளுணர்வு தன் மார்புப் புடவையைச் சரிசெய்து கொள்ளச் செய்தது.

"வர்றனுங்க" என்று நடந்தாள்.

"பெரியாத்தாவைக் கூட்டி வரியா?"

"அனுப்பறனுங்க."

"வெள்ளி! நீ வந்தா உனக்கு நான் இங்கிலீஷ் கத்துத் தரேன்." என்று சொல்லிவிட்டான்.

நின்றாள். திரும்பி அவனைப் பார்த்து, "அதெல்லாம் எனக்கு வராதுங்க! எளுத்தறியாச் சென்மம். சிலேட்டுப் புடிச்சதில்ல. இஸ்கோலுப் பக்கம் போனதில்ல. நெனவு தெரிஞ்சதிலிருந்து இந்தாளுதாங்க படிப்பு. மெறிச்சிக் கிட்டு ஓ... டு றாரே!"

அவள் தனக்குள் பேசிக் கொண்டு நடந்து சென்றாள்.

கல்யாணராமன் திரும்பி வீட்டுக்குச் சென்றான். பெரியாத்தா சொல்லாமலேயே வந்து காத்திருந்தாள். அவனைப் பார்த்ததும் வெற்றிலைக் காவியுடன் சிரித்தாள். 'ராசா மவன் கொடுத்த காசில பேத்திக்கு அரநானு... இந்தச் சிறுக்கி மறுபடியும் முளுவாம இருக்கா. அவளுக்கு முட்டாயி எல்லாம் வாங்கிப் போட்டனுங்க. தீர்ந்து போச்சு" என்று கை விரித்தாள்.

"இரு இரு! வரேன்!"

கல்யாணராமன் சிகரெட் பெட்டியைத் தேடினான். அவனது அறையில் இல்லை. சினேகலதாவின் அறைக்குச் சென்றிருந்த போது விழுந்திருக்கலாம். அவள் அறை பூட்டியிருந்தது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். "இது என்ன?"

மாடியில் இருந்த ஜமீன் மனைவி ரத்னாவதியின் போட்டோ சினேகலதாவின் அறைக்கு வந்து தரையில் சாத்தியிருந்தது. அருகே பழைய புத்தகங்கள் பல.

"என்ன பெரியாத்தா... சௌக்கியமா?"

"இருக்கங்க உங்க புண்ணியத்தில."

"பெரியாத்தா, ரத்னாவதி அம்மாவைத் தெரியுமா உனக்கு?"

"நல்லாத் தெரியும். ஏங்க?"

"இல்லை! சும்மாக் கேட்டேன்."

"அவங்க இந்த ஊட்லதான் இருக்காங்க"

"என்னது?"

"எறந்து போனதும் இங்கதான் சுத்துது அந்தம்மா! புளிய மரத்தில், எம் மவன் ஒருக்கா பார்த்துட்டு டாயரில வெளிக் கிருந்துட்டான், சின்னப் புள்ளைல!"

"சரிதான்!" சிரித்தான்.

"சிரிக்கிறிக! பட்டணத்துக்காரங்களுக்கு நம்பிக்கையில்ல!"

"எப்ப எறந்து போனாங்க?"



"அப்பசி மாசம். பத்து நாப்பது வருசம் இருக்கு முங்க!"

"ஏன் இறந்து போய்ட்டாங்க? காச்சலா?"

"காச்சலா?" அவள் ஒரு பாட்டம் வெற்றிலை போட்டுக் கொண்டு நிதானமாகப் பேசினாள். "மாண்டுக்கிட்டுப் போயிட்டாக."

"மாண்டுக்கிட்டுன்னா?"

"கவுத்தில தொங்கி! நான் பாத்தன். அப்ப எனக்கு என்னா வயசிருக்கும்? பதினெட்டோ பதினேளோ? தலையெல்லாம் விரிச்சுப் போட்டு குங்குமத்தை அளிச்சுப் போட்டு நகை யெல்லாம் உரிச்சுப் போட்டு- இந்தா பெரிய தாம்புக்கவுறு உத்தரத்தில ஊஞ்சப் போடுற கொக்கில மாட்டியிருக்குது. ஆளுயரத் தொங்குதுங்க. ஆனா முவத்துல ஒரு சாந்தம். பெரியவரு தோட்டத்தில் உலாத்துறாரு. அண்டை அசலெல்லாம் கூடிப்போயி..." போலீசு வந்து பொணத்தை எடுக்க திருநிலத்திலேருந்து பொட்டி வண்டி வந்து... கேக்காதீங்க...

"மாமரத்துக் கீழே நின்னு
மங்க குறை சொல்லி அழுதா
மாமரத்து மேலிருக்கும்
மயிலும் இரை உண்ணாது"

"அவங்க ஏன் அப்படி செத்தாங்க?"

"சந்தோசமில்லிங்க! பெரியவரு கூத்தடிச்சாரு. தொரை சாமிங்கள வெச்சிக்கிட்டு... பச்சையிலயும் சேப்புலயும் குடியாக் குடிக்க, கொஞ்சம் எடுப்பா ஒரு பொம்புளை இருந்தா தோட்டத்துக்கு அனுப்பிறனும்... என்னையே ஒரு மாதிரி ஒரு தடவ பார்த்துட்டு, 'நெல்லுக்குத்த வந்தியா'ன்னு கையைப் புடிச்சாரு. ஒலக்கையைப் போட்டுட்டு ஓடியாந் துட்டேன். பாக்கற பார்வையே சரியில்லை! தாவம், தாவம்-தா தாவம். அந்தம்மா என்னதான் செய்யும். நவை நவையா

மாட்டிக்கிட்டு, சாரட்டு வண்டில போயி என்ன பிரயோசன
சந்தோசமில்ல! படிப்பில்லே. ஊட்ல பாவாடைக்காரிங்க
வெச்சு படி! இங்கிலீசுல பேசக் கத்துக்க! குடி! குடி'ன்
சொல்லி... அது பாவம்... வாயில்லாப் பூச்சி! அம்மந் தி
விளாக் கரவம், பல்லாங்குளி, தாயக்கட்டை... இதெல்லாம்தா
அதுக்கு இஷ்டம். அதைப்போயி படிக்க வெச்சு குதிரை
சவுக்கால கூட அடிப்பாராம்!"

பெரியாத்தாவின் எளிய வார்த்தைகளில் கல்யாணராம
முன் அந்தக் காட்சி விரிந்தது.

ஷாண்டலியர் தொங்கும் ஹால், ஓரத்தில் நாய்க் குட்
கிராமபோனிலிருந்து வால்ட்ஸ் சங்கீதம் கண்ணாடி
கோப்பைகளின் கிளிங் கிளிங், நடுநாயகமாக துரை ரா
ராஜா, 'மே இட் ப்ளீஸ் யுவர் எக்ஸலன்ஸி.' இழே விரித்
ரத்த நிற கார்ப்பெட், 'விஷ் விஷ்' என்று அன்னப் பறவைக
போல் சஞ்சரிக்கும் நடனமாதுகள். வட நாட்டிலிருந்து வந்
கஜல் பாடிய ஸல்லாத் திரைப் பெண்கள். மது... ரத்னாவ
தனி அறையில் 'ஸி- ஏ- ட்டி- கேட். எம்- ஏ- ட்டி- மேட்
மேரி ஹாட் எ லிட்டில் லாம்ப்' என்று படித்துக் கொண்டிருக்க
ஜன்னல் வழியே சிரிப்பு சப்தமும் சிணுங்கல்களும் நட
இசையும் கலந்து கேட்க, கலங்கிய சிவந்த கண்களுட
மல் ஜிப்பா அணிந்து, தலை கலைந்து சுருட்டும் சாராயமு
கலந்து நெடி அடிக்க, ஜமீந்தார் உள்ளே வந்து கையி
சுற்றி வைத்திருக்கும் சவுக்கை நிதானமாகச் சுற்றி வைத்திரு
கிறார்.

"அடிக்காதீங்க... அடிக்காதீங்க! கத்துக்கறேன்! பாடறேன்...
பேசறேன்...!"

"நவைனா அந்தம்மாளுக்குக் கொள்ளை ஆசை! கடைசிய
அத்தனையும் உதறிப் போட்டுச் செத்தா! இப்பக்கூட கண்ண
லேயே நிக்குதுங்க. பொம்ம மாதிரி இருக்கும். புசு புசுன்



...மெல்லாம் உப்பி, காலணா அவலத்தில் குங்குமம்
...டு, நிதம் அம்மன் கோயிலுக்கு சாரட்டு வண்டில விளக்
...த்தப் போவுங்க. என்னைப் பார்த்தா நின்னு சாரிக்கட்டுத்தான்
...ாவுங்க. 'நல்லா இருக்கியா? நல்லா இருக்கியா?' கூட்டிக்
...ட்டிப் பணங்கொடுக்குங்க."

கல்யாணராமன் ஜன்னல் வழியாக ரத்னாவதியை மறுபடி
...த்தான். அந்தக் கண்களில் பயம்; உடம்பெல்லாம் நகை,
...ரோ மாட்டி விட்டு அதட்டி நிற்க வைத்தது போல.

"அய்யா! சில்லறையா ஒரு ரூவா இருக்குங்களா...?
...ஞ்சம் பொயலையும் ஆளாக்கு அரிசியும்..."

"மல்லிக் காப்பியும் வாங்கணும்னு- அதானே?"

"பாட்டுக் கேக்கலிங்களா?"

"இல்லை, பெரியாத்தா! நான் மூடுல இல்லே."

"அ?"

"ஹே! அந்தம்மாளுக்கு எத்தனை பசங்க?"

"நீயாவது என்னைக் கண் கலங்காம வெச்சுக்கிறயாடா'ன்னு
...ண்டு வயசுப் புள்ளைகிட்ட சொல்லிச் சொல்லி அளும்"

"அவங்க அப்பா அம்மாவெல்லாம் எப்படி?"

"அதுவும் ஒரு சீரளிஞ்ச குடும்பங்க. இவரு எட்டடின்னா
...வரு பதினாறடி பாஞ்சாரு! பம்பாயில போய் சினிமாப்
...ம் எடுத்து ஒளிச்சாரு. ரத்னாவதி அம்மா இந்த வீட்டை
...டு வெளியூர் போனதில்லிங்க. அதான் இறந்த பிற்பாடும்
...கயே சுத்துதுங்க. காத்தடிச்சு அப்பசி மாசம் மழை
...ஞ்சு ஒஞ்சதும் தவறாம வருதுங்க!"

"நீ பார்த்திருக்கியா?"

"எம் மவன் பார்த்திருக்கான்! நீர்க்கட்டிப் பயலுவ பார்த்
...க்காங்க!"

"அதெல்லாம் புரளி!"

"அந்தப்புளியா மரத்தைப் பாருங்க.. அதன் நிளலை பாருங்க... ஒரு புல்பூண்டு இருக்குதா? அதே, பாக்கி மரத் நிளலில் பாருங்க! சாசிருந்தா அந்த மரத்துக்குக் கீள ஒண்ணு மொளைக்காது."

"எல்லாப் புளிய மரங்களுமே அப்படிதான். அத அமிலக் காற்றின் விளைவு அது என்று அரைச் செவிட்டு கிழவிக்கு எப்படி உரைப்பது?

"சரி! போய்ட்டு வா பெரியாத்தா!"

"ராவில தனியா வெளில நடக்காதீங்க."

"சரி" என்று சிரித்தான்.

கொஞ்சமாகச் சமைத்துக் கொண்டான். சாப்பிட்டான் பிற்பகல் கொஞ்சம் தூங்கினான். அந்தப் பிள்ளைகளுக் சாக்லேட் கொடுத்து ஒன்றுபடுத்தி ஒரு பாட்டுப் பாட கற்றுக் கொடுத்தான்.

இருட்டற வேளை, இன்னும் சினேகலதா திரும் வரவில்லை. வெள்ளி மட்டும் தனியாக வந்தாள்.

## 8

வெள்ளியுடன் ஒரு சிறுவனும் விசுவாசம் மாறா மணியும்கூட வந்திருந்தனர். ஒரு வேப்பங்குச்சியை வீசி கொண்டே வாசலில் நின்றாள்.

"அவுங்க இன்னும் வரலிங்களா?" என்று, சட்டை அணிந் கொண்டு வெளியில் வந்த கல்யாணராமனைக் கேட்டாள்

"இன்னும் வரலியா?"



"பொளுது சாயப் போவுது. காலைல போனவரு வயக் காட்டில் ஆளுங்க காத்துக் கிடந்துட்டு கரும்பு வெட்ட மேலாபுரம் போயிட்டாக..."- அவனை நேராகப் பார்க்காமல் பேசினாள். குரலில் கவலை தொனித்தது. அவள் அங்க அசைவுகளில் இருந்த இயற்கையான வசீகரம் கல்யாண ராமனின் கவனத்தைக் கலைத்தது. அவள் பேச்சில் அதிகம் பற்றில்லை.

"வந்துருவாங்க" என்றான்.

"நா முளுக்க அங்கென்ன சோலி?"

"தெரியலையே!"

"அந்தப் பொம்பளை சரியில்லிங்க!"

"ஆட்டைக் காணம்க்கா, தேடிப் புடிச்சாரவா?"

"இர்றா! பொளுதிருக்கத் தங்கவே மாட்டாருங்க. எப்பவும் இருட்டறதுக்குள்ள வந்துருவாரு. ராத் தங்கிடுவாரோ? பாவனையா அளைச்சுக்கிட்டுப் போயிருக்காளே, அந்தப் பொம்பள!"

"அக்...கா; சாக்கலட்டுத் தருவாருன்னியே?"

"சினிமா கினிமா பார்த்துட்டு வாராங்களோ என்னவோ" என்றான்.

வெள்ளி கோபம் கொண்டு முன்னிலையில் பேசத் தொடங்கி விட்டாள்; "சினிமாப் போயிருவியாய்யா? வுட்டுட்டுப் போயிருவியா என்னை? பூ நாகம் தீண்டாது உன்னை?"

"யாரைச் சொல்றே வெள்ளி?"

"அந்தாளைத்தானுங்க! சரியாத்தானுங்க இருந்தாரு. போன வருசம் ஒரு தடவை மல்லு வேட்டிக்காரங்க ரெண்டு பேரு பின்னே போயி அவுங்க எங்கேயோ கூட்டிக்கிட்டுப் போயி பயந்துக்கினு ஓடியாந்துட்டாருங்க. அந்த சூள்ச்சியெல்லாம் இவருக்குத் தெரியாதுங்க."

"ஏன் கவலைப்படறே? வந்துடுவாங்க!"

"அக்கோவ் அக்கோவ்! சாக்கலட்டு!"

"இந்தக் குரங்குக்கு ஒரு சாக்கலட்டுக் கொடுங்க. புடுங்குதான்."

"உன் பேர் என்ன?"

"ராசாவேலு."

"இந்தா எட்டணா! ஓடிப்போய் உங்கக்காவுக்கும் உனக்கும் மிட்டாய் வாங்கிண்டு வா பார்க்கலாம்."

அவன் மானசீக டிராக்டரைக் கிளப்பி கியர் போட்டு 'டுர்ர்' என்று புறப்பட்டு, 'குச்சிக் குச்சி ராக்கம்மா! கூசாள ராக்கம்மா!' என்று கூவிக் கொண்டு ஓடினான்.

இருள் படிந்து கொண்டிருக்க, "உக்காரு வெள்ளி" என்றான். வேப்பங்குச்சியைக் கடித்துக் கொண்டு வழியை நோக்கிக் கொண்டே உட்கார்ந்தாள். நின்ற வாகிலிருந்து அவள் மேல் சோகை மஞ்சள் சூரிய கிரகணங்கள் படிய செதுக்கி வைத்தது போல் இருந்தாள். அவள் மார்பின் பிரிவு தெரிந்தது. அந்த மணிமாலை அங்கே ஒளிந்து கொண்டிருந்தது. கல்யாணராமன் ஜுரம் போல் உணர்ந்தான்.

அப்படியே அவளைக் கட்டிப் பிடித்து வீழ்த்தி அவள் உடையைக் கலைத்தான், மனசில்.

"வெள்ளி! உன் கையைக் காட்டு! எனக்கு ரேகை பார்க்கத் தெரியும்!"

அவள் அங்கிருந்தே தயக்க அசுவாரஸ்யத்துடன் கை நீட்டினாள். அவள் விரல்களைப் பற்றத் தைரியம் வரவில்லை. சற்று அருகில் சென்று கையைக் கவனித்தான். தன் சுட்டு விரலை ரேகை மேல் ஓட்டினான். அவள் இயல்பாகப் பின் வாங்கி வேப்பங் குச்சியைக் கொடுத்து, "இதால பாருங்க" என்றாள்.



"இங்கே சரியாத் தெரியலை. உள்ளே வாயேன்" என்று விளக்கப் போட்டான். தயக்கத்துடன் உள்ளே வந்தாள். அவள் சுற்றியிருந்த புடவை இடுப்பில் படிந்திருந்ததைக் கவனித்தான். "உட்காரு" என்றான். தரையில் உட்கார்ந்தாள்.

"உன் மனசில நினைக்கிறது நடக்கணும் இல்லியா?"

"ஆமாங்க."

"மனசிலே என்ன நினைக்கிறே?"

"இவரு மாறாம விசுவாசமா இருக்கணுங்க! எனக்கு மனசு [illegible]ந்து பதைக்குது."

"அவ்வளவுதானே? சொல்லு! ஓம் நமச்சிவாய!"

"ஓம் நமச்சிவாய!"

"ஓம்! ஓம்! கண்ணை மூடிக்க! அப்பத்தான் மந்திரத்துக்கு நல்ல பலன்..."

மூடிக்கொண்டாள். அருகில் சென்றான். அவள் முகத்தின் மிக அருகே சென்றான். வேப்பெண்ணெய் வாசனை, மண் வாசனை, ஈரமான நெல் வயல் வாசனை, அழகின் வாசனை, [illegible]ன்ன விரல் நுனிகளால் மார்புப் புடவை நுனியைப் பற்றினான். இருதயம், தொண்டைக்கு வந்து விட்டது. மெதுவாக அவளைத் தன் கையால் சுற்றி வளைத்தான். [illegible]ப் பட்டுத் துணுக்குற்றுக் கண்திறந்து உடனே அவனைத் தள்ளினாள். அவள் கை அகப்பட்டது.

"விட்டுருங்க! விட்டுருங்க!" கண்ணாடி வளையல் ஒடிந்தது. அவளைப் பற்றியிழுத்தான். அசுர பலத்தில் உதறிக் கொண்டு, [illegible] சேலையால் வாயைப் பொத்திக் கொண்டு, "சே! நீங்க [illegible]ச்சவங்க! பட்டணத்துக்காரரு! பெரியவங்க! நல்லால்ல! அவருக்குச் தெரிஞ்சா அருவாளைத் தூக்கிடுவாரு" என்றாள்.

கல்யாணராமன், 'ஸாரி' என்று முணுமுணுத்தான். உடலில் நடுக்கம் இருந்தது.

"டுர்ர்ர்" என்று ராசவேலுவின் டிராக்டர் சப்தமும் 'கு குச்சி ராக்கம்மா'வும் கேட்டது.

"இந்தாக்கா முட்டாயி!"

அந்த இனிப்பை நிராகரித்து, பொட்டலத்தைப் பெ மேல் வைத்தாள். "போய் வாரனுங்க. அவரு இங்க வந் வெள்ளி வந்து காத்திருந்ததாகச் சொல்ல வாண்டாங்க!

"என்னக்காது? எனக்கு முட்டாயி?"

"வாடா குரங்கு! வேற வாங்கித்தாரேன். நான் ஒரு பை யம்! கருக்கல்ல வெளியில வந்தம்பாரு? செவ்வாக்கிழ நகம் வெட்டினேம்பாரு! தரித்திரம்!"

கல்யாணராமன் பெருமூச்சுடன், ஏன் சற்று விடுத உணர்ச்சியுடன், அவள் சென்ற வழியைப் பார்த்துக் கொ நின்றான். "இவர்களுடன் நான் எப்படி கம்யூனிகேட் பண் முடியும்? மருதமுத்துவை நினைத்து ஏங்குகிறவளைத் து லாகக் கையைப் பிடித்து விட்டேனே? என்ன ஒரு அச காரியம்? இந்த விபரீத ஏக்கம் ஆரம்பத்திலிருந்தே த மருதமுத்துவிடம் சொல்லி விடுவாளோ!' பயமாக இரு 'வெகுளிப் பெண். விஷயத்தைப் போட்டு உடைத்து விடுவ இல்லை சொல்ல மாட்டாள். இந்தத் தடவை சொ மாட்டாள்' "இன்னு ஒருக்கா இந்த மாதிரி செய்யாதிங்

லுங்கிக்கு மாறிக் கொண்டு படுக்கையில் வந்து படுத் ஒரு விதமான 'வால்டர் மிட்டி'த்தனத்தில் வெள்ளியை விபத்திலிருந்து காப்பாற்றினான். வெள்ளத்தில் நீந்தி ராசவேலுவைக் கரை சேர்த்துப் பிழிந்தெடுத்தான். வெள்ளி துரத்தின காட்டுப் பன்றியை ரத்தக்குத்தாகக் குத்தின மருதமுத்து? பேச்சே இல்லாமல் மரத்தின் மேல் தொ கொண்டிருந்தான்.

ம்ஹூம்!



சைக்கிள் மணிச் சப்தம் கேட்டு இருட்டில் அந்த உருவங்கள் தோன்றி அருகே வரவர- சினேகலா, மருதமுத்து. முன்னவள், சைக்கிளின் முன்பக்கம் கிராஸ் பாரில் உட்காரந்திருந்தாள்.

"ஹாய் ராம்!"

மருதமுத்து அவனுக்கு மிக அருகில் அவளைக் கொண்டு வந்து நிறுத்தி, கத்தி செருகினாற்போல பிரேக் போட்டு நிறுத்தினான்.

"ஓ! வாட் எ லவ்லி ரைட்!" என்றாள்.

"ஏன் இத்தனை நேரம்?"

"சினிமா போயிருந்தோம்! அது என்ன சினிமா மருத முத்து?" அவள் தலை கலைந்திருந்தது.

"செகன் மோகினி."

"செக்ஸ், பக்தி- நல்ல காம்பினேஷன். மருதமுத்து எனக்கு உபசாரம் பண்ணினான் பாருங்க- அடாடா டாடா."

மருதமுத்து 'வெள்ளி வந்திருந்ததுங்களா?' என்றான் குரலில் குற்றத்துடன்.

கல்யாணராமன் பொய் சொல்ல முடியாமல், "ஆமாம்! உனக்காக இத்தனை நேரம் காத்திருந்தா?" என்றான்.

"நீங்க அவளைப் பார்த்துக்கிட்டே இருந்திங்களா?"

"வெள்ளிக்கு வேறு சோலி கிடையாது. ஒரு மணிக்கு ஒரு தபா என்னைப் பார்த்துக்கிட்டே இருக்கணும்."

"சரியாப் பார்த்துக்க மருதமுத்து. மத்தப் பேர் அவளைக் கொத்திக்கிட்டுப் போயிருவாங்க."

கல்யாணராமன் அவளை முறைத்தான்.

அவள் சிரித்து, "திஸ் ஃபெலோ மஸ்ட் பி குட் இன் பெட்" என்றாள். அதிர்ச்சியுடன் அவளை நோக்கினான்.

மருதமுத்து, "என்னவோ இங்கிலீசு! சினேகம்மா ஒரு நா நானும் அர்த்தம் புரிஞ்சுக்கிட்டு, 'திஸ் ஃபெலோ விஷ்பிஷ விஷ்'னு பேசத்தான் போறேன்!"

அவள் கை தட்டி ரசித்துச் சிரிக்க, மருதமுத்து இரண்டு நிமிஷம் தொடர்ந்து அம்மாதிரி செயற்கை இங்கிலீஷ் பேசிக் காட்டினான். கண்களில் நீர் வரச் சிரித்தாள். தன் கைப்பையிலிருந்து ஒரு சிறிய பாட்டிலை எடுத்து அதன் ஏரோஸால் ஸ்ப்ரேயை அழுத்தி அவன் மேல் பர்ஃப்யூம் அடித்தாள். சின்னதாக ஒரு வாசனை மேகம் மருதமுத்துவைச் சூழ்ந்து கொள்ள, மருதமுத்து ஜெகன் மோகினி போல் நாட்டியமாடவே ஆரம்பித்துவிட்டான். அவள் கை கொட்டிச் சிரிக்க கல்யாணராமன் மௌனமாக அவளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"போய் வாரனுங்க. ரவைக்குப் படுக்க வந்துடறேன்." சைக்கிள் ஸீட்டைப் பிடித்துக் கொண்டு ஓரக்கண்ணால் சினேகலதாவைப் பார்த்துக் கொண்டு ஸ்டைலாக ஏறி, "டிங்க டிங்" பண்ணிக்கொண்டே சென்றான்.

"நீங்க அவனோட விளையாடறீங்க! அவனை முட்டாள் அடிக்கிறீங்க!"

"ஏன் பொறாமையா?"

"சேச்சே! டோண்ட் இமேஜின் திங்ஸ்! அதிருக்கட்டும்! ரத்னாவதி அம்மாவோட போட்டோவை உங்க ரூம்ல பார்த்தேனே! ஹால்லே இருந்து ஏன் கழட்டிட்டீங்க?"

அவள் சற்றுத் துணுக்குற்றுச் சமாளித்து, "ஊருக்கு எடுத்துட்டுப் போகலாம்னுட்டு. மருத முத்துவை வெச்சுக்கிட்டு ஹாலைத் துப்புரவா ஒழிக்கப் போறேன். பழைய காகிதங்களைக் கிழிச்சுப் போட்டுட்டு... இந்தாங்க! உங்களுக்குப் பசிக்குமேன்னு ஃப்ரூட் ப்ரெட் வாங்கிண்டு வந்தேன்."

"தாங்க்ஸ்"

"வெறும் தாங்க்ஸ் மட்டும்தானா?"



"அதுக்கு மேலே வேணும்னா கித்தார்ல ஒரு பாட்டு வாசிச்சுக் காட்டறேன்!"

"அவ்வளவுதானா! ரொம்ப மோசம்!" என்று தன் அறைக்குச் சென்று சற்று நேரத்தில் "கல்யாணராமன்! ஒரு ஸேப்ட்டி பின் இருக்குமா?" என்று திரும்பி வந்தாள்.

அவளை வெறித்துப் பார்த்தான். "இத பாருங்க! நிச்சயம் உங்ககிட்ட நிறைய சட்டை, பட்டனோட இருக்கு. இந்த சர்ட்டுதான் ஆப்ட்டுதா?"

"யூ டோண்ட் லைக் மி ராமன்!"

"என்னையும் மருதமுத்து மாதிரி பைத்தியமா அடிக்கணும்னு பாக்கறீங்களா? அந்த பெர்ஃப்யூம் மணத்தோட அவன் வெள்ளிக்கிட்ட போகப் போறான்."

சிரித்தாள். "எதற்குத்தான் சிரிப்பது என்ற விவஸ்தையே கிடையாதா இவளுக்கு?"

"அவளை என்ன பண்ணிங்க?"

"எவளை?"

வெள்ளியை! மெள்ளே உள்ளே அழைச்சுக்கிட்டு, "வாவா வித்தை காட்டறேன்... பாட்டு வாசிக்கிறேன்னு... இருட்டிலே கூட்டிட்டுப் போயி..."

"சட்!" கோபத்தில் அவள் மேல் புத்தகத்தை எறிந்தான். அவள் அதைப் பிடித்துத் தலைப்பைப் படித்தாள். "லீலா திலகம்," பிரித்து முதல் பக்கத்தைப் படித்தாள்.

"பாலோடு துல்ய ருசி மௌலியில் உனக்கும்
பாலேந்தும் மந்த ம்ருதுலஸ்மித வெண்ணிலவு"

"சட்" என்று அதே வேகத்தில் புத்தகத்தைத் திருப்பி எறிந்தாள். "எங்கிட்ட ஒரு புத்தகம் இருக்கு தரவா?"

"ப்ளேபாய்?"

"இல்லை. ப்ளே கர்ள்! குட்நைட் தம்புரா?" உதட்டைப் பிதுக்கினாள், "ம்ஹூம், தாக்கத் போறாது அய்யரே! அஞ்சால் அலுப்பு லேகியம் சாப்பிடு!"

கல்யாணராமனுக்கு இருட்டில் சிரிப்பு வந்தது. ராத்திரி மௌனத்தில் 'எப்படிப்பட்ட பெண் இவள்?' என்று யோசித்தான். தூக்கம் வரவில்லை. கித்தாரை எடுத்து வைத்துக் கொண்டு கிளாஸிகல் வாசிக்க, "ஏய்! ஷட்... அ அ அ...ப்" என்று சிநேகலதாவின் குரல் கேட்டது. மருதமுத்து வராந்தாவில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். 'நான் நேராக நடந்து அவள் அறைக்கதவைத் தட்ட முடியும். "சிநேகலதா ஹௌ எபவுட் இட்!"

"தப்பு! ம்ஹூம் கூடாது. தூங்கு... தூங்கு...!"

டிராக்டர் நிறுத்தியிருக்க, மருதமுத்துவும் சிநேகலதாவும் வெள்ளியும் கல்யாணராமனும் அதைச் சுற்றி ஓடிவர பெரியாத்தாவும் ரத்தினாவதியும் 'வேகமா வேகமா' என்கிறார்கள், இரைக்கிறது. ரத்னாவதி சவுக்கைச் சொடக்குகிறாள். 'நிக்கக் கூடாது! நின்னா வேட்டியை உருவி விடுவாக' என்கிறாள் பெரியாத்தா. கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டி ரத்னாவதி தொங்க... எப்படி இருக்கிறது?"

'முதல்ல கொஞ்சம் வலிக்குது. அப்புறம் போகப் போகப் பழகிப் போய்டுது. கால்தான் விலுக் விலுக்குனு அடிக்குது. கொஞ்சம் மூத்திரம் வருது.'

வர, விழித்துக் கொண்டு விட்டான். வெளியே நிலா ஏறக்குறைய உச்சத்தில் இருந்து காடு மலையெல்லாம் முலாம் பூசியிருந்தது. கல்யாணராமன் கதவைத் திறந்து தாழ்வாரத்தில் வெட்ட வெளியில் நின்று கொண்டு பிளாடரைக் காலி செய்தான். புளியமரம் நின்று பெரிதாகப் பரவி, அதற்குள்ளிருந்து, 'கொட்டு கொட்டு' என்று ஆந்தப் பிள்ளை



கூப்பிட்டது. சின்னச் சின்ன சப்தங்களுடன் அவ்வப்போது மெலிய காற்றில் சலித்துக் கொண்டது மரம்.

ரத்னா! சவுக்கடிபட்டு மாண்டுக்கிட்டு மாண்ட ரத்னா!

அதோ, அந்த இருட்டில், "கல்யாணராமன்! வா! என் கதை சொல்லுதேன்! வா! வாய்யா சொல்லுதேன். நான் சிரிஞ்சதைச் சொல்லுதேன்."

"திருச்செந்தூர் ஊர்லே
தேரு நல்ல அலங்காரம்
தேவடியாள் கொண்டையில
பூவு நல்ல அலங்காரம்
காலையிலே கம்பிவேட்டி
மத்தியானம் மல்லுவேட்டி
சாயந்திரம் சரிகைவேட்டி
சந்தியெல்லாம் வைப்பாட்டி
மானத்துச் சூழ்ச்சியரே
மழைக்கு இரங்கும் புண்ணியரே
வைப்பாட்டி வைக்கப் போயி
வந்ததய்யா பஞ்சம் நாட்டில்"

அவள் சிரிப்பும் பாட்டும் எதிரொலித்தது மரத்திலா அல்லது மனத்திலா?

கல்யாணராமன் மெதுவாக அருகே சென்றான். வால்ட்ஸ் சங்கீதம் ஒலித்தது. ஜமீன்தார் வீட்டு ஹாலில் பெரிய பார்ட்டியிலிருந்து சப்தங்கள் கேட்டன. இன்னும் அருகே சென்றான். யாரோ நடக்கிறார்கள். ரத்னா பேசுவதாவது? எல்லாம் பிரமை! இப்போது கேட்பது காலடியோசை! ஆள் நடமாட்டம்! தினம் இரவு வரும் அதே ஆசாமி! சப்தம் வருவது அந்த மரத்திலிருந்து இல்லை. மரத்தின் கிளைகள் தொட்டுக் கொண்டிருக்கும் மாடிப் பக்கத்தில், மெதுவாக மாடிக் கைப்பிடிச் சுவரிலிருந்து ஒருவன் மரக்கிளைக்குத் தாவி மெதுவாகக் கீழே இறங்க, ஏதோ ஓர் அசட்டுத்

தைரியத்தில் கல்யாணராமன் அதுதான் தக்க தருணம் என்று சப்தம் போடாமல் அடி மேல் அடி வைத்து நடந்து மரத்தடியில் அவனுக்காகக் காத்திருந்தான்.

கல்யாணராமன் மார்பைப் பிடித்துக் கொண்டு காத்திருக்க, மரத்திலிருந்து 'சரசர' வென்று அவன் இறங்கினான். அப்படியே பாய்ந்து அதே சமயம் "மருதமுத்து!" என்று கத்தினான்.

இரண்டு பேரும் காதலர்கள் போலக் கட்டிப் புரண்டார்கள். அவன் வியர்வை, அவன் உடலின் உஷ்ணம், அவன் மூச்சு எல்லாவற்றையும் உணர்ந்தான், கல்யாணராமன். திடீர் என்று இடுப்புப் பாகத்தில் ஒரு வலிக்கொத்து தன்னைத் தாக்க கல்யாணராமன் பிடியைத் தளர்த்த, மண்டையில் எது தன்னை அடித்தது என்று தெரியாமல், புரியாத நிலையில், குழப்பத்தில் "மருதமுத்து, மருதமுத்து" என்று கத்த நினைத்து, கத்த முடியாமல் மயங்கினான்.

## 9

சிநேகலதாவின் புன்னகைமேல் கண் விழித்தான்.

"உயிரோட இருக்கிங்களா?" என்றாள்.

தோள்களில் வலித்தது. நெற்றிக்குள் 'விண் விண்' நினைத்துப் பார்க்கும் இடங்களில் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் வலித்தது. எழுந்திருக்க முடியவில்லை.

"உங்களை முனி அடிச்சுடுச்சுன்னு சொல்றாங்க. புளிய மரத்தில எங்க பாட்டி பேயா உலாத்தறாளாம்."

மெதுவாக, "இல்லை... யாரோ... யாரோ... ஒரு... ஆள்..." என்றான், கல்யாணராமன்.



"எப்போது அது? நேற்றா? அதன் முன் தினமா?"

"நீங்க என்னை எளுப்பியிருந்தா ஒரே லாவில புடிச்சு மரத்தில கட்டிப் போட்டு வீறியிருக்கலாமில்ல?" மருதமுத்தும் வந்திருக்கிறான். "சிநேகம்மா. நீங்க இங்க இருக்கிறது ஆபத்து. எங்க வீட்டாண்டை வந்துருங்க."

"சரிதான்! இதுக்கெல்லாம் நான் பயப்படலை."

"அய்யா வேணா டவுனுக்குப் போயிரலாம்"

"அய்யாவால நகர முடியாது. இந்தாங்க மாத்திரை. உடம்பு முடியலைன்னா எதுக்காக வீரச் செயல்கள்?"

அவளைக் கண்ணால்தான் கோபித்துக் கொள்ள முடிந்தது. சுற்றிலும் பார்த்தான். பெரியதனக்கார அய்யாதுரை, சிநேகலதா, மருதமுத்து...அட! ஓரத்தில் வெள்ளி, அப்புறம் புதுசாக ஒரு ஆள், தங்கராசு.

"அந்த ஆளு எப்படி இருந்தான்? சாரிச்சுடுவோம்ங்களா?" என்றான் புதிய ஆள்.

"நீங்க யாரு?"

"அவுட் போஸ்ட் கான்ஸ்டபிளுங்க!"

இவனா கான்ஸ்டபிள்! காக்கிச்சட்டை, வேஷ்டி. நீலத்தில் தொப்பி, முகத்தைவிடப் பெரிய மீசை, ஒல்லி.

"பெரியசாமி, நீ எதுக்கும் இன்ஸ்பெட்டர் அய்யாவுக்குத் தகவல் கொடுத்துரு. மூணு நாளாவே ஊட்டைச் சுத்தறான் பய. கிராமத்துக்குப் புது ஆளாத்தான் இருக்கும்."

"பிராது கொடுத்திருக்காங்களா?"

"அய்யாகிட்ட சேட்டிமெண்ட்டு வாங்கிக்கிடலாம். திருநிலம் டைப் மாஜிஸ்டிரேட்டுக்கும் இன்ஸ்பெட்டருக்கும் ரவாணா கொடுத்திடறேன். விஷயம் பெரிசாயிடும் போல இருக்கு."

"எப்படி அடிச்சுப் போட்டுட்டுப் போயிருக்கான்!"

"அந்தப் புளிய மரத்தில ஏதோ இருக்குதுங்க!" என்றான் கான்ஸ்டபிள்.

"புளிய மரத்தில் ஒரு...ம் கிடையாது. ராத்திரி ஒருக்கா வந்து பாத்துரு. சைக்கிள்ல லைட்டிருக்கா?"

"வெள்ளி, சுடுதண்ணி ஒரு பாட்டில கொண்டுட்டு வந்துரு. அய்யா உடம்பு தொடைச்சுக்குவாங்க!"

"நான் தகடா ரெண்டு பயலுவளை ராத்திரி காவலுக்குக் கூட்டியாரனுங்க. இனி வந்தாப் புடிச்சுரலாம். ஏட்டய்யா புள்ளை குட்டிக்காரரு. ஒண்ணு கிடக்க ஒண்ணு ஏதாவது ஆயிடுச்சுன்னா ரெண்டு சம்சாரமும் என்ன செய்வாங்க?"

மணியக்காரர் அசம்பாவிதமாகச் சிரித்தார். கான்ஸ்டபிளும், "மருதமுத்து! சும்மாக் கெட!" என்று அதட்ட, தங்கராசு "பைக்குள்ள என்னங்க- புங்கங்காயா?" என்றான்.

வெள்ளி சினேகலதாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த சம்பாஷணைகள் குழப்பமாகக் காதில் விழுந்தன. காப்பியை விழுங்கும்போது தொண்டை வலித்தது. ஜுரம் வரப்போகிறது. எப்போது அவர்கள் புறப்பட்டார்கள்?

மாலை ஜுரம் ஏகிறியிருந்தது. சினேகலதா வந்து பார்த்தாள். கொண்டு வந்திருந்த ஸ்பால்ஜின் எரித்ரோ மைஸின் என்று வர்ஜ்யா வர்ஜ்யமில்லாது விழுங்கினான். வைத்தியர் மணிக்கட்டைப் பிடித்துப் பார்த்து, "பித்த நாடி பேசுதுங்க. பட்டினி போட்டுருங்க. இந்தச் சூரணத்தைத் தேனில கொளைச்சு சாப்பிடுங்க. கொஞ்சம் மஷ்டு வெளியவரும். சரியாப் போயிடும்" என்றார். சாப்பிட வில்லை. சினேகலதாவின் பர்ஃப்யூம் வாசனை உறுத்தியது.

இரண்டாம் தினமோ, மூன்றாம் தினமோ சற்றுத் தெளிந்திருந்தான். அறை அலங்கோலமாக இருந்தது. காய்ந்த ரொட்டி, மாத்திரைப் பட்டைகள், சட்டியில் ஆறின வெந்நீர்,



மஷ்டு வைத்தியரின் பொட்டணங்கள், "சினேகலதா!" பதில் இல்லை. ஜுரம் சுத்தமாக விலகி இருந்தது.

கைக்கடிகாரம் நின்றிருந்தது. பிற்பகலாக இருக்கலாம். பசித்தது. அறைக்குள் நடந்தான். நீண்ட சதுர அறையின் மேல்புறத்தில் சுவரோரத்தில் ஜமீன்காலத்து மர பீரோ பூட்டி தாழ்ப்பாள் கொக்கி எல்லாம் துருவேறியிருந்தது. பொழுது போகாமல் பீரோவுக்கும் கட்டிலுக்குமாக நடந்தான். பீரோவில் தாளம் போட்டுப் பார்த்தான். சுவருடன் ஒட்டியிருந்த பீரோவை நகர்த்திப் பார்த்தான். அதன்பின் ஒரு அறைக்கதவு தெரிந்தது. சற்று ஆர்வம் ஏற்பட்டு, மர பீரோவை முழுதும் நகர்த்தினான். சிறிய அந்தக் கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. அழுத்திப் பார்த்தான். உள்ளே ஏதோ உதிரும் சப்தம் கேட்டது. இடித்தான். படக்கென்று உள் தாழ்ப்பாள் பிராணனை விட்டது. கதவு முருக்களித்துத் திறந்து கொண்டது. உள்ளே ஏதோ தடுத்தது. சிரமப்பட்டு ஒரு ஆள் நுழைவதற்கு இடைவெளி பண்ணிக் கொண்டு அறைக்குள் எட்டிப் பார்த்தான்!

மெல்லிய இருட்டு. மேலே ஒரு அறை. ஜன்னல் சொற்ப வெளிச்சம் தர, கண்கள் பழக அங்கே இருந்த கண்டா முண்டா சாமான்கள் தெரிந்தன. இரும்புக் கட்டில், தொட்டில், குமிழ் வைத்த அழகான நடைவண்டி; படங்கள்- இயற்கைக் காட்சி, ராமபட்டாபிஷேகம், வீனோ ஒயிட்ரோஸ் சோப்பில் வெள்ளைக்காரி- என்று கதம்பமாகப் படங்கள். நடக்க இடமின்றி அறை முழுவதும் கன்னா பின்னா சாமான்கள், கட்டில் மேல் பலப்பல புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களின் குப்பல்கள்; அவற்றைத் தொட, மூக்கில் புழுதி ஏறி, 'அஸ்க்' என்று ஒரு தடவை தும்மினான். சின்ன போட்டோக்கள். பத்து வயசுப் பையன் அவன் தம்பியுடன் மேல்நாட்டுத் தொள தொள உடை அணிந்து காமிராவைப் பார்த்து நாணமாக நிற்க, அவர்களில் ஒருவன் சினேகலதாவின் தகப்பனாக இருக்கலாம் என்று நினைத்தான். ரத்னாவதியின் சின்ன

போட்டோ ஒன்றில் ஹாலில் தெரிந்த அதே பயப் பார்வை தென்பட்டது. புத்தகங்களில் ரத்தினபுரி ரகசியம், திகம்பர சாமியார், இங்கிலீஷ்- தமிழ் ஒக்கபிலேரி, மதனகாமராஜன் கதை. பத்மாவதி சரித்திரம், சூளாமணிவசனம்... பிரித்தான். 'பின்பு திவிட்ட நம்பிக்கும் சுயம் பிரபை நங்கைக் கும் மங்கல மணநாள் இன்றென மங்கல முரச மெங்குமதிர வெறித்தனர். யாண்டு நோக்கினும் ஆடல் பாடலபிநயம் முதலியன நிகழ்ந்தன. மூடிவிட்டு நோட்டுப் புத்தகம் ஒன்றை எடுத்தான். பிரித்தான். 'அசல் ரசீது ந.தேதி 19...ம் ஸ்ரீ...பி ... வ அடியிற் கண்டபடி ரூபாய்- அணா- மாத்திரம் பெற்றுக் கொண்டேன்... வேறொரு நோட்டை எடுத்துப் பிரித்தான்.

"ரத்னாவதி, ரத்னா, ரத்தம்!" அருகில் செங்கல் சிவப்பில் ரத்தக்கறை. புரட்டினான்.

"எத்தனை நாள் முத்தம்மா?"- ஒரே ஒரு வரி புரட்டினான்.

"வைரத்தைப் பொடி பண்ணி உட்கொண்டால், உடனே மரணம்."

மறுபடி ஒரே ஒரு வரிதான் பக்கம் முழுவதும்.

பிறிதோர் பக்கத்தில் அடர்த்தியாக எழுதியிருந்தது.

"எனக்கு எத்தனையோ வருசம் பின்னால் இதை வாசிக்கிறவர்கள் உண்டு என்றால் அவுகளுக்காக ஞாபகப்படுத்த ரத்னா எழுதிக் கொடுக்கும் சின்ன சமாசாரம்."

ரத்னாவின் எழுத்தா? ஆர்வம் மேலிட மேலே படித்தான்.

'நான் பொறந்து வளர்ந்தது மேற்கே மேகலாபுரத்தில். சின்னப் பிள்ளையில எங்க வீட்ல காரில் அளைச்சுப் போய் படிப்பிச்சாங்க. ஒன்பது வயசுவரைக்கும் எங்க பாட்டி தங்கப் பேலாவில் சோறு ஊட்டுவாங்க. நாலு கிளாஸ் படிச்சதும் படிப்பெதுக்குன்னு விலக்கிப்பிட்டாங்க. புஷ்பவதியானதுக் குள்ள கல்யாணம். திருக்கல்யாணம். இங்க வந்து பதினெட்டு வயசுக்குள்ள மூணு கர்ப்பம். தவறிப் பொறந்ததும் தப்பிப்



பொறந்ததும் பொண்ணு பொண்ணுன்னு ஒவ்வொரு முறையும் உசிரை விட்டதும் நினைச்சுப் பார்க்க கடினமா இருக்குது. என் கண் முன்னாலேயே சாராயப் பானங்கள் ஏத்துக்கறதும் வெள்ளைத் தோல் மோகமும் சீட்டு- வைப்பாட்டிகளும் பார்த்தாச்சு. Rathna good girl. Rathna not happy. என்னை விட உயரம் அவரு. சாக்கடைகளைத் தேடிப் போனவரு. என் பெத்தோர்கள் கொடுத்த நகைகள்...

"அய்யா, அய்யா!" என்று குரல் கேட்டுத் திடுக்கிட்டு நோட்டை எடுத்து மறைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

"என்ன வெள்ளி இந்தப் பக்கம்?"

"அவரு வந்தாரா?"

"இல்லையே... காலைல இருந்தே மருதமுத்துவைப் பார்க்கலியே!"

"அம்மா?"

"இல்லையே!"

வெள்ளி தயங்கினாள். கீழப் பார்வை பார்த்தாள். உதடுகள் துடித்தன. என்னவோ சொல்ல விரும்பினாள்.

"என்ன வெள்ளி?"

"உடம்பு நேராயிடுச்சுங்களா?"

"பரவாயில்லை... ஏன் ஒரு மாதிரி இருக்கே? அழறியா என்ன?"

"அய்யா, அவரு என்னை மறந்துட்டாருங்க!"

"நீ என்ன சொல்றே?"

"வராரு போறாரு, வாசலில் நிக்க மாட்டங்கறாரு. எப்ப பார்த்தாலும் அவளையே பத்திப் பேசறாரு. என்னங்க சகவாசம் இது? சமீன் பேத்தியா இருந்தா சதா அந்தச் சிறுக்கி பின்னா லேயே சுத்திக்கிட்டு இருக்கணுமா? குதிரை வாலிக்கருது போல நானிருக்கேன். குரத்தியைப் புடிச்சிக்கிட்டு அலையுறாரே!

இங்கிலிசு கத்துத் தாராங்களாம். பொஸ்தவத்தை எடுத்துக்கிட்
தோப்பாண்டை போவுறதும், சைக்கோளைப் போட்டுக்கிட்
அந்தக் கூறு கெட்ட மனுஷன் சாமவழிப் போவுறதும் அ
சிரிக்கறதும் அவரு பதிலுக்குச் சல்லிசா சிரிச்சு பணியா
வாங்கிட்டாரதும்... எனக்குப் பொறுக்கலிங்க. என்னதா
இவகிட்ட இருக்குன்னு இந்தா அலை அலையுதாரு? என்ன
மறக்க ஏதோ பொடி போட்டுட்டாங்க.. சகளத்திலே, சூதேவி
என்று பத்துவிரல்களையும் சொடுக்கி சினேகலதாவின் அ
வாசல் மேல் ஏவினாள்.

"வெள்ளி அந்தப் பொண்ணு அப்படி இல்லை!"

"என்னங்க நீங்க? அது போட்டுக்கற சட்டையைப் பா
தீங்களா? எல்லாம் வெளியே தெரியுது. எப்பவாவது சீ
உடுத்துதா சொல்லுங்க! அந்த வட்டக்காலையும் எ
கண்ணையும் வெச்சுக்கிட்டு 'துருதுரு'ன்னு ஆம்பிளையாளு
அலையுதே. அவருகிட்ட நீங்க புத்தி சொல்லிப்போடு
ஊரு சனம் மொத்தமும் சிரிக்குது. அவரு செய்யுறது நல்ல
லேன்னு சொல்லிப் போடுங்க."

"அதை நீயே சொல்லிடேன் வெள்ளி"

அவள் சிணுங்கினாள். "என்னைப் பாக்கவே வரதில்லை
மூணு நாளா அவ பின்னாலேயே சுத்திக்கிட்டிருக்கா
நான் அந்தப் பொண்ணு வந்ததும் கேக்கத்தான் போறே
'இத பாரம்மா! அத்தாப்பு வீடு கட்டி அதுல ரெண்டு ஜன்
வெச்சு எட்டிப் எட்டிப் பார்த்தாலும் என் புருஷன் எ
புருஷன்தான்!"

"புருஷனா?"

"அவரு எனக்குத்தானு பஞ்சாயத்திலே தீர்மானமா
விசயமில்லே! அவரை என் புருசனாத்தான் நினைச்சுக்கி
டிருக்கேன். அவருதான் உறவைக் குறைக்கிறாரு. எல்லா
இந்த சாணியுருண்டை செய்யற சிங்காரம். கேட்டுறத்தா



போறேன்" வெள்ளி சம்பிரமாகத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டாள். உடல் நடுங்கியது. கண்களில் தயாராகக் கண்ணீர் வைத்திருந்தாள். தன் சங்கிலியை அடிக்கடி கடித்துக் கொண்டாள். அடிபட்ட புலியின் தன்மை தெரிந்தது. தன் புண்களை நக்கிக் கொண்டிருந்தாள்.

"இத பார் வெள்ளி! அந்தம்மா கொஞ்சம் வெகுளி. பட்டணத்துப் படிச்ச பொண்ணுங்க எல்லாம் இப்படித் தான் எல்லார் கிட்டேயும் சகஜமா பேசிப் பழகுவாங்க. இதை நீ தப்பா எடுத்துக்கக் கூடாது.

"தொட்டுத் தொட்டுப் பேசறதும் சினிமாக் கொட்டாய்க்கு அளைச்சுட்டுப் போறதும்... ராத்திரி வராரு உடம்பெல்லாம் செண்ட்டு மணக்குது. வாடி! எங்கே போயிருவே? ஊட்டுக்கு வந்துதான ஆவணும்!"

தயக்கத்துடன் சொன்னான். "அப்படிப் பார்த்தா நான்கூட உன்கிட்ட அன்னிக்கு அசட்டுத்தனமா நடந்துண்டேன்"

"அப்ப நான் என்ன செஞ்சன்? பட்டுனு ஒரு சொல்லில விலக்கிப்பிட்டன் இல்லிங்களா? எதுக்காக? இந்த ஆளுமேல இருக்கிற விசுவாசத்தாலதானே? அதே விசுவாசம் உனக்கு வேணாம்? அவதான் உம்மேல வந்து விளுதான்னா உம் புத்தி எங்கய்யா போச்சு? காத்த விரியன் மாதிரி ஏ...ன்னு சிரிச்சிக்கிட்டே ஓடுறியே! வரட்டும் தீர்த்து வெச்சுறலாம்" இப்போது ஏறக்குறைய தனக்குள்ளேயே பேசிக்கொண்டாள். "எனக்கும் எங்கப்பாரு எவ்வளவோ எடம் பார்ப்பாரு. பத்து விரலிலயும் மோதிரம் போட்டு மீசை வெச்சு வில்லு வண்டிக் காரங்க ஆம்பிளைங்க எவ்வளவு பேர் என்னைக் கேக்குறாங்க. தூக்கி எறியறதுக்கு எத்தனை நேரம்?"

"தூக்கி எறிஞ்சுடேன்!"

"பாவி மனசு கேக்கலியே! எத்தனை நா உறவு!"

கல்யாணராமன் பயப்பட்டான். அவர்கள் வந்ததும் வெள்ளி அனல் கக்கப் பேசுகிறாள். இந்த எளிய பெண்ணின் உணர்ச்சிகள் மிக ஆதர்சமானவை. சங்க காலத்தவை. காதல் பொறாமை. கைப்பொம்மை கவரப்பட்ட சின்னக் குழந்தையின் ஆத்திரம். மாலை மாலையாகக் கண்ணீர். மூக்கைச் சிந்தினாள். சைக்கிள் மணி கேட்டுக் கல்யாணராமன் துணுக்குற்றான். நல்ல வேளை பின்னால் உட்கார்ந்திருந்தாள் சிநேகலதா. "ஓவ் ஓவ்!" என்று குதிரை வண்டிக்காரன் போல அவள் சொல்ல, பேக் பெடல் செய்து வேகத்தைக் குறைத்து வெள்ளிக்கு அருகே வந்து நிறுத்தினான் மருதமுத்து. காலர் வைத்த சட்டை அணிந்திருந்தான். பாண்ட் போட்டுக் கொண்டிருந்தான். சுருள் முடியைச் சீவியிருந்தான்.

"ஹாய் வெள்...ளி...ஸ்வீட் கர்ள்!" என்றான். வெள்ளி இடுப்புப் புடவையைச் சுற்றி இறுக்கி முடிந்து கொண்டு, "இறங்குய்யா!" என்று அதட்டினாள்.

"என்ன வெள்ளி?" என்றான் சிரிப்புடன்.

"ஷி இஸ் வெரி மச் அப்ஸெட்."

"அம்மா, நீங்க பெரிய எடத்துப் பொண்ணு; இந்தாளை இப்படி ஊர் பூரா இளுத்துக்கிட்டு அலையறீங்களே... இது நல்லா இருக்கா?"

ஸ்விட்ச் போட்டாற்போல் அந்த இடத்துச் சூழ்நிலை மாறியது. "வெள்ளி, த பாரு! யார்கிட்ட எப்படிப் பேசற புள்ள?"

"சும்மாருய்யா!"

"இவனை இழுத்துக்கிட்டு நான் அலையறேனா?"

"ஆமாம்! இந்தாளை நான் கல்யாணம் கட்டிக்கப் போறேன்!"

"கட்டிக்க! கங்கராஜுலேஷன்!"

"வெள்ளி!" –அதட்டல்.



"இவரோட நீங்க இப்படி அலையறது நல்லால்ல!"

"நான் இவரோட சுத்தறேனா! இது எந்த ஊர் நியாயம்?"

"தொட்டுப் பேசறதும் இளிக்கிறதும் தோப்பாண்டை ஒதுங்கறதும் எந்த ஊர் நியாயமுன்னு நான் கேக்கறேன்!"

"லே! வெள்ளி! கிறுக்கு, மூதேவி, போட்டன்னா தெரியுமா?" மருதமுத்து அவளை அடிக்க கை ஓங்கினான்.

"அடிப்பியாய்யா? கை நீட்டி அடிப்பியா? துண்டு துண்டா வெட்டிப்புடுவேன் கையை!"

"மருதமுத்து, என்ன இது?" என்றான் கல்யாணராமன்.

"நீங்க இதில நுழையாதிங்க? சும்மாருங்க. ஏய் அறிவு கெட்ட முண்டம்! அந்தம்மா யாரு தெரியுமா?"

சிநேகலதா, "இரு மருதமுத்து! வெள்ளி, குதிக்காதே! உன் ஆளுதான் என் பின்னாலே அலையறான். நான் ஒண்ணும் அவனை வருத்தி அழைக்கலை. அண்டர்ஸ்டேண்ட்? உனக்கு சாமர்த்தியமிருந்தா அவனை அடக்கிவை. எங்கிட்ட வந்து சத்தம் போடாதே! நான் யாரு தெரியுமாடி, கண்ட்ரி புரூட்! என் கால் தூசிக்கு சமான மில்லை நீ!"

"நீ யாராயிருந்தா எனக்கென்னடி சிறுக்கி, ஓடுகாலி, சாணியுருண்டை!" வெள்ளி அழுதுகொண்டே அவளுக்குத் தெரிந்த திட்டு வார்த்தைகளை அடுக்கினாள். "சாக்கடை!"

"மருதமுத்து, இதையெல்லாம் நான் கேட்டுக்கிட்டிருக்கணுமா?"

"கூறு கெட்ட ஆம்பளைப் பாப்பாத்தி!"

"என்ன சொன்னே யூ ப்ளடி பிட்ச்!" சிநேகலதா கீழேயிருந்த கல்லை எடுத்து அவள் மேல் எறிந்தாள். நெற்றியில் பட்டது.

மருதமுத்து, வெள்ளியைத் தரதரவென்று இழுத்து "இப்ப வீட்டாண்டை போறியா, பல்லெல்லாம் எகிறிப் போய்டும்" என்று வெளியே தள்ளினான்.

கீழே விழுந்த வெள்ளி நெற்றியைப் பிடித்துக் கொண்டு சாபமிட்டாள், "நீ உருப்படுவியா? இந்தப் பழி உன்னை சும்மா விட்டுருமா? மாரிமாயி வாரிக்கிட்டுப் போமாட்டாளா? சாலாச்சி சபிக்கமாட்டாளா; உன் உடம்பெல்லாம் கோணூசி குத்திக் குத்தி ரத்தம் வராதா? உன் வீடு பத்தி எரியாதா...?

எழுந்தாள். "இந்தய்யா! உன்னைய நடுத்தெருவில் நிக்க வெச்சு புளிய மிளாறில வீறச் சொல்றேன் எங்கப் பா... தொட்டு அடிச்ச இல்லை?"

"சரிதான் போடி! உங்கப்பன் ஓதை!"

வெள்ளி புலம்பிக் கொண்டே சென்றாள். ஏழெட்டு பேர் கூடிவிட்டார்கள்: "என்னங்க தகராறு?"

"போய்யா போய்யா! வேலையைப் பார்த்துக்கிட்டுப் போங்க!" என்று விரட்டினான்.

மருதமுத்து மத்தியில் நின்றான். சினேகலதாவைப் பார்த்து அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

"சிரிக்காதே! நல்லால்லே! இந்த மாதிரி வார்த்தைகளை எல்லாம் நான் கேட்டதே இல்லை! வீட்டுக்குப் போய்யா! இனிமே வராதே!"

"சினேகம்மா, சினேகம்மா! அது ஏதோ அறியாத பொண்ணு! நீங்க படிச்சவங்க! மன்னிச்சுடுங்க. கால்ல வேணா விழறேன்!"

"அவளை வந்து கால்ல விழச் சொல்லு! அப்புறம் என்னோட பேசு!"

கல்யாணராமன் மௌனமாக நின்று கொண்டிருந்தான்.



## 10

மருதமுத்து செய்வதறியாது பாதிவழியில் நின்றான். சிநேகலதா, "இந்தப் பொண்ணு என்ன பேச்சுப் பேசினா பார்த்தீங்களா கல்யாணராமன்?" என்றாள். அவள் குரல் நடுங்கியது. "நீங்களே சொல்லிக் கொடுத்திருப்பீங்க."

"சரிதான்! மிச்ச சண்டையை என்னோட போடணுமா?"

மருதமுத்து, "அம்மா, அது என்னவோ உளறிச்சுங்க. நீங்க கண்டுக்காதீங்க..." என்றான்.

"அடப் போய்யா? எல்லாம் உன்னாலதான்!"

"அப்ப அதை உங்க காலில் வந்து உளச் சொல்லணும்; அவ்வளவுதானே?"

"அவ எக்கேடு கெட்டுப் போனா எனக்கென்ன? செருப்பால அடிச்சிருப்பேன். டீஸன்ஸி இல்லாத பொண்ணு!"

"என் மனசு கிடந்து அல்லாடுதும்மா! உங்களைப் போய் இப்படி அவ பேசும்படியா ஆய்டுச்சேன்னு கிடந்து பதைக்குது. செவிட்டில ஒண்ணு விட்டிருப்பேன்! பொம்புளை பாருங்க... அதனால தயங்கிட்டேன்!"

"போய்யா... என்னோட பேசாதே! இனிமே இங்க வராதே! நான் ஏதோ ஒரு வாரத்துக்கு வந்தவ... கொஞ்சம் ஒரு ஆசாமியோட சகஜமாகப் பேசினா, 'இப்படியெல்லாம் விபரீதமா அர்த்தம் பண்ணிக்கிட்டு... சக்களத்தி கிக்களத்தின்னு சாக்கடை பாஷையெல்லாம் பேசி... சேச்சே!"

"அம்மா! நீங்க ஒரு வார்த்தை சொல்லுங்க... இந்தப் பொண்ணு சகவாசத்தை நிறுத்திப் போடறேன்!"

"நீ எதுக்காக நிறுத்தணும்? நல்லா தாராளமா கல்யாணம் பண்ணிக்கிட்டு எட்டுக் குழந்தை பெத்துத் தள்ளு. ஐ டோண்ட் கேர்! இனிமே இங்க வராதே!"

"அம்மா! என்னை வராதேன்னு சொல்லாதீங்கம்மா! எனக்கு உங்களைப் பார்க்காம இருக்க முடியாதம்மா! யாரு வேணா என்ன வேணா பேசிக்கிடட்டும்- மருதமுத்துவுக்கு கவலை இல்லைம்மா! நீங்க எப்பேர்ப்பட்ட குடும்பம்! உங்க கால் தூசி ஆவாளா அவ...!" -மருதமுத்து உணர்ச்சி வசப்பட்டு, கண்களில் நீர் திரையிட உட்கார்ந்தான்.

"சினேகம்மா! என் மேலே கோவமில்லேன்னு சொன்னாத்தான் இந்த இடத்தை விட்டு நான் போவேன்!"

சினேகலதா உள்ளூற இந்த விவகாரத்தை ரசிக்கிறாளோ வெள்ளியின் மேல் ஒரு விதமாகப் பழி வாங்குகிறாளோ என்று தோன்றியது.

"சரி, கோவமில்லே. போயிட்டு வா!"

"இங்கிலீஷ் கத்துக்க வரலாமுங்களா?"

"ம்!"

"டிராக்டரு ஓட்டக் கத்துக்கனும்னீங்களே!"

"வா!"

"ராத்திரி படுத்துக்க?"

"வா!"

அவன் சந்தோஷத்துடன் சைக்கிளில் பாய்ந்து சென்றான்.

"சரியான லூஸ்!"

"லூஸ் இல்லை. ஹி லவ்ஸ் யூ!"

"அண்ட் ஐ லவ் யூ! கைல என்ன நோட்டு? நாட்டுப் பாடலா?"



"இல்லை. ஒரு சுவாரஸ்யமான விஷயம்! உங்க குடும்பத்தைப் பத்தி... ரத்னாவதியின் கதை! டயரி மாதிரி எழுதியிருக்காங்க, ரிமார்க்கபிள்!"

சினேகலதா மிகுந்த ஆர்வத்துடன் அவன் மேல் ஏறக்குறைய பாய்ந்து அதை 'லபக்' கென்று பறித்துக் கொள்ள முற்பட, அவன் சட்டென்று அதைப் பின்னுக்கிழுக்க, "குடுங்க குடுங்க" என்று மூர்க்கத்தனமாகவே பிடுங்கினாள். அவள் நகம் அவன் கையில் கீறிவிட்டது.

"ரத்னாவதி உயிரோட தென்படறா இதில. அவ தற்கொலை பண்ணிண்டு செத்துப் போயிட்டான்னு பெரியாத்தான்னு ஒரு கிழவி என்கிட்ட சொன்னா! அதன் பின்னணி தெளிவாகத் தெரியுது. நான் இன்னும் முழுக்கப் படிக்கலை!"

அவள் அவன் சொன்னதைக் கவனிக்காமல், அந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்துப் படித்துக் கொண்டே தன் அறைக்குப் புறப்பட்டாள்.

"நீங்க படிச்சுட்டு உடனே எனக்குத் தர்றீங்களா?"

நின்றாள். சற்று யோசித்தாள்.

"குடும்ப விஷயம். இருந்தாலும் தரேன்! ஆன் ஒன் கண்டிஷன்."

"கண்டிஷன் என்னன்னு எனக்குத் தெரியும். மாட்டேன்."

"ஏன் இவ்வளவு உணர்ச்சியற்று இருக்கீங்க...? இல்லை, உங்களுக்கு உணர்ச்சி உண்டு. ஸ்பெஷலா ஒரு ஆசாமி மேல. கிராமத்துச் சரக்கு- ஃப்ரெஷ்ஷா இருக்குன்னு எதிர்பார்க்கறீங்க இல்லே! அந்த மருதமுத்து அவளை வயல் வரப்பெல்லாம் புரட்டி எடுத்திருப்பான், அய்யரே!"

"சில வேளையில ரொம்ப அசிங்கமாப் பேசறீங்க!"

"நீங்க என்னா ஒஸ்தி ஜாதி?... இந்த அடி மட்டத்து பொண்ணுக்கு உருமறிங்களே!"

CONNEMARA PUBLIC LIBRARY

"இப்ப அத்து மீறிப் பேசறீங்க!"

அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்: "இந்தக் கிராமத்தில என்னைப் பார்த்தவங்க சிலபேர் அசடு வழியறாங்க. மருதமுத்து என் கடைக்கண் பார்வைக்குக் காத்துக்கிட்டு இருக்கான். பஞ்சாயத்துக்கார தங்கராசு இருக்கானே- அவன் சீமை மாடு பார்க்க வாங்கன்னு கூப்ட்டுக் கிட்டே இருந்தான். போனேன். தொழுவத்தில் கையைத் தொட்டான், உடம்பெல்லாம் பல்லா சிரிச்சான். 'தங்க ராசு ! உனக்குக் கல்யாணம் ஆய்டுச்சு இல்ல! ஏறக்குறைய என் வயசில உனக்கொரு பொண்ணு இருக்கில்ல? நான் இன்னிக்கு மாட்டுத் தொழுவத்தில நடந்ததை உன் பெண் சாதிக்கிட்ட சொல்லப் போறேன். எங்கே அவன்'னேன். 'டவுனுக்குப் போயிருக்கா'ன்னான். 'டவுனிலேருந்து வந்ததும் சொல்றேன்'னேன். அவன் மூஞ்சி பேயறைஞ்சாப்பல ஆய்டுத்து. மாமனார்கிட்ட நிறைய கடன் வாங்கி இருக்கானாம். இந்தக் கிராமத்தில பற்பல ஆண் பிள்ளைகளும் ஏறக்குறைய என் கைல பொம்மை மாதிரி ஆயிட்டாங்க. ஒருத்தர் தான் பாக்கி."

"என்னை மட்டும் விட்டுடுங்க."

"அவ்வளவு சுலபத்தில் விட்டுடறதா!" என்று அறைக்குள் சென்றாள்.

வசீகரமான பெண்தான். வெள்ளி அவ்வளவு தூரம் திட்டினதற்கு சினேகலதாவின் எதிர்க்கோபம் போதவில்லை என்று தோன்றியது. எப்போதும் சுலபமாக சிரிக்கும் பெண். பட்டணத்துப் பாலிஷ். எல்லாமே விளையாட்டு இவளுக்கு. டிராக்டர் கற்றுக் கொள்வது, கல்யாணராமனைக் காதலிப்பது எல்லாமே ஒரு முறை முயன்று பார்க்க வேண்டிய சமாசாரங்கள்.



தன் அறைக்குச் சென்றான். பசித்தது. காய்ந்த ரொட்டித் துண்டுகள்தான் கிடைத்தன. சமைக்கத் திராணியில்லை. யோசித்தான்.

"கல்யாணராமன்! கொஞ்சம் வர்றீங்களா?"

அங்கே சற்று தயக்கத்துடன் சென்றான். 'புதிதாக என்ன ஆரம்பிக்கப் போகிறாள்?'

ரத்னாவதியின் புத்தகத்தை மடியில் பிரித்து வைத்திருந்தாள். அவனைப் பார்த்ததும் அதைக் கவனமாக இரண்டு கைகளாலும் உயர்த்தி, "இதைப் பாருங்க" என்றாள்.

நோட்டுப் புத்தகத்தின் அந்தப் பக்கத்தின் மத்தியில் செத்துப் போன பூ ஒன்று இருந்தது. 'நீண்ட இதழ்கள்' வருஷங்களாக அந்தப் புத்தகத்தில் சிறைப்பட்டுக் கிடந்ததில் கரு ரத்த நிறத்தில் அப்படியே சப்பையாக ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் கறை பக்கங்களின் இரு புறத்திலும் பட்டிருந்தது.

"இது என்ன பூ சொல்ல முடியுமா உங்களால்?"

கல்யாணராமன் கவனித்து, "செண்பகப்பூ" என்றான். 'அடையாளம் வெச்சிருக்கன்' -ரத்னாவதியின் வார்த்தைகளை அருகில் படிக்க முடிந்தது. அதற்குள் பட்டென்று மூடிவிட்டாள்.

"செண்பகப்பூவா அது?"

சாதாரணமா மஞ்சளா இருக்கும். அதிக நாள் இருந்ததில ஏறக்குறையக் கருப்பாயிடுத்து. வடிவத்தைப் பார்த்தா செண்பகப்பூ மாதிரிதான் தெரியுது."

"செண்பகப்பூ?" அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

"என்ன?"

"ஒண்ணுமில்லே!"

"முழுக்கப் படிச்சீங்களா?"

"கொஞ்சம் படிச்சேன். சுவாரஸ்யமா இருக்கு. ரத்னாவதி ரொம்ப ஸஃபர் பண்ணியிருக்காங்க. அந்த மனுசன் கிட்ட ஒருவிதமான ஸாடிஸம் தெரியுது."

"சூழ்நிலையைப் பாருங்க. இங்கிலீஷ் மோகம். ஃப்யூடலிஸம். அறியாத பெண்ணை சின்ன வயசில் கல்யாணம் கட்டிண்டு வந்து போலி நாகரிகத்தைப் பலவந்தமா புகட்டி அவளோட உணர்ச்சிகளையும் ஆசைகளையும் பத்திக் கவலைப்படாம, அவ முன்னாலேயே பெண்களோட கூத்தடிச்க, குடிச்சு, நடனமாடி...!

"எல்லாத்தையும் படிச்சுட்டீங்களா?"

"இன்னும் இல்லை."

"இந்தப் பூ வெச்சிருக்கிற பக்கம்?"

"அதுவரைக்கும் இன்னும் வரலை."

"என்ன எழுதியிருக்காங்க?"

"எனக்குப் புடிச்ச பூ இதுன்னு அடையாளம் வச்சிருக்காங்க! புஸ்தகத்துக்குள்ளே, ஹௌ பொயட்டிக்!"

"நீங்க படிச்சுட்டு எனக்குத் தரீங்களா?"

சற்றே தயக்கம். "தரேன்."

"அதுக்கு முன்னால் பிஸ்கட் தரீங்களா? பசிக்கிறது."

"தரேன்."

அந்தப் புஸ்தகத்தைத் தன் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினாள்!

மறுதினம் மாலை அந்த விநோதமான ஊர்க் கூட்டத்தில் மாட்டிக் கொண்டான் கல்யாணராமன். தோப்புப் பக்கம் காலார நடந்து சென்று கொண்டிருக்கும் போது தங்கராசுவும் இன்னும் சிலரும் அவனை நோக்கி அவசரமாக வந்தார்கள். "கொஞ்சம் அரசமரத்தண்டை வரீங்களா?"



"என்ன தங்கராசு?"

"மருதமுத்துப் பய வெள்ளியைக் கன்னம் கன்னமா அடிச்சுட்டானாமே! நீங்க பார்த்தீங்களா?"

"அடிச்சான்னு சொல்ல முடியாது தங்கராசு. அவளை வீட்டுக்குப் போன்னு..."

"தள்ளிவிட்டானாமில்ல?"

"ஏன்? எதுக்குக் கேக்கறீங்க?"

"வெள்ளியோட அப்பாரு பிராது கொடுத்திருக்காரு. ஊர்க் கூட்டத்தில் விசாரிக்கப் போறம்! நீங்களும் வாங்களேன்!"

"அட! நான் எதுக்கு?"

"வந்து சும்மா வேடிக்கை பாருங்களேன்! ஒண்ணுஞ் சொல்ல வேண்டாம்."

"நான் சாட்சி கீட்சி சொல்ல மாட்டேன்!"

"அட! பயப்படாம வாங்க!"

அரசமரத்தடியில் சோம்பேறித்தனமாக ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர். சிறுவர்கள் மரத்தில் ஏற முயன்று கொண்டிருக்க, "அது ஏதோ சொந்த வெவகாரம். களுதையை விட்டுத் தள்ள வேண்டியதுதானே!" என்று ஒரு ஆள் மையமாகப் பேசிக் கொண்டிருக்க, தங்கராசு வந்ததும் சற்று ஒதுங்கிக் கொண்டார்கள். பெரும்பாலும் சட்டையில்லாதவர்கள் உட்கார்ந்தனர்.

"மருதமுத்துவை எங்க காணும்?"

"கூட்டியார ஆள் போயிருக்கு!"

"சமீன் பேத்திக்குக் கெச்சை வாங்கியாரப் போயிருப்பான்."

"லே சும்மாருலே! கேட்டு வெக்கப் போவுது."

"டெண்டுக் கொட்டாயில நாடோடி மன்னனுங்க. ஒரு ஆளு தெரைக்குப் பக்கத்தில் நின்னுக்கிட்டுப் பூப்போடுதான்.

பெரியவரு வர்றாரு. பேசாம ரத்து பண்ணிப்புட்டு வேற எடம் பார்த்துறது நல்லது!"

"அந்தப் பொண்ண இந்த ஊர்ல யாரும் கட்ட மாட்டான்."

வெள்ளியின் அப்பா இவராகத்தான் இருக்க வேண்டும். அவள் மூக்கு அவரிடம் இருந்தது. நெற்றியில் தழும்பு இருந்தது. வாட்ட சாட்டமாகப் பச்சை நரம்பும் தசைகளுமாக இருந்தார். பனியனில் வயிற்றுப் பக்கம் பை இருந்தது. அதில் மணிபர்ஸ் தெரிந்தது. முரட்டுச் செருப்பு சப்தமிட நடந்து வந்து ஓரத்தில் உட்கார, தற்காலிகமாக கூட்டத்தில் அமைதி ஏற்பட்டது.

"ஆரம்பிக்கலாமா...? இந்த வருசம் கொடைக்கு அவுங்கவுங்க அஞ்சு ரூபாயாவது தரணும்."

கூட்டத்தில் சலசலப்பு.

"இருங்க. இந்த வருசம் கொடையெடுக்கிறது யாரு?"

"மருதமுத்து!"

"அதை ரத்து பண்ணிப்புடணும்."

"அதெப்படிங்க...? தீர்மானமாய்டுச்சில்ல!"

"அவன் செஞ்சதுக்கு அவனை முதல்லே ஒதுக்கி வெச்சுறணும்!"

"வரேன் வரேன்! கொடை வேற; உங்க விவகாரம் வேற!"

"அண்ணே! மருதமுத்து வந்துரட்டுமே!"

"ஆள் போயிருக்கு."

வரதுக்குள்ள நம்ம காளியையும் அவம் பொஞ்சாதியையும் கூப்பிடலாம். அய்யாத்துரை! கொஞ்சம் முந்தி வந்து புத்தி சொல்லிப் போடுங்க!"

காளியும் அவன் மனைவியும் வந்து நிற்க, அய்யாத்துரை, "புருஷன் பொஞ்சாதின்னா எவ்வளவோ இருக்கும்.



நீங்க ரெண்டு பேரும் இப்படி அடிச்சுக்கறது நல்லால்ல!" என்றார்.

"இவதாங்க குடத்தால நெத்தில அடிச்சா!"

"அய்யா! இந்தாளு தண்ணியடிச்சுட்டு வந்து செய்யற அக்கிரமத்தை யாரு சொல்றதுங்க! ஏய்யா நீ பானைக்குள்ள பணத்தைத் திருடலை? புள்ளையைப் போட்டு அடிக்கலை?"

"இருங்க! இருங்க! சமாதானமாப் போவணும். இத பாரு புள்ள, கட்ன புருஷனை அடிக்கிறது நல்லதில்ல! இந்தா விபூதி. இட்டுங்க!"

"ஏய்! பொஞ்சாதிக்கு விபூதி கொடுறா!"

மருதமுத்து இரண்டு அடியாட்களுடன் கையைக் கட்டிக் கொண்டு நடந்து வந்தான். கூட்டம் அவனை எதிர்பார்த்தது.

"என்னய்யா எதுக்கு ஊர்க் கூட்டம்?"

"வெள்ளியை நீ தொட்டு அடிச்சியாமில்ல?"

"அடிச்சனா? எந்த... ரான் சொன்னான்?"

"என்ன பேச்சுப் பேசுதான் பார்த்திங்களா?"

"அந்தப் பொண்ணு சமீன் பேத்தியை என்ன பேச்சுப் பேசினா தெரியுங்களா? அய்யா நிக்கறாரு. அவரைக் கேளுங்க."

சட்டென்று எல்லோர் பார்வையும் தன்மேல் பட, கல்யாணராமன் திகைத்தான்.

"அய்யா, நீங்க என்ன சொல்றிங்க?"

மருதமுத்து, வெள்ளியின் அப்பா, எங்கோ ஒரு ஜன்னலுக்குள் வெள்ளி, ஊர் ஜனங்கள் எல்லோரும் அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். 'என்ன சொல்வது? நடந்ததைச் சொல். நீ பார்த்ததைச் சொல்.'

"வெள்ளி ஜமீன் வீட்டுக்கு வந்து ஜமீன் பேத்தியைத் திட்டினது நிஜம். அதில கோபம் வந்து மருதமுத்து அவளைப் பிடிச்சு இழுத்துக் கீழே தள்ளினதும் நிஜம்" என்றான்.

"கேட்டிங்களா என் பொண்ணைத் தொட்டு அடிச்சிருக்கான இல்லையா?"

"யோவ்... அடிக்கலய்யா!" என்றான் மருதமுத்து.

"ரெண்டு பொம்பளையாளுங்க வாக்கு வாதம் செஞ்சுக்கிட்டு இருக்கிறபோது இப்படிக் குறுக்க வந்து இழுத்துத் தரை போட்டுப் பொரட்டறது நியாயந்தானா?"

"மருதமுத்து! நீ ஏன் அவளைத் தொட்டு அடிச்ச?"

"சும்மார்றா... பயலுவளா!"

"என்ன நாக்கு நீளுது? ஊர்க்கூட்டத்தில் இந்த மாதி வார்த்தை வரலாமா?"

"சரிதான் போடா பொறுக்கி..." எட்செட்ரா, விளிக்க பட்டவன் மருதமுத்துவின் மேல்பாய, அவன் அவனை உதறித் தள்ள, அமைதி குலைந்தது.

தங்கராசு மருதமுத்துவைப் பிரித்துத் தனியே நிறுத்தினான்.

"மருதமுத்து! கேளு! நீ பொண்ணுக்குச் செஞ்சது நியாய மில்ல! அதுக்காக நீ மன்னிப்புக் கேட்டுக்கிடணும். மேலு குத்தத்துக்கு நீ பஞ்சாயத்துக்கு ஒரு ரூவா பைன் கட்டிரணும் என்னங்க நான் சொல்றது..."

பஞ்சாயத்து ஆமோதித்தது.

"இந்த வருஷம் அவன் கொடை எடுக்க விடக் கூடாது"

"ஆமா, ஆமா!" என்றன சில குரல்கள்.

"என்னது! கொடை நான் எடுக்கக் கூடாதா? இதபாரு தங்கராசு, நீ சினேகம்மாவுக்குச் செஞ்சதை இங்க சொல்லிப் போட்டா நாறிப் போயிடும்! அது வேற விசயம். பைனபு கிறீங்களா? கொடுக்க மாட்டேன், கொடுக்கமாட்டேன். அப்புறம் வேற எவனாவது கொடை எடுக்கறேன்னு வந்தா கையை கால வெட்டிப் போட்டுருவன்! சாக்கிரதை!" என்று துண்டை



உதறிக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு விருட்டென்று நடந்து சென்றான்.

"முரண்டு பண்றாப்பல! ஒதுக்கி வெச்சுற வேண்டியதுதான்!"

"நான் எடுக்கறன் கொடை! என்ன செய்யறான், பார்த் துடலாம்" என்றார் வெள்ளியின் அப்பா.

ஊர்க் கூட்டம் இப்போது முடிச்சு முடிச்சாகக் கூடிக் கலவரமாகப் பேசிக் கொண்டிருக்க, கல்யாணராமன் சற்றுத் திகைப்புடன் நடந்தான். மெள்ள மெள்ள ஒரு விரோதம் உருவாகிக் கொண்டிருக்கிறது. சினேகலதாவின் வரவு இந்த தூங்கும் கிராமத்தின் வானிலையை மெதுவாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

மெள்ள கோயிலை அடைந்தான். பிள்ளையாரைத் தாண்டி, பயாஸ்கோப்புக்காரனைக் கடந்து, உள்ளே நுழையும்போது அந்த சப்தம் அவனைத் தாக்கியது. அந்தக் காட்சி அவனை உறைய வைத்தது.

தலை மட்டும் வெட்டப்பட்டு ஒரு கோழி தன் மரணத்தின் கடைசிக் கணங்களில் மிச்சமிருந்த ரிஃப்ளெக்ஸ் ஆவேசங்களால் தாறுமாறாக எகிறி தரையில் சிதறி ஓடியது. அதன் கழுத்து வெட்டப்பட்ட இடத்தில் 'குபுக்குபுக்' என்று பொங்கியதில் தரையில் ரத்தக் கோலங்கள் அமைந்தன.

## 11

அந்தக் காட்சி அவனை அதிர வைத்தது. கிராமத்தின் வெளிப் பிம்பம் மேம்போக்கானது. அடித்தளத்தில் இருக்கும் பழைய நம்பிக்கைகள், மூர்க்கம், பயங்கள் எல்லாவற்றையும்

திடீர் என்று உணர்த்துவது போல இருந்தது, அந்தக் கோழியி மரணத்திற்கு முற்பட்ட ரத்த நடனம்.

அந்தப் பரிதாபப் பறவை அடங்கிப் போன பின் பூசா அதை அலட்சியமாக எடுத்துக் கொண்டு உள்ளே செல்கையி கல்யாணராமனைப் பார்த்து "என்னங்கய்யா?" என்றான்.

"எதுக்குய்யா பலி?"

"ஒண்ணுமில்லிங்க. வெள்ளி கொணாந்து கொடுத்து ஒ தடவ காவு வாங்கிடு பூசாரி. என் கஷ்டம் எல்லாம் தீரட்டும் சொல்லிப் போட்டுப் போச்சு."

"பாவம்யா. எத்தனை நாழி துடிச்சது!"

"வெள்ளிதானே? ஆமாங்க!"

"இல்லை, கோழி!"

"கோளி இந்நேரம் பரமபதம் போயிருக்குங்க." வெள் அவசரமாக வந்தாள். "என்ன பூசாரி ஆயிடுச்சா?"

"ஆயிடுச்சு வெள்ளி, இந்தா இட்டுக்க" அவள் நெற்றியி ரத்தம் இட்டான். "பேய்க் கோயிலுக்கு ஒருக்கா போய்ட் வந்துரு. குறளி ஏவி விட்டா கல்லு மாரி பொய்யும். அது அவசரமில்ல... அதுக்குள்ள நான் சொல்றதை..."

"அய்யா இருக்காக" என்றாள் பதட்டத்துடன் கல்யா ராமனைப் பார்த்து. "ஊர் கூட்டத்தில் நீங்க, இருந்திகல் என்னப் பேச்சுப் பேசுதாரு பாத்திங்களா! ஊர்க் கட்டு ரூவா கொடுக்கமாட்டாராம். எங்க ஊட்ல சன்னலன் சத்தம் போடுதாரு. கொடையெடுக்க யாராவது வந்தா கொலை நடக்குமாம். எங்கப்பாரைக் கொன்றுப் போடுவாரா பேசற பேச்சைப் பாருங்க. ஏ வெள்ளி! உன்னைய எவன் கட்டிப்பான்? சிக்குப் புடிச்சவளே! கருத்த பொண்ணே தொரை எலுமிச்சம் பளம்! கத்தறாரு! எனக்கு ஆந்து ஆந் போவுது. இவரு இந்த மாதிரிப் பேசவே மாட்டாருங் அந்த கவட்டைக் கால் சக்களத்தி சொல்லிக் கொடுத்திருக்கா



ம்மா உட்டுருவேனா? பார்த்துக்கிட்டே இருங்க! அவளைத் த்துக் கட்டிர்றனா இல்லியா, பாருங்க. ஈருவலிக் குச்சி; ல்ல பாம்பு குட்டி போல வந்து சேர்ந்தா."

பெரியாத்தா அவர்களுடன் சேர்ந்து கொண்டு கவனித்தாள். அது இன்னாடி அந்தப் பேச்சு பேசுதாமே. அவளக் கட்டிக்கப் போறானாமே!

"கட்டிக்க உட்டுருவனா!"

"நாலு மகிளம் பூவு

நாப்பத்தெட்டு ரோசாப் பூவு"

நானெடுத்துக் கொஞ்சும் பூவை- இப்ப எவளெடுத்துக் கொஞ்சுறாளோன்னு ஆயிடிச்சே! செட்டிக்கடை வெட்டி வேற மாதிரி இருக்கே சிவகாசிப் பன்னீரு மாதிரி இருக்கே நீ. மூதேவி அவகாசம் எப்படி வந்தது?"

"என்னவோ வேளை சரியில்லை, பெரியாத்தா. மேகலாபுரம் பாண்டியாபுரம் எல்லாம் பெண் கேக்க வந்தாங்க... என்னவோ இந்த மனுஷன் ஊரோட இருக்காரே, வெவசாயம் மராமத்து பாக்கிறாருன்னுட்டு எங்கப்பாரு ஊம்னுட்டாரு; சம்மதிச் சுட்டாரு. இப்ப அவன் வீட்டு வாசல மிதிக்காட்டாரு."

"வெள்ளி! நிஜமா சொல்லு. நீ மருதமுத்துவை வெறுக் கறியா; வேண்டாம்ங்கறியா?"

"நானா! நானா!"- வெள்ளி திகைத்தாள். கண்கள் தவித்தன. "சொல்லத் தெரியலியே அய்யா, சொல்லத் தெரியலியே!" என்றாள்.

"முதமுத அந்த நீலி வெச்ச சூனியம் வெலகட்டும். அய்யா வைப் பாக்கத்தான் வந்தனுங்க" என்றாள் பெரியாத்தா.

"சாரி! கொஞ்சம் அந்தால வாங்க!"

அவர்கள் இருவரும் ஒதுக்குப்புறமாகச் செல்ல, கல்யாண ராமன் திரும்பி தன் அறைக்குச் சென்றான். பெரியாத்தா கூட வந்தாள், பேசிக்கொண்டே.

"அந்தப் பொம்பளை சரியில்லீங்க! என்னதான் சமீன் வமுசமா இருந்தாலும்... பாவம் வெள்ளி, சொல்லிச் சொல்லி அளுவுது..."

"உனக்கு அரைகுறை காது. அரைகுறை ஞானம். பேசாம வா!"

"ஒரு ரூபா கொடுத்தீங்கன்னா ஆளாக்கு அரிசியும்..."

"வா! வா"

ஜமீன் வீட்டின் இடப்புற வெட்ட வெளியில் டிராக்டர் சிறுகுழந்தைபோல் குதித்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது. சினேகலதா ஓட்டிக் கொண்டிருக்க, மருதமுத்து ஸீட் அருகில் அபாயகரமாக நின்றுகொண்டு அவ்வப் போது ஸ்டியரிங்கை நேராக்கிக் கொண்டிருந்தான். சினேகலதாவின் சிரிப்பு அங்கே கேட்டது. கல்யாணராமனைப் பார்த்தும் நேராக அவன்மேல் ஓட்டுபவள்போல வந்தாள். அவன் ஒதுங்கிக் கொள்ள, சிரித்து நிறுத்தினாள்.

"ஹாய்! நீங்க ஓட்டிப் பாக்கறீங்களா?"

"வேண்டாம்."

"ஹாய் கிளவி! இதாரு புதுசா...? கர்ள் ஃப்ரெண்டா?"

ஒரு ராணிபோல் உட்கார்ந்திருந்தாள். மருதமுத்து குதித்து இறங்கினான். "நல்லா கத்துக்கிட்டாங்க!"

"பஞ்சாயத்தாமே என்னைப்பத்தி?" என்றாள்.

"உங்களைப் பத்தி இல்லை."

மருதமுத்து "அப்பன்காரன் என்ன பேச்சுப்பேசினான் பார்த்தீங்களா? வெள்ளி போயி ஒண்ணுக்குப் பத்து சொல்லி



...ட்டு. அனாவசியமா ஊர்க்கட்டம் கூடினாக. நேர வந்து என்னையக் கேட்டிருக்கலாமில்ல? ஊர்க் கூட்டம் என்னைய அவமானப்படுத்தத்தானே? பைனடிக்கிறீங்களா? நான் ...ட்டுவனா? என்ன பெரியாத்தா?" என்றான்.

"ஆமாம், வெட்டிப் பயலுவள்ளாம் ஊர்க்கூட்டம் போடு ...ங்க! சமீனு வம்சமும் சின்னக் குளந்தை! நீ ஏதோ இதுக்கு இங்கே அங்கே ஊரு சுத்திக் காட்டிப்புட்டாத் தப்பா என்ன? ...ப்படி இருக்குது பாரு... ரோசாப்பூ மாதிரி! என் ராசா...த்தி! என் செல்லமே! கண்ணுக் குட்டி!"

பெரியாத்தாவின் திடீர்க் கட்சி மாற்றம் கல்யாண ராமனைத் ...கைக்க வைத்தது.

"இருந்தாலும் மருதமுத்து, நீ ஒரு வழிக்குக் கட்டுப் ...ட்டுத்தான் ஆகணும்" என்றாள். "உன் மனசிலயோ சினேகலதா ...னசுலயோ களங்கம் எதுவும் இல்லாம இருக்கலாம். ஆனா வெள்ளி படிக்காத பொண்ணு. உன்னைக் கூட்டிக்கப் போறவ. ...வ பார்வையில் இருந்து..."

"அவளை இனி யாரு கட்டுதாங்க?"

"பின்னே?"

"நானும் கட்ட மாட்டேன். கட்டிக்க வர்றவங்களையும் ...லை ஒடிச்சுப் போட்டுருவன?"

"சபாஷ்" என்றாள் சினேகலதா.

"என்ன சபாஷ்! புரியாத பேசறிங்க!"

"அந்தப் பொண்ணு கன்னியாகவே கிழவியாயிடட்டும்!"

"டோன்ட் பி ரிடிக்யுலஸ்!"

"ஆ... மா! வெள்ளியை மருதமுத்துவோட இணைக்க ...க ஏன் இவ்வளவு பாடுபடறீங்க? இந்தப் பிறவில நீங்க ...தோஷம்னா படணும்?"

அவளை நிறுத்தி நிதானமாக முறைத்தான். "ஏன் அவனை இந்த மாதிரி உபயோகப்படுத்துகிறாய்?" என்றான் ஆங்கிலத்தில்.

"அவன்தான் என்கிட்ட வரான்! என்ன எழவா இருக்கு! டிராக்டர் கத்துண்டா தப்பா என்ன?" என்றாள் தமிழில்.

"கிராம ஜனங்கள் சின்ன விஷயங்களுக்கெல்லாம் வெட்டு குத்துன்னு ஆரம்பிச்சுடுவா!"

"அப்படியா? மருதமுத்து பாடிகார்ட் இருக்கான்; என்ன என்ன கவலை! என்ன மருதமுத்து?"

"நான் இருக்கிற வரைக்கும் உங்களை யாரும் அசைக்க முடியாதும்மா! நானும் நீங்களும் ஒரு கச்சி. இந்த ஊரே எதிர்க்கட்சியா இருந்தால்கூட சமாளிப்பேன். டிராக்டரை வெச்சுக்கிட்டு ஓர்ரே ஓட்டு! என்ன பெரியாத்தா?"

"அதானே! பேரிச்சம்பளம் மாதிரி இருக்குது. பெரிய எடத்து கிரீடம். இது கிட்ட விசுவாசமா ரெண்டெட்டம் காட்டி டாக்டருக்கு ஓட்டிக் காட்டினா தப்பா? ஊரு எல்லாந்தான் சொல்லும் மருதை! விசுவாசங் கெட்ட கழுதைங்க கிட்ட என்ன சவுகாசம்!"

"மருதமுத்து! நான் சொன்ன காரியம்" என்றாள் சினேகலதா.

"செஞ்சுறலாங்க!"

"என்ன காரியம்?" என்றான் கல்யாணராமன்.

"அது வந்துங்க..."

"ம்! மூச் அய்யாகிட்ட சொல்லக் கூடாது."

"ஐ டோண்ட் கேர்!"

"மருதமுத்துவும் நானும் ஒரு தனி எடத்துக்குப் போகப் போறோம்... இல்லே மருதமுத்து?"

"ஆமாங்க..."

"போய்ப் பூப்பறிக்கப் போறோம்... செண்பகப்பூ!"



இருவரும் ஏதோ பகிர்ந்த ரகசியத்தில் சிரித்தார்கள்.

"ராசா... த்தி! அப்படியே ரத்னம்மா சிரிச்ச மாதிரி சிரிக்குது."

அந்த விவஸ்தை கெட்ட கிழவி பின் தொடர, அறைக்குச் சென்றான். பெரியாத்தா வாசலில் உட்கார்ந்த உடனேயே,

"திருச்செந்தூர் ஓரத்தில
விரிச்சதலைப் பாலத்தில
விரும்பிச் சொன்ன சத்தியங்கள்
வீணாகப் போனதய்யா."

என்று பாட ஆரம்பித்தாள். "பெரியாத்தா! இன்னிக்குப் பாட்டு வேண்டாம். இந்தா ஒரு ரூபா! ஆழாக்கு அரிசி, மல்லிக் காப்பி, குழந்தைக்கு அரை நாண்!"

"ராசா மவனே! இந்த வெவகாரத்தில நீங்க சொன்னதுதான் சத்தியவாக்கு. மருதமுத்து ஒரு வளிக்குக் கட்டுப் பட்டுத்தான் ஆவணும்! என்னதான் மனசில கல்மசமில்லாம இருந்தாக்கூட வெள்ளியைக் கட்டிக்கப் போறவன் தானே! இப்படித் தொட்டுத் தொட்டுப் பேசலாமா?"

பெரியாத்தா! நீ அரசியல்ல இருக்க வேண்டியவ!"

"அ! அரசிலயா! பறிச்சுக்கறங்க! முருங்க எல கூடக் கொஞ்சம் பறிச்சுக்கறங்க!"

தூரத்தில் டிராக்டர் சப்தமும், சினேகலதாவின் உற்சாகக் குரலும் கேட்டுக் கொண்டிருக்க, அவன் அறையில் எட்டிப் பார்த்தான். ஜன்னலோரம் ஸ்டூல் போட்டு அதன் மேல் ரத்னாவதியின் நோட்டுப் புத்தகம் இருந்தது, கையை நீட்டிப் பார்த்தான். எட்டும் போலிருந்தது. குற்ற உணர்வுடன் அதை எடுத்தான். தன் அறைக்கு வந்தான். கட்டிலில் உட்கார்ந்து முந்திய தினம் விட்ட இடத்தில் தொடர்ந்து படித்தான்.

"எனக்காகக் கண்ணில தண்ணிவிட யாருமில்லே. பிள்ளைகளுக்கு விவரம் தெரியாத வயசு. வீடுதான் பெரிசு.

வாரிசா வந்த சொத்தையெல்லாம் அளிச்சுப் போட்
வெள்ளைக்காரங்களுக்கு வாங்கிக் கொடுத்துக் கொடு
ஏதோ ஒரு பட்டப் பேருக்காக அல்லாடி, ஜில்லா போர்
எலெக்ஷனுக்காக ஏரோப்ளேன் வெச்சு சீட்டுப் போட்
ஓட்டுப் போட்டவுங்களுக்கெல்லாம் ஒரு பவுனும் ஒ
பட்டுச்சீலையும் கொடுத்து, தோத்துப் போயி, சொத்தெல்லா
காத்தாப் போயி, கரஞ்சு போயி, நிம்மதி வந்து, கூட
அமீனாவும் கடங்காரங்களும் வர, இப்ப என் நகைகளை
கேக்குறாரு!"

"எங்க பாட்டிக்குப் பாட்டி பரம்பரையாகக் கொடு
நகைகள். அழிச்சுப் புதுப்பிச்சு மெருகேத்தி நேத்து நிற
கொஞ்சம் கொஞ்சமாகப் பண்ணிக் கொடுத்த ரெத்தினங்க
அதைக் கழட்டிக் கொடுக்க எனக்கேது அதிகாரம்? 'கடன்கா
வாசல்ல நிக்குதான், பதில் சொல்லிப் போடணும். நகைகளை
கொடு. மீட்டுக் கொடுத்திடறேன்'னாரு. யானைப் பசி
சோளப்பொறி! நான் மாட்டன்னுட்டன். வீட்டை வித்து
நிலத்தை வித்துக்க, என் நகைகளைப்புடுங்க விடமாட்ட
எங்கிருந்தோ தகிரியம் வந்துடுச்சு. பாளாப் போன நகைக
மேலதானா ஆசை? என்மேல ஆசையில்லையா? ரத்னா
நகைகளை மாட்டியிருக்கிற சட்டமா? அம்புட்டுத்தான
எனக்குன்னு ஆசை யில்லையா? எனக்குன்னு ஒரு செல்வாக்
சுகம்? சாட்டை எடுக்குறாரு, அடிங்கன்னுட்டன் இந்
தடவை. முதுகில துணியை உரிச்சாரு. விறினாரு. கு
போடறாப்பல வலி. மூலத்தைப் பிடிக்குது. அடி விளுவற
அவ்வளவு தெரியறதில்லை. முதுகில படிஞ்சு அ
விலகறப்போ சிரிச்சன். 'கொன்னே போடுறன்'னு போய்ட்டா
நான் இங்க வந்து சேர்ந்த முத நாளில இருந்து நீ என்ன
ஏறிட்டுப் பார்த்து செல்லமேன்னு ஒரு வார்த்தை சொ
யிருக்கியாய்யா? நகைகளைக் கேக்க என்ன உரி
இருக்குனக்கு? (இந்த இடத்தில் கண்ணீர் விட்டு இரண்



ர்த்தைகள் அழிந்திருந்தன) விசாலாட்சி முத்தம்மா! நாளும்
ங்களைக் கும்பிட்டு என்னடி எனக்குப் பலன்? முதுகிலே
ட்டையடி! குனிஞ்சுக்கங்கறாரு குனிஞ்சுக்கறேன்! இனிக்
னிய மாட்டேன். தீர்மானம் பண்ணிப்புட்டேன்! என்
கைங்களை யாருக்கும் தரமாட்டேன். கயவாளி மக்கள்
ருத்தருக்கும் அது நிச்சயம் போகக்கூடாது. என் புருஷனுக்கு
து போகக்கூடாது. அதுக்கு ஒரு வழி செஞ்சிருக்கேன்.
ல்லா நகைகளையும்..."

'சேர்த்து' என்று படிப்பதற்குள் நோட்டுப் புத்தகம் அவன்
ன் முன்னேயிருந்து பறிக்கப்பட்டது. திடுக்கிட்டுத்
திரும்பினான்.

"நான் இல்லாதபோது என் பாட்டி டயரியைத் திருட்டுத்
னமா எடுத்து படிக்கிறீங்களா? உங்ளையும் பஞ்சாயத்தில
விசாரிக்கணும்!" என்றாள் சினேகலதா.

"நான்தானே கண்டுபிடிச்சேன்!"

"கண்டுபிடிச்சா படிக்க உரிமை ஏற்பட்டுடறதா! எது
வரைக்கும் வந்திருக்கிங்க?"

"நகைகளை ஜமீன்தார் கட்டாயப்படுத்திக் கேக்கறார்!"

"அதுவரைக்கும் தானா? நல்லவேளை!"

"ஏன்?"

"நான் முழுக்கப் படிச்சுட்டேன்!"

"கடைசில என்ன ஆறது?"

"அப்புறம் தர்றேன். படிச்சுப் பாருங்க!"

"நீங்க இனிமே தர மாட்டிங்க."

"ஏன்?"

"நீங்க எதையோ மறைக்க விரும்பறீங்க!"

"வாட் டு யூ மீன்?"

அவள் சதா உபயோகிக்கும் புன்னகை இப்போது இல்லை.

"சினேகலதா! நீங்க வந்ததில இருந்து நான் உங்களை வாட்ச் பண்ணிக்கிட்டு வரேன். வெளிப்படையா நீங்க வெகுளி யாத் தென்பட்டாலும், உங்க ஒவ்வொரு அசைவிலயும் ஏதோ ஒரு தீர்மானம்- ஒரு திட்டம் இருக்கறதா எனக்குப்படறது. இந்த டயரியை நான் படிக்கறதை நீங்க விரும்பலை. அது சுலபமா எனக்குத் தெரியுது. அதே போல மருதமுத்துவோட நீங்க விளையாடற விளையாட்டிலும் ஏதோ ஒரு குறிக்கோள் இருக்கிறதா எனக்குத் தென்படுது. அஃப்கோர்ஸ் ஐ கேன் பி ராங்."

சினேகலதா சற்று யோசித்தாள்.

"மிஸ்டர் கல்யாணராமன்! நான் அந்த டயரியை மறைக்க விரும்பறதுக்குக் காரணம் சொல்லட்டுமா?"

"இஷ்டமிருந்தா சொல்லுங்க..."

"ரத்னாவதி தற்கொலை பண்ணிக்கிட்டு சாகலை! அவளை ஜமீந்தாரே கொன்னிருக்கணும்!"

"இஸ் இட்! எப்படிச் சொல்றீங்க?"

"டயரியைப் படிச்சா தெரியுது. நகைகளுக்காக அவளைத் தினம் அந்தக் கிராதகன் அடிச்சு அடிச்சுப் புடுங்கப் பார்த்திருக்கார்! ஒருநாள் ராத்திரி ஓவராப் போயி..."

தயங்கினாள். எங்க அழகான முன்னோர்களுடைய சீர்கேட்டை நீங்க படிக்க வேண்டாம்னுட்டுத்தான் உங்களுக்கு டயரியைக் காட்ட விரும்பலை!"

"புரியறது" என்றான்.

"மிஸ்டர் கல்யாணராமன்! என்கிட்ட வேற ஒரு ரகசியமும் கிடையாது. அனாவசியமா கற்பனை பண்ணிக்காதீங்க! நான் ஒரு திறந்த புத்தகம்."



அவள் அவனை நேராகப் பெரிய கண்களால் பார்த்து, "படிக்கிறீங்களா?" என்றாள்.

"டயரியை வேணாப் படிக்கிறேன்."

"பாத்தீங்களா! பழையபடி ஆரம்பிச்சுட்டீங்க! கமான் கல்யாணராமன்!"

"ஸாரி, சினேகலதா! நீங்க அழகான பெண்தான். வசீகரமான பெண்தான். இருந்தாலும் இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிறது எனக்கு சரியாப் படலை. லெட்ஸ் பி ஃப்ரெண்ட்ஸ்."

"சரியான லூஸ் அய்யரே நீங்க!" என்று சொல்லிச் சென்றாள்.

கல்யாணராமன் சிரித்துக் கொண்டான். 'என்னிடம் ஏதோ கோளாறு நிச்சயம் இருக்கிறது. ஏன் இந்த சுலபமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள மாட்டேன் என்கிறேன்?'

சினேகலதாவைப் பற்றிய சந்தேகங்கள் முழுவதும் விலகி விட்டனவா என்று தீர்மானமாகச் சொல்ல முடியவில்லை. எங்கோ ஓர் இடத்தில் அவள் மழுப்புவது தெரிகிறது. எங்கே?

"மருதமுத்துவும் நானும் ஒரு தனி இடத்திற்குப் போய் செண்பகப்பூ பறிக்கப் போறோம்."

செண்பகப்பூ!

நேற்று ரத்னாவதியின் புத்தகத்தில் இருந்த செண்பகப்பூவைக் காட்டி, 'இது என்ன?' அவள் கேட்டது ஞாபகம் வந்தது.

'செண்பகப்பூ!'

மருதமுத்து படுத்துக் கொள்ள வந்தான்.

"சினேகம்மா! நீங்க சொன்னீங்களே! கொண்டாந்திருக்கேன்!" என்று அவன் பேசியது கல்யாணராமனின் கவனத்தைக் கவர்ந்தது. என்ன கொண்டு வந்திருக்கிறான்?

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

மருதமுத்து அவளிடம் ஒரு நீண்ட தாம்புக் கயிற்றைக் காட்டிக் கொண்டிருந்தான்.

## 12

சினேகலதா மருதமுத்துவுடன் தாழ்ந்த குரலில் பேசுவதைக் கவனித்தான் கல்யாணராமன். கயிறு எதற்கு என்று புரியவில்லை. சொல்லி வைத்தாற்போல் இருவரும் தீர்மானமாக நடந்து எங்கோ செல்வதையும் கவனித்தான். தான் இதுநாள்வரை பார்த்த சம்பவங்களின் அடித்தடத்தில் மற்றும் ஏதோ ஒரு ரகசியம் பொதிந்திருப்பதை உணர்ந்தான். தூக்கமின்றி சற்று நேரம் விழித்திருந்தான். செண்பகப்பூ உறுத்தியது. வெட்டப்பட்ட கோழி ரத்தம் கொப்பளித்தது. எதையோ நினைத்து எதற்கோ வேதனைப்பட்டான். அவர்கள் இருவரும் எப்போது திரும்பி வந்தார்கள் என்பது தெரியாமல் தூங்கிப் போய்விட்டான்.

காலை தங்கராசு வந்திருந்தான். "இந்த வருசம் கொடை வெள்ளியோட அப்பாருதான் எடுக்கறதா முடிவு பண்ணிட்டாங்க..."

"மருதமுத்து கலாட்டா செய்யப் போறான்யா?"

"இல்லிங்க, விட்டுக் கொடுத்துட்டான். ஆனா ஊர்க்கட்டு ஒரு ரூபா கொடுக்க மாட்டான்னுட்டான். விலக்கி வெச்சிட்டம்."

"விட்டுக் கொடுத்துட்டானா...?" ஆச்சரியப்பட்டான்.



சினேகலதா வெளியே வந்தாள். "நான்தான் விட்டுக் கொடுத்துடச் சொல்லிட்டேன். அனாவசியமா என்னால எதுக்கு சண்டைன்னு மருதமுத்துக்கிட்ட பேசிட்டேன்."

"அம்மா சொல்லிட்டாப் போதும், மருதமுத்து அப்படியே அடங்கிடறான். நல்லதாப் போச்சுங்க. கலகம் வராம தடுத்துட்டிங்க."

"என்ன தங்கராசு? பெண்சாதி டவுன்ல இருந்து வந்தாச்சா?"

தங்கராசு குழைந்தான். "எப்பவும் விளையாட்டுப் புத்தி சின்னம்மாவுக்கு."

"உன் பெண்சாதியைப் பார்க்கணுமே! கூட்டி வாயேன்."

அசட்டுத்தனமாகச் சிரித்துப் பேச்சை மாற்றினான். "நான் வந்தது வேற விசயங்க. கொடை பத்து நா நடக்கும். வில்லுப் பாட்டு, கரகம், நையாண்டி மேளம், ஒயில் கும்மி எல்லாம் உண்டுங்க. சங்கனில் இருந்து சம்முகம் வரான். அய்யா சிறு பயலுவளை வெச்சிக்கிட்டுப் பாட்டுப் போட்டதா கேள்விப்பட்டேன். முத நா நீங்க வந்து அவுங்களை பாடிக்காட்ட வெக்கணுங்க. கிலெக்டர் துரை வர்றாரு. ரொம்ப சந்தோஷப் படுவாருங்க."

"பார்க்கலாம்."

"கல்யாணராமன் ஸிம்ஃபனி ஆர்க்கெஸ்ட்ராவா? ஜமாய்ங்க. அய்யா, நான் உண்டா? நல்லா டான்ஸ் பண்ணுவேன். டிங்கி, ஜெர்க், ஷேக்! நான் வரலாமா?"

"நீங்க இல்லாமயா?"

"ஷிய்க்னு விஸில் அடிக்கறேன. நல்லா கைதட்டுவேன். அய்யரே, கடாட்சம் இருக்கணும்" என்று சேவித்தாள். அபாரப் புன்னகை.

"நீங்க ஊருக்குப் போறதா ஒரு பக்கத்தில பேச்சு அடிபட்டதே!

"ஏன் இன்னும் இங்கேயே இருக்கேன்கறிங்களா? போறேன், போறேன். இன்னும் கொஞ்ச நாள்!"

"என்னிக்குக் கொடை ஆரம்பம்?" என்றான் கல்யாணராமன்.

வெள்ளிக்கிழமையன்று அம்மன் கோயில் வாசலில் இடப் பக்கம் பந்தல் கட்டியிருந்தது. மைதானத்தில் தகர ராட்டினம் சுற்றியது. நாகக் கன்னிகை பெண் தலையும் பாம்பு வாலுமாகச் சிரித்தாள். இரண்டு தலை ஆடு அருவருப்புத் தந்தது. சின்னக் குழந்தைகள் ஜவ்வு மிட்டாய்க் கடிகாரங்கள் அணிந்தார்கள். பயாஸ்கோப்பு பழனிச்சாமி எப்போதும் ஹவுஸ்ஃபுல்லாக இருந்தான். மூங்கில் மேல் ஒலிபெருக்கி, நேத்து வச்ச மீன் குழம்பின் பிரதாபம் பேசியது. சாக்கு நிழலில் பெரிய வாணலி களில் மணல் கலந்த பட்டாணிக் கடலைகள் உற்சாகமாகக் குதித்தன. சைக்கிள் டயர் வைத்த வண்டியில் நீள நீளமாக பஜ்ஜியும், மீனும் வறுவலும் எண்ணெயில் பொரிந்தன. பிளாஸ்டிக் மோதிரங்கள்! இருபத்தி சொச்ச ரூபாயில் புடவைகள்; கழகப் பாடல்கள்; கட்சி கீதங்கள்; முருகன் பாடல்கள்; தொடுகுறி சாஸ்திரம்; மதனகாமராஜன்; அறுபத்து நான்கு வித ஆட்டோன் படங்களுடன் கொக்கோக சாஸ்திரம், பம்பு செட்டுகள்.

மாலை, மேம்பட்டி ஜனங்கள் கோயிலைப் பார்த்து வாயிலில் உட்கார்ந்திருந்தார்கள். தொம்தம்த தொம்தம்த என்று உடுக்குச் சப்தம் கேட்டது. பூசாரி மீசையில் எண்ணெய் தடவியிருந்தான். அம்மன் நகைகள் அணிந்து புதுசணிந்து பூவணிந்து உற்சாகமாக நின்றாள்.

மூன்று புறமும் திறந்த திரையில்லாத மேடை. காற்றில் அலங்காரங்கள் ஆட ஆட- அனந்தாயி, அபிராமி, முத்து கருப்பாயி, பிச்சை, எசக்கி என்று சிறுவர் சிறுமியர் மிரள விழித்துக் கொண்டு காத்திருந்தார்கள். கல்யாணராமனின் ஆர்க்கெஸ்ட்ரா! பிச்சை ஜால்ரா, எசக்கி மண்ணெண்ணெய்



டின் டபுள் ஸ்பேஸ் கருப்பாயியும் முத்துவும் வோக்கல் ஸப்போர்ட். மற்றவர்கள் கோரஸ், கொட்டாங்குச்சி வயலின் கல்யாணராமன் பின்னணியில் கித்தாருடன் காத்திருந்தான். தங்கராசு மைக்கைப் பிடித்து (கீ...ச்) "அமைதி அமைதி" என்று சொல்ல, ஸ்டைல் அடித்துக் கொண்டு சினேகலதா வந்து சேர, அத்தனை ஜனங்களும் 'ஆ' என்று அவளையே கவனிக்க கல்யாணராமனிடம் வந்து "என்ன? எல்லாம் ரெடியா?" என்றாள்.

"ஐ ஃபீல் நெர்வஸ்" என்றான்.

தங்கராசு இறங்கி வந்தான்.

"மருதமுத்து எங்கே?"

"கலந்துக்க மாட்டானாம். கல்லு மேல் உக்காந்து நக்கலாகப் பாத்துக் கிட்டிருக்கான்!"

"கலாட்டா ஏதும் இல்லியே?"

"சொல்ல முடியாதுங்க. திடுதிப்புனு களுதைக்குட்டியைக் கூட்டத்துக்குள்ள உட்டாலும் உடுவாங்க! எதுக்கும் போலீஸ் வந்திருக்குது."

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. தங்கராசு, உம் பொஞ்சாதி அந்தக் கூட்டத்தில இருக்காளா?"

"சோலி நிறையக் கிடக்கு- வர்றனுங்க!"

சினேகலதா சிரித்தாள். ஓடறான் பாருங்க! தொழுவத்தில.

"சீமைமாடு- சொல்லிட்டிங்க!"

"நீங்கதான் எனக்கு சீமை மாடு காட்டமாட்டிங்க?"

"அமைதி, அமைதி! அதிகாரி வரும்வரை உள்ளூர் சொகுசன் டப் அடிப்பார்."

"தொந்தி வினாயகனே தோலுடுக்கும் சங்கரனே வாரும் வாரும்" கலெக்டர் வந்தார். புதிதாக 'போஸ்டிங்' ஆன ஐ.ஏ.எஸ்.

இளைஞன். க்ளோஸ் கோட்டு அணிந்து சுத்தத் தலை சீவி பளபளப்பான அதிகாரி. எல்லோரையும் சேவித்தார். சினேக லதாவிடம் சிரித்துப் பேசினார். தங்கராசு வீட்டுப் பிரம்பு நாற்காலியில் உட்கார- அருகே சினேகலதா உட்கார- இந்தப் பக்கம் ரொம்ப நாளைக்கப்புறம் சட்டை அணிந்து அய்யாத் துரையும் பஞ்சாயத்துக்காரர்களும் ஒதுங்கி உட்கார... "சபை யோர்களே!! இப்பொழுது பட்டணத்திலிருந்து நம்மிடம் வந்திருக்கும் கல்யாணராமய்யர் நம் கிராமத்துக் குழந்தை களைப் பாட வைப்பார்..."

கல்யாணராமனின் கணம் வந்து விட்டது. பிள்ளைகள் மேடையில் வந்து நிற்க- உடனே கூட்டத்தில்,

"ஏய் சாம்யா! ஏய் கருப்பாயி! முத்து" என்று ஆடி யன்ஸிலிருந்து அங்கொன்று இங்கொன்றுமாகக் குரல்கள் தத்தம் மேடை நண்பர்களைக் கூப்பிட, ஆர்க்கெஸ்ட்ராவின் கவனம் கலைந்து தத்தம் சட்டைகளையும் புதிய ரிப்பன் களையும் கடிக்க, கல்யாணராமன், "ஆரம்பி, ஆரம்பி" என்று சைகை செய்ய அபிராமி சின்ன குரலில் "சின்னச் சின்ன..." என்று துவங்கினாள். கல்யாணராமன் தன் கித்தாரில் கார்டுகளைத் துவங்க- அந்த மேற்கத்தியத் துடிப்பில் சட்டென்று அங்கே அமைதி ஏற்பட்டது.

"சின்னச் சின்னக் கையைத் தட்டி
(கையைத் தட்டினார்கள்)
கொஞ்சம் கொஞ்சம் கத்துக்கிட்டோம்
(எசக்கி; தொம் தொம் தொம்)
கொட்டாங்கச்சிக் கம்பி நீட்டி."

முத்து: கற்றுக்கொடுக்க இரண்டு சுரங்களில் மட்டும் ஞ்சி- ஞ்சி- ஞ்சீ- ஞ்சீ- என்று தேய்த்தான்- சிரிப்பு.

டப்பாக்களைத் தட்டிக் கொட்டி..."

(சாம்பன்:- தகர டகர தகர டகர...) இப்போது எல்லோரும் உற்சாகமாக சுருதி சேர்ந்து கொள்ள, சபையில் அந்தப் புதும



பாட்டின் வசீகரத்தில் பரபரப்பு ஏற்பட்டது. கருப்பாயி 'ஆ...' என்று இனிமையாக இளித்தாள். கல்யாணராமன் பூரித்தான். சினேகலதா கட்டை விரலை உயர்த்தி 'டாப்ஸ்' என்று காட்டினாள். வெள்ளி எங்கேயாவது இந்தக் கூட்டத்தில் இருப்பாள். நிச்சயம் இருப்பாள்.

கிராமமே கை தட்ட, பாட்டு முடிந்தது. சினேகலதா வந்து அவன் கையைக் குலுக்கினாள். வலித்தது. "ரிமார்க் கபிள் மிஸ்டர் கல்யாணராமன்! அந்தக் குழந்தைகளுக்கு ஆளுக்கொரு சட்டை வாங்கிக் கொடுக்கறதா உடனே தீர்மானம் பண்ணிட்டேன்" என்ற கலெக்டர், கை கடிகாரத்தைப் பார்த்து, "அச்சா! ஏழு மணிக்கு ஒரு எங்கேஜ் மெண்ட். சினேகலதா, வி மஸ்ட் மீட் எக்யன்" என்று எழுந்து செல்ல, வில்லுப்பாட்டு துவங்கியது.

பானை வந்தது. பிரிமனை மேல் உட்கார்ந்தது. 'விண்' என்று ஒரு நீண்ட வில். அதன் முதலில் சின்னச் சின்ன வெண்கல மணிகள்; விரைப்பான நாண். நடுவே வீசி கோல்காரர் சேவித்துவிட்டு உட்கார, அருகே பானை வாய்ப் பக்கம் ஒருவன் உட்கார, இந்தப் பக்கம் உடுக்கு; அந்தப் பக்கம் ஜால்ரா; இடைய கஷ்டம்.

வில்லின் நாணை ஒரு தடவை அடித்துப் பார்க்க 'ஜலங்' என்று சப்தம் வர, வாழைப்பட்டையால் பானை வாயில் ஒரு தடவை தட்ட, அதன் வயிற்று நாதம் எழும்ப, உடுக்கைத் தேய்க்க, வீசுகோலைத் தட்டிவிட்டு,

"முத்தமிழ் சேர் தென்பவழ மூதூரில்
இயக்கி கதை– இயக்கி கதை
அத்தனையும் என் நாவில் அறிந்தபடி
நான் பாட– நான் பாட"

என்று வில்லுப்பாட்டுத் துவங்க, அதற்கேற்ப அத்தனை வாத்தியங்களும் 'தக்கதக தங்கதக தக்கதக தங்கதக' என்று

சேர்ந்துகொள்ள, கல்யாணராமனுக்குப் புல்லரித்தது. காலெ டைத் தட்டிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

"பழையனூர் நீலிக் கதைங்க! ராத்தேசாலம் ஒன் ரெண்டாய்டும். நல்லா இருக்கும். அதென்னங்க பொட்டி?

"டேப் ரிக்கார்டர்" என்றான்.

## பழையனூர் நீலி

**பழையனூர் நீலியின்** கதை திருநெல்வேலி ஜில்லாவி பிரசித்தமான வில்லுப்பாட்டு கதை. இந்தக் கதைக்குப் ப வடிவங்கள் உள்ளன. அதில் ஒன்றைச் சொல்கிறேன். வேலவ என்கிற அந்தணன் நீலியை மணந்து கொள்கிறான். மண சில மாதங்களில் ஒரு வேசியின் சகவாசம் ஏற்பட்டு அவ வசப்படுகிறான். தன் இளம் மனைவி நீலியைக் கைவிட் விடுகிறான். ஒரு தடவை அந்த வேசி நீலியின் வீட்டு வர, நீலி கதவை அடைத்துச் சார்த்தி விடுகிறாள். அதனா கோபம் கொண்ட வேசி அடுத்த தடவை நீலியின் கணவ வந்தபோது அவனை மறுத்து, 'நீலியின் தாலியுடன் வந்தா தான் மேற்கொண்டு உறவு' என்கிறாள். வேலவன் நீலியி திரும்பிப் போய் "நான் திருந்தி விட்டேன். இனி இரண் பேரும் வேற்றூர் சென்று விடலாம்" என்கிறான். நீலி நம் அவனுடன் செல்கையில் காட்டுப்பாதையில் கிணற்றடியி அவளுடன் சல்லாபித்து விட்டு அவள் மயங்கிய நிலையி அவள் தலைமேல் கல்லெடுத்துப் போட்டுக் கொன் விடுகிறான். கொன்று, தாலியைப் பறித்தவன் அதிக நேர வாழவில்லை; கிணற்றடியில் சர்ப்பம் கடித்து இறந் போகிறான்.

கதை அடுத்த ஜென்மத்திற்குச் சுலபமாகத் தாவுகிற வீணாகக் கொலையுண்ட நீலியின் உயிர் பழிக்கு அலைகிற கைலாச வாசலில் சிவபெருமானை வேண்ட, நீலி பழி



வாங்குவதற்காகவே சோழராஜனின் மகளாகப் பிறக்கிறாள். கணவன் வேலவன் இந்தத் தடவை ஜாதி மாறி காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு செட்டியின் மகனாகப் பிறக்கிறான்.

நீலி சின்னப் பிள்ளையாக இருக்கையிலேயே தொட்டிலை விட்டு இறங்கி வந்து தொழுவத்து மாடுகளை எல்லாம் கொன்று தின்கிறாள். சோழ ராஜா பதைத்து குழந்தையைக் காட்டில் கொண்டு விட்டுவிட, நீலி காட்டில் வளர்கிறாள். காத்திருக்கிறாள்.

செட்டி கல்யாணம் செய்து கொள்கிறான். அப்பன் இறந்ததும் மேலும் பொருளீட்ட துர்ச்சகுனங்களை மதிக்காமல் காட்டு வழியில் கடந்து செல்கிறான். காத்திருந்த நீலி மோகனப் பெண் வடிவெடுத்து, "நான் உன் மனைவி. எனக்கு உன்னால் ஒரு பிள்ளையுண்டு. என்னுடன் வாழ வா" என்கிறாள். பயந்துபோன செட்டி "நானில்லை, உன் கணவன் வேறு யாரோ" என்கிறான்.

வாக்குவாதம் நடக்கிறது. பழைய நல்லூர் சென்று பெரிய வர்களை மத்தியஸ்தம் கேட்கிறார்கள். அவர்கள் சோதித்து, நீலி அவன் மனைவிதான் என்று தீர்ப்புச் சொல்லி அவர்கள் இருவரையும் இரவு ஒரு தனி வீட்டில் படுக்க வைக்க, நீலி அவன் மார்பைப் பிளந்து ரத்தம் உறிஞ்சிக் குடித்து, மேலும் எழுபது பேரைக் கொன்றபின்தான் அவளுடைய ஜென்மம் கடந்த ஆத்திரம் தீருகிறது. பிறகு அவள் நல்லவருக்கு நல்லதும், தீயவருக்குத் தீயதும் விளைவிக்கும் இயக்கி அம்மனாக மாறிவிடுகிறாள்.

பாட்டில் கவனமாக இருந்த கல்யாணராமன சற்று நேரம் கழித்து அருகில் பார்த்தான். சினேகலதாவைக் காணோம். சற்று தூரத்தில் சூழல் விளக்கின் ஒளியின் அவள் மருதமுத்து வுடன் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

"மடிப்பணத்தைக் கண்ட பின்பு– ஆமா
மணி விளக்குத் தானேந்தி– ஆமா
படுத்திருக்க வாரும் என்று– ஆமா
பஞ்சணையில் கொண்டி வந்து– ஆமா"

சினேகலதா பேசிவிட்டு முன்னே தனியாக இருட்டுக்கு சென்றுவிட, மருதமுத்து சிறிது தாமதித்து இந்தப் பக்க அந்தப் பக்கம் பார்த்து சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்படு வதைப் பார்த்தான்.

"சந்தாஞ்சேர் கட்டிலிலே– ஆமா
தூளிமெத்தை தனிலிருத்தி– ஆமா
தந்திரமாய் மேலிலிட்ட– ஆமா
சட்டைதனைக் கழற்றினானே– ஆமா"

முதல் தடவையாக வெள்ளியைப் பார்த்தான். பெண்க மத்தியில் குந்தி உட்கார்ந்திருந்தாள். அவர்கள் இருவரு இருட்டில் புறப்பட்டுப் போனதை அவளும் கவனித்திரு கிறாள் என்று தோன்றியது. அந்தத் திசையிலேயே பார்த்து கொண்டிருந்தாள்.

"என்னோட பகைக்கவென்று
ஏந்திழையாள் மருந்தையிட்டாள்
அன்றைக்கே நலம் குறைந்தான்
ஆசையெல்லாம் தான் மறந்தான்"

வெள்ளி தன் பக்கத்தில் இருப்பவளுடன் பேசினா கைகளைப் பிசைந்தாள். அடிக்கடி அந்த இருட்டின் பக்க நோக்கினாள்.

"உனக்கென்று எனை வளர்த்து
உற்றோர்கள் கட்டிவிட்டார்
எனக்கினிமேல் தாலி கட்ட
எவனிருக்கிறான்?"

வெள்ளி தன் சங்கிலியைக் கடித்து கொண்டாள். வளையல்களைக் கழற்றி அணிந்தாள்.



"ஏகபோகமாக நாமளிருப்போம்
இருந்து ஒரு தலத்தில் பொருந்திப் பார்ப்போம்"

வெள்ளியின் கண்களில் அதீதமான சந்தேகம், கவலை, ஆத்திரம்...

"அம்பலமும் சந்திகண்டேன் அரண்மனையும்
கோயில் கண்டேன்
சந்தியிலே பந்தானேன் தலை
குலைந்த நூலானேன்..."

வெள்ளி எழுந்தாள்.

"ஏற்ற பெண்தான் நானுமக்கு
செட்டியாரே! என்னை
இணைந்து கொண்டாலே
தெரியும் செட்டியாரே!
கண்டறிவேன் உன்னையெந்தன்
காலந்தன்னிலே– இப்போ
காமச் சங்கிலி பூட்டாதே கள்ளி நீ போடி!"

மெதுவாக உட்கார்ந்திருந்தவர்களை விலக்கி, கூட்டத்தின் விளிம்புக்கு வந்தாள்.

"ஆட்டுடன் நீர் நாமும் அன்றிருந்த இடம்– ஆமா
அதோ தெரியுது பாருமே என்பாள்– ஆமா"

வெள்ளி சற்று நேரம் திகைத்து நின்று, பின் தீர்மானித்தவள் போல அவர்கள் இருவரும் சென்று மறைந்த அதே திக்கில் சென்று மறைந்தாள்.

"தந்தன்னத் தந்தன்னத் தன தன்னத் தானா"

என்று அத்தனை வாத்தியங்களும் துடிக்க, வீசுகோல் அடிக்க, உடுக்கும் பானையின் ஓங்காரமும் தொடர,

"கல்லை எடுத்து மறையவன் தானும்
கன்னி நல்லாள் மீதில் எளிய
புரண்டாள் உருண்டாள் மருண்டாள்
பொரிந்தது போலவே மண்டை நெரிய

நெரிந்து அவளுயிர போகுமுன்பாக
நிழல் நின்ற கள்ளியே நீ சாட்சி என்றாள்
சிவசங்கரத் தேவே நீ சாட்சி என்று
தெரிவே உயிரது போனபொழுதே–
உயிர்போன பொழுதே"

கல்யாணராமன் அந்தக் கதையின் வசிகரத்துக்கும், மூவரும் சென்று மறைந்த நோக்கத்தின் வசிகரத்துக்கும் இடையே தத்தளித்தான். எங்கே சென்றார்கள், இந்த ராத்திரியில்? கிராமம் முழுவதும் இங்கு கூடியிருக்கிறது. வீடுகள் பூட்டி வீதிகளில் தனிமை. மேலே கருநீல வானத்தில் நிலா சொங்குகிறது. வில்லுப்பாட்டு திசைகளை எல்லாம் நிரப்புகிறது. எங்கு சென்றாலும் கேட்கும் சந்தம்... மூன்று பேரையும் காணோம். முதலில் சினேகலதா; அப்புறம் மருதமுத்து; அப்புறம் வெள்ளி... அப்புறம் இருட்டு.

"நெஞ்சதிலே பாய்ந்தேறி
நிமலையந்த இயக்கியம்மை
நெஞ்சதையும் தான் பிளந்தாள்
நெடுஉதிரச் சேறோட
'உதிரச் சேறு!' "

கல்யாணராமனுக்கு உடல் பதறியது.

## 13

"முன்னோர்கள் உரைப்படியே முடித்துவிட்டேன் இக்கதையை..." இரவு ஒரு மணிக்கு வில்லுப்பாட்டு முடிந்து சேவித்து விட்டு, கக்கலிருமலுக்கு வைத்தியம் சொல்லி விட்டு வாத்தியங்களை உறையிலிட்டனர், விற்கலைஞர்கள். எதிரே மொட்டு மொட்டாகப் போர்த்திக் கொண்டு உட்கார்



இருந்தவர்கள் கொட்டாவியைச் சாப்பிட்டு விட்டு எழுந்திருக்க, கல்யாணராமன் ஸ்வெட்டர் அணிந்து கொண்டு காஸெட்டை எடுத்துக் கொண்டான்.

"வில்லடிச்சான் கோயிலில விளக்கேத்த நேரமில்லைம் பாங்க. விடியக்காலம் வரை கூடச் சொல்லுவாக. நான் எல்லாம் கேட்டிருக்கேன்; சுடலைமாடன், மருத நாயகம் பள்ளி, சின்னத்தம்பி கதைகள் எல்லாம்," அந்த ஆள் கல்யாண ராமன் கூடவே நடந்தான். "எனக்கும் பாட்டு வருமுங்க."

"சரி"

"நா வந்து சொல்லிப் போடட்டா?"

"நாளைக்கு வாங்க."

"அய்யா, ஒரு ரூபா ரெண்டு ரூபா..."

"சில்லறையா இல்லை. நாளைக்கு வாங்க. தரேன்."

"எவ்வளவுக்கு சில்ற வேணும்?"

"பாடினப்புறம் தரனே!"

"அதுகூட சரிதான் அய்யா. வரட்டுங்களா?" மெதுவாக இருட்டில் நடந்தான். அந்த விளக்குகள் நில நட்சத்திரங்களாகத் தெரிந்தன. எங்கே போனார்கள் மூன்று பேரும்? எதற்காக?

மருதமுத்துவும் சினேகலதாவும் ஜமீன் வீட்டுக்குத் தனியாகச் சென்று.

சென்று?

அறையில் சினேகமாக இருக்க, பின்னால் வந்த வெள்ளி இருவரையும் பார்த்துவிட... என்ன நடந்திருக்கும்?

சரக் சரக் என்று அவன் காலடி ஓசை உலர்ந்த இலைகள் மேல் கேட்க, சற்று தயக்கத்துடன் நடந்தான். சந்திக்கப் போகும் சம்பவங்களில் ஏதோ ஓர் எச்சரிக்கை இருப்பதை மயிர்க் கால்களில் உணர்ந்தான். ஏதோ ஒரு விரசம் அல்லது

விபரீதம். வானத்தில் விரவியிருந்த கருநீல நடு நிலா ஒளியில் ஜமீன் வீடு வெள்ளி விளிம்பு இருட்டுக்கனவு மாளிகையாகத் தெரிந்தது. ஒற்றைக் கண்போல் சினேகலதாவின் அறை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பூச்சிகள் டிர்ர்ர்ரித்தன. விநோதமான வீடு. ரத்னாவதி இறந்து போய் அவள் வழிவந்த சினேகலதா. அவளுக்கும் ரத்னாவதிக்கும் எத்தனை வித்தியாசம்! ரத்னாவதியின் கதையை முழுக்கப் படிக்க வேண்டும். 'நான்தானே கண்டெடுத்தேன். எனக்கும் படிக்க கொடு' என்று தீர்மானமாக சினேகலதாவைக் கேட்டுவிட வேண்டும். இன்னும் விழித்திருக்கிறாளா என்ன? பார்க்கலாம்.

"சரக் சரக் சரக் சரக்."

திடுதிப்பென்று மரம் சிலிர்த்துக் கொண்டது போல சப்தம் கேட்டது. இடப்பக்கத்தில் யாரோ ஓடிப் போகிற சப்தம் தூரத்தில் மறைந்தது. மூலைக்கு அப்பால் துரத்த சம்மதமில்லை. மருதமுத்துவா?"

"யாரு சினேகலதா?" என்று கூப்பிட்டான்.

"யாரு சினேகலதா?" என்று எதிரொலித்தது.

அவள் அறைக்கு வந்தான். வாசலில் சாம்பல் சிதறியிருந்தது. ஜன்னலுக்கு அருகில் அது என்ன?

துணியாலும், சணலாலும் செய்யப்பட்ட ஒரு சிறிய பொம்மை. கத்தரித்த கலர்த் துணியில் புடவை கட்டப்பட்டு அதன் நெஞ்சுக்குள் கோணூசி பதிந்திருந்த பொம்மை. என்ன இது! அறைக்குள் எட்டிப் பார்த்தான். ரத்னாவதியின் போட்டோவின் பயப்பார்வை. வேறு ஒருவரும் இல்லை. அறைக்கதவைத் திறந்தான். திறந்தவுடன் கீழே ரத்தக் கறையைப் பார்த்துத் திடுக்கிட்டான். கையகலத்துக்குப் புதிய ரத்தம். இன்னும் உறையவில்லை. 'சினேகலதா!



மறுபடி உரக்க 'சினேகலதா!' என்று கத்தினான். இருட்டில் எங்கோ எதிரொலித்தது. மறுபடி மரம் சிலிர்த்துக் கொள்ளும் சப்தம்.

அறையை விட்டு வெளியே வந்தான். சற்று நேரம் யோசித்தான்... சுற்றிலும் பார்த்தான். இதோ படிகளில் மறுபடி கொஞ்சம் ரத்தம். கல்யாணராமனுக்கு உடல்நடுங்கியது. தன் அறைக்குச் சென்றான். டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டான். வெளியே வந்தான். கீழே அந்த ரத்தத் திட்டுகள் தெரிந்த பாதையில் விளக்கடித்துக் கொண்டு சென்றான். அவன் இருதயம் பயம் பயம் என்று பம்ப் அடித்துக் கொண்டிருந்தது. அந்தச் சிவப்புத் திட்டுப்பாதை தோட்டத்துக்குக் கொண்டு சென்றது. புளியமரத்தைக் கடந்து- கரடுமுரடான வளர்த்தியைக் கடந்து அந்தக் கிணற்றருகே சென்றது.

கல்யாணராமனின் டார்ச் வட்டம் மெதுவாக அந்தப் பகுதியில் உலவியது. கள்ளிச் செடிகள்; கிணற்றின் காரை பெயர்த்த சுவர்; கை கற்குவியல்... கை!

டார்ச் வட்டம் மறுபடி அந்தச் கை மேல் திரும்பியது. மெதுவாக அங்கிருந்து அடையாளம் பிடித்துக் கொண்டு முழங்கை, மார்பு, முகம் என்று வருடியது. சினேகலதாவின் முகம்!

"ஓ மை காட்."

கண்கள் வானம் பார்த்திருக்க, வாய் திறந்திருக்க, உதட்டோரத்தில் கொஞ்சம் ரத்தம் தெரிய, அசம்பாவிதமாக சேர்ந்த படுத்த நிலைகளுக்கு மத்தியில் ஒரு கால் நீட்டி, ஒரு கால் மடக்கி...

சினேகலதாவின் உடல்!

கை நடுக்கத்தில் டார்ச் வெளிச்சம் நடுங்கியது.

என்ன செய்வது? கிட்டச் சென்றான். தொட்டுப் பார்த்தான்.

"சினேகலதா, சினேகலதா! இங்க பாருங்க சினேகலதா!" கன்னத்தைத் தட்டினான். தட்டத் தட்ட தலை ஆடியது.

ஒரே ஒரு ரத்த நூல் வாயிலிருந்து ஒழுகியது.

"அய்யோ!" என்று அலறினான். எழுந்து ஓடினான். கிராமத்தை நோக்கி இரைக்க இரைக்க ஓடினான். 'வள்வள்' என்று நாய் ஒன்று தொடர்ந்து துரத்தியது. அதன் மேல் கல்லெறிந்தான். செருப்பு பிய்ந்தது. வெறுங்காலால் ஓடினான். வியர்வை உடல் பூராக் கொப்பளிக்க சுவாசப் பைகள் ஓவர் டைப் செய்ய கிராமத்து அத்தனை காற்றையும் வாங்கி சுவாசித்து, இரைத்து, வியர்த்து, பயந்து, ஓடி வீதி மத்தியில் நின்று கத்தினான்.

"மருதமுத்து! தங்கராசு! யாராவது வாங்க!" அப்படியே திராணியற்று நடுத்தெருவில் உட்கார்ந்தான்.

சில்லறை நாய்கள் முதல் நாயின் கோபத்தை வாங்கிக் கொண்டு குரைக்க, மூலைக்கு மூலை வள் வள்...

"பெரியசாமி! மருதமுத்து... தங்கராசு..." ஒரு கல்லெடுத்து ஒரு கதவின் மேல் எறிந்தான்.

குழந்தை ஒன்று அழுதது.

"யாரு?"

"யாரு?"

"யாரு?"

"ராத்தேசாலத்திலே... எலே பெரியசாமி?"

"ஓடியாங்க ஓடியாங்க!"

"யாரது பட்டணத்துக்காரரா! என்ன இங்கே குந்தியிருக்கீங்க!"

"தோட்டத்தில ஜமீன் வீட்டிலே... தோட்டத்திலே"

பின்னிரவில் அந்தக்கோஷ்டி சினேகலதாவை அடைந்தது. கம்பு கழிகள், அரிக்கேன் விளக்குகள், தீப்பந்தங்கள்...



கல்யாணராமனுக்கு மறுபடி அந்தச் சந்திப்பு மனத்தில் கனத்தது.

"சீக்கிரம் வா அய்யரே!"

சினேகலதா! சினேகலதா... அவள் அழகிய முகம்... அவள் சிறுபிள்ளைப் பேச்சு... நடை... எல்லாம் மனசில் மாறி மாறி அந்த ரத்தக் கோடிட்ட முக பிம்பத்துடன் இழைந்தன.

"சினேகம்மா!" என்று மருதமுத்துவின் உருக்கமான குரல் கேட்டது. வாய்விட்டு அழுது நடுங்கினான்.

"அய்யோ தெய்வமே! என்ன இது! சமீன் பேத்தி!"

"தங்கராசு! யாரோ கொன்னு போட்டிருக்காங்கய்யா! கொன்னே போட்டிருக்காங்க. பின் மண்டையில் நல்ல அடி... அய்யாத்துரைக்குச் சொல்லி அனுப்பியிருங்க. பெரியசாமி வந்திருக்கானா?"

"இங்கிருக்கேனுங்க!"

"ஏன் பின்னால ஒளிஞ்சிருக்க? வா, வந்து பாரு! டேய் தாங்குங்கடா!"

"வெள்ளிக்கிளமையும் அதுவுமா சாலாச்சி காவுவாங்கிட்டாளே! என்ன கோவமோ!"

"வில்லுப்பாட்டிலே உக்காந்துக்கினு கேட்டுக்கிட்டு தான் இருந்தாங்க! நான் பார்த்தேண்டா!"

"மருதமுத்து கூடப் போனாப்பல!"

"அளைச்சுட்டுப் போனண்டா! 'நீ போய்ட்டு வா மருதமுத்து'ன்னாங்களே! 'போய்ட்டு வா'ன்னாங்களே!"

"அண்ணே! ஒரு கவுத்துக் கட்டில் கொண்டாந்துரலாமா?"

"இல்லை, இப்படியே புடிங்க! புடிங்கடாண்ணா! பயந்துக்கிட்டு!"

"பெரியசாமி போய்ப் புடி!"

"விடுங்கய்யா!"

மருதமுத்து ஒரே லாவில் அவளை எடுத்து ஏந்தலாகத் தூக்கி "நடங்கய்யா! தூக்கறதுக்கு ராவுகாலம் பார்த்துக்கிட்டு, சட்!" என்றான்.

"மொள்ள மொள்ள! பாத்து நட. பாதையில கல்லிருக்கும்."

மருதமுத்துவின் தோள் மேல் தலை தொங்க, அவள் கண்கள் நேர்பார்வை பார்க்க.

"ரூம்புக்கே கொண்டு போயிறலாம்."

"இறந்துட்டாங்களா?"

"இல்லை, ஒறக்கம்! ஆளைப்பாரு! கேக்குதான் பா கேள்வி!"

"நான் அப்பவே சொன்னேன், பழயனூர் நீலி கதையில தொடங்காதிங்கடான்னு. பரிகாரம் தேடணும் இப்ப!"

"பத்துப்பன்னிரண்டு கால்கள் சரக்சரக் என்று மிதித்து நடக்க, சின்னச் சின்ன விளக்குகள் நடனமிட, சினேகலதாவின் கை அசைகையில் அவள் அணிந்திருந்த விழாவில் வாங்கின கண்ணாடி வளையல்கள் உயிருடன் புலம்ப...

மெதுவாக ஜமீன் வீட்டை நெருங்கினார்கள். சிணே லதாவின் அறைக் கதவைத் திறந்தார்கள்.

"என்னது விபூதி?"

சினேகலதாவைத் தரையில் கிடத்தினார்கள்.

ரத்னாவதி இன்னும் பயப்பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் புதுசாக ஏதாவது இருந்ததா என்ன?

சே! பிரமை.



'சினேகலதா, உன்னை யார் எதற்காகக் கொன்றார்கள்? சில மணி நேரங்களுக்கு முன் முழுசாக இருந்தாயே?' அவளை முதலில் அந்தத் திருப்பத்தில் பார்த்தது அப்புறம் மாடியில், அப்புறம் தனியாக, அப்புறம், அப்புறம்...

'எப்படி இவ்வளவு தெரிஞ்சு வெச்சிக்கிட்டிருக்கிங்க! கித்தார் வாசிக்கிறிங்க, நாட்டுப் பாடல் ரிஸர்ச்... இந்த மாதிரியே நீங்க என்னை இம்ப்ரெஸ் பண்ணிக்கிட்டே இருந்தா ஒரு நாள் உங்களைக் காதலிக்க ஆரம்பிச்சுருவேன்.'

"ராத்திரிப் படுக்க வர வேண்டாம்னு சொல்லிட்டாங்களே! தவற விட்டுட்டங்க! சினேகம்மா! சினேகம்மா!" என்று தன் துண்டைக் கடித்துக் கொண்டு வாய் விட்டு அழுதான் மருதமுத்து.

உடலைப் போர்த்தினார்கள்.

"பெரியசாமி, காலைல இன்ஸ்பெக்டர் அய்யாவுக்கு முதக்காரியமா தகவல் சொல்லியனுப்பிரு!"

"சரிங்க"

"என்ன தங்கராசு?"

"என்ன செய்யறதுங்க...? வயத்தைப் புரட்டுது. இவுங்க அம்மா அப்பாருக்கு என்ன பதில் சொல்லப் போறேன்?"

"சரியான அடி பின் மண்டையில். ரத்தம் நிறைய சேதமாய்டுச்சு."

கல்யாணராமன் வெளியே வந்து நின்றான்.

"டேக் இட் ஈஸி யா!" அவன் இளம் குரல்- உற்சாகமான குரல்- தோட்டமெங்கும் எதிரொலித்தது.

"எதற்கு வந்தாய் பெண்ணே?
எதற்குக் கொலையுண்டாய்?
என்ன இதெல்லாம்?
யார்? யார்?"

"கல்யாணராமன்! நீங்க என்னை ஏமாத்திட்டீங்க. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு 'சடால்'னு அப்படியே என்னைப் பிடிச்சு ஓரே கட்டாக் கட்டி உதட்டில ஒரு!... முத்தம் கொடுத்திருக்கலாமே! பாவிப் பெண்ணே செத்துப்போய் விட்டாயே!

அதிகாலை கிழக்கே வெளுத்ததுமே அந்த இடத்தில் கூட்டம் கூட ஆரம்பித்து விட்டது. அய்யாத்துரை நாற்காலி போட்டுக் கொண்டு தாழ்வாரத்தில் உட்கார்ந்திருக்க, சினேக லதாவின் அறைக்கதவு மூடியிருந்தது.

ஜன்னலில் அந்தத் துணி பொம்மை அப்படியே இருந்தது. இந்தப் பக்கத்து ஜன்னல் வழியாக ஒவ்வொருத்தராக எட்டிப் பார்த்தார்கள்.

பெரியாத்தா அலறிக்கொண்டு ஓடிவந்து மாரடித்து,

"ஆதி கைலாசத்தில
ஆதிமூலமும் தன்னிடத்தில
பரமசிவனை நோக்கி
மக்களும் இல்லையின்னு
மனம்வாடித் தவசிருந்தார்"

என்று துவங்க..

"ஏய் கிளவி சும்மாக்கிட" என்றார்.

"தங்கராசு! கொஞ்சம் கடல பயிறு மாவு ஏதாவது கொணாந்து வெச்சுட்டு..."

"அடி தங்கக் கிளியே! தவசிருந்து பெத்தவளே...!"

"ஏய் சும்மாருன்னா?"

"பெரியசாமி எங்கே காணம்?"

"இன்ஸ்பெட்டரைக் கூட்டியாரப் போயிருக்கான்."

"வண்டி வருமில்ல?"



பெரிய தனக்காரர் அய்யாத்துரை கல்யாணராமனிடம் வந்தார். "அய்யா! நமூனா எழுதணும். கொஞ்சம் தனியா வரிங்களா?" இருவரும் தனியே சென்றார்கள்.

"பிரேதத்தை டவுனுக்கு அனுப்பணும். நீங்க யாரையாவது பார்த்தீங்களா?"

"ஒரு ஆளு ஓடற மாதிரி சத்தம் கேட்டுது."

"எப்பங்க?"

"ராத்திரி மணி ஒண்ணரையிருக்கும்."

"இருங்க. ராத்தேசாலம் ஒண்ணரை... இத பாருங்க, இந்த நமூனாவை நீங்களே கொஞ்சம் தெளிவா எழுதிக் கொடுத்திருங்களேன்!"

அழுக்கான பழுப்புக் காகிதத்தில் அச்சிட்டு இருந்தது அந்த நமூனா.

ஜில்லா... தாலுகா கிராமத்தில் கிராம மாஜிஸ்ட்ரேட் வசிடத்திலிருந்து (இன்ன இடத்திலுள்ள) போலீஸ் ஸ்டேஷன் விசாரணை. வசிக்கும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பப்பட்ட ரிப்போர்ட்.

ரிப்போர்ட் செய்வது என்னவென்றால்...

எந்தத் தேதியில் எந்த இடத்தில் எந்த மணி நேரத்தில்,

ஒவ்வொன்றாக நிரப்பினான்.

பெயர்: சினேகலதா

ஆண்- பெண்

ஆண் என்பதை அடித்தான்.

வயது: சுமார் பத்தொன்பது வருஷங்கள். கண்களின் நிறம்: கறுப்பு. மயிரின் நிறம்: கறுப்பு. உயரம்: 64 அங்குலம். அங்கக்குறிகள்: இல்லை. அடையாளம் கண்டுபிடிப்பதற்கான வேறு குறிகள்...

கல்யாணராமன் யோசித்து 'மிக இனிய பெண்' என்று எழுதுவதைத் தவிர்த்து, 'தாடையில் ஒரு சிறிய மச்சம்' என்று எழுதினான். ஞாபகம் இருந்தது.

1. இடம்: மேம்பட்டியில் 1978-ம் வருடம் நவம்பர் மாதம் 18ந் தேதி மாலை ஒரு மணிக்குக் கண்டுபிடிக்கப் பட்டது. வெட்டியான் அல்லது தலையாரியாகிய (இன்னார்) வசம் அனுப்பட்டது.

2. அடியிற்கண்ட காயங்களும் ரணங்களும் பிரேதத்தின் மேல் காணப்படுகின்றன. பின் மண்டையில் பலத்த அடிபட்டு உடைந்து ரத்தக் காயம். உதட்டில் காயம்.

3. இரண்டாவது பாரத்தில் சொல்லியிருக்கும் காயங்கள் ஆயுதம் அல்லது கருவியினால் உண்டாக்கப் பட்டிருந்தால் இன்ன ஆயுதம் அல்லது கருவியினால் இன்ன விதமாய் உண்டாக்கப்பட்டிருக்கக் கூடும் என்பது.

சொல்ல முடியவில்லை என்று எழுதினான்.

4. பிரேதத்துடன் அனுப்பப்படும் வஸ்துக்கள், உடை சட்டை, பாண்ட், ஆபரணங்கள்- கண்ணாடி வளையல்கள்

வாந்தியான வஸ்து- இல்லை.

ஆயுதங்கள்- இல்லை. மலம்- இல்லை...

உயிர்ப்பும் துடிப்பும் சிரிப்பும் உள்ள பெண்ணை ஒரு பழுப்புக் காகிதத்திற்குள் அடக்கியாகி விட்டது.

"மருதமுத்து டாக்டர் எடுத்தாரப் போயிருக்கான். தொறந்த வண்டில வெச்சு இளுத்துக்கிட்டுப் போயிரலா மில்லே"

அந்தத் துணி பொம்மை? யார் வைத்தார்கள்? எதற்காக?

தங்கராசு அவன் அருகில் வந்தான்.- "என்ன செய்யறது? என்ன செய்யறது? ஒரே மலப்பா இருக்குதுங்க."

"தங்கராசு, இந்தப் பொண்ணோட அப்பா அம்மா எங்க இருக்காங்க?"



"வடக்கேங்க, விலாசம் இருக்குது."

"உடனே திருநிலத்துக்குப் போய் ஒரு தந்தி கொடுத்துட்டு வந்திருங்க- நான் எழுதித் தரேன்!"

"சரிங்க. அஞ்சாறு நாளாவே யாராரோ உலாத்திக்கிட்டிருக் காங்க. எவனோ ராவில வந்து... என்னய்யா?"

'என்னய்யா?' என்று கேட்டதும் அவசர அவசரமாக ஓடிவந்த வெள்ளியின் தகப்பனைப் பார்த்து, கவலை நிறைந்த முகத்துடன் இரைத்துக் கொண்டே சொன்னார்.

"தங்கராசு! வெள்ளியக் காணம்!"

## 14

"காணமா! என்னய்யா, சொல்றிங்க?"

"காலைல குளிக்கத்தான் கிளம்பிச்சு. அப்புறம் காங்கல. எல்லா முச்சூடும் தேடிப் பார்த்துட்டன். அய்யா, இங்க வெள்ளி வந்துதுங்களா?"

"இல்லையே" என்றான் கல்யாணராமன். அவன் மனத்தில் வேகமாக- அதிவேகமாக எண்ணங்கள் சுழன்றன. நேற்றிரவு நிர்மலதா- மருதமுத்து- வெள்ளி என்று ஒவ்வொருவராகப் புறப்பட்டுச் சென்றது ஞாபகம் வந்தது. அப்புறம் என்னவோ நடந்திருக்கிறது.

"ராத்திரி படுத்துக்க வந்தா இல்லே?"

"காலைல விடியல்ல பார்த்திருக்கேன்" என்றான் வெள்ளியின் தகப்பன். தொடர்ந்தான்: "பைப்பாண்ட போறன்னு போயிருக்குது. குடம் மட்டும் பைப்பாண்ட கெடக்குது,

ஆளைக் காணமே! எங்கே போயிருக்கும்? எனக்கு என்ன பயமுன்னா..."

"ஊருக்குள்றயே சரியா பார்த்திகளா?" என்றார் அய்யாத்துரை போதும் போதாதுக்கு உங்க மவளையும் காங்கலியா? சரிதான்

"பார்த்துட்டனுங்க!"

"மருதமுத்து பய கூட போயிருக்குமோ?"

"இந்த சென்மத்தில நடக்காதுங்க!"

"டாக்டர் எடுத்தாரப் போயிருக்கான். அவனைக் கேட்டா தெரியுமில்ல?"

"ஆமாங்க."

"ரூம்புக்குள்ளதான் இருக்கு... போய்ப் பாரு!"

"பார்த்துட்டு இந்தப் பெண்ணைத் தேடிக்கிட்டுப் போறே பயந்து போயி எதனாச்சும் ஒதுங்கி குந்திருச்சோ என்னவோ ரொம்ப பயந்த சொபாவங்க!"

வெள்ளியின் அப்பன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்து விட்டு, "ங்...ங்...ச்..." என்று சொல்லிவிட்டுத் தன் மகளை பற்றிக் கவலையுடன் ஓடினான். கல்யாணராமன் அய்யாத் துரையிடம் சென்றான். அந்தத் துணி பொம்மையை ஆராய்ந்து கொண்டிருந்தவரிடம், "ராத்திரியே அந்தப் பொம்மையை பார்த்தேங்க. என்னது அது?" என்றான்.

ஏவல் மாதிரி தெரியுதுங்க. வாசப்புறம் விபூதிகூட கொட்டிக் கிடக்குது. ஏவலாகத்தான் இருக்கும்."

"ஏவல்னா?"

"புடிக்காத மனுசங்க பேரில ஏவி விடறதுங்க!"

பெரியாத்தா, "அம்மன் அடிச்சிருச்சி. ரத்தம் முச்சூடும் உறிஞ்சி, பொணம் வெள்ள வெளேர்னு ஆத்து மணல் மாதிரி இருக்குது பாருங்க! அடியம்மா! சந்தன நெல் மரமே சாதிரிப் பிலா மரமே...?



"ஏய் கிளம்பு. அந்தால ஓரத்தில் போய் குந்திக்கிட்டு அழு."

பெரியாத்தா கொய்யா மரத்தை நோட்டம் விட்டுக் கொண்டு வெற்றிலை மென்று கொண்டு துயரமில்லாமல் அங்கே சென்றாள்.

டிராக்டர் டிரெய்லரை இழுத்துக் கொண்டு வந்து நிற்க அதை அணைத்துவிட்டு மருதமுத்து குதித்து இறங்கினான். அருகில் வர அவன் கண்கள் கலங்கியிருப்பதைக் கவனித்தான் கல்யாணராமன்.

"அய்யாதுரை எடுத்துவர வேண்டியதுதான்?"

"இன்ஸ்பெட்டர் அய்யா வந்துரட்டும். ஆள் போயிருக்கு. எனக்கு அதிகாரம் கிடையாது?"

"அட எத்தினி நாளி! அந்தாலு வரலைன்னா?"

"வரலைன்னாத்தான் நான் பார்க்கணும். வந்துருவாரு."

"பெரியசாமி சைக்கோள் எடுத்துட்டுப் போயிருக்காப்பல!"

"ராத்திரி என்ன நடந்தது மருதமுத்து?" என்று கேட்டான் கல்யாணராமன்.

"ராத்திரிங்களா? வில்லுப்பாட்டு நடந்துகிட்டிருக்கையில பாதில சிநேகம்மா எளுந்திரிச்சு வீட்டுக்குப் போவணு மின்னு எங்கிட்ட வந்து சொன்னாங்க. நான் துணைக்குப்போய் அவங்க வீட்டு வரைக்கும் கொண்டுவிட்டு திரும்பி வந்துட்ட னுங்க..."

"திரும்பி வந்துட்டியா?"

"நீ போய் வா மருதமுத்துன்னுட்டாங்க" மருதமுத்து கீழ்ப்பார்வை பார்த்தான், பொய் சொல்கிறான்.

"வெள்ளியைக் காணமாம், தெரியுமில்லே?"

"என்னாது!" திடுக்கிட்டான்.

"அவ அப்பா வந்து கேட்டுட்டுப் போனார். காலையில் இருந்து காணமாம். நீ பார்த்தியா?"

"நான் பார்க்கலிங்களே. காங்கிலியா...?"

பெரியதனக்காரர் அருகில் வந்து, "எல்லாம் ஒரு மாதிரி சமுசயமாத்தான் இருக்குது மருது! கிராமத்தில வெள்ளியக் காணல. இங்க என்னடான்னா சினேகம்மா ரூம்பு வாசலிலே ஏவல், இதைப் பார்த்தியா?"

மருதமுத்து அந்தத் துணி பொம்மையின் மார்பில் குத்தியிருந்த ஊசியைச் சற்று நேரம் பார்த்தான்.

"பூசாரிப் பய கொடுத்ததாத்தான் இருக்கணும். செவுட்டில நாலு அறைஞ்சா தானா வருது விசயம்."

"அதெல்லாம் இன்ஸ்பெட்டர் அய்யா பாத்துப் பாரு"

மருதமுத்து யோசனையுடன் பேசினான்:

"அய்யாதுரை! எனக்கு ஒரு சந்தேகமில்ல வந்துக்கிட்டு இருக்குது."

"எனக்கும் அதே சந்தேகம்தான் மருது!" இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள, கல்யாணராமன் கலவரப் பட்டான்.

"இன்ஸ்பெட்டர் வந்ததும் சொல்லிப் போட்டுறு இன்னின்ன மாதிரி நடந்துதுன்னு... ஆனா நம்பவே முடியல மருது... இப்படி நடக்குமா?"

"ஏன்? அந்தப் பொம்புள மூணு நாளா இருந்த தோரணை ஆவேசம்! சாமியடிச்சாப்பல இது ஏதோ விவரீதமாத்தான் ஒண்ணுகிடக்க ஒண்ணு செஞ்சு போட்டுறப் போவுதுன்னு பயந்திருந்தேன். அப்படியே ஆய்டுச்சு!"

"பூசாரிப் பயலே ஏவி விரட்டிருப்பானோ?"

"இருக்காதுங்க! ரவைக்குள்ளே விசயம் வெளிய வந்துடும். இன்ஸ்பெட்டரு பிஸ்ட்டால நாலு வீறு வீறினா கக்கிர்றான்.



காலை பத்து மணிக்கு வந்த இன்ஸ்பெக்டருக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். சுத்தமான சீருடை அணிந்து பென்சில் மீசை வைத்திருந்தார். வலை பனியன் அருகில் தங்கச் சங்கிலியும், பளார் என்று டாலடிக்கும் 'எஸ்' மோதிரமும் பெரிய இடத்தில் கல்யாணம் கட்டியிருக்கிறார் என்று நினைக்க வைத்தன. கொலை பற்றி அவர் அதிகம் துணுக்குறவில்லை. நிறையக் கொலைகள் பார்த்திருப்பார் என்று தோன்றியது. "அய்யாதாங்க முத முதல்ல பார்த்தது" என்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட கல்யாணராமனை உடம்பு முழுவதும் உருவி விட்டாற் போல் பார்த்தார்.

"உங்க பேரு..."

"கல்யாணராமன்."

"நீங்க பார்த்தபோது உயிர் இருந்ததா?"

"சொல்ல முடியாது. ரத்தம் புதுசா இருந்தது."

"ஏதாவது பேசிச்சா... மரண வாக்குமூலம் ஏதாவது?"

"இல்லை."

"நீங்க அந்தப் பொண்ணுக்கு உறவா?"

"இல்லை."

"நான் சொல்லலிங்களா சமீன் பேத்தி..."

"யோவ், உன்னைக் கேட்டா பதில் சொல்லு. என்ன..."

"நீங்கதான் நமூனா எளுதி அனுப்பிச்சதா?"

"ஆமாம்."

"அதனா பார்த்தன். கையெழுத்துப் பார்த்தா கிராமத்தில உள்ளவங்க கையெழுத்தாத் தெரியல. பெரிய சாமி! நேராப் போய் ஒரு பொட்டி சிகரெட் வாங்கியாந்துரு."

"இந்தாங்க சிகரெட்" என்று கல்யாணராமன் நீட்டினான்.

சிகிரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, "கொஞ்சம் தனிய வாங்க" என்று அவன் தோள் மேல் கை வைத்து அழைத்து சென்று, "கிராமத்தில் ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லிக்கிட்டு இருப்பாக. நான் இங்கே வர்றதுக்குள்ள மூணு வெர்ஷ கிடைச்சுருச்சு. புளிய மரத்தில் முனி அடிச்சுருச்சுனு சிலபே சொல்றாங்க. பூசாரி சூனியம் வச்சுக் கொன்னுட்டாங்கறாங்க அப்புறம் ஒரு பொண்ணைக் காணமாம். வெள்ளியே பித்தளையோ...! அதான் கொன்னிருக்குன்னு கட்டை ஒரு ஆள் வந்து சொன்னான். இவங்ககிட்ட சாட்சி கேட் மாளாது. பட்டணத்துக்காரரு, படிச்ச புள்ள, நீங்க என் சொல்றிக?" என்று கேட்டார்.

"மர்டர்தாங்க இது. ரூம் வாசல்ல இருந்து ரத்தக் கறை பார்த்தேன்."

"நானும் பார்த்தேன். பின் மண்டையைத் தூக்கினா பல அடிபட்டிருக்கு. அறைக்குள்ள அடிச்சிருக்காப்பல. அடி கொன்னு போட்டுட்டு உடலை அப்புறப்படுத்தறது தரதரன்னு கிணத்துப் பக்கம் இளுத்துக்கிட்டுப் போயிருக்கா அதுக்குள்ள யாரோ வரவே, அப்படியே உட்டுட் போயிருக்காப்பல!"

"வந்தது நான்தான் இன்ஸ்பெக்டர். நான் வரபோது யா அவசரமா ஓடிப்போற சப்தம் கேட்டது!"

மருதமுத்து அருகில் வந்தான். "இன்ஸ்பெக்டர் அய் நீங்க எதுக்கும் அந்தப் பூசாரியை அளச்சு விசாரிச்சுரு

"சூனியம் வெச்ச அந்தப் பொம்மைதானு கொல்லுன்னு பேசிக்குது..."

"அதுல ஏதோ இருக்குங்க!"

"விசாரிக்கலாம்... விசாரிக்கலாம்... முதல்ல உட எடுத்துக்கிட்டு டவுன்ல பரிசோதனை செஞ்சாகணும்! உற காரங்களுக்குத் தகவல் போயிருக்கா?"



தங்கராசு தலையை ஆட்டினார். "தந்தி குடுத்திருக்கங்க."

"யார்யா? நீதான் டிராக்டர் ஓட்டப் போறியா?"

"ஆமாங்க! அந்தப் பொண்ணு வெள்ளியக் காங்க லியே! என்னன்னு புரியாமல்ல இருக்குது."

"மொதல்ல இந்தப் பெண்ணைக் கவனிக்கலாம். வாங்க கல்யாணராமன், பாடியை தூக்கி வண்டில ஏத்திறலாம்.

சினேகலதா, சினேகலதாவாக இல்லை. நீலம் பாரித்து வாய் திறந்து, உதட்டோரத்தில ஈ உட்கார்ந்து ரத்தம் கரு ரத்தமாகி, அவள் அழகு அத்தனையும் குலைந்து, ஜந்துக்கள் அங்கங்கே கடித்து ருசித்து ஆவலாக இருக்கும் ஒரு ஜடப் பொருளாகி... ஹாரிபிள்!"

"தூக்குங்கடா...! முனி அடிச்ச பொணம்னு கிராமத்தில ஒருத்தனும் தொடமாட்டான். வாங்க கல்யாணராமன், மருதமுத்து. நீ தூக்குவே இல்லே!"

"யம்மாடி, யம்மாடி! தாசில்தார் கச்சேரி. தானே புரண்டளுக!" என்று பெரியாத்தா பயமும் பொய் அழுகையும் கலந்து ஆரவாரிக்க, மற்றவர்கள் உடன் ஓடி வர, சிறுவர்கள் மரத்தில் ஏறிப் பார்க்க, பெண்கள் வாயைப் பொத்திக் கொண்டு நோக்க, சினேகலதாவின் மெதுவான டிராக்டர் ஊர்வலம் புறப்பட்டது. டிரெய்லர் உற்சாகமாகக் குதிக்கக் குதிக்க, அதற்குத் தக்கவாறு ஆடும் உடலைக் கல்யாணராமன் பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்களில் மடை திறந்தாற் போல் கண்ணீர் பெருகியது.

"தந்தி போய்ச் சேர்ந்து அவங்கள்ளாம் வந்து சேர ராத்திரி ஆய்டாது?" என்றான் தங்கராசு கவலையுடன். "அய்யாதான் ரொம்ப அளுவறாரு."

"நல்ல துடியான பொண்ணு, தங்கராசு!"

"ஆமாங்க! ஆசுபத்திரில அறுத்துத் தெச்சுத் திரும்பறதுக்கே ராத்தேசாலம் ஆய்றாது? இன்னைக்குக் கொடையில கரவம், பெரிய பார்ட்டிங்களுக்கு அட்வான்ஸ் கொடுத்து... விசயம் தெரியாம ஆள் போயிருக்கு கூட்டியார."

"மரத்திலதாண்ணே அடிச்சிருக்கு!"

"எப்பவும் நீலி கதை சொன்னா ஏதாவத ஆயிருது பாத்திங்களா? போன வருசம் அல்டாப்பு கொளந்தை ஐறந்து போயிரலி!"

திருநிலம் டவுன் ஆஸ்பத்திரியில் ஓடு வேய்ந்த 'ஷெட்'டு போன்ற கட்டிடத்தில் ஓர் அறை திறக்கப்பட்டு, அறையின் நட்ட நடுவே இருந்த சிமெண்ட் மேடை மேல் சினேகலதா கிடத்தப்பட்டாள். ஸர்ஜன் உயிருள்ளவர்களைக் கவனித்து விட்டு அப்புறம்தான் அவளைக் கத்தி நுனியால் கீறிப் பார்த்து விசாரிக்க வேண்டும். அறைக் கதவை மூடிப் பூட்டி விட்டார்கள். வெளியே மேம்பட்டியின் முக்கியப்பட்டவர்கள் கூட்டமாகச் செய்வதறியாது திகைத்து நின்று கொண்டிருக்க, இன்ஸ்பெக்டர் காணாமல் போய்விட்டார். கல்யாணராமனுக்கு மலைப்பாக இருந்தது. ஒதுங்கிப் போய் சிகரெட் பிடித்தான். முதன் முதலில் சினேகலதாவைப் பார்த்ததிலிருந்து அந்த ஓட்டுக் கட்டிடத்துக் கதவைச் சாத்திய சமீபத்திய கணம் வரை எல்லாம் பொய்யாய் பிரமை போல் இருந்தது. 'வெள்ளியை ஏன் காணோம்?' என்கிற கேள்வி மனத்துக்குள் மற்றொரு மூலையில் அரித்துக் கொண்டே இருந்தது. எங்கே யாவது பக்கத்து கிராமத்துக்குச் சென்று விட்டு இன்னேரம் வந்திருப்பாள். அப்பனிடம் சொல்லாமல், யாரிடமும் சொல்லாமல் கைக்குடத்தை அப்படியே போட்டுவிட்டு பக்கத்து கிராமத்துக்குச் சென்றிருப்பாளா என்ன? இல்லை, அவளுக்கும் ஏதாவது ஆகியிருக்குமோ? இல்லை, இப்படி இருக்குமோ! ச்சேச்சே...!" வெள்ளியின் தகப்பனை அந்தக் கும்பலில் காணவில்லை. இன்னும் தேடிக் கொண்டிருப்பான்



என் மக வெள்ளியைப் பார்த்தீங்களா? காலையில் இருந்து காங்கல.'

'வெள்ளி எங்கே போனாய்?'

"எளசா வெண்டைக்கா விக்குதேன். ஓர் ரூவா சொல்லுதேன்" என்று பையைப் போட்டுக் கொண்டு பெரியசாமியும் கிளம்பிவிட கல்யாணராமன் பூட்டியிருந்த அந்த அறையைப் பார்த்தான். எவரும் அவசரப் படவில்லை. அவரவர் டவுனில் தத்தம் ஜோலிகளுக்குக் கிளம்பிவிட்டனர். தங்கராசு தந்தி கொடுத்ததும் கடமை தீர்ந்து விட்டதாக எண்ணிக்கொண்டு சீட்டித் துணி எடுக்கச் சென்று விட்டான். அய்யாத்துரை ஹோட்டலுக்குள் புகுந்து பனியனைக் கழற்றி இரண்டு கைகளையும் உயர்த்தி அக்குளில் சவரம் செய்து கொண்டிருந்தார்.

"பொளுது சாயத்தேன் பொணத்த உள்ளாற கொண்டு போவாக" என்று அவரவர் கழன்று கொள்ள, தான் மட்டும் அந்த அறைக்கு எதிரே தனியாக நிற்பதைத் திடீரென்று உணர்ந்தான் கல்யாணராமன்.

மனத்தில் அவளுக்காக மாலவீணா வாசித்துக்காட்ட... சினேகலதா மெலிதாக, இயல்பாக, அழகாக அசைந்து ஆடமாட...

"சினேக்குனு என் பிரதர்ஸ் கூப்பிடுவாங்க." பெண்ணே எங்கே பிறந்தாய், எங்கே வளர்ந்தாய், எந்த மாதிரிக் கனவுகளை மனதுக்குள் சிறைப்படுத்தி வைத்துக் கொண்டாய்? கடைசியில் திருநிலத்தில் கருநீலமாகப் போஸ்ட் மார்ட்டம் கத்திக்குக் காத்திருக்கிறாயே!"

வயிற்றைக் கவ்வியது பச்சாதாபம். மருதமுத்து வந்தான் திண்ணையில் குந்தி உட்கார்ந்தான். கையை விரித்துத் தட்டினான்.

"ஹாம்... என்ன துடியான பொண்ணுங்க, சினேகலதா! மருதமுத்து, உனக்குப் படிப்பிருந்தா பெரிய கலக்டரா ஆயிருப்பேன்னாங்க. துண்டுல இன்னும் அந்தம்மா வாசனை

மிச்சமிருக்குதுங்க! என்ன சாதுர்யம்! என்ன பேச்சு! என்ன நாட்டியம் நாசூக்கு! பாவனை...ச்! மலங்க விழித்துக் கண்ணீரை நிறுத்த முயன்றான்.

"மருதமுத்து! வெள்ளிக்கும் இந்த மாதிரி ஏதாவது ஆயிருக்கு மோன்னு எனக்குக் கவலையா இருக்கு."

"எனக்கு அந்தக் கவலை இல்லிங்க! அந்தக் காரியத்தை வெள்ளிதான் செஞ்சிருக்குன்னு எனக்கு சந்தேகம்! அதான் தலைமறைவாயிடுத்து!"

"ச்சேச்சே!"

"என்ன ச்சேச்சே? உங்களுக்குக் கதை தெரியாதுங்க, ராத்திரி..."

"ராத்திரி?"

சற்று தயங்கிச் சொன்னான். "எங்க ரெண்டு பேரையும் பார்த்து சந்தேவப்பட்டு பொறாமைப்பட்டு வெறி வந்திருக் கணுங்க அதுக்கு!"

"ராத்திரி நீ வெள்ளியப் பார்த்தியா?"

"விட்டுத் தள்ளுங்க... விசாரணையில தானா எல்லாம் வெளில வருது. எத்தனை நா தலமறவா இருக்க முடியும் சே! பலிகாரப் பாவி! கண்டுபிடிக்கறனா இல்லியா பாருங் களேன். எங்கடி ஒளிஞ்சுருவே நீ. எனக்கு அது பதுங்கற எடமெல்லாம் தெரியுங்க. பச்சைக் குளத்தில் மண்டபம் இருக்குதுங்க. அங்க போவும். மேவலாபுரத்தில ஆத்தா வூட்டுக்குப் போயிருக்கும். அப்புறம் டவுன்ல அவுங்க அத்தை மவ ஒருத்தி இஸ்கோலில இருக்காங்க. அங்க போயிருக்கும். ரெண்டு நாள் தலமறைவா இருந்துட்டு திரும்ப வந்துதானே ஆவணும்? என்ன சொல்றீங்க?"

"தலைமறைவா எதுக்கு இருக்கணும்?"

"நீங்க வேற!"



"மருதமுத்து! மேம்பட்டிக்கு எப்ப திரும்பிப் போகப் போறே?"

"ஏன்?"

"சாயங்காலம் வரைக்கும் ஒண்ணும் நடக்காது போலிருக்கே?"

"அது எப்ப நடந்தாலும் நான், சினேகம்மா அப்பா அம்மா வர்ற வரைக்கும் காத்திருந்து கடமையை முடிச்சுட்டுத்தான் திரும்பப் போறங்க. அதுவரைக்கும் பச்சத் தண்ணிகூட சாப்பிட மாட்டேன்."

"எனக்கு ராத்திரி பூரா கண் முழிச்சது உடம்பு ஒரு மாதிரி இருக்கு. திரும்பிப் போய்ட்டு நான் சாயங்காலம் வாரனே!"

"சரிங்க, நான் காவல் இருக்கங்க... சைக்கிள் ஒண்ணு வாடகைக்கு எடுத்துத் தரட்டுங்களா?"

சைக்கிளை மெதுவாக மிதித்துக் கொண்டு மேம்பட்டிக்குள் நுழைய கிராமம் ஏறக்குறைய காலியாக இருந்தது. அரச மரத்தடியில் ஆட்கள் இல்லை. கோயில் பூட்டியிருந்தது. முதல் நாள் மண்டபம் வெறிச்சோடியிருக்க, தெருவில் மணி மட்டும் தேடிக் கொண்டிருந்தது.

ஜமீன் வீட்டை அடைந்து தன் அறையைத் திறந்து சட்டை பேண்ட் எதையும் கழற்றாமல் படுக்கையில் விழுந்தான். சிறு நேரம் தான் தூங்கியிருப்பான். யாரோ காலைப் பிறாண்டும் உணர்ச்சி ஏற்பட்டுத் திடுக்கிட்டு விழித்தான்.

வெள்ளி!

## 15

**வெ**ள்ளி மிகவும் களைத்திருந்தாள். அழுக்காக இருந்தாள். தலை மயிரில் புழுதி படர்ந்து ஒன்றிரண்டு இலைச் சருகுகள் ஒட்டிக் கொண்டிருந்தன. கன்னத்தில் சிவப்புக் கீறல். கண்களில் அளவில்லாத பயம் தெரிந்தது. நெற்றிப் பொட்டு அழிந்திருந்தது. உதடுகள் வறண்டு வெடித்திருந்தன. மார்பு, உயிர் விடப் போகும் பறவை போல துடித்துக் கொண்டிருந்தது.

"வெள்ளி! என்ன ஆச்சு?"

சுற்றிலும் மிரண்டு பார்த்து சன்னமான, ஹீனமான குரலில், "அய்யா! என்னைக் காப்பாத்துவிகளா?" என்றாள்.

"என்ன வெள்ளி? உன்னை எல்லோரும் தேடிண்டிருக்காங்க!"

"போலீசுக்காரங்க கிட்ட காட்டிக் கொடுத்திராதிங்கய்யா! என்னைக் காப்பாத்துங்கய்யா! எனக்கு ஒரு வளி சொல்லிப் போடுங்கய்யா... நா முளுக்க பதுங்கி, பயந்து இங்க வந்திருக்கன். செய்வதறியாம, தெரியாம, வெறியில அந்த காரியம் செஞ்சன். பயமா இருக்குது!" என்று கதறி அழுதாள்.

"இரு, இரு. என்ன செஞ்ச வெள்ளி நீ?"

"அந்தப் பொண்ணைக் கொன்னு போட்டுட்டனுங்க!"

"அடிப்... பாவி!" கல்யாணராமன் திகைத்தான், அவளை அவநம்பிக்கையுடன் பார்த்தான். "நீயா?"

"அய்யா, என்னக் காட்டிக் கொடுத்துராதிங்க... எனக்கு ஒரு வளி சொல்லிப் போடுங்கய்யா... உங்க காலைப் புடிச்சுக் கெஞ்சுதேன்," குனிந்தாள்.

கல்யாணராமன் ஒதுங்கிக் கொண்டு, "அதெல்லாம் வேண்டாம். எழுந்திரு" என்றான்.



"செயிலுக்கு அனுப்பி தூக்குக்கவுத்தை மாட்டுவாக. காலும் கையும் துடிக்கத் தொங்கவிட்டு வேடிக்கை பார்ப்பாக. அய்யோ! என்னைப் பெத்தவளே! யம்மாடி! நான் என்ன செய்வேன்?"

"இரு இரு... பினாத்தாதே."

அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணில் ஒத்திக் கொண்டாள். "கைவுட்ராதிங்கய்யா! நான் விரும்பி செஞ்ச காரியமில்லை... தெரியாம அறியாம செஞ்சன்..."

"வெள்ளி! நீ சினேகலதாவைக் கொட்டினுட்டியா?"

"ஆமாங்க."

"மை காட்! பாவிப் பொண்ணே! ஏன் அப்படி செஞ்சே?"

கல்யாணராமன் மனத்தில் குழப்பமான எண்ணங்கள். 'இவளை வைத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறேன்? ஒளித்து வைப்பதா? காட்டிக் கொடுப்பதா?' அவளைப் பார்த்தான். மார்புப் புடவை யெல்லாம் கண்ணீரில் நனைந்திருந்தது. நெற்றியைச் சுருக்கி மூக்கைச் சிந்தி கீழே குந்தி உட்கார்ந்து கொண்டு தலையைப் பிடித்துக் கொண்டு வாய் விட்டு அழுதாள்: "அய்யோ தெய்வமே! தெய்வமே!"

"நாள் பூரா எங்கே இருந்தே?"

"கருப்பங்காட்டில ஒண்டி இருந்தேனுங்க. காலைல போனவதான். இருட்டினப்புறம் காத்திருந்து உங்களைப் பார்க்க வந்தனுங்க. அய்யா ஒருத்தரைத்தான் நம்பியிருக்கேன். என்னைக் காப்பாத்துங்க. என் விதி. என் புத்தி பிசகிப் போச்சுங்க. எனக்குப் பயமா இருக்குதுங்க. யம்மாடி!"

"இத பார்! சும்மா அழுது பிரயோசனமில்ல. நடந்ததைச் சொல்லு. நான் உனக்கு எவ்வளவு தூரம் உதவி பண்ண முடியுமோ செய்யறேன்."

"என்னைக் காப்பாத்துவிங்களாய்யா? காப்பாத்து விங்களாய்யா?"

"பினாத்தாதே. என்ன நடந்தது? சொல்லித் தொலை!"

"அடிக்காதிங்கய்யா! நான் அநாதை. ஆத்தா இல்லாத சென்மம்!" மறுபடி மடை திறந்த அழுகை.

அவள் அழுது முடிக்கக் காத்திருந்தாள். விகாரமான பயத்தில் சோர்ந்த மனநிலையில் இருக்கிறாள். "கல்யாணராமன்! இதோ உனக்கு ஒரு பரீட்சை. எதற்கு வம்பு என்று பேசாமல் இவளைக் காட்டிக் கொடுத்து விடலாம் அல்லது வம்பை விலைக்கு வாங்கலாம். வெள்ளியை உண்மையாக நேசித்தால் அவளுக்கு நீ அடைக்கலம் தர வேண்டும். பயப்படுகிறாய். உன்னுடைய காதல் சமாதான காலத்துக் காதல். உன்னுடைய பத்திரங்கள் உத்திரவாதமான பிறகு ஓர் உபத்திரவமற்ற சௌகரிய மான சூழ்நிலையில்தான் உனக்குக் காதல், ஏயப்பா! இந்த மாதிரி மூர்க்க சந்தர்ப்பத்தில் காதலா முக்கியம்...? உன் தலை விதிதான் முக்கியம். ஆளை விடு பெண்ணே! அவ்வளவு தானா நீ? நான் யார்? ஏதோ அன்னியன். இந்த விவகாரம் ரொம்ப முற்றிவிட்டது. இந்தப் பொண்ணுக்கு உதவி செய்தால் சத்தியமாக நானும் மாட்டிக் கொள்வேன். விவகாரம் கொலைவரை சென்று விட்டது. சட்டத்துக்கு எதிரில் நான் யார்...? எதற்கு வம்பு...? இருந்தும் இருந்தும்..." அவளைப் பார்த்தான்.

மூக்கை 'கர்ர்' என்று சிந்தினாள். "ராத்திரி ரெண்டு பேரும் வில்லுப் பாட்டு நடக்கிற போது பாதியில 'புறப்பட்டுப் போறதைப் பார்த்தனுங்க. அவங்க பின்னாடியே போனனுங்க. முதல்ல அந்தப் பொண்ணு; அப்புறம் இவரு போனாரு. ரெண்டு பேரும் ரூம்புக்குள்ளற போயி வெளக்கணைச்சிட் டாங்க. எனக்கு அப்படியே உடம்பு பூரா பத்திக்கிட்டு வந்தது. சின்னப் புள்ளையிலிருந்து இந்த மனுசனை ஒரு ராத்தேசாவும் விடாம கொண்டாடுதன். போற பாதையைப் பூப்போட்டுக்



கும்பிட்டிருக்கன். 'உன்னைத் தவிர ஒருத்தரை நினைச்சதில்லை. எனக்கு நீ இந்த துரோகம் செய்யலாமய்யா? நீ உருப்படு வியா'ன்னு இங்கேருந்தே உரக்கச் சத்தம் போட்டுக் கேட்ட னுங்க. அங்கருந்து கத்தறாரு- 'சும்மாரு செத்த சவமே'ங்காரு. அங்கருந்து கல்லெடுத்துப் போடுதாரு! அளுதுகிட்டே வீட்டுக்கு வந்துட்டன். படுத்துட்டன். உடம்பு முச்சூடும் எரியுதுங்க. வில்லுப் பாட்டுக் கேட்டுக்கிட்டே இருக்குது. நீலியம்மன் கதை யாவகத்தில் வருது. அம்மன் தனக்குத் துரோகம் செஞ்சவங்களைச் சென்ம சென்மமாத் துரத்துது. என் முன்னால இசக்கியம்மா வந்ததுங்க. 'எதுக்கடி பொண்ணே பாத்துப் பாத்துப் பதுங்குதே, மூதேவியைக் கொன்னு போட்டு ரத்தம் குடி'ன்னு சொல்லிச்சு எழுந்தேன்; நடந்தேன். நான் நடக்கலிங்க- இசக்கியம்மன் தாங்க நடந்தது; என்னைய நடக்க வைச்சுது. பயமே இல்லாம நேரா நடந்து போறன். பாதையில கல்லெடுத்துப் பொறுக்கிக்கிட்டேன். இருட்டில ரூம்பு வாசல்ல அந்தப் பொண்ணு நிலா வெளிச்சத்தில உட்கார்ந்திருக்கா. பாவிப் பெண்ணே! என் குடியைக் கெடுத்தியேடி'ன்னு கல்லை ஓங்கினேன். அப்படியே அவ தலைமேல் போட்டன்.

"ஓ நோ...!"

"நான் இல்லிங்க! அம்மன்தாங்க கொன்னுடுச்சு! இசக்கி அம்மன்- பழயனூர் நீலி!"

"உளறாதே! இத பார் வெள்ளி, நீ செஞ்சது பெரிய குற்றம். அது தெரியுதா உனக்கு?"

"செத்துப் போயிரும்னு நான் நினைக்கலிங்க! பார்க்காம நேரா திரும்பி வந்துட்டன். காலையில குளிக்கப் போனப்பதான் விசயம் தெரிஞ்சது... அய்யா! செய்வது செஞ்சனுங்க. அம்மன் சொல்லித்தான் செஞ்சன். நான் செய்யலிங்க!"

"வெள்ளி, இப்படி யெல்லாம் யாரும் எடுத்துக்கமாட்டாங்க! நடந்தது உன்னுடைய பொறாமையினால!"

"பொறாமையில்லைங்க! ஆசை; இந்தப் பாவி மனுசன் மேல பைத்தியம்! அதனாலங்க! ஏய்யா, நீ வாரிக் கிட்டுப் போமாட்டியா! இப்பகூட உன்னையைப் பத்தி தான்ய நினைக்குது பாவிமனசு! அய்யோ, யாரோ வர்ற சத்தம் கேட்குதே! அய்யா! என்னை கைவிட்டுராதிங்க!" அவள் கண்கள் கெஞ்சின. பேசிக் கொண்டே சிலர் நடந்து வரும் சப்தம் கேட்க, வெள்ளியிடம் பொறியில் அகப்பட்ட பறவையின் தவிப்புத் தெரிந்தது. யோசித்தார்கள். தீர்மானித்தான். பீரோவை நகர்த்தி கண்டாமுண்டா சாமான்கள் இருந்த அந்த அறைக் கதவைத் திறந்தான். "சீக்கிரம்! அங்கே போய் ஒளிஞ்சுக்க! நான் வரவரைக்கும் சத்தம் போடாம அங்கேயே இரு."

அவளை ஏறக்குறையத் தள்ளிவிட்டுக் கதவை மூடி பீரோவை மறுபடி நகர்த்தி மறைத்தான்.

இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் பெரியசாமி, அய்யாத் துரை மூவரும் வந்தார்கள்.

"ஷ்! அப்பாடா!" என்று துண்டை உதறிவிட்டு உட்கார்ந்தார் அய்யாத்துரை.

"என்ன... அந்தப் பொண்ணோட அம்மா அப்பா வந்தாங்களா?"

"எங்கே? இன்னும் தகவலே வரலியே! நாளைக்குத் தான் முடியும்போல இருக்கு!"

"மருதமுத்து எங்கே?"

"வெள்ளியைத் தேடிக்கிட்டிருக்கான்!"

"வெள்ளியா? எதுக்கு?"



"எல்லாரும் வெள்ளியைத் தேடிக்கிட்டிருக்காங்க. மேலவாபுரத்துக்கு ஆள் போயிருக்குது..."

இன்ஸ்பெக்டர் முதல் தடவையாகப் பேசினார். "மிஸ்டர் கல்யாணராமன்! நீங்க வெள்ளியைக் கடைசியா எப்ப பார்த்தீங்க?"

திடுக்கிட்டான். "வெள்ளியா...? வந்து ஏன்?"

"அந்தப் பொண்ணுதான் இந்தக் கொலையைச் செஞ்சிருக்குன்னு தோணுது. ஆதாரங்கள்ளாம் அப்படித்தான் இருக்குது" என்றார் அய்யாத்துரை.

"பெரியசாமி! நீ போயி அந்தப் பூசாரிப் பயலை இளுத்துக்கிட்டு வா!" என்றார் இன்ஸ்பெக்டர். "விசயம் வெளில வந்துரும் பாருங்க அய்யாதுரை... மிஸ்டர் கல்யாணராமன்! மருதமுத்து நடந்ததையெல்லாம் சொன்னான். அவங்க ரெண்டு பேரும் பழகினதை அந்தப் பொண்ணு தப்பா எடுத்துக்கிட்டு சண்டை போட்டபோது நீங்க இருந்திங்களாமில்ல? நீங்க என்ன நினைக்கிறீங்க!" இன்ஸ்பெக்டர் ஆங்கிலத்துக்கு மாறினார். "அந்தப் பெண் வெள்ளி எப்படிப்பட்டவள்? இந்தக் காரியத்தை- பொறாமையினால் ஒரு கொலை- செய்யக் கூடியவள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

கல்யாணராமன் திகைத்தான். என்ன சொல்வது?

"நான் நினைக்கவில்லை. ஆனால் என் முடிவு தப்பானதாக இருக்கலாம். ஒரு பெண்ணின் மனத்தை, அதன் ஆழத்தை அளவிடுவது அத்தனை சுலபமான காரியமில்லை" என்றான்.

"அவள் எப்படிப்பட்ட பெண்? சினேகலதாவையும் அவளையும் ஒப்பிட்டால் இரண்டு பேரில் யாருக்கு உடல் வலிமை அதிகம்?"

"உடல் வலிமையைவிட மன வலிமையை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் என்ன சொல்கிறது?"

"பின் மண்டையில் பலத்த அடி. மூளைக்குள் ரத்தப் பிரவாகம்... இந்த வளையலைப் பாருங்கள்!"

பச்சை நிறத்தில் ஒரு கண்ணாடி வளையல் துண்டைக் காட்டினார். "வெள்ளி அணிந்திருந்த கண்ணாடி வளையல். மருதமுத்து, அவள் அப்பன் இருவருமே அடையாளம் காட்டியிருக்கிறார்கள். சினேகலதாவின் அறை வாசலில் கிடந்தது. அவள் ராத்திரி இங்கே வந்திருக்கிறாள்.

"வேறு ஏதாவது சமயத்தில் வந்தபோது விழுந்திருக்கலாமல்லவா?"

"இல்லை. நேற்று மாலை சந்தையில் அவள் பச்சை வளையல் வாங்கினதை அவள் தோழிகள் சொல்கிறார்கள். இதையெல்லாம்விட முக்கியமான பிரச்சனை- அவள் ஏன் தலைமறைவாக இருக்கிறாள்?"

கல்யாணராமன் தயக்கத்துடன், "ஏன்?" என்றான்.

"கண்டுபிடித்துவிடலாம். ஓப்பன் அண்ட் ஷட் கேஸ்! என்னய்யா பெரியசாமி! பூசாரி எங்கே?"

பூசாரி தயங்கித் தயங்கி வந்தான். பனியன் போட்டிருந்தான். அவன் கண்களில் இருந்த தெய்வீகம் அத்தனையும் கரைந்து போய் அப்போது அதீதமான கோழைத்தனம்தான் தெரிந்தது. இன்ஸ்பெக்டரை உன்னிப்பாகக் கவனித்தான். அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

"அந்தப் பொம்மையை எடு பெரியசாமி, யோவ் பூசாரி இதை ஞாபகம் இருக்குதா?"

பூசாரி அந்தத் துணி பொம்மையைப் பார்த்தான். அவன் நெற்றி நரம்புகள் புடைந்து ஓடின.

"இருக்குதுங்க!"

"என்ன இது?"

"வெள்ளிக்கு மந்திரிச்சுக் கொடுத்ததுங்க!"



"எதுக்கு?"

"சும்மாதாங்க!"

சற்றும் எதிர்பாராமல் இன்ஸ்பெக்டர் தன் முழங்காலால் பூசாரியின் வயிற்றில் விண்ணென்று உதைக்க, அவன் 'யெம்மா!' என்று பின் பக்கம் சாய்ந்து, "அடிக்காதீங்க!" என்றான்.

"பொய் சொல்லாதே! பில்ட்டால வீறிப்புடுவேன்! அந்தப் பொண்ணுகிட்ட என்ன சொல்லி விட்ட?"

பூசாரி மடங்கி உட்கார்ந்து தன் வயிற்றைத் தடவிக் கொண்டு இருமினான். இன்ஸ்பெக்டர் பிணத்துடனும் ஆஸ்பத்திரியிலும் அலைந்து அந்த தினத்தின் எல்லா அலுப்புகளின் முத்தாய்ப்பாக, ஒருவித ஸேஃப்டி வால்வாக அந்த அடி அடித்ததும் சற்று அமைதியானார்.

"சொல்லுங்க பூசாரி; உண்மையைச் சொன்னா உங்களை உட்டுருவேன்."

"சாலாச்சி சத்தியமா சொல்லிடறங்க. வெள்ளி என்கிட்ட வந்து, 'பூசாரி, அந்தப் பொண்ணு சக்களத்தி மாதிரி வந்திருக்கா, அவளை எப்படியாவது தீர்த்துறணும். காவு வாங்கிட்டு ஒரு மந்திரம் செபிச்சு விபூதி கொடுத்து அந்த வீட்டில அந்தம்மாவுக்குப் பக்கத்தாப்பல போட்டுட்டு வந்துருன்னு சொன்னங்க, அவ்வளவுதான்... அது தப்பாங்க!"

"பூசாரி அந்தப் பொண்ணு சமீன் பேத்தியைப்பத்தி என்ன சொல்லிச்சு?"

"ஒரேயடியா தீர்த்துக் கட்டிறதுக்கு வெஷம் கொடு பூசாரின்னுச்சு. நான்தான் வேண்டான்னுட்டன்! ஊரை விட்டு விரட்டினாப் போறும்னுட்டன்! அதுக்குத்தாங்க மந்த்ரம் வெச்சன்!"

"உன்னைய விரட்டணும்! பொரணி பண்ணிக்கிட்டு ஊரை ஏமாத்திக்கிட்டு! இதென்ன கோணூசி? இதுக்கென்ன அர்த்தம்?"

"பொம்மைல குத்தினா அவுங்களுக்கு வவுத்தில ஊசி குத்தற மாதிரி வலி வரும்னு ஐதீகம்!" என்றான் பயந்து.

"ரூபா எவ்வளவு வாங்கினே?"

"சாஸ்தி இல்லீங்க! இன்ஸ்பெட்டரய்யா, விஷயம் இப்படி விவரீதமாவுமுன்னு, அந்தப் பாவிப் பொண்ணு இப்படி செஞ்சு போட்டிருமுனு தெரிஞ்சிருந்தா நானே சரியானபடி புத்தி சொல்லிப் போட்டிருப்பனுங்க. ஏதோ வவுத்துப் புளைப்புக்குங்க மாந்திரிகம். எனக்கு ஆறு புள்ளிங்க, அம்புட்டும் பொட்டப் புள்ளிங்க. கோயில்ல வர்ற வருமானத்தில..."

"சரிதான்! போய் நில்லுய்யா அந்தப் பக்கம். பொட்டைக் கெம்மனாட்டி மாதிரி அளுவாதே!"

"கொடையெல்லாம் நின்னு போயிருச்சு!" என்றார், அய்யாத்துரை.

"சிகரெட்டு இருக்குதில்ல?" என்றார் இன்ஸ்பெக்டர். அவருக்கு சிகரெட் கொடுத்துப் பற்ற வைத்தான்.

"ஒரு பொண்ணு ஒரு ஊரைவிட்டு எங்கே போயிற முடியும்? திருநிலம் டேசன்ல வர்றது ரெண்டு வண்டி. டேசன்ல நல்லாத் தெரியும். அங்கே வரலையாம். வெள்ளிய பஸ் ஸ்டாண்டில பார்த்திருந்தா டீக்கடையில நிச்சயம் சொல்லியிருப்பான். நடந்துதான் போயிருக்கணும். நடந்து எத்தனை தூரம் போக முடியும்? அல்லது ஊருக்குள்ளேயே எங்கேயாவது ஒளிஞ்சிருக்கணும். என்ன சொல்றீங்க, அய்யாதுரை?"

"ஊருக்குள்ளே ஒவ்வொரு எடமும் பார்த்தாச்சு! கிணறு, குளம், கருப்பந் தோட்டம்- எல்லா எடத்திலையும் பார்த்தாச்சு! ஊருக்குள்ள இல்லீங்க!"

"இந்த சமீன் வீடு?"

"சமீன் வீட்டில இன்னும் பார்க்கலிங்க!"



"பெரியசாமி! நீ ஒருக்கா இந்த வீட்டைத் துப்புரவாப் பாத்துரு. பதுங்கறதுக்கு நிறைய இடம் இருக்குதுல்ல?"

பெரியசாமி தயங்குவதைப் பார்த்த இன்ஸ்பெக்டர் "உனக்கு எவன்யா கான்ஸ்டபிள் உத்தியோகம் கொடுத்தான்? பயந்து சாவறியே" என்றார்.

அய்யாத்துரை, "இப்பகூட அந்தப் பொண்ணை முனிதான் அடிச்சிருச்சுன்னு கிராமத்தில செலபேர் பேசிக்கிறானுங்க" என்றார்.

"முனியாவது.. ராவது! வாய்யா பார்க்கலாம்! டார்ச் வெச்சிருக்கியா?"

"இல்லிங்க!"

"கல்யாணராமன், டார்ச்சு இருக்கா?"

கல்யாணராமனின் டார்ச் விளக்கை வாங்கிக் கொண்டு இன்ஸ்பெக்டரும் பெரியசாமியும் செல்ல, பூசாரி, "அப்ப நானு?" என்றான்.

"நாளைக்கு ஊட்டாண்ட வந்துரு! இன்ஸ்பெக்டர் எல்லாரையும் விசாரிக்கப் போறாரு" என்றார் அய்யாத்துரை.

மாடியில் அவர்கள் இருவரும் நடக்கிற சப்தம் கேட்டது. மாடியில் தேடிவிட்டு மெதுவாக அந்த அறைக்கு வருவார்கள்; பீரோவை நகர்த்திப் பார்ப்பார்கள்!

அய்யாத்துரை, "காலையில ஒரு வா காப்பித் தண்ணி குடிக்கினதுங்க, அவ்வளவுதான்" என்றார்.

வெள்ளிக்குப் பசிக்குமே என்று வேதனைப்பட்டான். சற்று நேரத்தில் இன்ஸ்பெக்டரும் பெரியசாமியும் கீழே இறங்கி வந்தார்கள்.

"பொதுவா எல்லா ரூமும் பூட்டியிருக்குது" என்றார் இன்ஸ்பெக்டர். கல்யாணராமனின் அறையைச் சுற்று முற்றும் பார்த்தார்.

"இது என்ன பீரோ?" என்றார்.

## 16

பெரியசாமி பீரோவின் அருகே சென்று அதைத் திறந்தான். கல்யாணராமனின் உள்ளம் பதைத்தது. கடவுளே! பீரோவுக்குப் பின்னால் இருக்கும் கதவை அவன் கவனித்து, அதைத் திறந்து உள்ளே வெள்ளியைக் கண்டுபிடித்து விட்டான் என் நிலை மோசமாகிவிடும். நானும் அந்தக் கொலைக்கு உடந்தையாகி விடுவேன்!'

முதல் கவலை தன்னைப் பற்றி இருப்பதில் கொஞ்சம் வெட்கமும் ஏற்பட்டது. அந்தப் பெண், பாவம்!

பெரியசாமி பீரோவுக்குப் பின்புறக்கதவைக் கவனித்து விட்டான். "இந்தக் கதவு எங்கே போவுதுங்க?"

கல்யாணராமன், "தெரியாது. அங்க கதவு இருக்கா என்ன!" என்றான்.

"ஆமா! பாருங்க!"

"ஏதோ உள்ளே பூட்டியிருக்கிற ரூமா இருக்கும். நான் போனதில்லை."

"உள்ளே போய்த்தான் ஒரு நோட்டம் பாத்திரேன்யா!" என்றார் இன்ஸ்பெக்டர். கல்யாணராமனின் விரல்கள் நடுங்கின. 'வெள்ளி! நீ உள்ளே எங்கிருக்கிறாய்?'

"சரிங்க, நீங்களும் வரீங்களா?"

"சரிதான். பயமா? சரியான கான்ஸ்டபிள்யா நீ!"

"வா பெரியசாமி, பார்த்துறலாம்" என்றான் கல்யாணராமன். மெதுவாக முனகிக் கொண்டே கதவு திறந்தது. இருட்டாக இருந்தது. கல்யாணராமனின் டார்ச் வெளிச்சம் அந்த அறையில்



அடைந்திருந்த, இறைந்திருந்த பொருள்கள் ஒவ்வொன்றின் மேலாக விழ, வெள்ளி எங்கேயாவது கண்ணில் படாமல் மறைந்திருக்க வேண்டுமே என்று மிகக் கவலையாக இருந்தது. "இங்கே யாருப்பா வரப்போறாங்க?" என்றான், "வந்தாக்கூட என் ரூம் வழியாத்தானே வர முடியும்?"

"அவரு ஏதோ சொல்லுதாருங்க. தும்பை விட்டுட்டு வாலைப் புடிக்கிறாங்க. இது முனி அடிச்ச கேஸ்தாங்க! எனக்கு வெள்ளித் தெரியும். அது இதெல்லாம் செய்யாது. அவ்வளவு பலமோ தகிரியமோ கிடையாது. சொன்னா கேக்க மாட்டேங்காரு!"

ஒரு பீரோவின் ஓரமாக வெள்ளியின் புடவை தெரிந்தது. பட்டென்று விளக்கைத் திருப்பி விட்டான். பெரியசாமி தும்மினான்; பார்க்கவில்லை.

இருவரும் வெளியே வந்தார்கள். "உள்ளாற ஒருவரும் இல்லை ஸார்!" என்றான். சைக்கிள் மணி சப்தம் கேட்க, வெளியே தங்கராசு அவசரமாகத் தெரிந்தான்.

"இன்ஸ்பெட்டர் ஐயா இருக்காரா?"

"என்னய்யா?"

"இந்தத் தந்தியை வாங்கிப் பாருங்க. ஒன்னும் புரியல. டவுன்ல படிக்கச் சொன்னாக. சரியா அர்த்தமாவல."

"இன்ஸ்பெக்டர் தந்தியை வாங்கிப் பார்த்தார். கல்யாணராமனைப் பார்த்தார்.

"எப்ப வந்தது இது?"

"சாயங்காலம்! இங்க வந்து விசாரிச்சுட்டு டவுன்ல கொணாந்து கொடுத்தாங்க. ஏழு மணியிருக்கும். உடனே எடுத்தாந்துட்டேன்."

"இதென்னய்யாது புதுக்குழப்பம்?"

கல்யாணராமன் தந்தியை வாங்கிப் படித்தான். "தங்கராசு மேம்பட்டி பஞ்சாயத் யுவர் டெலகிராம் பஸ்லிங். தேர்ஈஸ் நோ சினேகலதா இன் அவர் ஃபேமிலி. ஆல் அவர் டாட்டர்ஸ் ஆர் அலைவ்." - டி.வி.ராஜா. கல்யாணராமன் தங்கராசுவை நிமிர்ந்து பார்த்தான். "என்னய்யா இது? நீதானே சொன்னே?"

"டி.வி. ராஜாங்கறது யாருய்யா?"

"அதாங்க சின்னவரு. பெரிய ஜமீன்தாருடைய இளைய மகனுங்க. அவருடைய பொண்ணுதான்னு சொல்லிக்கிட்டு சினேகலதா... அம்மா... தந்தி இவருதான் கொடுத்தாருங்க."

"என்ன தந்தி கொடுத்திங்க?"

"உங்க பெண் சினேகலதா அகாலமா இறந்து போய்ட்டா, உடனே புறப்பட்டு வரவும்'னு."

"இப்ப அந்த ஆளு 'சினேகலதாவா! அது யாரு?'ன்னு திரும்பி தந்தி அடிச்சிருக்காரு. யோவ் தங்கராசு! என்னய்யா இதெல்லாம்?"

தங்கராசு முகத்தில் குழப்பத்துடனும் அசட்டுத்தனத்துடனும் கையைப் பிசைந்தான். இன்ஸ்பெக்டரைப் பயத்துடனும் கவலையுடனும் பார்த்தான்.

"எப்படி நீ அந்தப்பொண்ணுதான் சமீன் பேத்தின்னு தீர்மானிச்ச?"

"தீர்மானிக்கலிங்க! அதுவாத்தான் வந்து சொல்லிச்சு!"

"எப்ப?"

"முத முதல்ல அது வந்தப்ப. அய்யா வந்து சேர்ந்த மறுநா திடீர்னுதாங்க வந்தது. சட்டை, கால்சராயெல்லாம் போட்டுக்கிட்டு சிங்காரமா வந்து நின்னு தங்கராசுன்னு பேர் சொல்லிக் கூப்பிடுதுங்க. பெரிய சமீன், சின்ன சமீன் எல்லாம் பேரும் சொல்லுதுங்க. அப்பா அனுப்பிச்சாரு, நம்ம சமீன் வீட்டில இருந்துட்டு வான்னு சொன்னாரு'ங்குது. 'கடுதாசி எழுதியிருந்தாரே வரலியா'ங்குது. இதை யெல்லாம் கேக்கவும், பேரெல்லாம் ஒழுங்காகச் சொல்லி, சின்னவரு பெரியவரு செய்யற உத்தியோகம், மனைவி மக்கள் எல்லாம் சரியாச் சொல்லவுமே நான் நம்பிட்டேன். நம்பறது என்னங்க? சந்தேகமே படலியே! அப்ப இந்தப் பொண்ணு யாரு?"



"சரிதான்! புதுசா இது ஒரு தலைவலியா?"- இன்ஸ்பெக்டர் கல்யாணராமனைப் பார்த்தார். "இந்தப் பாழாப் போற கிராமத்தில் நான் என்னத்தைக் கண்டுபுடிக்கிறது? பாதிப் பேரு அந்தப் பொண்ணை முனி அடிச்சிருக்குங்கறாங்க. அந்தப் பொண்ணு வெள்ளியைக்காணம். அவ மேல ஸர்கம்ஸ்டான்ஷியலா எவிடன்ஸ் இருக்கு. தலைமறைவாத்தான் எங்கேயோ பதுங்கி இருக்கான்னு தோணுது. இப்ப என்னடான்னா அந்தப் பொண்ணு சமீன் பேத்தி இல்லைங்கறாங்க! கொன்னது யாரு? கொல்லப்பட்டது யாரு? ரெண்டுமே இப்ப தெரியலே! சபாஷ்; சரியான கேஸு. ஏன்யா அறிவு கெட்டவரே! இப்படி திடுப்புன்னு ஒரு பொண்ணு வந்து நாந்தான் சமீன் பேத்தின்னா உடனே வூட்டைத் திறந்து விட்டுர்றதா? ஆனா உன்னையும் சொல்ல முடியாது... பொண்ணு ஷோக்கா இருந்திருக்கு!... கஜானாவையே திறந்து காட்டிருவியே! உன்னைத் தெரியாதா என்ன? திருநிலத்தில் அதுயாரு? ஜமீலாவா?"

"என்னங்க நீங்க!"

"அப்புறம் கடுதாசி வந்துதா?"

"இல்லிங்க."

"அப்பவே சந்தேகப்பட்டிருக்க வேணாம்?"

"அதானே?"

"என்ன அதானே? நான் கேட்டது என்ன?"

தங்கராசு திருதிருவென்று விழித்தான். இன்ஸ்பெக்டர் கல்யாணராமனைப் பார்த்து ஆங்கிலத்தில் "இவனே உடந்தையாக இருப்பான் என்று எண்ணுகிறேன்" என்றார்.

கல்யாணராமன், 'நான் அப்படி எண்ணவில்லை' என்றான்.

"நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"குழப்பம்! சினேகலதா ஏதோ ஒரு திட்டம் போட்டு ஒரு தீர்மானமா வந்திருக்காங்கறது எனக்கு அப்பவே தெரிஞ்சு போச்சு. ஒரு தடவை அவளைக் கேக்கக்கூட கேட்டுட்டேன். சிரிச்சு மழுப்பிட்டா. இன்ஸ்பெக்டர் நீங்க மருதமுத்துவைத் தீர விசாரிக்கணும். மருதமுத்துவோட அடிக்கடி கூடிக்கூடிப் பேசினா அந்தப் பொண்ணு! அதனாலதான் அந்த வெள்ளிப் பொண்ணு தகராறே வந்தது."

"திட்டமா? என்ன திட்டம்!"

"சொல்ல முடியலியே!" கல்யாணராமனின் மனத்தில் ரத்னாவதியின் டயரியும் அந்த செண்பகப்பூவும் உறுத்தியது. 'இப்போது சொல்ல வேண்டாம். மருதமுத்துவை அவர் தீர விசாரிக்கட்டும். எல்லாம் இப்போது இரண்டாம் பட்சம். சினேகலதா யார் என்று தெரியாவிட்டாலும் சினேகலதாவைக் கொன்றது வெள்ளி என்பது எனக்கு மட்டும் தெரிந்து. அதை விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் திகைக்கிறேன். இருட்டறையில் அந்தப் பெண்ணை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறேன்? மலைப்பாக இருக்கிறது. எத்தனை நாள் பொய் சொல்ல முடியும்? எத்தனை நாள் அவளைப் பதுக்கிவைத்திருக்க முடியும்?'

"மருதமுத்து எங்கய்யா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"வெள்ளியைத் தேடிக்கிட்டிருக்கான். வர்றன்னான். இப்ப அந்தப் பிரேதத்தை என்ன செய்வீங்க?"

"அய்யாதுரை வரட்டும், அவருகிட்ட ரிப்போர்ட்டு திருத்தி எளுதி வாங்கிக் கிடணும். 'பேவாரிசு, இன்னாருன்னு தெரியாத பொணம்'னு அய்யய்ய... தொந்தரவுய்யா!"

அவர்கள் பேசுவது அவன் உணர்வில் பதியவில்லை.



'சினேகலதா, யார் நீ?' நான் இங்கு வந்த முகம் தினம் இரவிலிருந்து நிகழ்ந்த துண்டு துண்டான சம்பவங்கள் எல்லாம் இப்போது இணைந்து கொண்டன. 'முதல் தினம் மாடியில் நாற்காலி நகர்த்தும் சப்தம் காலடிஓசை "நாட்டுப் பாடலாம்! யார்கிட்ட கதை விடறீங்க? உண்மையா எதுக்கு வந்திருக்கீங்க... சொல்லிடுங்க" கைப்பிடிச்சுவரிலிருந்து ஒருவன் மரக்கிளைக்குத் தாவி கீழே இறங்க, "எல்லாத்தையும் படிச்சுட்டீங்களா?" "இன்னும் இல்லை." சினேகலதா அந்தப் புத்தகத்தைத் தன் பெட்டிக்குள் வைத்துப் பூட்டுகிறாள்... "மருதமுத்துவும் நானும் ஒரு தனி எடத்துக்குப் போகப் போறோம், இல்லை மருதமுத்து?" "ஆமாங்க. போய் பூப்பறிக்கப் போறோம் செண்பகப்பூ" இருவரும் ஏதோ பகிர்ந்த ரகசியத்தில் சிரிக்கிறார்கள்... அப்புறம் மருதமுத்து கொண்டு வந்த தாம்புக் கயிறு...!

"இன்ஸ்பெக்டர், நீங்க மருதமுத்துவைத் தீர விசாரிச்சுட்டீங்கன்னா விஷயம் வெளியில வரும்னு தோணுது."

"என்ன விஷயம்?"

"சினேகலதா எதுக்கு வந்தா? அவ யாரு?"

"அதைவிட இப்ப அந்த வெள்ளிப் பொண்ணைக் கண்டு பிடிக்கிறது முக்கியம். ரெண்டு நாளா ராத் தூக்கமில்லாம சோதனைங்க. முந்தா நா மந்திரி வராருன்னு ஒரு மணியாய் டுச்சு.

பெரியசாமி, தங்கராசு, இன்ஸ்பெக்டர் மூவரும் கிளம்பிச் சென்று, அவர்கள் பேச்சு மறைந்து இரண்டு நிமிஷம் ஆன பின், கல்யாணராமன் அறைக் கதவை உட்பக்கம் தாளிட்டுக் கொண்டு பீரோவை நகர்த்தி அந்த அறைக் கதவைத் திறந்து துடிக்கும் இதயத்துடன் உள்ளே சென்று, "வெள்ளி!" என்று கூப்பிட்டான்.

பதில் இல்லை.

"வெள்ளி! பயப்படாதே. அவங்கள்ளாம் போயிட்டாங்க. நீ வெளியில வரலாம்!" அந்த இடத்தில் டார்ச் அடித்தான்.

பதில் இல்லை.

"வெள்ளி!" மெதுவாக அந்தப் பீரோவின் அருகே சென்று அதன் பின்புறத்தில் பயத்துடன் எட்டிப் பார்த்தான். வெள்ளி மார்பைப் பிடித்துக் கொண்டு மூலையில் பசை போல் ஒட்டிக் கொண்டிருந்தாள். கண்களில் அத்தனை பயம். "வெள்ளி! ஒருத்தரும் இல்லை. வா உன்னோட பேசணும்."

மெதுவாக, தயங்கி வெள்ளி வெளிப்பட்டாள்.

"அய்யா என்னைப் புடிச்சுக் கொடுக்கலியா?"

"இல்லை."

வெள்ளி அவனை நன்றியுடன் பார்த்தாள். "திரும்ப வந்துட்டாகன்னா?"

"வரமாட்டாங்க! வா என்னோட. அவங்க மறுபடி வந்தா பழையபடி இந்த இடம் இருக்கவே இருக்கு."

"தன்மேல் படிந்திருந்த ஒட்டடையைத் தட்டிக் கொண்டாள். இருவரும் அறைக்கு வெளியே வந்தார்கள். ஒரு தடவை தும்மினாள். வியர்வையில் உடம்பு பூரா நனைந்து மார்புடன் உடை ஒட்டிக் கொண்டிருந்ததனால் தன் அங்கங்கள் தெரிவதை அவள் மதித்ததாகத் தெரியவில்லை. சிறைப்பட்ட பறவையின் மருள் கண்களில் இன்னமும் தெரிந்தது.

"போலீசுக்காரங்க என்ன சொன்னாக?"

"எல்லாரும் உன்னைத் தேடிண்டிருக்கா."

"என்னால அய்யாவுக்கு எவ்வளவு கஷ்டம். என்னை எப்படியாச்சும் எங்கப்பாருகிட்ட ரகசியமாகக் கொண்டு விட்டிருங்கய்யா!"

"சரிதான்! முதல்ல போலீஸ்காரங்க அங்கதான் காத்துண்டிருப்பாங்க!"



"நான் என்ன செய்யறது? எங்கப்பாரு அல்லாடுவாருங்க. அவரைவிட்டு ஒரு நாப் பிரிஞ்சதில்ல. அந்தாளு பூசாரி சொன்ன வார்த்தையைப் பார்த்திங்களா? வெசம் வெக்கணு மின்னு அவங்கிட்ட கேட்டனாம். பச்சைப் பொய்யுங்க! அந்தாளுதான் 'கோளி கொண்டா காவு வாங்கிரு, எல்லாஞ் சரியாயிரும்'னாரு. இருபத்தஞ்சு ரூபா சில்லறை கொடுத்தனுங்க."

"எதுக்கு?"

"சூனியம் வெக்க பொம்மை செஞ்சு தந்தாரு. அதில ஊசியக் குத்தி விபூதியோட அவ வீட்டு வாசலில் வெச்சாக்கா பொடவையெல்லாம் பத்திக்கும்னாரு. அதையும் செஞ்சன்! ஒண்ணும் நடக்கலிங்க. அப்புறம்தான் அன்னிக்கி ராத்திரி இப்படி வெவரீதமாய்டுச்சு. எம்மேல அம்மன் வந்துருச்சு."

"இத பார் வெள்ளி! இந்த அம்மன் பிஸினஸை முதல்ல விட்டுத் தொலை. 'எம்மேல சாமி வந்துதான் இப்படிச் செஞ்சேன்'னு சொன்னா எந்தக் கோர்ட்டிலயும் ஒப்புக்கொள்ள மாட்டாங்க!"

"அதானுங்களே உண்மை" என்றாள் பயபக்தியுடனும் அச்சத்துடனும்.

"அய்யோ! உன்னை வெச்சுண்டு என்ன செய்யப் போறேன்?"

"அய்யாவுக்குக் கஷ்டமா இருந்தா நான் போயிர்றங்க!" உடனே கண்களில் கண்ணீர்.

"இரு இரு! உனக்கு அடைக்கலம் கொடுக்கறதினால எனக்கு எவ்வளவு ஆபத்து தெரியுமா? நானும் ஒருவிதத்தில் உடந்தை ஆயிடறேன்."

"அதனாலதாங்க உங்களுக்குத் தொந்தரவு வேணாங்க. நான் போறேன்."

"எங்க போவே?"

"அதாங்க அவருகிட்ட!"

"மருதமுத்துவா? அவன் உன்னைத் தேடிண்டிருக்கான்! அவள் முகம் மலர்ந்தது. "அப்படிங்களா?"

"போலீஸ்கிட்ட புடிச்சுக் குடுக்க!"

"சே, இருக்காதுங்க! அவரு துரோகஞ் செய்ய மாட்டாரு!"

"இன்னம் நீ அவனையே நினைச்சுண்டு அழறியா?"

"அவருக்காகத்தான் நான் இந்தக் காரியம் செஞ்சனுங்க! அந்த ராட்சசி அவரை அப்படியே அணைச்சு விஷத்தைக் கொடுத்துக்கிட்டிருந்தா. அவகிட்டேருந்து அவரைக் காப்பாத்துத் தானே அம்மன் எம்மேல வந்து கல்லெடுத்துப் போட்டு...!"

"மறுபடியும் அம்மன்! யூ ஸ்டுப்பிட் கர்ள்!"

"திட்டாதிங்கய்யா" என்று அவன் காலில் விழுந்தாள்.

'கால்லே விழாதே! மேலே விழு' என்று மனத்திற்குள் சொன்னான் கல்யாணராமன். அவன் மனத்தின் பிளவுகளில் பற்பல சாத்தியங்களை யோசித்தான். வெள்ளியை உபயோகித்து விட்டு காலையில் காட்டிக் கொடுத்தது ஒரு கறுப்பு ஓரம். அவளை இரவோடு இரவாகப் பட்டணத்திற்கு அழைத்துச் சென்று பெயரை மாற்றி, பின்னலை வெட்டி, உருவத்தை மாற்றி, ஆங்கிலம் கற்றுக் கொடுத்து... ம்ஹூம்!

"வெள்ளி, முதல் தடவை பார்த்தபோதே உன்னை எனக்குப் பிடிச்சு போச்சு. அதனாலதான் உனக்கு உதவி பண்றேன். என்ன?"

"அய்யா, நீங்க தெய்வங்க!"

"சட்! எனக்கு தெய்வ ஸ்தானம் வேண்டாம் வெள்ளி!"

எப்படிக் கேட்பது? 'வெள்ளி நான் உனக்கு உதவி செஞ்சா நீ..."

"உயிருள்ள வரைக்கும் நாங்க ரெண்டு பேரும் உடம்பை செருப்பாத் தெச்சி உங்களுக்கு உழைப்பங்க!"



"யார் ரெண்டு பேரும்? நீயும் மருதமுத்துவும்?"

"ஆமாங்க."

"பைத்தியம்.. பைத்தியம்! அவன் உன்னைப் புடிச்சுக் கொடுக்க அலையறான். நீ..."

"அவரு என்னை ஒரு நாளும் காட்டிக் கொடுக்க மாட்டாருங்க. அவ மயக்கம் தெளிஞ்சதும் பாருங்க! 'வெள்ளி! வெள்ளி கண்ணே! உனக்குத் துரோகம் செஞ்சன் புள்ள. என்னைய மன்னிச்சுரு'ன்னு..."

"பின்ன ஏன் என்கிட்ட வந்தே? அவன் கிட்டேயே போறதுதானே?"

"அதான் தெரியலிங்களே!"

"கருமம்!" என்று தலையில் அடித்துக் கொண்டான்.

"அந்தாளுக்குப் புத்தி கிடையாதுங்க! பரக்கப் பரக்க அவ பின்னாடி அலஞ்சாரே தவிர, உள்ளூர என் மேலே தான் ஆசை. ஆனா போனா எனக்கு இந்த மாதிரி செஞ்சு போடுன்னு வழி சொல்லச் சாமர்த்தியம் கிடையாதுங்க! அதான் உங்ககிட்ட வந்தன்!"

கல்யாணராமனுக்கு அசாத்திய கோபம் வந்தது. தன்னுடைய பலவீனத்தின் மேல் தயக்கத்தின் மேல் கோழைத்தனத்தின் மேல். வெள்ளிகூட தன்னை உபயோகிக்கிறாள்.

"சாப்பிட்டியா ஏதாவது?" என்றான் எரிச்சலுடன்.

"இல்லிங்க!"

ஓரத்தில் இருந்த ரொட்டியில் பாதியைப் பிய்த்துக் கொடுத்தான். கொஞ்சம் சர்க்கரை கொடுத்தான் "சாப்பிடு" என்றான். அதை வேண்டா வெறுப்பாகக் கடித்தாள். நேர்பார்வை பார்த்தாள். ஜன்னலுக்கு வெளியே சினேகலதாவின் அறை தெரிய, அதைப் பார்த்து விசும்பி அழ ஆரம்பித்தாள்.

"என்ன இப்ப?"

"ஒரு சின்ன எறும்பைக்கூட கொல்ல மாட்டங்க. எனக்கு எங்கிருந்து வந்தது இந்த வைராக்கியம்? எல்லாம் இந்தப் பாவி மனுசனுக்காக. இன்னமும் நீ அவளைத்தான் நினைச்சுக் கிட்டிருக்கியா? என் மதிப்புத் தெரியாதா உனக்கு...?"

"எக்காவ், நீ இங்க இருக்கியா?"

"யாரு?" -திடுக்கிட்டுத் திரும்பினான் கல்யாணராமன். ஜன்னலிலிருந்து வெள்ளியின் தம்பி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ராசவேலு! நீ எங்கடா இங்கே வந்தே?"

"யக்கோவ்! ஊரெல்லாம் உன்னையத் தேடுதாக! மருதமுத்து அண்ணன் உன்னைப் பார்த்தா உடனே தகவல் சொல்லச் சொன்னாரு. சொல்லிட்டு ஓடியாந்துர்றேன்."

"ஏய் ஏய் இரு! இரு! போகாதே!"

அதற்குள் அந்தச் சிறுவன் 'டுர்ர்ர்' என்று வாயால் டிராக்டர் ஓட்டிக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடிப் போய்விட்டான்.

## 17

ஓடிப்போன சிறுவனை வெறித்துப் பார்த்துத் திரும்பினான் கல்யாணராமன்.

வெள்ளி, "பாவிப்புள்ளே... உடனே போயி ஊரெல்லாம் சொல்லிப் போடுவான். என்ன செய்வன்?" என்று பதைத்தாள்.

கல்யாணராமன், "வெள்ளி, நீ போய் மறுபடி அங்கே தான் ஒளிஞ்சுக்கணும். போய்டு. நான் சமாளிச்சுக்கறேன்" என்றான்.

"அவுங்க திரும்ப ரூம்புக்குள்ளாற வந்து பார்த்தாங்கன்னா?



"பாத்தா மாட்டிக்க" என்றான் எரிச்சலுடன்.

அவள் பயந்து போய், "நான் ஓடிப் போயிரட்டா?" என்றாள்.

"உளராதே...! ஓடி எங்கே போவே? கிளம்பின உடனே மாட்டிப்பே. சீக்கிரம் அங்க போய்ப் பதுங்கு!"

தயங்கினாள். "மாட்டிக்குவன்னு பயமா இருக்குதுங்க!"

திருதிருவென்று விழித்துக் கொண்டு நின்றவளைப் பார்த்ததும் கல்யாணராமனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

"வெள்ளி! கிட்டக்க வா!" என்றான்.

உடனே வந்தாள். அவள் நகங்களைப்பார்த்தான்.

"என் கைல உன் நகத்தால கீறிடு. பார்க்கலாம். நீ என்கிட்டருந்து திமிறிண்டு தப்பிக்கண்டு போயிட்டாப்பல அவுங்க வந்தா நம்ப வைக்கணும்... வா, கீறு!"

வெள்ளி தயங்கி, "இல்லிங்க, மாட்டங்க!" என்றாள். பின் வாங்கினாள். மற்றொரு யோசனை உதித்தது. அவளைத் திடீரென்று பற்றியிழுத்து அணைத்துக் கொண்டான்.

"விடுங்க" என்று வெறித்தனமாகத் திமிறினாள். விடாமல் மூச்சு முட்டினாள். அவள் திமிற கை நகங்களால் அவன் மேல் கீறி விட்டாள். உடனே விட்டுவிட்டு, "அதான் எனக்கு வேணும். இது போதும். நீ போய் அந்த ரூம்ல பதுங்கிக்க. நான் மத்ததைப் பார்த்துக்கறேன்," என்று கீறின இடத்தைப் பார்த்துக் கொண்டான்.

வெள்ளி திகைத்து, கல்யாணராமனை நன்றியுடன் பார்த்து, "அய்யா, உங்களுக்கு..." என்று ஆரம்பிக்க "அதுக்கெல்லாம் நேரமில்லே. ஓடு... ஓடு!" என்றான். அவள் உள்ளே சென்று மறைந்தாள். சற்று நேரம் மௌனமாக நின்றான். கையில் சிறு எதிர்ப்புடன் கீறிவிட்டாள். மெள்ள அந்த இடம் உயிர் பெற்று ரத்தக் கோடாகிக் கொண்டிருந்தது. ஆட்கள் வரும் சத்தம் கேட்டது. அரிக்கேன் விளக்கு, தீப்பந்தம், ஒன்றிரண்டு

டார்ச்சு விளக்குகள். மருதமுத்து முதலில் வர, உடனே வெள்ளியின் தம்பிப் பயல், தங்கராசு, பெரியசாமி எல்லோரும் வர, சற்றுப் பின் இன்ஸ்பெக்டரின் குரல்கூட தாழ்வாரத்தில் கேட்டது.

"எங்க அவ?" என்றான் மருதமுத்து நுழைந்ததும்.

"யாரு?"

"வெள்ளி!"

"ஓடிப் போய்ட்டா." என்று தன் புண்ணைப் பார்த்துக் கொண்டே சொன்னான். "சரியான விலாங்குய்யா, அந்தப் பொண்ணு! என்ன திமிறல்! காட்டுப் பூனை மாதிரிக் கீறிட்டு...!"

"ஓடிட்டாளா! எந்தப் பக்கம்? எங்க போனா?"

"நேரா கிராமப் பக்கம்தான் ஓடிப் போனதாப் பட்டுது. எவ்வளவோ பேச்சுக் கொடுத்து நிறுத்தப் பார்த்தேன். இந்தப் பையன் முந்திரிக் கொட்டை மாதிரி, 'எக்கா'ங்கவுமே உடனே உஷாராயிட்டா. புடிக்கப் பார்த்தேன். பிறாண்டிட்டு ஓடிப் போயிட்டா!"

"வுட்டுட்டிங்களா?"

"எப்படிப் புடிச்சு வெச்சிருக்க முடியும். சொல்லு மருதமுத்து?"

"நல்ல காரியம் செஞ்சிங்கய்யா! அந்த மூதேவி கொலைக்குத்தம் செஞ்சவன்னு உங்களுக்குத் தெரியாதாய்யா? ஒரு பொம்பளையாளு- அவளைப் புடிச்ச வெச்சுக்கத் துப்பில்லிங்களா? செவுட்டில ஒரு அறை! பொடனியில ஒரு வெட்டு! என்ன ஆம்பிளை நீங்க?"

"மருதமுத்து! என்ன பேச்சு வளருது?"

மருதமுத்து ஏமாற்றத்துடன், "சட்! வாங்கடா போவலாம். கிட்டத்தான் இருக்கணும். தங்கராசு, நீ காவாப் பக்கம் போ. பெரியசாமி, நீ ஊர்ப் பக்கம் பாத்துரு... நான் ஒத்தையடிப் பாதையில தோப்புப் பக்கம் போறேன்."



இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். "என்னய்யா?" என்றார்.

"ஆளை வுட்டாச்சுங்க!"

"என்னது?"

"ஆமாங்க! ஏன்யா, ஒண்ணும் அறியா பொண்ணைக் கொலை செஞ்சுக் கல்லெடுத்து தலையை ஒடைச்சுப் போட்ட கிராதகப் பொண்ணை...அவளைப் போய் வுட்டுட்டிங்களேய்யா?"

"எனக்கென்ன தெரியும்? அவமேல சந்தேகம் இருக்கறதாத் தானே இதுவரை போச்சு!" இன்ஸ்பெக்டர் தன்னை விசேஷமாகக் கவனிப்பதைக் கல்யாணராமன் கவனித்து, அவர் பார்வையைத் தவிர்த்தான். "சீக்கிரம் போய்ப் பாருங்கள்! இப்பத்தான் ஓடித்து. நானே கிளம்பலாம்னு இருந்தேன். இந்த இருட்டில பாதை தெரிஞ்சவங்க..."

"கொஞ்சம் இருங்க" என்றார் இன்ஸ்பெக்டர். "லே! இந்தால வாலே! உம் பேரென்ன?"

"ராசவேலு!" என்றான் வெள்ளியின் தம்பி.

"ராசவேலு! நீ வர்றப்போ என்னதாண்டா பார்த்தே? உங்கக்காவை எங்க வெச்சுப் பார்த்தே?"

"அய்யா கூட பேசிக்கிட்டிருந்தாப்பல!"

"சண்டை போட்டாப்பலியா?"

"ச்" என்று தலையாட்டினான்.

"பின்னே?"

"ரூம்புக்குள்ளாற இருந்து அக்கா வருது பார்த்தன். அய்யாகூடப் பேசிக்கிட்டிருந்திச்சு!"

"அய்யா புடிச்சு இழுத்து அடிச்சு ஏதாவது செஞ்சாரா?"

"ச்! அய்யா நல்லவுரு. அக்காவை என்ன ஏதுன்னு விசாரிச்ச ரண்டு பேரும் நல்லாதான் பேசிக்கிட்டிருந்தாக!"

இன்ஸ்பெக்டர் கல்யாணராமனைப்பார்த்து, "என்ன மிஸ்டர் கல்யாணராமன்!" என்றார், அதட்டலுடன். அதற்குள் மருதமுத்து தன்னிச்சையாக அவனிடம், "அப்படியா சேதி!" என்று கையைப் பிடித்தான். "பேசிக் கிட்டுத்தான் இருந்திகளா! எங்கெய்யா அவ?"

"இத பார்! நான் பொய் சொல்லலை. கையில கிறிட்டு அவ ஓடிப் போனது நிஜம்! கையைப் பாருய்யா ரத்தம்!"

"ரெண்டு பேரும் ஒடந்தைங்க!"

"என்ன உளர்றே?"

"இந்தாளே அவளை ஒளிச்சு வெச்சிருக்காருன்னு தெரியுது ஏன்யா! ரெண்டுபேரும் சேர்ந்து சினேகம்மாவைக் கொன்னுட்டு... திருதிருன்னு முளிக்கிறான் பாரு... பாப்பாரப் பய!"

"போடுறா ஒண்ணு புட்டத்தில!"

"ஏய் இருங்கடா!"

அவர்கள் மெதுவாக அவனை அணுகுவது கண்டு கல்யாண ராமனின் உடலில் கண்டபடி எச்சரிக்கைகள் சுரந்து மயிர்க் கால்கள் சிலிர்த்து உடல் நடுங்கி... 'அய்யோ!' மருதமுத்துவின் முதல்அடி அவன் இடுப்பில் பட்டு உலக அளவுக்கு வலிப் பந்தாக விரிந்தது... 'கக்' என்று இருமினான்.

"மருதமுத்து, இரு இரு! இன்ஸ்பெக்டர்!" அவன் மேல் பற்பல கைகள் பாய்ந்தன. "என்ன இது, பார்த்துக் கிட்டே இருக்கீங்க..."

"டேய்! கொஞ்சம் இருங்கடா! பெரியசாமி! அந்த ரூமுக்குள்ளே சரியாப் பார்த்துட்டு வா! ஒளிச்சு வெச்சிருந்தா அந்த ரூமுக்குள்ளதான் இருக்கணும். இத பாருங்க,



மிஸ்டர் கல்யாணராமன்! நீங்க எங்கிட்ட ஏதாவது மறைக்கிறதா மட்டும் தெரிஞ்சா, இவுங்க அடிக்கிற அடிக்கு நான் பொறுப்பாக மாட்டேன்! ஏய்! கொஞ்சம் இருங்கடா. வீடு முச்சூடும் தேடிப் பார்த்துறலாம்! இருங்கடா, கொஞ்சம் பொறுங்க! பெரியசாமி, மருத முத்து... உள்ள போய்ப் பார்த்துட்டு வாங்க..."

பீரோ நகர்த்தப்பட்டது. பெரியசாமி, மருதமுத்து, தங்கராசு, வெள்ளியின் தம்பி, இன்னும் சிலர்- எல்லோரும் வெள்ளி ஒளிந்திருந்த அறைக்குள் தடதடவென்று நுழைய, கல்யாண ராமன் "நோ! நோ!" என்று திகிலில் கத்தினான். "அங்கே யாருமில்லே! சொன்னாக் கேளுங்கோ யாருமில்லே!" அவன் கண்கள் இருண்டன. 'வெள்ளியை அழைத்து வந்து நிறுத்தி அந்த மூர்க்கர்கள்- அவர்களுக்குத் தற்போது இருக்கும் மடத்தன மான கோபத்தில்- என்ன செய்யப் போகிறார்களோ? இன்ஸ்பெக்டர் பார்த்துக் கொண்டா நிற்பார்? ம்ஹூம்! ஆனால் அவர் பார்க்காதது போல் வெளியில் போய் நின்று கொள்ள, இவர்கள் பேருக்குப் பேர் வெள்ளியை... ஓ! வேண்டாம்! வெள்ளி! ஸாரி! உன்னைக் காப்பாற்ற நினைத்து அந்த அறைக்குள் சிறைப்படுத்தி மாட்டிக் கொள்ள சௌகரியம் செய்து விட்டேன்.'

மருதமுத்து வெளியே வந்தான். அவன் பின் பெரிய சாமி. அவன் பின் மற்றவர்கள்... அதன்பின்... வெள்ளி வரவில்லை.

"என்னய்யா?"

"இல்லிங்க!" என்றான் மருதமுத்து குனிந்த தலையுடன்.

"இல்லியா! சரியா தேடிட்டிங்களா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"சல்லடை போட்டுத் தேடியாச்சு! காங்கல!"

கல்யாணராமனுக்குள் காரணம் இன்னும் புரியாத உற்சாகம் பிறிட, வலியைக் கூட மறந்து, "நான் சொன்னனா, இல்லியா?

என்னைப் போய் சொன்னிங்களே! இப்ப என்ன? தேடுய்யா! வீடு பூராவும் தேடிக்கோ! தேடுறா! என்னைப் போய் அனா வசியமா அடிக்கிறீங்களே? வஸ்தாத்! ஓராளை எட்டுப் பேரு அடிச்சிங்களே!"

"ஏய்?"

"மத்த இடங்களையும் எதுக்கும் பார்த்துடு பெரிய சாமி!"

"நான் சொன்னனா இல்லியா? நம்பிக்கை இல்லியா? இத்தனை நேரம் அவ நாலு மைல் ஓடி போயிருப்பா! என்னவேகம்! என்ன வெறி!" 'ஜாக்கிரதை! குரலில் அதிக உற்சாகம் கூடாது. எங்கே போனாள்? அறைக்குள் தானே சென்றாள்?'

"வாய்யா, வீடு மூச்சூடும் பார்த்துறலாம்."

அவர்கள் வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் தேடினார்கள்.

"நீங்க உக்காந்துக்குங்க, கல்யாணராமன். கொஞ்சம் அடிப்பட்டிருக்கிங்க. முரட்டுப் பயலுவ! அப்படித்தான் திமிறு கண்ட்ரோல்ல வராம ஏதாவது செஞ்சுடுவாங்க!"

"என்ன இருந்தாலும் நீங்க பார்த்துக்கிட்டு இருந்தது எனக்கு ஆச்சரியமா இருந்தது, இன்ஸ்பெக்டர்."

"பார்த்துட்டு இருந்தேனா? விலக்கி விட்டதுனால நீங்க பொழைச்சிங்க! உங்களைப் காப்பாத்தினதே நான்தான்! தெரியுமா?"

"ரொம்ப தாங்க்ஸ்!" என்றான் நன்றி கலக்காமல்.

"சொல்லுங்க, எப்படி உங்ககிட்ட வந்தா அந்தப் பொண்ணு?"

"என்னைத் தேடிண்டு வரலை. என்னவோ அவளாத்தான் வந்தா...."

"கொலை பண்ணது பத்தி ஏதாவது சொல்லிச்சா?"



ஒன்றை மறைத்தாகிவிட்டது. மற்றொன்றையும் மறைத்து விடலாம். "இல்லை; ஒண்ணும் சொல்லலை."

"ஏன் ஒளிஞ்சிருந்ததாம்? ஏன் தலைமறைவாம்?"

"ஏன்னு சொல்லலியே!"

"பின்ன என்னதான் சொல்லிச்சு?"

"அய்யா! அய்யா! என்னைக் காப்பாத்துங்கய்யா! அவ்வளவு தான்!"

"நீங்க என்ன செஞ்சிங்க?"

"நான் பேச்சுக் கொடுக்கறேன். பிரமை பிடிச்சாப்பல இருந்தா. நீங்க யாராவது வர வரைக்கும் பேச்சுக் கொடுக்கலாம்னுட்டு... அவளோட அன்பா ஆதரவாப் பேசினேன்."

"எங்கேருந்து வந்தா?"

"அந்தப் பையன் சொன்னது நிஜம்தான். அந்த ரூம்லதான் ஒளிஞ்சிண்டிருந்தா. அந்தப் பையனைப் பார்த்ததும் 'நான் போறங்க! போறங்க'ன்னு ஆரம்பிச்சுட்டா. 'இரு வெள்ளி, அவன் ஒருத்தர்கிட்டேயும் சொல்லமாட்டான்'னு சொல்லிப் பார்த்தேன். அவ கிளம்பிட்டா. அவளைப் பிடிச்சேன். நகத்தாலே கீறிட்டா."

தோட்டத்தில், தோப்பில் எல்லாம் அவர்கள் வெள்ளியைத் தேடும் சந்தடி கேட்டது. மாடியில், ஹாலில் எங்கும் தேடுகிறார்கள். எங்கே அவள்? அவனுள் சந்தோஷ உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாகக் கரையத் துவங்கியது. 'எப்படி மாயமாய் மறைந்தாள்? எங்கே மறைந்தாள்? அந்த அறை என்ன அவளைச் சாப்பிட்டு விட்டதா? அவர்கள் எல்லோரும். போனபின் பார்க்க வேண்டும்.

"அவ மறுபடி வந்தா..."

"இனிமே வரமாட்டாள்னு நினைக்கிறேன்..." என்றான் கல்யாணராமன்.

'எங்கே ஓடிற முடியும்? விடியறதுக்குள்ளாற புடிச்சுடலாம். கொஞ்சம் பதுங்கியிருந்துட்டு அப்பன் வூட்டுக்குத் தான் வரும். அங்கே காத்திருந்தா கோளிக் குஞ்சை அமுக்கறாப்பில அமுக்கிடலாம்... காலையில பார்க்கலாங்க!"

தேடித் தேடி அலுத்து அவர்கள் ஊரை நோக்கிச் சென்றார்கள். கை விளக்குகள் இருட்டில் கரைந்துவிட்டன. சேதப்பட்ட நிலா, மரத்தின் மேல் தெரிந்தது. கல்யாண ராமன் பயப்படமாட்டான். உள் பக்கம் தாளிட்டுக் கொண்டான். சினேகலதாவின் அறைப் பக்கத்து ஜன்னலை மூடிவிட்டான். மனத்தில் இருந்த அந்த ஜன்னலை மூடமுடியவில்லை. அந்தக் கதவினூடே சினேகலதாவின் சிரிப்பு அடிக்கடி தெரிந்தது.

'ஏன் இன்னும் இங்கேயே இருக்கேன்ங்கிறீங்களா? போறேன் போறேன். இன்னும் கொஞ்ச நாள்!'

'நல்லா கை தட்டுவன் அய்யரே! கடாட்சம் இருக்கணும்!'

சினேகலதாவின் நினைவுகள் துரத்த, டேப்ரிக்கார்டரைத் தட்டினான்.

"மல்லிகைப்பூ மெத்தையிலே
மாதங்கூடத் தூங்கலையே!"

தடக்கென்று சப்தம் கேட்டுத் திடுக்கிட்டான். "வெள்ளி!" என்றான். பதில் கிடையாது. மெல்ல எழுந்தான். டார்ச் வெளிச்சத்துடன் அந்த அறைக்குள் மறுபடி சென்றான். 'அவள் எப்படி வெளியே தப்பித்திருக்க முடியும்?' "வெள்ளி வெள்ளி!"

உள்ளே இருக்கும் பீரோவின் பின்னால்தான் ஒளிந்திருந்தாள். இப்போது இல்லை. மெதுவாக டார்ச்சை அங்கும் இங்கும் உலவ விட்டான். ஜன்னல் ஓரத்தில் தூசியில் அவள் காலடிச் சுவடு தெரிந்தது. இங்கே கால் வைத்து, பீரோவின் மேல் கால் வைத்து... அதன் மேல் எப்படி ஒளிந்து கொள்ள முடியும்? இடம் போதாதே... இல்லை. வெண்டிலேட்டர்



தெரிந்தது. அதன் தாழ்ப்பாள் திறந்திருப்பது தெரிந்தது. ஒரு ஆள் சற்று சிரமத்துடன் நுழைந்துவிடக் கூடிய வெண்டிலேட்டர். அது இருப்பது தன் அறையிலிருந்து வந்த வெளிச்சத்தில் கூடச் சற்று தெரிந்தது. கல்யாணராமனுக்குப் புரிந்து விட்டது. அங்கே நடந்த வாக்குவாதத்தைக் கவனித்திருக்கிறாள். அவர்கள் அறைக்குள் வந்து தேடக்கூடும் என்று பயந்து அவசர வழி தேடியிருக்கிறாள். மேலே அந்தக் குறுகிய வெண்டிலேட்டர் தெரிந்திருக்கிறது.

வெளியே எங்கே போயிருப்பாள்? மாடியில் எல்லாம் துப்புரவாகத் தேடினார்களே? எங்கிருந்து அவளுக்கு அந்த அமானுஷ்ய சக்தி வந்தது? அமானுஷ்ய சக்தி! முதலில் கொல்வதற்கு! அப்புறம் தப்பிப்பதற்கு!

தப்பித்துச் சென்றுவிட்டாள். அவள் தன் அப்பன் வீட்டுக்குச் செல்லாமல் இருக்க வேண்டும். சென்றால் நிச்சயம் மாட்டிக் கொண்டு விடுவாள். அங்கே அவர்கள் காத்திருப்பார்கள். பின் எங்கே? எங்கே போக முடியும்! ஊரே அவளைத் துரத்துகிறது. எத்தனை நாள் மறைத்து பதுங்கி வாழ முடியும்? எவ்வளவு தூரம் போக முடியும்? எங்கே போக முடியும்? அதுவும் தனியாக...

வெண்டிலேட்டர் கொடுத்த தற்காலிக விடுதலை எத்தனை நாட்கள், எத்தனை மணி நேரங்கள் தாங்கும்?

தூங்குவதற்குப் பயந்தான். விளக்கணைக்கப் பயந்தான். பேசாமல் கிராமத்தைச் சேர்ந்தவர்களுடன் புறப்பட்டுச் சென்றிருக்கலாம். தங்கராசுவின் வீட்டிலேயோ மருதமுத்துவின் வீட்டிலேயோ படுத்திருக்கலாம். இன்றிரவு தனியாக இருக்கக் கூடாது... என்ன பைத்தியக்காரத் தனமான செயல்! பேசாமல்... பேசாமல் எழுந்து கிராமத்துக்குப் போய் விடலாம்.

தனியாகவா? இல்லை, இல்லை! நான் வெளியே செல்ல மாட்டேன்... அங்கே சினேகலதா... இருக்கிறாள். பெரிய

தாத்தாவின் நடுங்கும் குரல் மெலிதாகக் கேட்டுக் கொண்டே இருந்தது.

“கப்பல் வரும் என்று
கடற்கரையே காத்திருந்தேன்
கப்பல் கவுந்தவுடன் எனக்கு
கடற்கரையும் ஆசையில்லை
தோணி வருதுன்னு
துறைமுகமே காத்திருந்தேன்
தோணி கவுந்தவுடன்
துறைமுகமும் ஆசையில்லை”

அந்தத் தோணி அசைந்து வந்தது. வட்ட நிலாப் பின்னணி யில், வெள்ளி ஜரிகை ஜலத்தில், ஒரே ஒரு சிவப்பு விளக்கை ஆட்டிக் கொண்டு கரிய நிறத் தோணி! மிகக் கறுப்பு! இருட்டு! சாவைப் போல இருட்டு!

“கடாட்சம் வேணும் அய்யரே!”

சினேகலதா உட்கார்ந்திருக்க, பழையனூர் நீலி போல வெள்ளி மிகப் பெரிய கல்லெடுத்து மெதுவாக அவனை அணுகி ஸ்லோமேஷன் திரைப்படம் போல் அதை உயர்த்தி தலைமேல் குறி பார்த்து வருகிறாள்... வருகிறாள். பழையனூர் வெள்ளி... வேண்டாம். போடாதே! கால் விறைத்து, கை விறைத்து, கண் விறைத்துச் சாவாரும்...!

‘சல் சல் சலக் சலக் சல்...’ இது என்ன சப்தம்? ஓ இது நிஜம்! ஓ மை காட்! இது நிஜம்!... என் மனப் பிரமை இல்லை. யாரோ ஒரு பெண் நடந்து வருகிறாள். பெண்தான்! மெதுவாக மெதுவாக! எங்கிருந்து வருகிறாள்? அந்த அறையிலிருந்துதான்! இல்லை. வெளியே! சினேகலதாவின் அறை. இல்லை. அங்கே! இங்கே! என்னை நோக்கித்தான் வருகிறாள்! வருகிறது மெதுவாக! எனக்காகத்தான் வருகிறாள்!

“முன்னெடுத்த பழியதற்காய்
முன்னூறு பழியுங் கொண்டு...”



ஐயோ! யார்? யார்...? கல்யாணராமன் ஆயுதம் தேட நினைத்து, எழுந்திருக்க நினைத்து, எதுவும் சாத்தியமில்லாமல் ஸ்தம்பித்து, அப்படியே அந்தச் சலங்கை ஒலி வரும் திசை நோக்கி அதன் வக்கிரமான வசிகரத்தில் கட்டுண்டு பார்த்து நிற்க... யாரது?

அவள் தெரிந்தாள்.

நகைகளை அணிந்து கொண்டு...

ரத்னாவதி!

## 18

தூக்கமில்லாத இரவின் பிரமையில் ஒரு கணம் அவள் ரத்னாவதி போலத்தான் தோன்றினாள். நனைந்த உடல். நெற்றியில் புறப்பட்டு முத்தாக உதிரும் நீர்த் துளிகள். அவள் அணிந்திருந்த நகைகள். நெற்றியில் சுட்டி நாகப்பூ, வகிட்டை மறைத்துக் கொண்டு, கழுத்தில் சிவப்புக் கல் பதித்த பதக்கம். புஜத்தில் தொத்திக் கொண்டிருந்த வங்கி.

“வெள்ளி! என்ன இதெல்லாம்!” என்றான்.

பிரமை கலைந்து வெள்ளியை அடையாளம் கண்டு கொள்ள ஒரு நிமிஷமாயிற்று.

“நவைங்க! யம்மாடி! எத்தனை நவைங்க! எனக்குக் கிடைச்சது! இன்னமும் இருக்குதுங்க! சூரியப்பூ, சந்திரப்பூ, அட்டியை, ஓலை, மூக்குத்தி, நாகொத்து, மாட்டலு, மோதரம், பில்லை, குஞ்சலம், நெளி, நத்து..”

“ஏய், ஸ்டாப் இட்!”

வெள்ளி கிறுக்குப் பிடித்தவள் போல் தன் மேலிருந்த நகைகளை எடுத்துப் போட்டு ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

"எனக்குக் கெடச்சதுங்க!"

"எங்கே போயிருந்தே நீ? எங்கே ஒளிஞ்சிண்டிருந்தே?

"தோட்டத்துல கெணத்துக்குள்ளாற பதுங்கியிருந்தனுங்க! யம்மாடி! எத்தனை நவைங்க!"

"எங்கே?"

"அங்கதானுங்க... பெரைக்குள்ளாற பொட்டியிருக்குது. தவரப்பொட்டி... கெணறு அவலமா இருக்குதா? சுவத்தில நீட்ட நீட்டமா கல்லுப் பதிச்சு எறங்கறதுக்கு வாகா இருக்குதுங்க. ராத்திரி அவுங்கள்ளாம் என்னைய ரூம்புக்குள்ளாற தேடிக்கிட்டு வந்து தீட்டிக்கிளிச்சிப் போட்டுடுவாங்கன்னு தெரிஞ்சு போச்சு. ரூம்புக்குள்ளாற இருந்தா ஆபத்துன்னு பீரோ மேலே ஏறி சன்னல் வளியா மாடிக்கு வந்து அங்கிருந்து எறங்கி தோட்டத்துப் பக்கம் கெணத்தில எறங்கினனுங்க. இவங்க ராந்தலும் கரண்டு விளக்குமா தேடிக்கிட்டு வராக. பேசாம கிளெ எறங்கி தண்ணிக்குள்ளாற முங்கிட்டன். அவுங்க போனதும் வெளியே வரேன். கிணத்தில உள் சுவரில் ஒரு ஆள் உக்கார்ற மாதிரி பெரிசா பெரை இருக்குதுங்க. எனக்கா மூச்சு வாங்குது. கொஞ்ச நேரம் அங்கு குந்திக்கினேன். கையில என்னமோ தெம்படுது. கீறுது, பொட்டிங்க... தவரப் பொட்டி. திறந்து பாத்தன். கெளக்கு வெளுத்திருக்கு. இருந்தும் கொஞ்சம் தான் வெளிச்சம். பாத்தா டாலடிக்குதுங்க! யம்மாடி! நவையான நவைங்க?"

"கல்யாணராமன் அவள் அணிந்திருந்த நகைகளைப் பார்த்தான். உடனே அவற்றை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. ரத்னாவதியின் பிரபல நகைகள்! கிணற்றின் புரையில் எப்படி வந்தது...?

"எல்லாம் எனக்குத் தாங்க! நாந்தான கண்டெடுத்தனுங்க!"



"நகையை மாட்டிண்டு டிரஸ் பண்ணிண்டு தூக்கில தொங்கு! ஆளைப் பாரு. இப்ப நகையா முக்கியம்? இத பார், முதல்ல உடம்பைத் துடைச்சுக்க. இந்தா துண்டு!" அதற்கு முன்னால் உடம்பை மறைக்க வேண்டும். நனைந்திருந்த அவள் மார்பு பூராத் தெரிந்தது.

என்ன அர்த்தம் இதற்கு? 'பளிச் பளிச்' சென்று கல்யாண ராமனின் நினைவில் சில பிம்பங்கள் தோன்றின. மருதமுத்து இரவு தாம்புக்கயிறு கொண்டு வந்தது எதற்காக? மருதமுத்து! மருதமுத்துவைக் கேட்க வேண்டும். சினேகலதா அவனைப் பயன்படுத்தி அந்த நகைகளைத் தேடியிருக்கிறாளா?

வெள்ளி அந்த நகைகளை அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏய், வெள்ளி! உன் உயிரே போற தருணத்தில நகைதான் முக்கியமாப் படறதா உனக்கு? ஊர் பூரா உன்னைத் தேடறாங்க தெரியுமா? நகையை மாட்டிக்கிட்டு என்ன செய்யப் போற?"

"அவுங்களுக்கெல்லாம் ஆளுக்கு ஒரு நவை கொடுத்துற லாங்க! என்னை வுட்டுறச் சொல்லி போடலாம்."

"உளறாதே!"

அவள் முகத்தில் கலவரம் ஏற்பட, "அதானுங்களே! நான் ஒரு பைத்தியம்! இப்ப நவையா முக்கியம்? இந்த மனுசன் ராத்திரி பேசினதைக் கேட்டிங்கல்ல? ஈவிரக்கமிருந்து பேசுறவுகளாக் காங்கலியே! இன்னும் அவளையே நினைச்சுக்கிட்டிருக்காரே?" என்றாள்.

"சினேகலதாவை நீ கொன்னதில அவனுக்கு அவ்வளவு ஆத்திரம், கோபம். இப்ப நேராப் பார்த்தான்னா மருதமுத்து உன்னைத் தீர்த்துக் கட்டிடுவான்."

"ஆமாங்க! கொஞ்ச நாளாவும் அந்தாளு மனசு மாற!"

"அதுக்குள்ள உன்னை அழைச்சுண்டு போயிடுவாங்க. இத பார் வெள்ளி. ஏன் கொன்னே? ஒரு சின்ன விஷயத்துக்காக ஒரு உயிரைக் கொல்றது எப்படி நியாயம் சொல்லு?"

"நான் கொல்றதா இல்லிங்க. ஆத்திரத்தில கல்லத் தூக்கிப் போட்டனா. அம்மன் சக்தியில...!"

"ஐயோ, ஐயோ! இந்த அம்மனைக் கொஞ்ச நாழி மறந்திருக்கலாமே! அந்தக் கல்லு எங்கே?"

"அங்கேதான் கிடக்கும். தேடினா கிடைக்குங்க."

"பாறாங்கல்லா?"

"ஆமாங்க!"

"மண்டையில போட்டியா?"

"இல்லிங்க, மண்டையில பட்டிருக்காது."

"'ஐயோ'ன்னு சத்தம் வந்ததா?"

"இல்லிங்க, வந்திருக்காது, வலிச்சிருக்காதுங்க."

"வலிச்சிருக்காதா! என்ன பேத்தறே?"

"சின்னக் கல்லுதாங்களே?"

"என்னது?"

"இந்தா பெரிய கல்லு வலிக்குங்களா?" வெள்ளி தன் கட்டைவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே ஒரு இஞ்ச் பரிமாணமுள்ள மானசிகக் கல் ஒன்றைக் காட்டினாள்.

"வெள்ளி! என்ன சொல்றே நீ? இத்துனூண்டுக் கல்லைத்தான் நீ போட்டியா?"

வெள்ளி சிரியலாக, "ஆமாங்க! போட்டனுங்க." என்றாள்.

"அந்தக் கல்லுப் பட்டு சினேகலதா செத்துப் போய்ட்டாளா?"

"ஆமாங்க! பூசாரி சொன்னதும் அதாங்க! அப்படியே ஆய்டுச்சு!"

"அட முண்டம்! உனக்குப் புத்தி கிடையாதா? புளியங் கொட்டை சைஸில ஒரு கல்லெடுத்து ஒரு ஆள்மேல் போட்டா அந்தாளு செத்துப் போயிடுவானா? இது கூடத் தெரியாதா உனக்கு?"



"கல்லுப் பட்டு செத்துப் போயிட்டாங்கன்னு நான் சொல்லலிங்க! அந்தக் கல்லுக்குள்ளாற இருந்த மந்திர மகிமையில! நான் பலி கொடுத்த கோளி, நான் வெச்ச ஏவல்- எல்லாம் சேர்த்துகினு அவளை ரத்தம் கக்க வெச்சுக் கொன்னு போட்டிருச்சுங்க... உங்களுக்குத் தெரியாதுங்க- சாலாச்சி மவுமை."

கல்யாணராமன் தலையில் அடித்துக் கொண்டான். "மை காட்! இப்படியுமா ஜனங்கள்! ஏய் பைத்தியம்! பைத்தியம்! பைத்தியம்! இதுக்கலாமா நீ பயந்து பயந்து ஒளிஞ்சு...! -கல்யாணராமன் சிரிக்க ஆரம்பித்தான் நிதானமாக.

"ஏங்க?"

"வெள்ளி! நிஜமாவே நீ அப்படி நம்பறியா? இல்லை பாசாங்கு பண்றியா? மூடநம்பிக்கை இருக்கலாம். ஆனா அதுக்கு ஒரு எல்லை வேண்டாம்? பகுத்தறிவுங்கறது லவலேசம் கூடக் கிடையாது? ஓ! ப்ளடி... ஹெல்!"

"ஏங்க!"

"இத பார்! சினேகலதாவை வேற யாரோ கொன்னு போட்டிருக்காங்க! நீ இல்லை; உங்க அம்மன் இல்லை!"

"இல்லிங்க!"

"இத பார்! ம்மடத்தனமா, அறிவு கெட்டத்தனமா பாமரத் தனமா பேசாதே! கொன்னது நீ இல்லை! நீ எங்கேயும் ஓட வேண்டாம், ஒளிய வேண்டாம். நிச்சயம் நீ எறிஞ்ச புளியங் கொட்டையால அவ சாகலை!"- சிரித்தான்.

"பூசாரி..."

"பூசாரி புருடாவுட்டிருக்கான்! அதை நீ வேதவாக்கா நம்பி அன்னி ராத்திரி இங்க வந்து அவளைத் திட்டிட்டு கல்லெடுத்துப் போட்டுட்டு சூனியப் பொம்மையை வெச்சுட்டு விபூதி இறைச்சுட்டுப் போயிட்ட, அவ்வளவுதானே!"

"அதாங்க!"

"நீ திட்டினதுக்கு அந்தம்மா பதில் சொன்னாளா? ஞாபகப் படுத்திப் பாரு."

"ம்... இல்லிங்க!"

"ஒரு வார்த்தை சொன்னாளா?"

"இல்லிங்க."

"எங்க இருந்தா அவ?"

"ரூம்பு வாசல்ல வெச்சுப் பார்த்தனுங்க. குந்திக்கினு இருந்தாப்பல."

"சரிதான். இப்பப் புரியறது. நீ வந்தப்ப- ஏய் பைத்தியம், கவனமாக் கேளு. நீ வந்தப்ப அந்த சினேகலதா ஏற்கெனவே செத்துக் கிடந்திருக்கா! அது தெரியாம அவ மேல நீ வெத்துக் கல்லைத் தூக்கிப் போட்டுட்டு, திட்டிட்டு வந்திருக்கே. காலைல அவ இறந்து போன செய்தி கேட்டதும்- நீ போட்ட கல்லு, நீ செஞ்ச பூஜை, கோழி வெட்டு, விபூதி, துணி பொம்மை இன்னும் என்ன? இதெல்லாம் சேர்ந்துதான் அவளைக் கொன்னுடுத்துன்னு பயந்து தலைமறைவாய்ட்டே... அதானே?"

"அதானுங்க! ஐயா, சிரிக்காதிங்க."

"சிரிக்காம என்ன பண்றது? இப்படி ஒரு ஜடமா இருக்கியே!"

"எளுத்தறியாச் சென்மங்க...! அப்ப நான் கொல்லலிங்களா?"

"நீ இல்லை! நீ எதுக்கு போலீசுக்குப் பயப்படணும்? எவருக்கும் பயப்பட வேண்டாம். மறையவும் வேண்டாம். ஒரு எழவும் வேண்டாம்."

"அப்ப யாரு அந்தப் பொண்ணு சினேகலதாவைக் கொன்னுருப்பா? மருதமுத்துப்பயலே தீர்த்திருப்பானா?"

வெள்ளியை மறுபடி பார்த்தான். அவள் அந்த நகைகளைக் கழற்றிக் கொண்டிருந்தாள்.

"எனக்கு வேண்டாங்க!"



நகைகள்! அந்த நகைகள்தான் சினேகலதாவின் மரணத்திற்கு ஆதார காரணம்... அந்த நகைகளுக்குத்தான் வந்திருக்கிறாள்.

"வெள்ளி, எனக்கு அந்த நகைங்க எங்க இருக்குன்னு காட்டுவியா?"

"காட்டறங்க! வெளிய வந்தா..."

"ஒருத்தரும் உன்னைப் பிடிச்சுக்க மாட்டாங்க! என் கூட வா. அவங்கள்ளாம் வர்றதுக்குள்ள அந்த இடத்தைப் பார்த்துடணும்."

அவர்கள் வெளியே வரும்போது சூரியன் முழுவதும் எழுந்து விட்டான். பறவைகள் மற்றொரு காலைக்குத் தயார்படுத்த, தத்தம் குரல்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்தன. துல்லியமான மேகமற்ற வானம், அசையாத மரங்கள்.

**வெ**ள்ளியும் கல்யாணராமனும் அறையை விட்டு வெளியே வர, சினேகலதா அறை சாத்தியிருந்ததைக் கவனித்தான். வாசலில் ரத்தக்கறை இன்னும் உறைந்து காய்ந்து தெரிந்தது. அறை வாசலில்தான் கொலையுண்டிருக்கிறாள். கிணற்றுக்கு உடலை இழுத்துச் செல்ல எத்தனிக்கையில் கல்யாணராமன் சென்றிருக்க வேண்டும். தான் சென்றபோது யாரோ ஓடிப் போகும் சப்தம் கேட்டது ஞாபகம் வந்தது. அன்றிரவு நடந்தது கொஞ்சம் திரை விலக ஆரம்பித்திருக்கிறது. சினேகலதா முதலில் செல்கிறாள். அப்புறம் மருதமுத்து. சினேகலதாவும் மருதமுத்துவும் அறைக்குள் இருக்கிறார்கள். வெள்ளி தொடர்ந்து வந்து அதைப் பார்க்கிறாள். மிகவும் வேதனைப் பட்டு வீட்டுக்குச் செல்கிறாள். மருதமுத்துவை சினேகலதா அனுமதித்திருக்கிறாள். அந்த சல்லாபம் மருதமுத்து அவளுக்கு உதவி செய்ததற்குக் கொடுத்த பரிசா? என்ன உதவி? நகைகள், அந்தத் தாம்புக் கயிறு?

மருதமுத்து, சினேகலதாவை விட்டுச் சென்றானா? சென்றதும் வந்தது யார்...?

அந்தக் கிணறு அமங்கலமாகத்தான் இருந்தது. இறங்கு வதற்கு வாகாக ஸ்பைரல் போலப் படிகள் பதிக்கப்பட் டிருந்தன. கீழே ஜலம் பச்சை நிறமாக இருந்தது. எட்டிப் பார்த்ததில் வெள்ளியும், கல்யாணராமனும் தெரிந்தார்கள்.

"அதோ பாருங்க... பத்தாவது படிக்குப் பக்கத்தில ஒட்டை மாதிரி தெரியுதே. அங்கதான் இருக்குதுங்க- அத்தனை நவைங்களும்."

வெள்ளி சரசரவென்று இறங்கினாள். அந்தப் படியிலிருந்து கூப்பிட்டாள்; "வாங்க! வந்து பாருங்க" 'க்ளக்' கென்று தண்ணீரில் சப்தம் கேட்டது.

கல்யாணராமன் தயங்கித் தயங்கி இறங்கினான்.

"வெள்ளி, உனக்கு நீஞ்சத் தெரியுமா?"

"தெரியுங்க, உங்களுக்கு?"

"பட்டணத்தில காலேஜில நீஞ்சியிருக்கேன். ஆனா கிணத்தில இறங்கினதில்லை."

"பயப்படாதிங்க. ஒரு ஆள் ஒண்ணரை ஆள் ஆளம்தான் இருக்கும்!"

"போறாதா?"

காரை உதிர்ந்தது. ஒரு தவளை டைவ் அடித்தது.

புரையில் அந்தப் பெட்டி இருந்தது. அதன் நாதாங்கியின் பித்தளை பச்சையாக இருந்தது. பெட்டி முழுவதுமே படிந்திருந்த பச்சைப் படலம் ரொம்ப நாளாக அந்தப் பெட்டி தண்ணீருக்கு அடியில் கிடந்திருக்க வேண்டும் என்று காட்டி யது. அதைத் திறந்தான்.

ரத்னாவதியின் நகைகள் அத்தனையும் இருந்தன. இத்தனை நாள் சிதிலமாகக் கிடந்தும், நீரின் ஆழத்தில் கிடந்தும் அந்த நகைகளின் ஆரம்பப் பளபளப்பு மங்கித் தான் இருந்தது. இருந்தும் தங்கம், வைரம், பச்சை, நீலம், பவழம் என்று



வகை வகையாகக் கற்கள் பதித்த எத்தனை நகைகள்! கல்யாண ராமனுக்கே ஒரு க்ஷணம் அவை அத்தனையும் கவர்ந்து செல்ல ஆசை ஏற்பட்டது.

'இல்லை, இல்லை. இந்த நகைகள் தலைமுறைகளைக் கடந்து மரணத்தைப் பரப்பும் நகைகள்... வேண்டாம்...' கீழே வெள்ளியைப் பார்த்து ஸ்தம்பித்தான்.

"வா, வெள்ளி! என் கையைப் புடிச்சுக்க! நீ எடுத்த நகைகள் எல்லாத்தையும் திருப்பி அந்தப் பெட்டியிலேயே வெச்சுடு. இது இருக்கற இடம் வேற ஒருத்தருக்கும் தெரிய வேண்டாம்..."

கல்யாணராமனின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தாள், வெள்ளி. தான் எடுத்து அணிந்து கொண்டிருந்த நகைகளையெல்லாம் கழற்றி, பழையபடி அந்தப் பெட்டிக்குள்ளேயே வைத்தாள்.

"வா, மேலே!"

அவள் கையைப் பிடிக்கும் போது அவள் மார்பில் வேண்டுமென்றே பட்டான். 'ஏறக்குறைய என் ஆதிக்கத்தில் இருப்பவளை நான் எதுவும் செய்ய முடியும்! இதோ நகைச் செல்வம், இதோ, ஒருபெண்! பேசாமல் இரவோடு, இரவாக...'

'ம்ஹூம்! சினேகலதாவைக் கொன்றது - யார் என்பது தெரியாதவரை கிராமத்தை விட்டுப் போகக் கூடாது' என்று மற்றொரு கல்யாணராமன் நினைத்தான்.

கிணற்றைவிட்டு வெளிப்பட்ட கல்யாணராமன் சுற்றும் முற்றும் பார்த்தான். அட!

கிணற்றின் கரையில் ஒரு செண்பக மரம்! ரத்னாவதியின் நோட்டுப் புத்தகத்தின் அந்தப் பக்கத்தின் மத்தியில் செத்துப் போயிருந்த செண்பகப்பூ.

"இது என்ன பூ- சொல்ல முடியுமா உங்களால?"

'செண்பகப்பூ' அடையாளம் வெச்சிருக்கேன்' என்ற ரத்னாவதியின் வார்த்தைகளை அருகில் படிக்க முடிந்தது ஞாபகம் வந்தது. என்ன அடையாளம்? நகைகளுக்கு அடையாளமா?

'தீர்மானம் பண்ணிப்புட்டன்! என் நகைங்களை யாருக்கும் தரமாட்டேன். ஒருத்தருக்கும் அது நிச்சயம் போகக் கூடாது. அதுக்கு ஒரு வழி செஞ்சிருக்கேன். எல்லா நகைகளையும்...'

'எல்லா நகைகளையும் என்ன செய்தாள் ரத்னாவதி? ஒரு பெட்டிக்குள் போட்டுக் கிணற்றில் எறிந்துவிட்டாயா? சந்ததிகளுக்கு அடையாளம் காட்ட ஒரு செண்பகப்பூவை வைத்தாயா?'

செண்பக மரம். மரத்தடியில் கிணறு. கிணற்றில் நகைகள்...

இதை சினேகலதா அறிந்து கொண்டிருக்க வேண்டும். அறிந்து, மருதமுத்துவின் உதவியுடன்... தாம்புக்கயிறு! ஆம்! அதற்குத்தான். நகைப் பெட்டியைக் கிணற்றிலிருந்து முதல் நாள் இரவே எடுத்து அந்தப் புரையில் தற்காலிகமாகப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். பிற்பாடு அவற்றை எடுத்துக் கொள்ளும் உத்தேசத்துடன், மருதமுத்துவும் சினேகலதாவும் சண்டை வந்து மருதமுத்து அந்த நகைகளுக்கு ஆசைப்பட்டு... அவனே அவளைக் கொன்று விட்டானா...?

வெள்ளியின் அவசரக் குரல் கேட்டது.

"ஐயா, வாங்க போயிரலாம்."

"ஏன் வெள்ளி?"

"அங்க பாருங்க! கிராமமே நம்மை நோக்கி வருது!"

கல்யாணராமன் பார்த்தான்.

கம்பு கழிகளைச் சுழற்றிக் கொண்டு முப்பது பேர் வர, மருதமுத்து தலைவனாக அரிவாள் தாங்கி வர, இன்ஸ்பெக்டர், பெரியசாமி, அய்யாத்துரை, தங்கராசு... எல்லோரும் மிகுந்த விரோதத்துடன் அணுகுவது தெரிந்தது.



"ஐயா, நான் போய்ப் பதுங்கிக்கிறேன்." என்றாள் வெள்ளி அச்சத்துடன்.

"வேண்டாம் வெள்ளி. நீ இனிமே பயப்பட வேண்டியதில்லை. நான் சமாளிக்கிறேன்!"

## 19

மருதமுத்து முன்னால் வந்தான். வெள்ளி அவனை நோக்கிச் செல்ல- "ஆம்ட்டுக்கிட்டியா? வாடி!" என்றான். வெள்ளி சடக்கென்று நின்று போனாள்.

"இன்ஸ்பெக்டர் அய்யா, இதாங்க பொண்ணு. ரெண்டு நாளா கண்ணாம்பூச்சி ஆடுதா. மறுபடி ஓடிப் போறதுக்குள்ற புடிச்சுப் போட்டுருங்க. ஏய் மூதேவி. போய் அய்யா காலில விழு."

கல்யாணராமனை முறைத்து, "அய்யா! நீங்க இவ்வளவு பொய் சொல்லியிருக்க வேண்டாம். உங்களைப் போய் நம்பிக்கிட்டு..."

இன்ஸ்பெக்டர், "மருதமுத்து! கொஞ்சம் இரு. கல்யாணராமன், வாங்க இப்படி கொலை பண்ணவங்களை மறைச்சு வெக்கறது குத்தம்முனு உங்களுக்குத் தெரியாதா? ஏ புள்ள! வா இப்படி" என்றார்.

வெள்ளி கல்யாணராமனைக் குழப்பத்துடன் பார்த்தாள்.

"பொம்பளையா இது?"

"நீலி! பத்ரகாளி!"

"இந்தக் காரியம் செஞ்சு போட்டு எப்படி ஜங்குனு நிமிர்ந்து நிக்குது பாருங்க! திமுசுக்கட்ட மாதிரி!"

"வெள்ளி, நீ போய் உள்ள இரு. இன்ஸ்பெக்டர், இவளுக்கு ஒண்ணும் தெரியாது. வெகுளி. இவ நிச்சயம் அந்தக் கொலையைச் செய்யலை. பூசாரி பேச்சைக் கேட்டுட்டு, ஏதோ ஒரு சின்னக் கூழாங்கல்லை எடுத்துப் போட்டுட்டு, தான் கொன்னுட்டதா பயந்து தலை மறைவா இருந்திருக்கா. அதான் விஷயம். விசாரிச்சா தீர்மானமாகத் தெரியும்!"

"இந்தாளு இவளுக்கு ஒடந்தைங்க!" என்றான் மருதமுத்து.

"என்னய்யா சொல்லுத? போட்டன்னா தெரியுமா... ஒளுங்காப் பேசு! அய்யாவை உள்ற இளுக்காதே! உனக்காவத்தான் நான் இந்தப் பாடுபட்டு இந்த அலை அலைஞ்சு காடெல்லாம் கடந்து நடந்து வந்திருக்கன்... விசுவாசங்கெட்டுப் பேசாத!"

"த! சும்மாரு! போட்டன்னா தெரியுமா. கொன்னு போட்டுடு ரண்டு பேரும் கதை வுடுதாங்க!"

"இன்ஸ்பெக்டர்! மருதமுத்துவை முதல்ல விசாரிக்கணும். அன்னிக்கு ராத்திரி தாம்புக் கயித்தைப் பத்திக் கேளுங்க. அவன் எவ்வளவு உடந்தைன்னு நான் நிரூபிக்கிறேன். கேளுங்க! என்ன மருதமுத்து- தாம்புக்கயிறு ராத்திரி?"

மருதமுத்து ஆத்திரத்துடன், "கொலைகாரப் பாவி! என்னய்யா சொல்லுதே?" என்று கல்யாணராமனின் கன்னத்தில் புறங்கையால் அடித்தான். திடுக்கிட்ட கல்யாணராமன் "இன்ஸ்பெக்டர்! நீங்க இதையெல்லாம் பார்த்துண்டு நிக்கிறீங்க!" என்றான். கண்கள் கலங்கின.

"ஏய்! அடிக்காதிங்கடா! அடி உதவாது" என்று சன்னமாகச் சொல்லிவிட்டு வெள்ளியின் புஜத்தைத் தொட்டார். அவள் உதறினாள். "வா புள்ள உள்ள. உன்ன விசாரிக்கணும். பெரியசாமி, இங்கேயே இரு. கலகம் வரக் கூடாது. அடிக்காதிங்க. வாயால பேசுங்க."



வெள்ளியை ஏறக்குறைய தள்ளிக் கொண்டு ஜமீன் வீட்டுப் பக்கம் கொண்டு செல்ல, அதைப் பார்த்ததில் கல்யாண ராமனுக்கு வயிற்றில் குழம்பியது. 'வெள்ளி! எதையாவது உளறி வெக்காதே. அவ செத்ததுக்கு நீ காரணமும் இல்லே. உனக்கும் அதுக்கும் சம்பந்தமே இல்லை.'

"போடுறா ஒண்ணு புடனில."

பெரியசாமி பார்த்துக் கொண்டே நிற்க, ஒல்லியாக ஒருத்தன் கூட்ட தைரியத்தில் கல்யாணராமனை அடிக்க, அடித்த கையைப் பற்றி வலுவாக முறுக்கி விட்டான். ஒல்லி வலியால் 'அய்யோ!' என்றான். மருதமுத்து "எதுக்குய்யா அடிச்ச? பெரியசாமி, பார்த்துக்க... பாப்பாரப் பய அடிக்கங் காட்டியும் தான் நாங்க அடிக்கறோம்."

பெரியசாமி அநியாயமாக, "ஏய்யா! உம்மேல சந்தேவம் இருந்து பிராது இருக்கிற சமயத்தில கை யெடுத்து அடிக்கலாமாய்யா? அப்புறம் நடக்கிறதுக்கு நான் எப்படி பொறுப்பாயிற முடியும்?"

கல்யாணராமனுக்கு உடம்பு பூரா வியர்த்தது. அவர்கள் எட்டுப் பேர். அவனைச் சூழ்ந்து அவன் அருகில் வந்து அவன் மேல் பாய்ந்தார்கள்.

"வேண்டாம், வேண்டாம். அடிக்காதிங்க."

ஒரு கை இடுப்பில், ஒரு கை மார்பில், ஒரு உதை முதுகில், ஒரு அறை கன்னத்தில்... எத்தனைதான் சமாளித்துத் தவிர்ப்பது? கீழே விழுந்தால் மிதித்து விடுவார்கள். எதிர்த்தால் அடி பலமாகி விடும். இங்கே உனக்கு நியாயம் கிடைக்காது; ஓடு. மூர்க்கம் அவர்கள் ரத்தத்தில் கொதிக்கிறது. உனக்கு சரண் ஜமீன் வீட்டில்தான்! வயலை நோக்கி ஓடினால் பிடித்து அங்கேயே மிதித்துப் போட்டு விடுவார்கள். ஓடு.

அடுத்த அடியில் இடறி விழுவதைச் சமாளித்து, தன் சட்டையில் ரத்தம், விண் என்று தாடையில் ஒரு இடி.

தலையைக் குனிந்து இரண்டு பேரை, திடீர் என்று ஏற்பட்ட அமானுஷ்ய வேட்கையின் பலத்தில், பிரித்துக் கொண்டு ஜமீன் வீட்டை நோக்கி ஓடினான்.

"இன்ஸ்பெக்டர்... இன்ஸ்பெக்டர்... காப்பாத்துங்க!" தன் அறைக் கதவு மூடப் பட்டிருப்பதையும் அவன் வாசலில் இன்ஸ்பெக்டர் சிகரெட் பற்றவைத்துக் கொண்டிருப்பதையும் பார்த்தான். சமயமில்லாமல் நேராக சினேகலதாவின் அறைக்குள் சென்று கதவை உட்பக்கம் தாளிட்டுக் கொண்டான். துரத்திக் கொண்டு வந்தவர்கள் இன்ஸ்பெக்டரைப் பார்த்து நின்றார்கள்.

"வாடா வெளியில, பொட்டைப் பயலே, கிளிச்சுர்றேன் வா."

"இன்ஸ்பெக்டர், உங்க கடமை என்னைக் காப்பாத்தறது. அவங்களை அடிக்க விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறது நல்லதில்லை."

"யார்யா அடிச்சா உன்னைய?" என்றான் பெரியசாமி.

"வெளில விடுங்க, பாப்பாரப் பயல இங்கேயே தீத்துர்றம்."

"சே! போங்கடா! போங்கடா! கலவரம் பண்ணாம போங்கடா! நான் பாத்துக்கறேன். மருதமுத்து, நீ போய் அய்யாத்துரையை நமூனா புஸ்தவத்தோட வரச் சொல்லு. பொண்ணு! தொட்டாப்புல அளுவுது... ஏம் புள்ள, ரண்டு நாளாத் தல மறவா இருந்தன்னா பயமாம்..."

"கொலை செஞ்சாத்தானே பயப்படணும்?"

"இன்ஸ்பெக்டர்! மருதமுத்துவை நீங்க விடக் கூடாது! கிணத்தில எறங்கி ரெண்டு பேரும் என்ன எடுத்தாங்கன்னு கேளுங்க. எடுத்தது எவ்வளவு பெறும்னு கேளுங்க! சினேகலதா அங்க எதுக்காக வந்தாள்னு எனக்குத் தெளிவாகத் தெரியும். கொஞ்சம் அவகாசம் கொடுங்க. தீர விசாரிச்சு உங்களுக்கு முழுமையா ஒரு விளக்கம் தரேன்."



இன்ஸ்பெக்டர் சற்றுத் தயங்கி, "மருதமுத்து, என்னய்யா?" என்றார்.

"உளர்றானுங்க, நான் விவரம் முச்சூடும் சொல்றேன். தனியா வாங்க!"

"ஹி இஸ் லையிங்! அவனை நம்பாதிங்க இன்ஸ்பெக்டர். அவனும் இதுக்கு உடந்தை."

மருதமுத்து ஒரு கல்லெடுத்து ஜன்னல் மேல் எறிந்து, "வுட்டன்னா பாரு" என்று நாக்கை நீட்டிக் கடித்துக் கொண்டு அவனை அதட்டி விட்டு, "நீங்க வாங்க" என்றான்.

இன்ஸ்பெக்டரும் மருதமுத்துவும் தாழ்வாரத்தில் இறங்கி சினேகிதமாகப் பேசிக் கொண்டு நடந்து செல்ல, எதிரே அறைக்குள் சிறைப்பட்ட வெள்ளி அவனைக் கலவரத்தோடு பார்க்க, "வெளியே வாடா" என்று ஒருவன் வேஷ்டியை அவிழ்த்துப் பட்டை டிராயருடன் அசிங்கமாக நாட்டியம் ஆடிக் காட்ட- கல்யாணராமனுக்கு மற்றொரு பயம் ஏற்பட்டது. இவர்கள் எல்லோருமே சூழ்ச்சி செய்கிறார்கள். நான் சொல்வதை நம்பப் போவதில்லை...

தூரத்தில் இன்ஸ்பெக்டரும் மருதமுத்துவும் பேசுவதும் தலையாட்டுவதும் தெரிந்தது. பெரியாத்தாளும், வெள்ளியின் தகப்பனும் வருகிறார்கள்.

"வெள்ளிக் கண்ணே! இந்தக் காரியம் செஞ்சுப் போட்டியம்மா?"

"எம்மாடி எம்மாடி! சீமையில சீரளிஞ்சு, சிறுமைகளாகப் பட்டு... என் பட்டுக் குஞ்சலத்தைப் போட்டு அடைச்சுட்டாகளே. கோட்டாரு வந்து தீர்ப்புச் சொல்லுவாகளா! கூண்டில அடைப்பாகளா?"

"ஆத்தா, அது நானில்ல ஆத்தா! நானு இல்லிங்கப்பா! நவைங்களுக்காக யாரோ செஞ்சிருக்காங்கப்பா."

"ரண்டு பேரையும் தனித்தனி ரூம்புல அடைச்சு வெச்சுருக்காப்பல."

"ஆமா ஆத்தா."

"பொட்டி வண்டி எப்ப வரும்?" -பெரியாத்தா சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

"ராசா மவனே! அடிச்சுப் போட்டிருக்காகளே!" -சுருக்குப் பையிலிருந்து வெற்றிலை போட்டுக் கொண்டு கண்கள் அறை முழுவதும் அலைய ஆர்வத்துடன் "கவலைப்படா திங்கய்யா! ஒண்ணும் ஆவாது ஒனக்கு. எனக்கு உங்க ரண்டு பேரையும் தெரியும். நீங்க ஒண்ணும் அந்தக் காரியம் செய்யறவங்க இல்ல. ஏதாவது சாட்சிகளா? ரூவா கொடுத்தா வாங்கியாரேன்." என்றாள்.

"ஒண்ணும் வேண்டாம் பெரியாத்தா."

"பொணத்த எரிச்சாகளா?"

"தெரியாது பெரியாத்தா?"

"ஆ?"

"தெரியாது! நீ போயிட்டு அப்புறம் வா."

"அதுகூட சரித்தான்."

கல்யாணராமன் அறைக்குள் சுற்றிலும் பார்த்தான். சிநேகலதாவின் அத்தனை சாமான்களும் பத்திரமாக இருந்தன. குறுக்கே கயிறு கட்டி ஹாங்கர்களில் ஜீன்ஸ், சட்டைகள் என்று விதவிதமாகத் தொங்கின. அலமாரியில் அவள் மேக்கப் சாதனங்கள் நிரம்பி வழிந்தன. முகப்பவுடர், க்ரீம்கள், லிப்ஸ்டிக், பல வண்ணப் பொட்டுக்கள், கலங்கல்கள்- பச்சை சிவப்பு திரவங்கள். ஒரு சிறிய சாவி.

சாவி.

சிநேகலதாவின் பெட்டி கட்டிலுக்குக் கீழே இருந்தது. கல்யாணராமனுக்கு சட்டென்று ரத்னாவதியின் டயரி ஞாபகம்



வந்தது. அன்றைக்கு சிநேகலதா அதை அந்தப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினாள்.

ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். அவர்கள் அங்கங்கே முடிச்சாக நின்றார்கள். பெரியசாமி கைக்குள் பீடி அடக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். பெரியாத்தாளும் அப்பனும் வெள்ளியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"பயப்படாதம்மா... டவுன்ல பெரிய வெக்கீல வெச்சுறலாம்."

கல்யாணராமன் பெட்டியைத் திறந்தான். புத்தகங்கள், ஒன்றிரண்டு ஸாரிகள். அட! ஒரு போட்டோ ஆல்பம், நிறைய துணிகள். ஃபைல் போல் ஒன்று. எல்லாவற்றுக்கும் அடியில் ரத்னாவதியின் நோட்டுப் புத்தகம்.

அவசரமாகப் புரட்டினான். செண்பகப்பூ அடையாளம் வைத்த அந்தப் பக்கம். "அடையாளம் வெச்சிருக்கன்." புரட்டினான். "எங்க பாட்டிக்குப் பாட்டி பரம்பரையாகக் கொடுத்த நகைகள்... அழிச்சுப் புதுப்பிச்சு," படித்தாகி விட்டது மேலும் புரட்டினான்.

"எல்லா நகைகளையும்..." ஆம்; அங்கேதான் விட்டேன்.

"சேர்த்துப் பொட்டியில அடக்கி ஒரு இடத்தில போட்டுட் டன். அதுக்கான அடையாளம் வெச்சிருக்கன். இதான் அடையாளம். என் நகைகள் எல்லாம் அங்கேயே கிடக்கட்டும். சாமர்த்தியம் உள்ள சனங்கள் எடுக்கட்டும். இந்த மனுசனுக்குப் போகக் கூடாது. என்னை அடிச்சாலும் திட்டினாலும் கொன்னா லும் வெட்டினாலும் தடயந்தர மாட்டேன். எனக்கென்னவோ இன்னும் ரொம்ப நாள் இருக்கமாட்டன்னு தோணுது. என்னை இந்த மனுஷன் அணு அணுவா சாவடிக்கிறான். விசாலாட்சி... முத்தம்மா. என்னைக் கூட்டிக்கிட்டுப் போயிரேன். எதுக்காக இந்த அன்பில்லாத பிரதேசத்தில நான் வாழ்க்கை நடத்தணும்?

"அய்யா... இந்த சமூகத்தில தங்கப் பிரஜைகளாக யாராவது... யாராவது என் நகைகளைக் கண்டெடுத்தவங்க உண்டு என்றால்

அவுங்க அத்தனை நகைகளையும் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்வது ரத்னாவதி அத்தனை நகைகளையும் என்னுடைய பேரில, ரத்னாவதி- பேரில தர்மகாரியங்களுக்கு செஞ்சு போடறது.

"இந்தக் குடும்பத்துக்கு இந்த நகைகள் போகவே கூடாது. ஒரு நாளும் கூடாது. அதுக்காகவே நகைகளுக்கு அடையாளம் காட்டற இந்தப் புஸ்தகத்தை யாருக்கும் லேசில கிடைக்காத வகையில் மறைச்சு வெச்சிருக்கன். எங்கேயாவது ஒரு மூணா மனுசன்- வேத்து மனுசன் எப்பவோ இருந்து செத்த ரத்னாவதி- புருசன்கிட்ட ஒரு நா கூட சந்தோசப்படாது உயிரைவிட்ட ரத்னாவுக்காக ஒரு சொட்டுக் கண்ணில தண்ணி விட்டாப் போதுமய்யா! ரத்னாவதி... ரத்னாவதி... ரத்னா... ரத்தம்."

அருகில் செங்கல் சிவப்பில் ரத்தக்கறை.

புத்தகத்தை மூடிவிட்டு யோசித்தான். செண்பகப்பூ அடையாளம். செண்பக மரத்தடியில் இருந்த கிணற்றுக்கு அடையாளம்...

ரத்னாவதியின் நோட்டுப் புத்தகத்தின் மற்ற பக்கங்கள் காலியாக இருக்க, அவற்றைப் புரட்டுகையில் இதென்ன கடிதம்?

சென்னை-16
16-6-78

'டியர் சினேக்,

நம் திட்டத்தின் இரண்டாவது கட்டம் வந்து விட்டது. உடனே புறப்பட்டு வா. ஒரு மாசமாகத் தேடிவிட்டேன். கிடைக்கவில்லை. இப்போது வீட்டில் தங்க, நாட்டுப் பாடல் ரிஸர்ச்சுக்கு ஒரு ஆசாமி வரப் போகிறானாம். காரியம் கெட்டுவிடும். எனவே உடனே புறப்பட்டு வா. சொன்னதெல்லாம் ஞாபகம்



இருக்கட்டும். பெயர்கள்! பெயர்கள்! நீ சின்னவரின் புதல்வி.

சினேக்! நாம இரண்டு பேரும் இதில் கூட்டு. நோ டபிள் கிராஸிங்... சரக்கு மதிப்பு மிகமிக அதிகம். எனவே... குட்லக்! -சாமி.'

மைகாட்.

கல்யாணராமனுக்கு ரூபாய் நோட்டுக்குள் சிங்கம் போல கொஞ்சம் கொஞ்சம் விளங்க ஆரம்பித்தது. யோசித்தான். "இன்ஸ்பெக்டர்!" என்று கூப்பிட்டான். இன்ஸ்பெக்டரைக் காணோம். எதிரே பெரியசாமி மட்டும் இருந்தான். வெள்ளியின் தகப்பன் பேசிக் கொண்டிருந்தான். அவசரம்! மிக அவசரமாகச் சில காரியங்கள் செய்ய வேண்டும். எனக்கு இப்போது திருநிலம் போக வேண்டும். எப்படி? அதற்கு முன் கிணற்றில் ஒரு தடவை இறங்க வேண்டும்.

சினேகலதாவின் அறையில் அந்தப் பக்கம் ஒரு கதவு இருந்தது. அதைத் திறந்தில் இடப் பக்கத்துத் தாழ்வாரத்தில் கொண்டு விட்டது. அங்கிருந்து கிணறு தெரிந்தது.

மெதுவாக, சன்னமாக நடந்தான். அவர்கள் ஒருவரும் கவனித்திருக்க மாட்டார்கள்.

செண்பகமரம் ரத்னாவதியின் மௌன அடையாளம். கிணற்றில் பெட்டியுடன் நகைகளைப் போட்டுவிட்டு செண்பகப் பூவை அடையாளம் காட்டிய சின்ன சாமர்த்தியம்.

கல்யாணராமன் மெதுவாக கால் வைத்துக் கிணற்றின் படிகளில் இறங்கினான்.

திருநிலம் கலெக்டர் ஆபீஸ், பழங்கால சுல்தான் வம்ச கட்டடம் ஒன்றில் இருந்தது. வெயிலுக்குப் பச்சைத் தட்டிகள் அடித்து, ஜன்னல்களில் வெட்டிவேரில் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

...EMAKA PUBLIC LIBRA...

பார்வையாளர்கள் காத்திருந்தார்கள். கதர் உடை, வில்லை சேவகன், வயல் வரப்புகளைத் தாண்டியடித்துக் கொண்டு வந்திருக்கும் களைத்த கல்யாணராமனைச் சற்று பயத்துடன் பார்த்து, "கலெக்டர் இல்லைங்க! பார்க்க முடியாது" என்றான்.

"எப்ப வருவாரு?"

"எனக்குத் தெரியாது."

"யாருக்குத் தெரியும்?"

"பி.ஏ-க்கு."

"அவரைப் பார்க்க முடியுமா?"

"இதென்னடாது ரோதனை. நீங்க போயிட்டு சாயங்... குட்மார்னிங் ஸார்!"

அப்போதுதான் வந்த கலெக்டர் அவன் கிழிந்த உடைகளைப் பார்த்து "யார்யா?" என்றார்.

"ஸார்... நான் மேம்பட்டியில உங்களை சந்திச்சிருக்கேன். பேர் கல்யாணராமன்."

"ஓ! கல்யாணராமன். நாட்டுப் பாடல்கள்! அந்தப் பிள்ளை களை வெச்சுக்கிட்டு... கோரஸ்."

"நான்தான் ஸார்."

"ஹௌ இஸ் சினேகலதா?"

"ஷி இஸ் டெட்."

"ஓ மை காட்! எப்படி...?

"அது விஷயமாகத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்."

"உள்ளே வாங்க."

கன்னத்தில் கை வைத்துக் கொண்டு அத்தனையும் கேட்ட கலெக்டர். "வெரி இன்டரஸ்டிங்" என்றார்.

"இந்த நகையைப் பாருங்க. இந்த மாதிரி நூறு இருக்கு விதம் விதமா..." என்றான் கல்யாணராமன்.



கலெக்டர் அந்த நகையை வாங்கித் திருப்பித் திருப்பி பார்த்தார்.

"அந்த லெட்டர்லே இருந்து தெரியுது... ரெண்டு பேர் கூட்டு. இதில அவன் முன்னால வந்து நகைகளைத் தேடி யிருக்கான்; கிடைக்கலை. அப்புறம் அவள் வந்திருக்கா-ஜமீன் பேத்தின்னு தன்னைச் சொல்லிண்டு. அவளுக்கு டயரி கிடைச்சு நகைகள் இருக்கிற அடையாளம் கிடைச்சிருக்கு. கண்டு பிடிச்சிருக்கா. மருதமுத்துவோட உதவியோட கிணத்தில இருந்து பெட்டியை ரெண்டு பேரும் எடுத்துப் போட்டிருக் காங்க. அதுக்குள்ளே சினேகலதாவின் கூட்டாளி- இந்தக் கடுதாசியை எழுதினவன்- அவனுக்கு விஷயம் தெரிஞ்சு அவன் ராத்திரி வந்து பங்கு கேட்டிருக்கான். அவ மாட்டேன்னு சொல்லியிருக்கலாம். அவளைத் தீர்த்திருக்கலாம்."

"ஆமா... கூட்டாளி யாரு?"

அது சுலபமா தெரிஞ்சுடும் ஸார். நான் நினைக்கிற மாதிரி நடந்திருந்ததுன்னா அந்தக் கூட்டாளிதான் அந்த நகைப் பெட்டியைத் தற்காலிகமா கிணத்தில் ஒளிச்சு வெச்சிருக்கணும். எனவே இன்னிக்கு அல்லது நாளைக்கு ராத்திரி அந்த நகை களுக்காக அவன் மறுபடி வருவான்."

"ஓ எஸ்!"

கலெக்டர் டெலிபோனை எடுத்தார்.

"கொஞ்சம் போலீஸ் சூப்ரண்ட்டுக்கு கால் போடுய்யா!"

## 20

சாயங்காலம் நாலு மணிக்கு கிராமத்துக்கு வந்து நேராக ஜமீன் வீட்டுக்குச் சென்றார்கள். யாரையும் காணோம். அறை வாசல் பூட்டியிருந்தது. அறைக்குள் எட்டிப் பார்த்ததில் வெள்ளி தரையில் படுத்திருந்தது தெரிந்தது. தப்பிக்கலாம். ஆனால் தப்பித்து எங்கே போவாள்? கல்யாணராமனுடன் போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட் வந்திருந்தார். இளைஞர். புதிதாக போஸ்டிங் ஆனவர் போலும். கல்யாணராமனுடன் அதிகம் பேசவில்லை. வரும் வழியில் ஜீப்பில் விறைப்பாகவே இருந்தார்.

"இதாங்க அந்த வெள்ளி."

ஜமீன் வீட்டின் பின்புறத்திலிருந்து "யார்யா அது?" என்று சப்தம் கேட்டது. நடந்தது வருவதின் 'சரக் சரக்' கேட்டது. பெரியசாமியும் பெரியாத்தாவும் தென்பட்டார்கள்.

'மர நெருங்கக் காயி' என்ற பெரியாத்தாவின் மடி நிறையப் பெயர் தெரியாத காய்கள் பிதுங்க, பெரியசாமி எதையோ மென்று கொண்டிருந்தவன் சூப்பரின்டெண்டெண்ட் பார்த்ததும் வெலவெலத்துப் போய்த் திடீரென்று ஓடி வந்து "அய்யா" என்றான்.

"யார்யா நீ?"

"கான்ஸ்டபிளுங்க."

"யூனிஃபார்ம் எங்கே?"

"கஞ்சி போடக் குடுத்திருக்கங்க...! ஏ கௌவி! பெரிய தொரை வந்திருக்காரு. கும்பிடு சவமே!"



"அய்யா கும்பிடறனுங்க. இரும்படிச்சா மாரி இருக்காரு ராசா மவனே! முதல்லே இந்த ரூமைத் திற. அந்தப் பொண்ணை யாரு இப்பிடி அடைச்சு வெச்சது?"

"இன்ஸ்பெட்டருங்க!" என்று பாய்ந்து கதவைத் திறந்தான்.

"ஓடிப் போய் இன்ஸ்பெக்டரைக் கூட்டியா!" கதவைத் திறந்தார் போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட்.

"வெள்ளி! என் செல்வமே? எளுந்திரு! என் பவள முத்து! யாரு வந்திருக்காக பாரு! உன்னைய விடுதலை செஞ்சுருவாரு ராசா மவன். அடி- நனஞ்ச புழுதியில நட்டுவச்ச தென்னம்புள்ள."

"கௌவி! சும்மாருக்கியா... இந்தாம்மாவெள்ளியா உம்பேரு? எழுந்து வா இப்படி!"

"தன் துணியைச் சுருட்டிக் கொண்டு மிரண்ட பார்வையுடன் வெள்ளி வெளியே வந்தாள். முதுகெல்லாம் புழுதி. ரவிக்கை கிழிந்திருந்தது. கன்னத்தில் சிவப்பில் கோடு. வளையல்கள் ஒன்றையும் காணோம். நெற்றிப் பொட்டின்றி, நிரம்பக் கலைந்திருந்தாள்.

"வெள்ளி, பயப்படாதே! நீ ஒண்ணும் செய்யலை. உனக்கு விடுதலை. ஏதாவது சாப்பிட்டியா?"

"இல்லிங்க" என்று அழ ஆரம்பித்தாள். அவ்வப்போது விசும்பி மூக்கைச் சிந்திப் புடவையில் துடைத்துக்கொண்டு அவர்களை சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு அழுதாள்.

"இதைப் போயா அடைச்சு வெச்சாங்க! சட்! கண்ணைப் பார்த்தாலே குத்தமில்லைன்னு தெரியுதே."

"அய்யா, அவரு வந்தாக்க சொல்லிப் போடுங்க."

"எவரு?"

"மருதமுத்து, இவளை டிச் பண்ணவன்."

"என்ன சொல்லணும்?"

"அய்யா கேட்டாருங்களா?" என்றாள்.

"அய்யா பெரிய போலீஸ் உத்யோகஸ்தரு..."

"அய்யா! ஒசந்தவங்க நீங்க அந்தாளு வந்தாச் சொல்லிப் போடுங்க. அவரு நெனச்சதெல்லாந் தப்புனு புத்தி சொல்லிப் போடுங்க. எவளையோ நினைச்சுக்கிட்டு மருகி எனக்குச் செஞ்ச பாதகத்துக்கும் துரோகத்துக்கும் அவரு நல்லா வருத்தப்படும்படியா பல்லில போட்டுச் சொல்லிப் போடுங்க!..."

"சொல்லலாம் சொல்லலாம்... நீ வீட்டுக்குப் போய் ஏதாவது தின்னு."

"கிராமத்துக்குள்ளாற போனா கல்லெடுத்துப் போடுவாங்க, நான் இங்கேயே இருக்கனுங்க..."

"உங்கப்பா எங்கே வெள்ளி?"

"வெக்கீல அளைச்சார டவுனுக்குப் போயிருக்காரு."

"இனிமே உனக்கு வக்கில் வேண்டாம். நீ ஃப்ரீ."

வெள்ளி முகத்தைத் துடைத்துக்கொள்ள, "எல்லா சனங்களையும் பகைச்சுக்கிட்டு அந்தக் கழுதையோட சாவுகாசம் பண்ணிச் சீரளிஞ்சவம் பேரில அடியம்மாடி உனக்கு இம்புட்டு விசுவாசம்! பொயலை தந்தவரே போதுமய்யா உம்முறவுன்னு விட்டுற வேண்டியது தானே?" என்றாள் பெரியாத்தா.

"சொல்லு, பெரியாத்தா! புத்தி சொல்லு இவளுக்கு!"

அவர்கள் இருவரும் தாழ்வாரத்தில் பேசிக் கொண்டிருக்க, கல்யாணராமனும் போலீஸ் உயர் அதிகாரியும் கிணற்றுக்குச் சென்று எட்டிப் பார்த்தார்கள்.

தண்ணீருக்குள் கல்யாணராமன், "பாருங்க எட்டாவது படி. அதுக்குப் பக்கத்திலே சுவத்திலே ஒரு ரீஸஸ் தெரியுது பாருங்க. பொட்டி அதிலதான் இருக்கு. அத்தனை நகையும் இருக்கு. மொத்த மதிப்பு லட்சக்கணக்கில் இருக்கும்" என்றான்.

சூப்பரின்டெண்டெண்ட் தலைகீழாக, "அப்படியா?" என்றார்.



கல்லெடுத்துப் போட்டார். இரண்டு பிம்பங்களும் கலைந்து நடுங்கின. "ஒரு இன்வெண்டரி எடுத்து கலெக்டர் கிட்ட ஸ்டேட்மெண்ட் கொடுத்துருங்க. திருநிலம் ட்ரெஷரியில எல்லா நகைகளையும் டெபாஸிட் செய்துரனும்."

"நாளைக்குத்தாங்க அதைச் செய்ய முடியும். இன்னி ராத்திரி அந்த ஆளு நகைகளுக்கு வரானான்னு காத்திருக்க வேண்டாம்?"

"ஆமாம்."

இருவரும் மறுபடி வீட்டு முன் பக்கத்திற்கு வர இன்ஸ்பெக்டர் வருவது தெரிந்தது. சற்று தூரத்தில் நின்று சுளீர் என்று சல்யூட் அடித்தார். பெரியசாமி சீருடை அணிந்திருந்தான்.

"எஸ்.எஸ்.கந்தையாதான நீங்க?"

"ஆமா ஸார். முன்னால..."

"விளாத்திக்குளம், ஞாபகம் இருக்கு... இந்தப் பெண்ணை எதுக்கு டிடெய்ன் பண்ணி வெச்சிங்க?"

"தலைமறைவா இருந்த கேஸ் ஸார். சந்தேகத்தின் பேரில நிறுத்தி வெச்சம். கிராம அதிகாரிக்குக் கூட பவர்ஸ் உண்டு."

"போலீஸ் இன்ஸ்பெக்டர் டேக் ஓவர் பண்ணப்புறம் கிராம அதிகாரிக்கு ஒன்றரைணாவுக்கு மேல பவர்ஸ் கிடையாது. இந்தப் பொண்ணை ஹாண்டில் பண்ணிங்களா?"

"இல்லிங்க."

"பொய்! பெண்களை மானபங்கம் வராம மத்த பெண்களை வெச்சுக்கிட்டுத்தான் எதுவும் செய்யணும். தெரியாதா உங்களுக்கு? நடந்ததெல்லாம் கேள்விப்பட்டேன். கேஸ் வேற விதமா திரும்புது... பாடி எங்கே? பி.எம். ஆயிடுச்சா?"

"ஆய்டுச்சுங்க. டவுன் ஆஸ்பத்திரில கெடக்குதுங்க பாடி!"

"புதைக்கிறதுக்கு ஏற்பாடு செஞ்சிங்களா? மூணு நாளா பாய்ல சுருட்டி வெப்பிங்களா? பெரிய தனக்காரங்களை

கூப்பிடுங்க. அவங்கதான் அரேஞ்ச் செய்யணும். யோவ், உம் பேரென்ன?"

"பெரியசாமி ஸார்."

"த பார்! அங்...கே போய் நில்லு!"

அவன் சென்றதும், "இந்தப் பொண்ணு இந்தக் கிளவி ரெண்டையுமே டவுனுக்குக் கூட்டியாந்துருங்க. ஒரு நா, ரெண்டு நா ராத்திரி டவுனில இருக்கட்டும். ஊர்ல இவதான் செஞ்சான்னு கைது பண்ணிட்டுப் போயிருக்கிறதா செய்தி பரப்பிடுங்க. அப்புறம் போலீஸ்காரங்க கேஸை முடிச்சுட்டு ஜமீன் வீட்டைப் பூட்டிக்கிட்டுப் போய்ட்டாங்கன்னு கிராமத்தில் சொல்லிடுங்க, என்ன?" என்றார்.

"எஸ் ஸார்."

"கிராமத்தில ஒரு ஆள்தான் இந்தக் கொலையைச் செஞ்சிருக்கான். கொஞ்ச நா முன்னே டேரா போட்டவன். ஜமீன் நகைகளுக்காக வந்து அது கிடைச்சு ஏதோ தகராறு நடந்திருக்கு... கிணத்தில பெரையில ஒளிச்சு வெச்சிருக்கு நகைகள் எல்லாம். ராத்திரி வருவான்னு எதிர்பார்க்கிறேன். நாமளும் இப்ப போய்டறாப்பல போயி ராத்திரி வந்து மறைஞ்சிருந்து புடிச்சாகணும்..."

"பெரியசாமி!"

"பெரியசாமிகூட வேண்டாம். நீங்க மட்டும் வந்தாப் போதும். ஏன்னா பெரியசாமியைக்கூட நான் சந்தேகிக்கறேன்... பெரியசாமி, வாய்யா இங்கே! இவுங்க ரெண்டு பேரையும் கூட்டிப் போய் அதோ வரப்பாண்டை ஜீப்பு நிக்குது பாரு- அங்கே கொண்டு போயிடு. அரெஸ்ட் பண்ணப் போறம்."

ராத்திரி ஒரு மணி. போலீஸ் அதிகாரிகள் இருவரும் அங்கே எங்கேயோ இருளில் இருக்கிறார்கள். கிணற்றுக்கு அருகில்தான். கல்யாணராமன் சற்றுத் தள்ளி அரசமரத்தடியில் பதுங்கியிருந்தான். நிலா புறப்படலாமா என்று யோசித்துக்



கொண்டிருந்தது. ரோஷார்ன் சித்திரங்கள் போல அங்கே இங்கே இருள். ஆந்தை சிலேட்டில் ஆணி கீறியது. படபடத்துப் பறந்து போய் தைரியமாகக் கிணற்றின் சுவரில் உட்கார்ந்து காத்திருந்தார்கள். இன்று தெரிந்து விடும் யார் என்று. யார் அது? 'சாமி!' என்று அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டிருந்தவன் இப்போது இன்னும் சற்று நேரத்தில் வருவான். யார் சாமி? சாமி யார்? யார் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தங்க ராசு? பூசாரி? பெரியசாமி? பெரியதனக்காரர்? அட சட்! இவர்கள் யாரும் இல்லை. எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் இது சாத்தியம்; இப்போது வரப் போகிறவன் சினேகலதாவைக் கொன்றவன். இருவரும் நகைக்காக வந்திருக்கிறார்கள். முதலில் அவன் வந்து ஜமீன் வீடெல்லாம் தேடிக் கிடைக்காமல் சினேகலதாவுக்குக் கடிதம் எழுதி வரவழைத்து, அவளுக்குக் கிடைத்துவிட, கடைசி நிமிஷத்தில் அவள் கூட்டாளியை வெட்டிவிட நினைத்திருக்கலாம்.

யாரோ வருகிறார்கள். மெதுவான, அழுத்தமான நடை, உலர்ந்த இலைகளின் மேல் கால் பதியப் பதிய அவை பொடியாகும் சப்தம். தீர்மானமான, அவசரமில்லாத நடை.

கல்யாணராமன் மூச்சைப் பிடித்து இழுத்துக் கொண்டான். சுவாச சப்தம் கூடக் கேட்கக் கூடாது. ஓடிப்போய் விடுவான். அவர்கள் இருவரும் எங்கே? இருட்டில் அவன் வடிவம் மென் கறுப்பில் சற்று அதிகக் கறுப்பாக நகர்ந்தது.

'சரக் சரக் சரக் சரக்.'

'கிறீச்' என்று நெருப்புக்குச்சி பற்றவைக்கும் சப்தம் கேட்டது. கல்யாணராமன் மரத்தின் அகலமான மறைப்பிலிருந்து நகரவில்லை. ஜாக்கிரதை... ஜாக்கிரதை!

மெதுவாக அவ்வுருவம் கிணற்றை நோக்கிச் செல்ல "இன்ஸ்பெக்டர்! எஸ்.பி.ஸார்! நிதானம்! அவசரப்பட்டு விடாதீர்கள்."

இப்போது குழப்பமான வடிவமாகத்தான் தெரிந்தான். நெருப்புக்குச்சி மற்றொன்று பற்ற வைத்து, கிணற்றுக்குள் உற்று நோக்குவது தெரிந்தது. நெருப்புக் குச்சி அணைய மற்றொன்று ஏற்றி மெதுவாகக் கிணற்றின் கைப்பிடிச் சுவரின் மேல் ஏறி உள்ளே இறங்குவது தெரிந்தது. மெதுவாக இரண்டு போலீஸ் உருவங்கள் கிணற்றின் சுவரை அணுகுவதும் அவர்கள் காத்திருப்பதும் தெரிந்தது. ஜாக்கிரதை... அவசரம் வேண்டாம்...

சற்று நேரம்...

சற்று நேரம்... நிலா சுரத்துப் பெற்றது. மெதுவாக அவன் தலை கிணற்றின் மட்டத்திற்கு மேல வர அவர்கள் இருவரும் பதுங்க, அந்தப் பெட்டி சுவரில் படும் தகர சப்தம் கேட்க...

அப்புறம் குழப்பமான சில விஷயங்கள் நடந்தன.

"விடுங்க! விடுங்க! என்னை விட்டுருங்க! எனக்கு ஒண்ணும் தெரியாது?"

"மளுக்" என்று முட்டியில் அடிபடும் சப்தம்.

"அய்யோ!"

பெட்டி உருளும் சப்தம்...

அறை விளக்கைப் போட்டு அவனை மூலையில் தள்ளி அவன் தலை மயிரைக் கொத்தாகப் பிடித்து நிமிர்த்தி...

"இவனைப் பார்த்திருக்கிங்களா கல்யாணராமன்..?"

கல்யாணராமன் அவனை நேராகப் பார்த்தான்.

"இவனா? யார் இவன்?"

"இவனை நான் எங்கோ பார்த்திருக்கேன் ஸார்!"

"எங்கே?"

"கொஞ்சம் இருங்க... கொஞ்சம் இருங்க. திருவிழாவில... ஏன் ஏன் அதுக்கு முந்தி கூட... இந்த மீசை, கலைந்த தலை... கண்களில் லேசாக மை! ஓ எஸ்!"



"ஏய்! நீ பயாஸ்கோப்பு பழனியாண்டியில்லே?"

"ஆம். அவன்தான், ஃபெல்ட் ஹாட், காதில் பூ, கால் சலங்கை, போதும் போதுமான கோட். இவை இல்லாததால் அடையாளம் கண்டுபிடிக்க நேரமாயிற்று.

"ஸார், இவன் ஒரு டப்பாவ வெச்சுண்டு ஃபிலிம் போட்டு பயாஸ்கோப்பு காட்டிண்டிருப்பான். கிராமத்தில எல்லாருக்கும் இவனை நல்லாத் தெரியும். முக்கியமா குழந்தைகளுக்கு!"

"ஏய்- யார்ரா நீ?"

"அதான் சொன்னாரே- பயாஸ்கோப் பழனியாண்டி."

"அது உன் வேஷம். நிஜமா நீ யாரு?"

"எனக்கு ஒண்ணும் தெரியாது..."

"தெரியலைன்னா நட்ட நடு ராத்திரியில கிணத்துக்குள்ள எதுக்கு எறங்கினே? இந்தப் பொட்டி என்னது?"

"தெரியாது."

"சிநேகலதாவை என்ன செஞ்சே நீ?"

"தெரியாது. தெரியாது! அய்யோ!"

'பளீர்' என்று அவன் அடிபட்டது அருகில் இருந்த கல்யாண ராமனுக்கு வலித்தது.

"எனக்கு ஏதும் தெரியாது. என்னை விட்டுருங்க."

"உன் கைரேகையை எடுத்து சுலபமா கண்டுபிடிச்சுறலாம். ரூம் வாசலில் சுவத்தில சும்மா ரத்தத்தில பட்டு அஞ்சு விரலும் இடைச்சுருக்கு! சொல்லிடு!"

"நான் ஒண்ணுமே செய்யலை."

"மிஸ்டர் கல்யாணராமன்! நீங்க கொஞ்சம் அந்தால போறீங்களா?"

பழனியாண்டி கண்களில் பயத்துடன், "ஸார் போகாதீங்க! என்னைத் தீர்த்துக் கட்டிடுவாங்க! ப்ளீஸ்!" என்றான்.

"ஒண்ணும் செய்யமாட்டோம்... நீங்க போங்க!"

கல்யாணராமன், "ஏண்டா, அந்தப் பொண்ணைக் கொன்ன 'பாது அது என்ன துடிதுடிச்சிருக்கும்?" என்றான்.

"நான் கொல்லலை! நான் கொல்லலை!"

"இவனோட வெட்டிப் பேச்சி பேசிக்கிட்டு இருக்காதிங்க. க போய் கிராமத்தில போய் எங்கயாவது படுத்திருங்க. விடியறதுக்குள்ள விஷயம் வந்துடும். வாய்யா பயாஸ்கோப்பு ··ழனியாண்டி! எந்த ஊர் உனக்கு?"

"மேகலாபுரம்."

"மேகலாபுரத்தில எங்கே? எந்தத் தெரு?"

"மேட்டுத் தெரு."

"மேட்டுத் தெருன்னு மேகலாபுரத்தில் கிடையவே கிடையாது..."

கல்யாணராமன் மெதுவாக ஜமீன் வீட்டை விட்டு விலகி நடக்க இப்போது பயம் தெளிந்திருந்தான். கிழக்கே மிக மெலிதாக வெளிச்சம் காட்டத் துவங்கிக் கொண்டிருந்தது. 'பயாஸ்கோப்பு' அவ்வப்போது அலறும் சப்தம் விலக, பிர மிப்பில் நடந்தான். பட்சிகள் தத்தம் குரல்களைத் தீட்டிக் கொள்ளத் துவங்கின. குளத்தின் நிழலில் ஜமீன் கட்டடம் லேசாக வடிவெடுக்க, இரண்டு கிணறுகள், காத்தவீரியன், காரைக் குதிரை, அய்யனாரின் ஸில்ஹவுட் தெரிந்தது. பலர் எழுந்து விட்டார்கள். தங்கராசுவின் வீட்டை நோக்கி நடந்தான்.

"தங்கராசு! எனக்குக் கொஞ்சம் தூங்கணும்!"

"வாங்க உள்ளே! விடியப் போறதே..."

"விடியட்டும்!"

சின்ன ஜன்னல் வைத்த அறையில் நெற்குதிருக்கு அருகில் கட்டிலில் படுத்திருந்தான். தங்கராசு மின் விசிறியை அமைத்து,



'எல்லாம் சௌகரியமா இருக்கா?' என்பதைக் கேட்டு முடிப்ப தற்குள் தூங்கிப் போனான்.

"கல்யாணராமன் எழுந்திருங்க! ஆளு ஒப்புக்கிட்டான். சமீந்தாரு வப்பட்டி மவன் அவன்!"

## 21

**மி**ன்விசிறி மெதுவாகச் சுழலச் சுழல கல்யாண ராமன் கலெக்டர் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அருகில் போலீஸ் சூப்பரிண்டெண்டெண்ட், இன்ஸ்பெக்டர், பெரிய தனக்காரர் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். பட்டும் படாததுமாக நாமம் அணிந்த ஒருவர் ஃபைலைக் கொண்டு வந்து சற்று சாய்ந்து கலெக்டருக்கு மட்டும் தெரியும்படி காட்டினார்.

"மொத்த மதிப்பு இன்னிக்கு தேதிக்கு நாலு லட்சத்து சில்லறை" என்றார் கலெக்டர்.

"அடேயப்பா!" என்றார் அய்யாத்துரை.

"பெண்டன்ட் ஒண்ணே அரை லகரம் பெறும்" என்றார் இடுப்பில் பெல்ட் அணிந்த அந்த கிளார்க். "கலெக்டர் ஆபிசே என்னுடையது" என்றது அவர் பார்வை.

"அதுல இவருக்குப் பங்கு கிடைக்குமா அய்யங்கார்?"

"ஸார் எழுத்து மூலமா நோட்டீஸ் கொடுத்து ட்ரஷரியில டிபாஸிட் பண்ணிட்டார் இல்லையா? இவருக்குப் பாத்தியதை உண்டு."

"எவ்வளவு பாத்தியதை?"

"ரூல்ஸ் பார்த்துச் சொல்லணும் ஸார்."

"பார்த்துச் சொல்லும்."

இடுப்பு பெல்ட்டை உயர்த்திக் கொண்டு அலமாரிக்குச் சென்று அழுக்குப் பச்சை நிறத்தில் ஒரு புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து, பைஃபோகல் அணிந்து கொண்டு அதைப் பிரித்து, பரிசீலித்து, "கண்டெடுத்த பொக்கிஷத்தைக் குறித்த 1878-ம் வருஷத்து ஆக்ட்டுப்படி 1950-ம் வருஷம் மார்ச் மாதம் 24-ம் தேதியுள்ள 358-ம் நம்பர் போர்டு நடவடிக்கைக் குறிப்புகளோட படிச்சா..."

கல்யாணராமன் "ஹோல்ட் இட்! எனக்கு ஒரு பங்கும் வேண்டாம் ஸார். ரத்னாவதியினுடைய நகைகள் அது. அவ விரும்பின மாதிரி..."

"அப்படிப் பார்த்தா எல்லாம் ஜமீன் குடும்பத்துக்குப் போயாகணும்" என்றார் அய்யங்கார், "இதைப் புதையல்னு எப்படிச் சொல்ல முடியும்?"

"ரத்னாவதி டயரியில தெளிவா 'குடும்பத்தில உள்ளவங்க யாருக்கும் என் நகைகள் போகக்கூடாது. ஏதாவது நல்லதா பொதுக் காரியங்களுக்காகப் போகணும்'னு எழுதியிருக்கா?"

"என்னய்யா?" என்றார் கலெக்டர்.

"டயரி எப்படி 'வில்'லாக முடியும்? ஜமீன் குடும்பத்தில உள்ளவங்க மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில பிராது போட்டுட்டா தகராறாய்டும்!"

கல்யாணராமன் கலெக்டரைப் பார்த்தான்.

"நகைகள் ரத்னாவதியுடையதுன்னு சொன்னதே அந்த டயரிதானே? கல்யாணராமன், நீங்களே டயரியை வெச்சுக்கங்க. என்னைக் கேட்டா 'டயரியா? எனக்குத் தெரியாதே! அப்படி ஒண்ணும் கிடையாதுன்னுட்டா அது சர்க்கார் சொத்தாயிடறது. பணத்தை மேம்பட்டியில பெண்களுக்காக ஒரு ஹைஸ்கூல், ஒரு பொது நூலகம்னு செலவழிச்சுடலாம்."



"பஸ் ஸ்டாண்டைக் கூட கொஞ்சம் லாந்திடணும் ஸார்" என்றார் அய்யங்கார்.

"பஸ் ஸ்டாண்டா? முதல்ல மேம்பட்டிக்குப் பஸ் போகப் பாதையில்லே!"

"நான் மேம்பாலத்து ஸ்டாண்டைச் சொல்றேன், அய்யாத்துரை. அங்க இறங்கித்தான் எங்க ஊருக்குப் போறிங்க?" என்று அதட்டினார் குமாஸ்தா.

"பொதுவாக ரெண்டு மூணு ப்ராஜக்ட்ஸ் ஸாங்ஷன் வாங்கி ரத்னாவதி பேர்ல செய்துடறேன். என்ன மிஸ்டர் கல்யாணராமன்?"

"அதான் சரி! சம்மதம் ஸார்!"

"இதில ஒரு கையெழுத்துப் போட்டுர்றேளா?"

கல்யாணராமன் கையெழுத்திட, கலெக்டர் திருப்பி, "எப்படிப் புடிச்சிங்க ஹுசேன்!" என்றார்.

சூப்பரிண்டெண்டெண்ட், "இதோ கல்யாணராமன் தான் மூலகாரணம். நல்லா ஹெல்ப் பண்ணாரு. முதல்ல கொஞ்சம் கேஸ் தடம் புரண்டு நம்ம இன்ஸ்பெக்டர் குட்டையைக் குழப்பிட்டாரு..." என்று சிரித்தார்.

"அவன் பேர் என்ன சொன்னீங்க."

"சாமிநாதன் பெரிய ஜமீன் துரை ராஜ ராஜா. அவருக்கு ஊருக்கு ஊரு கீப்பு. அதுல ஒருத்திக்குப் பிறந்தவன். மெட்றாஸ்காரன். டிராமால ஸ்டேஜ் லைட்டிங், அப்புறம் பிலிம் ஆர்க்கெஸ்ட்ராவில பேஸ் வாசிக்கிறது. டூரிஸ்ட் பஸ் ஓட்டறதுன்னு பல காரியங்கள் செஞ்சு, ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு..."

"இங்க வந்து சேர்ந்தானாக்கும்? எப்படி வந்தான்?"

"அவுங்கம்மா வி.ஏ.செல்லப்பா, டி.பி.ராஜலட்சுமி காலத்தில நாடக நடிகையாம்- மோகனரங்கம்னு, ப்ருச் வெச்சு போட்டோ

காட்டினான். அவளுக்கு ரத்னாவதி யோட நகைகள் பற்றி முழு விவரம் தெரியுமாம். அவற்றைக் கொண்டு வந்து கொடுக்கிறதா சத்தியம் பண்ணிட்டுத்தான் மோகனரங்கத்தை வசப்படுத்தியிருக்கான் ஜமீன்தார். அவதான் சொல்லியிருக்கா. 'நகைகள் எங்கேயும் போகலை. ஜமீன் வீட்டில்தான் எங்கேயோ இருக்கு. ரத்னாவதி வெறுப்பில எங்கேயோ பொதைச்சோ ஒளிச்சோ வெச்சுட்டு தற்கொலை பண்ணிக்கிட்டா. நீ போய்த் தேடிப் பார்த்தா புதையல் கிடைக்கும்'னு மகன் கிட்ட அடிக்கடி சொல்லியிருக்கா."

"அவன் ஆறு மாசம் முந்திலேர்ந்து மேம்பட்டிக்குத் திருவிளாவில பயாஸ்கோப்பு காட்டறவன் மாதிரி வேசம் போட்டுக்கிட்டு வந்து தேடிக்கிட்டே இருந்திருக்கான். ஜமீன் வீட்டில, சுத்துப்புறத்தில..."

"அந்தப் பொண்ணு?"

"இவனோட கூட்டாளி. கான்வெண்ட் படிப்பை நிறுத்திட்டு ஸினி ஃபீல்டில நுளைஞ்சு அடிபட்ட கேஸு. எதுக்கும் துணிஞ்ச கட்டை. அவன் அதைக் கூட்டு சேர்த்துக் கிட்டிருக்கான். ரெண்டு பேரும் மெட்றாஸ்ல வெச்சுப் பேசிட்டு வந்திருக்காங்க. 'நான் முந்திப் போய் தேடிப் பார்க்கறேன். கிடைக்கலைன்னா நீ வந்து சேரு. ஜமீன் பொண்ணு மாதிரி'ன்னு விவரம் முழுக்கச் சொல்லிக் கொடுத்திருக்கான். இவன் தேடிப்பார்த்து நகை கிடக்கலேன்னப்புறம் அவளைக் கடுதாசி போட்டு வரவளைச்சிருக்கான் ஸார்."

"சரிதான்! கல்யாணராமன் என்ன யோசனை?"

"கடுதாசியிலே 'சொன்னனை'ன்னு போட்டிருந்தான். முதல்ல குழப்பம் ஆய்டுத்து..."

"மத்தவங்களுக்கு ஊர் பேரு தெரிய வேண்டாம்னுட்டு..."

"அன்னி ராத்திரி ஒரு அரை மணி முன்னால போயிருந்தா கொலை நடந்திருக்காது ஸார்! பாவம், அந்தப் பொண்ணு."



"அவளை அவன் கூடக் கொன்னிருக்க மாட்டான், கல்யாண ராமன். ஒருவிதத்திலே அவளோட பேராசை தான் அவ இறந்ததுக்குக் காரணம்."

"கெட்டிகாரப் பொண்ணு ஸார். டயரியில இருந்த அடையாளத்தை வெச்சிண்டு நகைகளைக் கிணத்தில போட்டிருக்கணும்னு ஷ்ரூடா ஊகிச்சுட்டா!"

"மருதமுத்துப் பயலை ஒத்தாசைக்கு அளைச்சுக் கிட்டுப் போய் கயிறு பாதாளக்கரண்டி எல்லாம் போட்டு கிணத்துக் குள்ள பாதி இறங்கி, அளஞ்சு பெட்டியை எப்படியோ புரட்டி எடுத்துருச்சு! சூரிங்க அந்தம்மா!' என்றார் அய்யாத்துரை.

"அந்த மருதமுத்து பெட்டியைப் பார்க்கலையா?"

"அது ஏதோ குடும்பப் பொட்டின்னு சொல்லியிருக்கா. பெட்டியைத் திறந்து காட்டியிருந்தாக் கூட மருதமுத்து கவனிச் சிருக்க மாட்டான்."

"ஏன்?"

"பொட்டியைக் கிணத்தில இருந்து எடுத்துக் கொடுத்தா, சினேகலதா அவனுக்குக் கொடுக்கப் போறேன்னு சொன்ன பரிசு மேலதான் அவன் நினைப்பெல்லாம் இருந்திருக்கு..."

"ஓ! ஐஸீ!" என்றார் கலெக்டர். அவர் முகம் சற்றுச் சிவந்தது. "பரிசு தந்தாளா?"

"தராம? மறு நா ராத்திரி! அதைப் பார்த்துட்டுத் தான் விசனப்பட்டு வெள்ளி... அது வேற கதை" என்று தலை யாட்டினான் கல்யாணராமன்.

"மருதமுத்து பொட்டியை எடுத்துக் கொடுத்ததோட சரி?"

"ஆமாம்."

"எல்லாம் முதல நாள் ராத்திரி நடந்திருக்கு?"

"ஆமாம். நடந்து எல்லாத்தையும் சாமிநாதன் அதான் பயாஸ்கோப் பழனியாண்டி, கவனிச்சிருக்கான். மருதமுத்து

கிணத்தில் இறங்கறதும், இது நிக்கறதும் அவன் ஒரு பொட்டியை வெளியே எடுக்கறதும், அதை எடுத்துக்கிட்டு ரெண்டு பேரும் ஜமீன் வீட்டை நோக்கிப் போறதையும் பார்த்துட்டான். அவனே மறுநாள் அவனைக்கூப்பிட்டு, "இதபாருய்யா, புதையல் கிடைச்சுருச்சு'ன்னு தானாகவே சொல்லுவான்னு காத்துக்கிட்டு இருந்திருக்கான். ம்ஹூம், அவளா? அத்தனை நகைகளையும் பார்த்து உடனே பேராசை வந்திருச்சு. அவனுக்கு எதுக்குப் பங்கு தரணும்னுட்டு ஒண்ணுமே நடக்காதது போல கம்முனு இருந்துட்டா. மறு நா ராத்திரி இந்தக் கொடை அமர்க்களம் எல்லாம் ஒஞ்சு, அவ தன் ரூமுக்குத் திரும்பிப் போன பிற்பாடு... மருதமுத்து அவனோட இருந்துட்டு விலகின பிற்பாடு- சாமிநாதன் அங்கே போயிருக்கான். 'என்னம்மா! நேத்து ராத்திரி ரண்டு பேரும் கிணத்தில இருந்து பொட்டி எடுத்தீங்களே... எங்கே அந்தப் பொட்டி? அதில என்ன இருந்தது'ன்னு கேட்டா, அவ, 'பொட்டியா? எனக்குத் தெரியாது. நீயே தேடிப் பார்த்துக்க'ங்கறாளாம். ரூம் பூராத் தேடியிருக்கான்; இல்லை. 'எங்கேயோ ஒளிச்சு வெச்சுருக்கே. எங்கே சொல்லு சொல்லு'ன்னு அதட்டிக் கேட்டிருக்கான். அவ அசையலை. 'தெரியாது, இல்லவே இல்லை'ன்னு சாதிச்சாளாம். அவன் கோபம் வந்து, ஆள் அம்பது வயசாயிருந்தாலும் நல்ல பலம். புடிச்சுக் கையை நெறிச்சு மடக்கி, மென்னியைப் புடிச்சு அடிச்சுத் திருகி சித்திரவதை பண்ணிக் கேட்டிருக்கான். வலி தாங்காம கடைசியில அதைச் சொல்லிட்டாளாம். ஒரு பொந்துல நகைப்பொட்டி இருக்குது'ன்னு. அவளை உலுக்கித் தள்ளியிருக்கான். பின் மண்டையில, விழற போது எக்கச்சக்கமா மோதி அடிபட்டு பொசுக்குன்னு போயிட்டா. அவன் இதை எதிர்பார்க்கலை. திகைச்சுப் போய்ட்டான். பாடியை என்ன பண்றது? யோசிச்சு கிணத்திலேய போட்டுறலாம்னுட்டு அதைத் தரதரன்னு இளுத்துக்கிட்டுப் போயிருக்கான்...



"அப்பதான் கல்யாணராமன் அங்க வந்துட்டாரு. உடலை அப்படியே வுட்டுட்டு ஓடிட்டான்!"

"அப்புறம் கேஸ் திரும்பி, வெள்ளி மேல சந்தேகம். அவளை அரெஸ்ட் பண்ணியிருக்காங்கன்னு செய்தி தெரியவும் தைரியம் வந்து மறு நா இல்லை மறு நா ராத்திரி பொட்டிக்கு வந்திருக்கான்... மாட்டிக் கிட்டான்!"

"ரொம்ப ஸ்ட்ரேஞ்ச்" என்றார் கலெக்டர்.

"சாபக்கேடு மாதிரி நகைகள்! ரெண்டு மூணு தலை முறைக்குக் காவு வாங்கிடுச்சு, பாத்தீங்களா?"

"அய்யாத்துரை, ரத்னாவதி குடும்பத்தில அவுங்க பாட்டனுக்குப் பாட்டன், வீடு நெலம் போக்யத்துக்கு வாங்கி ஏமாத்தி ஏமாத்தி பல பேர் வவுத்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டு சேத்த சொத்தில பண்ணிப்போட்ட நகைங்கன்னு சொல்லிக்குவாங்க" என்றார்.

சேவகன் ஒரு சீட்டைக் கலெக்டரிடம் கொண்டு வந்து கொடுக்க, 'பார்வையாளர் நேரம் வந்துருச்சு. கல்யாணராமன்! அப்ப நிச்சயமா உங்களுக்கு இதில் பங்கு வேண்டாம்' என்றார்.

"நிச்சயமா வேண்டாம் ஸார்!"

"கொஞ்ச நாள் இருப்பிங்க இல்லே?"

"ஒரு வாரத்தில திரும்பி மெட்றாஸ் போறேன் ஸார்!"

"ஏன்? நாட்டுப் பாடல் ரிஸர்ச் முடிஞ்சு போச்சா?"

"அது எங்கே? இப்பதான் ஆரம்பம்னு சொல்லணும். எனக்கு மேம்பட்டியில தேவையான நாட்டுப் பாட்டு கிடைச்சுது. இன்னும்கூட இருக்கலாம். ஆனா ஞாபகங்கள் என்னைத் துரத்துது. அந்த வீடு, சினேகலதா, வெள்ளி, அனுபவங்கள்... நான் போயிட்டு கொஞ்ச நாள் கழிச்சு மறுபடி வரலாம். அந்த வீட்டை மறக்க முடியாது!"

இன்ஸ்பெக்டர், "எப்படியும் மிஸ்டர் கல்யாணராமன் கேஸ் நடக்கறப்ப சாட்சி சொல்ல வந்துதான் ஆகணும்!" என்றார்.

"தெரியும்! நான் வரட்டுமா ஸார்? ரொம்ப தாங்க்ஸ்."

"பெஸ்ட் ஆஃப் லக்! அப்புறம் சந்திக்கலாம்!"

கல்யாணராமன் கலெக்டருடன் கைகுலுக்கிவிட்டுக் கிளம்பினான்.

திருநிலம் ஸ்டேஷனில் 'த்ரீ நாட் ஒன்' இன்னும் வந்து சேரவில்லை. நீலநிற சூட்கேஸ் பிளாட் பாரத்தில் வைக்கப் பட்டிருந்தது. வெயில் கண்ணாடி அணிந்து கொண்டு கல்யாண ராமன் நின்று கொண்டிருந்தான். கழுத்தில் காமிரா மாலை.

அய்யாத்துரைக்குப் பவுத்திர உபத்திரவம். அதனால் வர வில்லை.

தங்கராசு வந்திருந்தான். "நீங்க வந்து இருந்ததில எவ்வ ளவோ சந்தோசம். நடுவிலதான் கொஞ்சம் எச கேடா நேர்ந்து போயி மனத்தாங்கலாயிடுச்சு. எல்லாம் பொம்பளிங்களால... என்ன பெரியாத்தா?"

பெரியாத்தா வந்திருந்தாள் "ராசா மவனே! என்னையும் கூட்டிப் போயிரேன். நீ போயிட்டியானா எனக்காரு பொயலைக்கும் ஆளாக்கு அரிசிக்கும் மல்லிக் காப்பிக்கும் காசு தரப் போறாக! இந்தச் சிறுக்கி முளுவாம இருக்காளாம்னு பருத்திக் கொட்டை ஆட்டி அஞ்சுகாசும் பத்து காசும் சம்பாரிச் சுக்கிட்டு வந்து வெச்சுக்கன்னு கொடுத்தா, நாதேரி முண்ட 'பாண்டியன் குதுரை தாண்டுதாம் கடல'ன்னு...

"இத பார் கிளம்!... சும்மாரு! அய்யாவுக்கு உங்க வீட்டுக் கவலை எதுக்கு?"

"அப்படியோ ரத்னாவதியை உரிச்சு வெச்சிருக்குதாம்."

"பொட்டைக் கிளம்!"



"இன்னாடா சொல்லுதே? மருதமுத்து?"

"ஒந் தலை!" என்றான்.

மருதமுத்து வந்திருந்தான். "அய்யா! சபையில கொஞ்சம் சின்னத்தனமா நடந்துகிட்டன். ஊர்க் கூட்டத்தில பெரியவங் களை மருவாதையில்லாம பேசிட்டன். என் புத்தி கெட்டுப் போயி மூதேவி சகவாசம் வந்து என் ரெத்தினத்த- என் வெள்ளிய- இளக்க இருந்தேன். கண்ணு திறந்திருச்சு! என்ன மாமா?"

வெள்ளியின் அப்பா வந்திருந்தார். "அதெல்லாம் போனாப் போவுது மருதமுத்து. கெட்ட கெனா மாதிரி நினைச்சுற வேண்டியதுதான். நேத்து வந்தது ஆத்ல ஊறுனதைக் கலைச்சுற முடியுமா? எனக்கு அப்பவே தெரியும். எளம் ரத்தம். கொஞ்சம் ஆட்டம் ஆடிட்டு கடைசில பெரியவங்ககிட்ட வந்துதான் சேருமுன்னு. சொகுசான ஆளைக்கண்டா நாம போடாத கச்சமா? ஆம்புளன்னு பொறந்துட்டா இதெல்லாம் சாதாரண விசயமாய்டுதுல்ல...? அதுக்காவ போட்ட பரிசத்தைக் கலைச்சுருவாங்களா? இல்லை கலைக்க வுட்றுவாங்களா?"

வெள்ளி வந்திருந்தாள்; மௌனமாக நிலத்தைப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். கல்யாணராமனின் மனமெனும் திரைக்குள் சரியான அப்பெர்ச்சர் அமைத்து உன்னதமாகப் பிம்பத்தை தீட்டிச் சிறைப்படுத்திக் கொண்ட கரிய தேவதை.

"என்ன வெள்ளி! உனக்கு இப்ப சந்தோஷம் தானே?"

"மௌனம்.

"நீ விரும்பின புருசன் உனக்குக் கிடைக்கப் போறதில உனக்கு சந்தோஷம்தானே வெள்ளி?"

மௌனம்.

"வெக்கப்படுதுங்க."

"வெள்ளரிக்கா விக்கமாட்டே இனிமே?"

கீழே பார்த்துக் கொண்டே தலையை ஆட்டினாள். உதட்டோரத்தில் ஒரு மில்லி செகண்ட் சிரிப்பு.

"போட்டோ எடுக்கட்டுமா?"

"ஊஹூம்." மறுபடி தலையாட்டல்.

"என்னை ஞாபகம் வெச்சுப்பியா?"

"உங்களை மறக்க முடியுங்களா?"

"இருய்யா! அவ சொல்லட்டும்."

தலையை 'ஆம்' என்று குனிவு நிமிராமல் ஆட்டினாள்.

"பேச மாட்டியா?"

மௌனம்.

"ஏ புள்ள! வாயைத் தொறந்து பதில் சொன்னா என்னவாம்? அய்யா கேக்குறாருல்ல..."

"கைல என்னங்க காயம்?" என்றான்.

"ஒரு பொண்ணு நகத்தால கீறிடுச்சு!" என்றான்.

வெள்ளி சட்டென்று நிமிர்ந்து அவன் கையைப் பார்த்தாள். முகத்தைப் பார்த்தாள். கல்யாணராமன் தன் வெயில் கண்ணாடியை நீக்கிவிட்டு அவளை நேராகப் பார்த்தான். அவள் கண்களில் ஈரத்திரை இருந்தது. மெதுவாக, கண்ணீராக மாற, சேமிப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. வெள்ளியின் உதடுகள் மெலிதாகத் துடித்தன. ஏதோ சொல்ல விரும்புகிறாள். அவன் பார்வையில் புதுசாக- சரக்கொன்றை மரத்தில் தொங்கின தண்டவாளத்துண்டை நீலச்சட்டை பல தடவை தட்டிவிட்டுப் பின் குறிப்பாக மூன்று தடவை தட்டினான்- ஏதோ ஒரு செய்தி இருப்பதாகப் பட்டது கல்யாணராமனுக்கு. "என்ன சொல்ல விரும்புகிறாய் வெள்ளி?"



'அய்யா! நான் உங்களோட நேசத்தை இதுவரை முழுக்க முழுக்க புரிஞ்சுக்காமயே இருந்துட்டனுங்க! இப்ப நீங்க 'வா'ன்னு ஒரு வார்த்தை கூப்பிடுங்க- எல்லாத்தையும் விட்டு விட்டு வந்துர்றேன்!'

'வெள்ளி! எனக்கும் தைரியமில்லே; உனக்கும் தைரியமில்லே. இப்போதே உன்னை ப்ருதிவிராஜ் தனத்துடன் கவர்ந்து செல்ல எத்தனை ஆசையா இருக்கு தெரியுமா?'

தகடக் தகடக் தகடக் தகடக் தகடக் தகடக்

மிக உயர்ந்த அரேபியக் குதிரையில் வெள்ளியை இடுப்போடு வளைத்துத் தூள் பறந்தான் கல்யாணராமன்.

பாஸஞ்சர் திருநிலத்தில் போனால் போகிறது என்று நின்றது.

"அடுத்த தடவ வர்றபோது வெள்ளி கைல புள்ளையோட பாப்பிக! இன்னாடி வெள்ளி! ராசாவேலு, அதென்னாடாது? கம்மர்கட்டா?"

முதல் வகுப்புப் பெட்டியில் கல்யாணராமன் ஏறிக் கொண்டான். மருதமுத்து பெட்டியை உள்ளே வைத்து விட்டு, ஸீட்டை 'தட் தட்' என்று தட்டி 'மெத்தையெல்லாம் சவுகரியமா வெச்சிருக்காப்பல... லே வெள்ளி, இதப்பாரு புள்ள."

"வெள்ளி!"

திரும்பினாள்.

"க்ளிக்."

கடைசி ஞாபகத்துக்கு ஒரு போட்டோ.

"யக்கா! என்னையும் எடுக்கச் சொல்லுக்கா!"

கார்டு விசில் ஊத- "மருதமுத்து! இறங்கு, இறங்கு!" அவர்கள் பிளாட்பாரத்தில் நிற்க, ரயில் நீராவிக் கக்கலுடன் மெதுவாக நகர-

'இப்போது கூட அவளை அப்படியே பற்றியிழுத்துத் தன் பெட்டிக்குள் சேர்த்துக் கொண்டு விடலாம்.'

"போய்ட்டு வரேன் தங்கராசு, மருதமுத்து, பெரியாத்தா, ராசவேலு... வெள்ளி..."

'சங்கிலியை இழுக்கலாம்.'

ரயில் வேகம் பிடிக்க, வெள்ளி நின்று கொண்டே கொஞ்சம் கொஞ்சமாகப் பின் சென்றாள்.

கல்யாணராமனை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன சொல்ல விரும்பினாள்?

என்ன சொல்ல விரும்பினாள்?

"முன்னோர்கள் உரைப்படியே
முடித்து விட்டேன் இக்கதையை
நன்றாகப் படிப்போரும்
நவில்வோரும் வாழியவே."

—சுஜாதா

CPL 665151
CONNEMARA PUBLIC LIBRARY
5 - FEB